
ஹீலர் பாஸ்கரின்
பானு
வீட்டுக் கல்விமுறை
கல்வியின் மாற்றத்திற்காக
www.selfeducationathome.com

ஹீலர் பாஸ்கரின்

# பானு

## வீட்டுக்கல்வி முறை



| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பானுவீட்டுக்கல்வி முறை |
| ஆசிரியர் | : | ஹீலர் பாஸ்கர் |
| பதிப்பு | : | மூன்றாம் பதிப்பு 2019 |
| வெளியீட்டாளர் & காப்புரிமை | : | கிரி ஐயா பப்ளிகேன்ஷஸ்<br>நெ.69, என்.எஸ்.கே. வீதி, செல்வபுரம்,<br>கோயமுத்தூர் - 641026.<br>செல் : +91 96290 32767<br>Email : giriiyyapublications@gmail.com<br>Web : www.giriiyyapublications.com |
| விலை | : | ரூ. **299/-** |
| வடிவும் - அச்சுகம் | : | கோவை. |

---

Pages : 208 ✦ Price : Rs. 299/-

✦ Banu Home Education - in Tamil by Healer Baskar

✦ 3rd Edition 2019

✦ Published by **Giri Iyya Publications**, Coimbatore - 641 026.

✦ Printed at CBE.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பானு வீட்டுக்கல்வி முறை அறிமுகம் | - 05 |
| 2. | பானு வீட்டுக்கல்வி முறை | - 21 |
| 3. | கார்ட்டூன் கல்விமுறை | - 45 |
| 4. | வாவ் கல்வி முறை | - 53 |
| 5. | கரு உருவாவதற்கு முன்பு என்ன செய்யவேண்டும்? | - 75 |
| 6. | மசக்கை | - 76 |
| 7. | மருட்டி சுகப்பிரசவம் | - 84 |
| 8. | குழந்தை வளர்ப்பு முதல் ஒரு வருடம் | - 98 |
| 9. | தாய்மொழி கல்வியே சிறந்தது | - 103 |
| 10. | சாகம்பரி மழலையர் பள்ளி | - 113 |
| 11. | புவிதம் பள்ளி | - 133 |
| 12. | 12 வயதிற்கு மேல் குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும்? | - 152 |
| 13. | 2 வருடத்தில் 200 மொழிகள் கற்கும் கலை | - 153 |
| 14. | கண்களை மூடி படிப்பது உண்மையா? (Midbrain Activation) | - 168 |
| 15. | சிறந்த கல்விமுறை | - 174 |
| 16. | நேர்த்தியான கலை (Fine Arts) | - 178 |
| 17. | சிங்கப்பூரில் பானுவீட்டுக்கல்விமுறை | - 184 |
| 18. | பானுவீட்டுக்கல்விமுறையின் கலந்தாய்வு கூட்டம் | - 191 |
| 19. | அனாடமிக் தெரபி பவுண்டேன் & ஹீலர் பாஸ்கர் | - 194 |
| 20. | அனாடமிக் செவிவழிதொடு சிகிச்சை | - 195 |
| 21. | அனாடமிக் ஐந்து நாள் பயிற்சி முகாம் | - 196 |
| 22. | தந்த்ரா வழியில் தாம்பத்யம் | - 197 |
| 23. | தற்சார்பு வாழ்க்கை | - 198 |
| 24. | பானுவீட்டுக்கல்வி முறையின் தொகுப்பு (15 பாகங்கள்) | - 199 |
| 25. | அம்மி தற்சார்பு சந்தை | - 200 |
| 26. | நீங்களும் உங்களது பங்களிப்பை அளிக்கலாம் | - 203 |
| 27. | அம்மி தற்சார்பு சந்தை தொடர்புக்கு | - 205 |
| 28. | அமைதியும் ஆரோக்கியமும் | - 206 |
| 29. | தொடர்புக்கு | - 207 |


குழந்தைகள்...
நீங்கள் சொல்வதைக் கேட்டு வளர்வதை விட,
நீங்கள் செய்வதை பார்த்து மட்டுமே அதிகம் வளர்வார்கள்.
பானுவீட்டுக் கல்வி முறை

# பானு வீட்டுக் கல்விமுறை

(அறிமுகம்)

இப்பொழுதுள்ள கல்வி முறை ஒழுங்காக, சரியாக,சிறப்பாக இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே, இதற்குத் தீர்வாக கல்வியை ஒழுங்கு படுத்துவதற்கான ஒரு தளத்தினை ஹீலர் பாஸ்கரால் உருவாக்கப் பட்டுள்ளது. இதற்கு பானு வீட்டுக்கல்விமுறை என்று பெயர். இதில் வீட்டுவழிக் கல்வி முறை என்று குறிப்பிடப்படுவதால் மாணவர்கள் பள்ளிகளுக்கோ, கல்லூரி களுக்கோ செல்லக் கூடாது என்று பொருள் அல்ல. கல்வியை ஒழுங்குபடுத்த வேண்டும் எனும் நோக்கில் ஆரம்ப காலத்தில் இதற்கு வீட்டுவழிகல்விமுறை என்று பெயரிட்டோம். ஆனால் அது வீட்டுவழி கல்வி முறையை மட்டும் அல்லாது கல்வி என்றால் என்ன? கல்வி எப்படி இருக்கவேண்டும்? ஆனால் தற்போது எப்படி இருக்கிறது? குருகுலக் கல்வி என்றால் என்ன? ஒரு ஆசிரியரின் கடமை என்ன? ஒரு பள்ளிக்கூடம் எப்படி இருக்க வேண்டும்? என்பன போன்ற பல விசயங் களை ஒழுங்குபடுத்தி, தெளிவுபடுத்தி அனைவருக்கும் புரிய வைப்பதற்கான ஒரு தளமே பானுவீட்டுகல்வி முறை.

ஹீலர் பாஸ்கர் ஆகிய நான் பல ஆண்டுகளாக கல்வி பற்றிய ஆய்வுப் பணியிலும் ஈடுபட்டு வருகிறேன். இதற்கென மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்ரீலங்கா, வளைகுடா நாடுகள், இந்தியாவில் தமிழகம் மற்றும் பிறமாநிலங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்த ஆய்வை மேற்கொண்டு வருகிறேன். பலதரப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள கல்விமுறையை ஆய்வு செய்வது மற்றும் நிர்வாகிகள், ஆசிரியர்கள், பணியாளர்கள், கல்வித்துறை தொடர்பான அதிகாரிகள், ஆர்வலர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் ஆகியோருடன் நேரடியாகவும், தொலைத் தொடர்பு மூலமாகவும் கருத்துக்களை பரிமாறி கலந்துரையாடிய பின்னர் இறுதியாக உருவாக்கப்பட்டது தான் இந்த பானுவீட்டுவழிக்கல்வி முறை என்னும் தளம். எனவே பானுவீட்டுக்கல்வி முறையில் பள்ளிக்கூடம் என்பதோ அதில் மாணவர்கள் சேர்க்கை என்பதோ கிடையாது.



இது கல்வியை ஒழுங்கு படுத்துவதற்கான புரிதலை நமக்கு ஏற்படுத்தக்கூடிய ஒரு தளம். அதாவது

மருத்துவம் ஒழுங்காக இல்லை என்று மருத்துவத்தை ஒழுங்குபடுத்துவதற்காக நாம் அனாடமிக் தெரபி எனும் செவிவழிதொடு சிகிச்சையை ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இந்த சிகிச்சைக் கென்று மருத்துவமனை எதுவும் கிடையாது. நான் பேசுகின்ற பத்து மணிநேர நேரடி வகுப்பு அல்லது வீடியோ அல்லது ஆடியோ அல்லது புத்தகம் போன்ற ஏதேனும் ஒன்றின் வாயிலாக பார்த்து / கேட்டுக் கொண்டு நம்மை நாமே குணப்படுத்திக கொள்ளும் வழிமுறைகளைப் புரிந்து கொண்டு குணப்படுத்திக் கொள்ளலாம். இதே போன்று கல்வியை ஒழுங்குபடுத்துவதற் காக பல விதமான வீடியோ, ஆடியோ, புத்தகங்கள் போன்றவற்றை உருவாக்கி மக்களுக்குத் தருகிறோம். இதன் மூலம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உரிய சரியான கல்வியைத் திட்டமிடவும், ஆசிரியப் பெருமக்கள் தங்கள் மாணவர்களுக்கான கல்வியை சரியாக எப்படி கொடுப்பது என்பது பற்றியும் கல்வி நிறுவனங்களை நடத்தி வருவோர் தங்கள் நிறுவனங்களை, கல்விமுறையை இனிமேல் எப்படி மாற்றி ஒழுங்குபடுத்தி சரி செய்வது பற்றியும் ஒரு புரிதலை ஏற்படுத்திட இந்த தளம் மிகுந்த உபயோகமாக இருக்கும்.

இப்பொழுது உள்ள கல்விமுறை சரியில்லை, அது ஒழுங்காக இல்லை என்று நீங்கள் எப்படிக் கூறுகிறீர்கள் என்று உங்களில் சிலர் கேட்கக்கூடும். அவர்களுக்காக சில கேள்விகள்.

இப்பொழுது உள்ள கல்வி முறையில் உணவை எப்படிச் சாப்பிட வேண்டும்? தண்ணீரை எப்படிக் குடிப்பது ஒழுங்கான முறை? மூச்சுக்காற்றின் சிறப்பு என்ன? உழைப்பின் அவசியம் என்ன? மனதை பற்றியும் அதை நிம்மதியாக வைத்துக் கொள்வதும் எப்படி? கணவன், மனைவி அன்பாக ஒற்றுமையாக, நிம்மதியாக வாழ வழிகள் என்ன? பெண்களுக்கு சுகப்பிரசவம் ஏற்படுவதற்கு என்ன வழிகளைக் கடைபிடிக்கவேண்டும். அன்பு, கருணை, பாசம், மரியாதை, உடல் உழைப்பு போன்றவையின் அவசியம் என்ன? இதுபோன்ற அடிப்படை விசயங்களே எதுவும் கற்றுக் கொள்வதோ, கற்றுக் கொடுப்பதோ இல்லை. இவைகளைக் கூட கற்றுக் கொடுக்காமல் பிறகு எதற்கு கல்வி நிறுவனங்களை நடத்தவேண்டும்?

நான் நடத்தும் ஐந்து நாள் பயிற்சி வகுப்புகளில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் வரும் மக்கள் கலந்து கொள்கின்றனர். பயிற்சியில் கலந்துகொள்ள வருவோரில் நூற்றில் எழுபத்தைந்து நபர்கள் நன்கு படிப்பறிவு கொண்டவர்கள். கல்லூரிகளில் படித்து பல பட்டங்கள் பெற்றவர்களும், பல மொழிகள் கற்றறிந்தவர்களும், உயர் பதவிகளில் அங்கம் வகிப்பவர்களும் அதில் அடங்குவர். அவர்கள் எல்லாம் நான் நடத்தும் பயிற்சி வகுப்பிற்கு ஏன் வருகிறார்கள் எனில் காரணம் இருக்கிறது. ஏனென்றால் என்னுடைய பயிற்சி வகுப்பில் நான் கற்றுத்தரும் எந்த விசயங்களும் எந்த ஒரு கல்விமையத்திலும் கற்றுத் தருவது இல்லை.

ஒரு மனிதன் வாழ்வதற்குத் தேவையான எந்த ஒரு விசயத்தையும் கற்றுக் கொடுக்காமல் தேவையில்லாத பல விசயங்களைக் கற்றுக் கொடுப்பதும், அதைத் தெரிந்து கொள்வது தான் அறிவாளிகளாக ஆவதற்கு வழி என்றும் ஒரு வேண்டாத கல்வித்திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்கள். கல்வித் துறையின் இந்தப் போக்கினால் நமது மக்கள் ஏமாற்றப்பட்டு முட்டாள்களாகிக் கொண்டுள்ளனர் என்பது தான் உண்மை.

ஒவ்வொரு நாட்டிலும் கல்வித் துறை என்பது அந்தந்த நாட்டு கல்வித் துறை மந்திரிகளின் கைகளில்இருக்கிறது. அந்த மந்திரிகள் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 13 குடும்பத்தினர் என்னும் சீக்ரெட் சொசைட்டியினர் என்று அழைக்கப்படும் இலுமினாட்டிகளின் பிடியில் இருக்கிறார்கள். இவர்கள் தான் உலக நாடுகளில் ஏற்கனவே இருக்கும் பாரம்பரிய கல்விமுறையை சிதைத்து குழப்பி மக்களுக்கு ஒன்றும் உபயோகப்படாத, தேவையற்ற கல்விமுறையைக் கொடுத்துள்ளனர். மக்களை இவ்வாறு முட்டளாக்கிக் கொண்டு இருப்பது கல்வியில் மட்டுமன்றி அனைத்து துறைகளிலும் தான். உலக அளவில் மிகப்பெரிய வியாபார சந்தையை தங்கள் வசம் வைத்து கொண்டிருப்பதுடன் உலகம் முழுவதும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை முறியடித்து இவை அனைத்தைப் பற்றியும் உண்மை நிலையை நாம் புரிந்து கொள்ளவும். கல்வியை ஒழுங்கு படுத்துவதற்காகவும் ஏற்பட்ட தளம் தான் பானுவீட்டுக்கல்வி முறை.

இந்தப் புத்தகத்தைப் படிக்க, படிக்க இன்றைக்கு கல்விமுறையில் உள்ள சிக்கல்களும், அதற்கான தீர்வுகளும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். பொதுவாக எந்த ஒரு விசயத்திலும் அதிலுள்ள சிக்கல்களைப் பற்றி மட்டுமே பலரும் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். அதற்கான தீர்வைப் பற்றிப் பேசுவதே இல்லை.

நண்பர்களே ! ஒருமணிநேரம் நாம் ஒரு விசயத்தைப் பற்றிப் பேசுவோமானால் அதில் பதினைந்து நிமிடங்களுக்கு மட்டுமே பிரச்சனை அல்லது சிக்கலைப் பற்றிப் பேசவேண்டும். மீதம் உள்ள 45 நிமிடங்களுக்கு அதற்கான தீர்வைப் பற்றிப் பேசுவதற்காக ஒதுக்கினால் தான் முன்னேற்றப் பாதையில் நாம் பயணிக்க முடியும். எனவே இந்தப் புத்தகம் பத்து சதவிகிதம் சிக்கல்கள் பற்றியும் தொண்ணூறு சதவிகிதம் அதற்கான தீர்வுகள் பற்றியும் உங்களுக்கு விளக்கமாக புரிய வைக்கும்.

முன்பு குருகுலக் கல்விமுறையில் அனைத்தும் ஒழுங்காக சிறப்பாக நாம் கற்றுக் கொண்டு வந்தோம். பலவிதக் காரணங்களைக் கூறி அதை நிறுத்திவிட்டு தற்போது ஒன்றுக்கும் உதவாத கல்வியை மாணவர்களுக்கு கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

பானுவீட்டு கல்வி முறை என்பது நாம் ஏற்படுத்தியிருக்கும் ஒரு புதிய தளம், கடந்த ஆண்டு 2016 துவக்கத்தில் இதற்கான முதற்கட்ட பணிகள் துவங்கப்பட்டன. கல்விக் கூடங்களை நிறுவுவதோ, அதற்கு அனுமதி பெற்று கட்டுமான அமைப்புகளை விரிவுப்படுத்துவதோ இந்த கல்வி முறையின் நோக்கம் அல்ல. இன்றைய கல்வியை ஒழுங்குபடுத்துவதற்கான பணிகளை மட்டுமே இந்தத் தளத்தில் நாம் செய்யப்போகிறோம். இந்தப்பணியில் என்னுடன் (ஹீலர் பாஸ்கர்) கல்வித்துறையில் மாற்றும் ஏற்படுத்த விரும்பும் அனைவரும் ஒன்றிணைந்து கூட்டு முயற்சியுடன் செய்ல்படுவதற்கான அமைப்பு தான் பானு வீட்டு கல்விமுறை.

இந்த கல்விமுறையை நாம் உருவாக்கியதற்கான காரணத்தை முதலில் நாம் அறிந்து கொள்வோம்.

இப்போது உள்ள கல்வி முறையான பள்ளி, கல்லூரிகளில் கற்பிக்கப்படுவது ஒழுங்காக இல்லை. இப்படி நான் கூறும் பொழுது உங்களுக்குள் ஒரு கேள்வி என்னைப் பார்த்து கேட்கத் தோன்றும்.

“இந்த கல்விமுறை ஒழுங்காக இல்லை என்று எப்படி கூறலாம்? நீயும் இந்த கல்விமுறையில் தானே படித்துக் கொண்டு வந்திருக்கிறாய்? நாம் ஒழுங்காகத் தானே இருக்கிறோம்? அதை ஒழுங்காக இல்லை என்கிறாய் என்று நீங்கள் கேட்பீர்கள்.

நானும், நீங்களும் படித்த காலத்தில் இருந்த கல்விமுறை என்பது வேறு. இப்போது உள்ள கல்வி முறை என்பது வேறு. இப்பொழுது உள்ள கல்விமுறையில் படிக்கும் எந்தக் குழந்தையும் வாழ்க்கையில் உருப்படுவதற்கான கல்வியைக் கற்பதில்லை. அப்படித்தான் இன்றைய பாடத்திட்டம் இருக்கிறது.

இந்தக் கருத்தை இவ்வளவு துணிச்சலாகவும் தைரியமாகவும் நான் இங்கு பதிவு செய்வதற்குக் காரணம் அவ்வளவு தூரம் இதில்ஆய்வு மேற்கொண்டிருக்கிறேன்.

காலையில் எழுந்தவுடன் அவசர அவசரமாக குழந்தைகளை தயார்படுத்தி வலுக்கட்டயமாக சாப்பிட வைத்து “ஷீ” இறுக்கமான “டை” என அணியைச் செய்து பள்ளிக்கு அனுப்பப்படும் குழந்தைகள் அங்கு ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களைக் கேட்டுக் கொண்டு “இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே” என அவர்கள் கூறுவதை அப்படியே பின்பற்றி அடிமைகள் போல் சுய சிந்தனை அற்றவர்களாகவே வளர்கிறார்கள். இப்பொழுதுள்ள, குழந்தைகள் தன் வேலையை தானே செய்துகொள்ள யோசிக்கிறார்கள். ஏன் எனில் அந்த அளவிற்கு உட்காரச் செய்தே பாடம் நடத்திருவருகிறார்கள். பொறுப்பாக எதையும் செய்யக் கற்று தருவதில்லை இன்றைய கல்வி.

பள்ளிக்குச் சென்று வரும் இக்கால குழந்தைகள் பத்து ஆண்டுகள், பதினைந்து ஆண்டுகள் என கல்வியைக் கற்கிறார்கள். ஆனால் உணவை எப்படி சாப்பிடுவது என்று தெரிவதில்லை. உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லை. நிம்மதியாக வாழத் தெரியவில்லை. தூங்குவதற்குத் தெரியவில்லை. மனம் என்றால் என்ன என்று தெரியவில்லை.

“வீரம்” என்றால் என்னவென்று தெரியவில்லை “அன்பு” என்றால் என்னவென்று தெரியவில்லை, பெரியவர்களை மதிக்கத் தெரியவில்லை.

பிறகென்ன இந்தக் கல்வி கற்றுத்தரப் போகிறது? ஏற்கனவே மருத்துவத்தை ஒழுங்குப்படுத்தியதைப் போல, அரசியலை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகள் அறிந்ததைப் போல இப்பொழுது கல்வியை ஒழுங்குப்படுத்துவதற்கான ஒரு தளத்தினை நாம் அமைத்திருக்கிறோம்.

சுருக்கமாக கூறுவதென்றால் இப்பொழுது இருக்கும் கல்விமுறை ஒழுங்காக இல்லை என்பதற்காக அதை ஒழுங்குப்படுத்துவதற்காக நாம் ஏற்படுத்தியிருக்கும் ஒரு தளத்திற்குப் பெயர் தான் பானுவீட்டுகல்வி முறை என்று பெயர். இதைப்பற்றி மேலும் விரிவாக தெரிந்து கொள்ள விரும்புவோர் பானு ஹோம் எஜிகேஷன் சிஸ்டம் (Banu Home Education System) என்ற பெயரில் நாம் யூ டியூப்பில் பதிவேற்றியுள்ள தகவல்களைப் பார்த்து புரிந்து கொள்ளலாம்.

பானு வீட்டுக்கல்வி என்பது ஒரு குழந்தை கல்வி கற்கவேண்டிய வயதில் துவங்குவது அல்ல. மாறாக அக்குழந்தை தாயின் கர்ப்பகாலத்தில் இருந்தே அதற்கான கல்விமுறை துவங்குகிறது. குழந்தை பெற்றுக் கொள்வதற்கு முன்பிருந்தே அந்த தாய் என்னென்ன செய்யவேண்டும் என்பதில்

துவங்கி குழந்தை சுகப்பிரசவமாக பெறுதல், முதலாம் ஆண்டு, ஒன்றிலிருந்து ஐந்து வயது வரை, ஐந்து முதல் பனிரெண்டு வயது வரை, அதற்குப் பின்னர் என்று பல கட்டங்கைளை உள்ளடக்கியது இந்த கல்விமுறை.

**கார்ட்டூன் கல்விமுறை**

கார்ட்டூன் கல்விமுறை என்ற தலைப்பில் உள்ள கட்டுரையை முதலாவதாக வாசியுங்கள். இதில் இப்பொழுதுள்ள கல்வி எப்படி ஒழுங்காக இல்லை? ஏன் சரிசெய்ய வேண்டும் என்பது விளக்கமாக புரியும்.

**வாவ் கல்விமுறை**

வாவ் கல்விமுறை என்ற தலைப்பில் உள்ள கட்டுரையை பார்க்கவேண்டும். இதில் ஜெர்மன் நாட்டின் கல்வி திட்டங்கள் பற்றி விளக்கமாக இருக்கும்.

**குழந்தை பெறுவதற்கு முன்பாக...**

1. நான் (ஹீலர் பாஸ்கர்) நடத்துகின்ற ஐந்துநாள் பயிற்சி வகுப்பிற்கு வந்து கலந்து கொள்ள வேண்டும். இதில் நமது உடல், மனம், தடுப்பூசிகளின் உண்மைகள் போன்ற பல்வேறு விசயங்களைக் கற்றுக் கொடுக்கப்படுவதால் ஒரு குழந்தை கர்ப்ப காலத்திற்கு முன்பிருந்தே தயாராகிறது. எனவே இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வது மிக அவசியம்.

2. “விபாசனா” எனும் தியானப் பயிற்சியில் 10 நாட்கள் கலந்து கொள்ளவேண்டும். இந்த வகுப்பு உலகெங்கும், பல நாடுகளில் நடத்தப்படுகிறது. இந்த வகுப்பில் கலந்து கொள்வதால் ஒருவரின் கடந்த காலத்தில் பதிவான தேவையில்லாத பதிவுகள் அழிக்கப்பட்டுவிடுகின்றன. இதன் பின்னர் ஒரு பெண் கர்ப்பம் தரிப்பதனால் ஒரு குழந்தை அமைதியாக, நிம்மதியாக, மதிநுட்பம் வாய்ந்த ஒரு குழந்தையாக பெற்றெடுக்க முடியும்.

3. குழந்தைகள் சுகப்பிரசவத்தில் பிறப்பது பற்றி இரண்டு புத்தகங்களைப் படித்து தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். அந்த புத்தகங்கள் டாக்டர். பஸ்லூர் ரஹ்மான் அவர்கள் எழுதிய “பெண்களே உங்களுக்காக மற்றும் இறைவழியில் இனிய சுகப்பிரசவம்” இந்த இரண்டு புத்தங்களையும் அவசியம் படிக்கவேண்டும்.

4. சுகப்பிரசவம் ஏற்படுவதற்கான ஆலோசனைகளை 1. திருமதி. காயத்திரி - +91 9994156677, 2. திருமதி. சாய்தேவி - 9790602774, 3. திருமதி. கோமதி - +91 8883882768 4. மணிமொழி - +91 9600779081 இவர்களிடம் கேட்டு தெறிந்து கொள்ளலாம்.



5. பெண்களே பெண்களுக்காக என்ற யூடியூப் வீடியோவை முழுவதுமாக பாருங்கள்.

**சுகப்பிரசவம் ஏற்படுவதற்கான வழிமுறைகள்...**

1. சுகப்பிரசவமாக குழந்தைகள் பெறுவதற்கு நமது பாரம்பரிய வழிமுறைகளில் மருட்டி சுகப்பிரசவமாக என்பது உள்ளது.

2. குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியை உடனே வெட்டிவிடும் பழக்கம் நம்மிடம் உண்டு. ஆனால் அவ்வாறு வெட்டாமல் 45 நிமிடங்கள் காத்திருந்தால்



தொப்புள் கொடியுடன் பனிக்குடப்பை சேர்ந்து வெளிவரும். அதுவரை பொறுத்திருக்க வேண்டும். குழந்தைக்கும் தாய்க்கும் இதனால் நன்மையே ஏற்படும்.

3. வெளியே வந்த பனிக்குடப்பையினை வெட்டி எடுத்துவிடாமல் மஞ்சள் தூள், துளசி பொடி போட்டு தூவி சுத்தமாக கழுவவேண்டும். பின்னர் ஒரு பொட்டலம் போல கட்டி பனிக்குடபையினை குழந்தையும், சேர்த்தே வளர்க்க வேண்டும். இந்த பனிக்குடப் பையிலும், தொப்புள் கொடியிலும் தான் குழந்தையின் வாழ்நாள் முழுவதற்கும் தேவையான எல்லா வித அறிவு, பிராணசக்தி ஆகியவற்றுடன் பரம்பரை பரம்பரையாக சேகரிக்கபட்ட மூதாதையர்களின் அறிவும் டி.என்.ஏ ஆர். என், ஏ வில் பதிவாகி இருக்கின்றன.

4. இவற்றைப்ப பற்றித் தெரியாமல் தொப்புள் கொடியை உடனே வெட்டி விடுவதால் தான் இன்றைய குழந்தைகள் டவுன்சின்ரோம், ஆட்டிசம், மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறக்கின்றன.

5. பத்து நாட்கள் வரை தொப்புள் கொடியை வெட்டாமல் இருக்கும் பொழுது தொப்புள் கொடி தானே உதிர்ந்துவிடும். அல்லது அக்குழந்தையை பிய்த்துவிடும். இந்த முறையில் தான் முன்பு சுகப்பிரசவ குழந்தைகள் பிறந்துள்ளன. இதற்கு “மருட்டி சுகப்பிரசவம்” என்று பெயர்.

6. இந்த தொப்புள் கொடியை வீட்டின் தெற்குப் பக்கமாக தேங்காய், பழம் ஆகியவற்றுடன் குடும்பத்தினர் அனைவரும் பிரார்த்தனை செய்து குழிதோண்டி புதைத்துவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் அந்த மண்ணின் உயிர்த்தன்மை எப்பொழுதும் குழந்தையை காக்கும் அரணாக இருக்கும்.

7. நமது முன்னோர்கள் இது போன்று ஏராளமான வழிமுறைகளை ஏற்கனவே நமக்காக கொடுத்துச் சென்றுள்ளனர். அதைப்பற்றி தெரியவரும் சமயங்களில் அவற்றையும் அறிவோம்.



**குழந்தை பிறந்த முதல் வருடத்தில்...**

குழந்தை பிறந்த முதலாவது வருடத்தில் கடைபிடிக்க வேண்டிய விசயங்கள் இருக்கின்றன. அதைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ள பல விசயங்கள் உள்ளன. அதில் சில விசயங்களை மட்டும் இங்கு பதிவு செய்கிறேன்.

1. குழந்தைக்கு தொட்டில் கட்டும் பொழுது தரையிலிருந்து தாயின் தொப்புள் பகுதி வரையான உயரத்திற்குத்தான் தொட்டில் கட்டவேண்டும். ஏனென்றால் பத்து மாதங்களாக தாயின் கர்ப்பத்திலிருந்த அக்குழந்தைக்கு அதே அளவு உயரம் உள்ள இடத்தில் மட்டும் தான் குழந்தையால் நன்றாக தூங்க முடியும். இதுமிக எளிய விசயம். ஆனால் அவ்வளவு முக்கியமானது.

2. குழந்தையை தொட்டில் கட்டி ஆட்டும் பொழுது ஸ்பிரிங் உள்ள தூளியை பயன்படுத்தக்கூடாது. ஸ்பிரிங் தொட்டிலில் கீழும் மேலுமாக அசைந்தாடுவதால் குழந்தையின் ஆரோக்கியம் சீர்கெடும். எனவே முன்னும் பின்னுமாகத்ததன் தொட்டிலைஆட்டவேண்டும்.

3. குழந்தையின் தாய், முந்தைய தினங்களில் அணிந்திருந்த புடவையின் தாயின் வாசனையுள்ளதால் அதில் தொட்டில் கட்டினால் குழந்தை தாயின் அரவணைப்பில்

இருப்பதுபோல் நன்றாக தூங்கும்.
4. குழந்தை பிறந்த முதலாண்டுகளில் கவனிக்க வேண்டிவை பற்றி மேலும் விரிவாக பின்னர் அறியலாம்.

**தாய்மொழிகல்வியே சிறந்தது.**

தாய்மொழியில் தாய்மொழி அல்லாத வேறு மொழியில் கல்வி கற்கும் குழந்தை வாழ்வின் உருப்படுவதற்கு வழி இல்லை. உதாரணத்திற்கு ஆங்கில வழி பாடத் திட்டத்தில் படிக்கும் குழந்தை ஆக்கப் பூர்வமாக எதையும் சிந்திக்காது. செயல்படவும் முடியாது. ஏனென்றால் கர்ப்பகாலத்தில் ஒரு தாய் எந்த மொழியில் பேசவும், புரிந்து கொள்ளவும் செய்கிறார்களோ அதுவே அக்குழந்தையின் தாய்மொழி, அதில் தான் அக்குழந்தையால் நன்றாக சிந்திக்கவும், செயல்படவும் முடியும். தமிழ், தெலுங்கு, மலையாளம் என அவரவர் தாய்மொழியில் கற்பதற்குத் தான் முன்னுரிமை அளிக்க வேண்டும். வேறு மொழியில் கல்வி கற்பதை எப்பொழுது வேண்டுமாயினும் செய்யலாம். அதற்கு முன்பாக தாய்மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கர்ப்பகாலத்தில் அந்ததாய் என்ன மொழி பேசுகிறார்களோ, கேட்கிறார்களோ அது தான் அக்குழந்தைக்கு தாய்மொழி, அதில் பாடம் நடத்தும் பொழுதுதான் அக்குழந்தைக்கும் புரியும். எனவே தாய்மொழி கல்வியை ஆதரிக்கிறோம்.

உதாரணமாக ஆங்கிலவழியில் பாடம் கற்பிக்கும் ஒரு பள்ளியில் இரண்டு மணிநேரங்கள் பாடம் நடத்தி விட்டு ஒரு ஆசிரியர் தனது ஓய்வறைக்குச் செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த வகுப்பிலிருந்து இரண்டு மாணவர்கள் அந்த வகுப்பாசிரியரைச் சந்தித்து அந்த பாடத்தில் சந்தேகம் கேட்டு அதை நிவர்த்தி செய்து கொள்ள செல்கின்றனர். “எங்களுக்கு நீங்கள் நடத்திய பாடம் புரியவில்லை” என்று கூறும்பொழுது அந்த மாணவர்களுக்கு ஆசிரியர் தமிழில் ஐந்து நிமிடம் அதைபற்றி எடுத்துக் கூறினாலே புரிந்து கொள்கின்றனர். அதாவது ஆங்கிலத்தில் அவ்வளவு நேரம் பாடம் நடத்துவதை விட தமிழில் ஐந்து நிமிடத்தில் புரிய வைத்துவிடும் பொழுது ஏன் புரியாத பாஷையில் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்து அவர்களை குழப்பவேண்டும்?

இப்பொழுது உள்ள ஆசிரியர்களே ஆங்கில வழியில் ஒழுங்காக கற்பிக்கும் திறன் உள்ளவர்களா? என்பது மற்றொரு கேள்வி.

ஆசிரியர்களுக்கும் புரியாமல் மாணவர்களுக்கும் புரியாமல் பெற்றோர்களுக்கும் புரியாத ஒரு மொழியில் பாடம் கற்கவேண்டியது அவ்வளவு அவசியமானதா? யோசியுங்கள்.

ஆங்கில மொழியில் உள் எந்த ஒரு விசயமும் ஒழுங்காக இல்லை. எனவே திட்டமிட்டே இதனை உலகம் முழுவதும் பரப்பி வருகிறார்கள். உதாரணமாக இணையதளமான கூகுளில் ஒரு வார்த்தைக்கு என்ன பொருள் என்று ஆங்கிலத்தில் தேடி அதில் வரும் பொருளைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அதேபோல தமிழ், பிரெஞ்சு. ஜெர்மன், அரபிக் போன்ற மொழிகளில் ஆங்கிலத்தில் பொருள் தேடிய அதே வார்த்தைக்கு மற்ற மொழிகளில் வரும் பதில் வேறு மாதிரி இருக்கும். மற்ற



மொழிகளில் வரும் பதில்கள் அனைத்தும் ஒழுங்காக இருக்கின்றன. ஆங்கிலத்தில் தான். அனைத்தும் தவறாக இருக்கின்றன.

ஆங்கில மொழியில் சரியான பொருளுக்கு பதில் திரித்து வேறு பொருள் தருமாறு பதிவு செய்திருக்கிறார்கள். அதை உலகம் முழுவதும் ஆங்கில வழியில் கல்வி கற்கும் ஒரு மாணவனைக் கூப்பிட்டு ஆங்கிலத்தில் திட்டினீர்கள். எனில் அவனுக்கு கோபமே வராது. ஆனால் தமிழில் திட்டினீர்கள். எனில் அவன் கடுமையாக உங்கள் மீது கோபப்படுவான். எனவே தாய்மொழிக்கல்வி தான் ஒருவனை சுய உணர்வுடன் சிந்திக்க கற்றுத் தருகிறது.

எந்த ஒரு மருந்தும், மாத்திரை யுமின்றி நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும் வழிமுறைகளைப் பற்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் வகுப்புகளை நடத்திக் கொண்டு வருகிறேன். அதை உலகம் முழுவதும் உள்ள மக்கள் அறிந்துகொண்டு பயன்படுத்துவதற்காக இணையதளம் "யூடியூப்" ஆகியவற்றிலும் பதிவேற்றி வைத்திருக்கிறேன். இந்த விசயங்களை எல்லாம் நான் -- தாய்மொழியான தமிழ் மொழியில் பயின்று வந்த தன் காரணத்தினால் எளிதாக கற்றுக் கொள்ள முடிந்தது. எனவே நான் இதை பின்பற்றுவதும், பொதுமக்களுக்கு வகுப்புகள் நடத்துவதற்கும் எளிதாக இருக்கிறது. ஒரு வேளை நான் ஆங்கில மொழியில் கல்வி கற்றுக்கொள்ள நேர்ந்திருந்தால் படித்தது எதுவும் புரியாமல் எதையாவது செய்துகொண்டு இருந்திருப்பேன் படித்த படிப்பு உதவாக்கரையானதாய் இருந்திருக்கும். நல்லவேளையாக நான் தாய்மொழியான தமிழில் கல்வி கற்றதனால் நான் தப்பித்துக் கொண்டேன். தாய்மொழியை மதித்து அதில் கல்வியைக் கற்றதனால் தான் என்னால் இந்த அளவிற்கு சிறப்பாக செயல்பட முடிகிறது.

அனாடமிக் தெரபி பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்காக பிரான்ஸ் நாட்டிற்கு சென்றிருந்தேன். அந்த நாட்டில் என்னுடைய வகுப்பிற்கு பலரும் கலந்துகொள்ள வந்திருந்தனர். அதில் மருத்துவர்களும் அடக்கம். வகுப்பு நிறைவடைந்ததும் அந்த மருத்துவர்களில் பிரெஞ்சை தாய்மொழியாக கொண்டு கல்வி கற்ற மருத்துவர் நான் நடத்திய வகுப்பை சரி என்று ஒப்புக்கொண்டார். ஆனால் ஆங்கிலவழியில் கல்வி கற்ற மருத்துவரோ வகுப்பில் நான் கூறிய கருத்துக்களை தவறு என்று கூறினார்.

அதே போல ஜெர்மன் நாட்டில் பயிற்சி வகுப்பு நடத்தியபோது அங்கு வந்திருந்த ஜெர்மன் மொழியை தாய்மொழியாக கொண்டு கற்றுவந்த மருத்துவர் நான் நடத்திய வகுப்பு சரி என்றார். ஆனால் இங்கும் பிரான்சைப் போல ஆங்கில வழியில் கற்றுக்கொண்டு வந்த மருத்துவர் தவறு என்று வாதிட்டார்.

ஜெர்மன் மொழியில் மருத்துவம் படித்த ஒரு டாக்டர் காய்ச்சலுக்காக எவரேனும் மருத்துவ சிகிச்சை பெற வந்தால் "காய்ச்சல் என்பதே ஒரு மருத்துவம் எனவே சிகிச்சை தேவையில்லை. வீட்டுக்கு சென்று ஓய்வெடு" என்று கூறி திருப்பி அனுப்பிவிடுவார்.

ஆனால் இங்கிருந்து ஆங்கில வழியில் மருத்துவம் படித்துவிட்டு அந்த நாட்டிற்குச் சென்று மருத்துவம் பார்க்கும் நம் நாட்டு மருத்துவர்கள் காய்ச்சல் என்று வருபவர்களுக்கு ஊசி, மருந்து, சிகிச்சை என அளித்து உடல் நலனை பாதிக்கச் செய்கிறார்கள்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டிய விசயம் என்னவெனில் மொழியில் தான் அறிவு இருக்கிறது. அவரவர் தாய்மொழியில் உள்ள நல்ல விசயங்களை ஆங்கிலம் தான் அழித்துக் கொண்டிருக்கிறது. மொழி தான் ஒருவருடைய அடையாளம். மொழியை விட்டுக் கொடுத்தால் அதன் பின்னர் எதை விட்டுக் கொடுக்கவும் தயங்க மாட்டீர்கள் என்றல்லவா பொருளாகிறது?

ஆங்கிலவழிப்பள்ளியில் தமிழ் மொழியைக் கூட கற்றுக் கொடுப்பதில்லையே வேறு எதை நீங்கள் கற்றுக் கொடுத்து விடுவீர்கள்? தமிழையே கற்றுக் கொடுக்காத ஒரு கல்விக்குப் பெயர் கல்வியா?

ஆங்கிலவழி பள்ளிகளில் தமிழில் பேசினால் “பைன்” போடுகிறார்கள். இது கேவலமானதாய் இல்லையா? எங்கிருந்தோ வந்து இங்கு பள்ளியில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்கும் இவர்களுக்கு தமிழ் பேசினால் பைன் போடும் அளவிற்கு நம்மை முட்டளாக்கி இருக்கிறார்கள். எனில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

இதில் கேலிக்கூத்து என்னவெனில் 1000 தமிழ்வழி பள்ளிகளை ஒரு அம்மையார் ஆங்கில வழி பள்ளிகளாக மாற்றிவிட்டார். இதை தமிழுக்காகவே உழைப்பதாக கூறும் ஒரு தாத்தா ஏன் என்று கூட கேட்கவில்லை. தமிழ் தமிழ் என்று உணர்ச்சி பொங்கக் கூறும் அவர்கள் எல்லாம் எங்கே சென்று விட்டார்கள்?

கடந்த ஆண்டு 9700 அரசு பள்ளிகளும் அதற்கு முந்தைய ஆண்டு 4700 அரசு பள்ளிகளும், அதற்கு முன் 340 அரசு பள்ளிகளும் ஆங்கில வழி பள்ளிகளாக மாற்றப்பட்டுவிட்டன. இன்னும் மூன்றாண்டுகளில் தமிழ் நாட்டில் தமிழ்வழிப் பள்ளிகளே இருக்காது எனும் நிலை ஏற்படப்போகிறது. தமிழ் தான் உயிர் மூச்சு, சுவாசம் என்றெல்லாம் கவிதையும், வசனமும் ஊடகத்தில் மட்டும் பேசிக் கொண்டுள்ளவர்கள் எங்கே சென்று விட்டார்கள்? இவர்களுக்கு ஒரு கேள்வி. தேர்தல் சமயத்தில் மக்களிடம் ஓட்டுக் கேட்கும் பொழுது இவர்கள் தமிழில் கேட்கிறார்களா? ஆங்கிலத்தில் கேட்கிறார்களா? இனி ஒரு வேளை இவர்கள் ஓட்டுக் கேட்டு வரும்பொழுது ஆங்கிலத்தில் ஓட்டுக்கேட்டு வரட்டும். யாராவது இவர்களுக்கு ஓட்டுப் போடுவார்களா? அதற்கு மட்டும் அழகாக தமிழில் பேசி ஓட்டுக் கேட்கிறார்கள் அல்லவா?

சமீபத்தில் ஒரு வீட்டிற்கு நான் சென்றிருந்த சமயத்தில் பள்ளிக்கு செல்லும் அந்தக் குழந்தையிடம் சூரியன் என்றால் என்ன? என்று கேட்டேன். அந்தக் குழந்தை உடனே தன் அம்மாவிடம் திரும்பி “அம்மா இந்த அங்கிள் சூரியன் என்றால் என்னன்னு கேட்கிறார். சூரியன்னா என்னம்மா?” என்று கேட்டது. அதற்கு அந்த அம்மா சொன்னார். “சன் இருக்கில்லையா அதைத்தான் சூரியன் என்கிறோம்” என்றார். இப்படிப் புரிந்துகொண்டு வளரும் அந்தக் குழந்தை வாழ்வில் உருப்படாது. ஏனெனில் ஆங்கிலத்தில் இருந்து தாய்மொழியான தமிழைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறது. இது சரியான முறை அல்ல.

இன்னொரு வீட்டிற்குச் சென்று இருந்தேன். அங்கிருந்த குழந்தையிடம் சன் என்றால் என்ன? என்று கேட்டேன். அதற்கு அந்த குழந்தை தான் தாயிடம் அக் கேள்வியை கேட்டது. அந்த தாயார் “சூரியன் என்பதைத்தான் ஆங்கிலத்தில் “சன்” என்று கூறுகிறார்கள்” என்று சொன்னார். இப்படித் தாய்மொழியில் இருந்து பிறமொழிகளைக்

கற்றுக் கொள்ளும் குழந்தையே உருப்படும். பிற மொழிகளில் இருந்து தாய்மொழியில் கற்றுப் புரிந்துகொள்ளுதல் சரியான வழிமுறை அல்ல. நாம் பிற மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டாம் என்று கூற வரவில்லை. தாய்மொழியையே ஒழுங்காகப் படிக்காமல், ஒழுங்காகத் தெரிந்து கொள்ளாமல், அதை ஏளனமாகப் பேசிவிட்டு வேறு மொழி கற்றுக் கொண்டு மேன்மை பெறுவதற்கான வழியே இல்லை. எனவே தாய்மொழிக் கல்விக்கான அவசியத்தை உணர்ந்து அதை அனைவரும் பலமாக ஆதரிக்க முன்வரவேண்டும்.

தாய்மொழிக்கல்விக்கான அவசியம் என்ன என்பது பற்றி திரு. வினோத் அவர்கள் ஆவணப்படுத்தி குறும்படமாக எடுத்துள்ளார். அதன் தலைப்பு "கல்வியை அழிக்கும் ஆங்கில மாயை" மிகவும் அரும்பாடுபட்டு பல தகவல்களை ஆதாரபூர்வமாக திரட்டி குறும்படமாக ஆவணப்படுத்தியிருக்கும் அவரது முயற்சி பாராட்டுதலுக்குரியது. அதிலிருந்து ஒரு உதாரணத்தை இங்கு தர விரும்புகிறேன்.

இலங்கையில் பல வருடங்களுக்கு முன்பு ஆங்கில மருத்துவ நூலை தமிழில் மொழி பெயர்த்து வைத்துள்ளனர். அதில் காய்ச்சல் என்பது நோய் அல்ல. எதற்கு மருந்து சாப்பிடவேண்டும்? என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் ஒரு ஜார்ஜிய மாணவனுக் காக லெனின் அவர்கள் ஆங்கில மொழியில் இருந்த அலோபதி மருத்துவ நூலை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து தந்திருக்கிறார். அதில் நாம் இப்பொழுது நடத்தி வரும் அனாடமிக் தெரபி எனும் மருந்தில்லா மருத்துவம் பற்றித்தான் முன்பே குறிப்பிட்டிருக்கிறார். வைத்திய முறை அந்தந்த மொழிகளில் ஒழுங்காகத்தான் இருந்திருக்கிறது. அது எப்பொழுது ஆங்கில மொழியில் மாற்றி எழுதப்படதோ அப்பொழுதே அதைக் கெடுத்துவிட்டார்கள்.

இதைப் போன்று பல தகவல்கள் ஆதாரப் பூர்வமாக இடம் பெற்றிருப்பது இந்த ஆவணப்படத்தின் சிறப்பு. இது ஆங்கில மாயையை ஒழித்து தாய்மொழிக்கான அவசியத்தை வலிமையாக பதிவு செய்கிறது.

ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்வதில் எந்த சிக்கலும் இல்லை. ஆங்கிலம் மட்டுமன்றி உலகில் உள்ள எந்த மொழியையும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் அதற்கு ஆதாரமாக தாய்மொழியாக இருக்கவேண்டும். அதன் பின்னர் எவ்வளவு மொழி வேண்டுமாயினும் கற்றுக் கொள்ளலாம்.

தினசரி உங்கள் குழந்தைகளுக்கு ஒருமணி நேரம் ஒதுக்கி ஆன்லைனின் கற்றுக் கொள்வதற்காக ஏற்பாடு செய்வீர்கள் எனில், இரண்டு வருடங்களில் 200 மொழிகளை அவர்கள் கற்றுக் கொள்வார்கள். இதற்கு சென்னையில் திரு. மொழிப்பிரியன் என்பவர் வகுப்புகளை நடத்திவருகிறார்.

இவர் தன்னுடைய ஒன்பது வயது மகனுக்கு 200 மொழிகளைக் கற்பித்து அதில் வெற்றியடைந்தவர். எனது வேண்டு கோளுக் கிணங்க துபாயில் தான் பார்த்துவந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு மற்ற எல்லா குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுக் ஒப்புக் கொண்டிருக்கிறார். கல்வி தொடர்பாக ஏற்கனவே நிறைய ஆராய்ச்சிகளைச் செய்திருக்கும் அவர் உங்கள் குழந்தை களையும் உலகத்தில் 200 மொழிகளை பேசக் செய்திடுவார்.

உலகில் ஏறக்குறைய 6500 மொழிகள் உள்ளன என்றும் அவற்றையும், கற்றுக் கொண்டு உலக மக்களுக்கு

அனைத்தையும் கற்றுக் கொடுக்கவேண்டும் என்பது தான் இவருடைய நோக்கம்.

மொழி அழிவதால் தானே அறிவு அழிந்து கொண்டு வருகிறது? அவற்றை காப்பது நமது கடமை அல்லவா?

**ஒரு வயது முதுல் ஐந்து வயது வரை**



ஒரு குழந்தையை ஒன்று முதல் ஐந்துவயது வரை எப்படி வளர்க்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக திகழும் ஒரு பள்ளிக்கு சமீபத்தில் சென்றிருந்தேன். அப்பள்ளி திண்டுக்கல்லிற்கு அருகே உள்ளது.

1. திண்டுக்கல் அருகே செந்துறை என்ற ஊரில் உள்ளது அப்பள்ளி. ஒரு பள்ளி எப்படியிருந்தால் நன்றாக இருக்கும் என நான் எண்ணியிருந்தேனோ அதேபோல சிறப்பாக செயல்படுகிறது.

2. பாடம் நடத்துவது என்பது தனியே இல்லை.விளையாட்டு, கதை சொல்லல், நடனம், நாட்டியம், பிரார்த்தனை போன்றவை உள்ளிட்ட மகிழ்ச்சியான சூழலில் குழந்தைகள் நிறைய கற்கின்றனர்.

3. வானிலை, சுற்றுப்புறச் சூழல் ஆகியன பற்றி ஒவ்வொரு குழந்தையும் எளிதில் அறிந்துகொண்டு அதைப்பற்றிக் கூறுகின்றனர் நேரடி அனுபவத்தில்.

4. இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம் போன்ற அனைத்து மதங்களைப் பற்றியும் அவற்றின் புனித நூல்களில் உள்ள வற்றையும் வாசித்துக் காட்டி குழந்தைகளுக்கு புரிய வைக்கின்றனர்.

5. ஆசிரியர்கள் அன்பு மயமானவர்களாக இருப்பதால் குழந்தைகளும் அதையே பிரதி பலிக்கின்றனர். மகிழ்ச்சியுடன் கல்வி கற்கின்றனர்.

6. குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் வளர்தல் வேண்டும். ஆசிரியர்களை அத்தை, மாமா, அண்ணா, அய்யா, என்றே அழைப்பதால் குழந்தைகள் உறவு முறைகளுடன் இனிமையான கல்விச் சூழல் ஏற்படுகிறது.

7. ஆசிரியர்கள் குழந்தைகளுடன் தாங்களும் குழந்தைகளாக மாறிவிடும் பொழுது அவர்களது மனநிலையுடன் ஒன்ற முடிகிறது.

8. பள்ளியின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள விரும்புவோர் பள்ளி துவங்கும் நேரமான காலை 9மணி அளவில் இருந்தால் மாலை 3.30 மணிவரை இருந்து பார்த்துவிட்டு வரலாம்.

**ஐந்து முதல் பனிரெண்டு வயது வரை...**

தர்மபுரி அருகே நாகர்கூடல் எனும் ஊரில் இந்த வயதினருக்கான பள்ளி ஒன்று சிறப்பாக செயல்பட்டு வருவதை கேள்விப்பட்டு பார்த்து வர சென்று இருந்தேன். இதுபோன்று பல பள்ளிகளுக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறேன். அவையாவும் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இல்லை. இன்றைக்கு கல்வியை சீர்படுத்தி நல்ல வழிமுறைகளில் சிறப்பாக யார் கற்றுத் தருகிறார்களோ, அவர்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறேன். தர்மபுரி அருகே செயல்படும் அப்பள்ளியின் பெயர் புவிதம். திருமதி. மீனாட்சி அம்மா அவர்கள் இதனை நடத்தி வருகிறார்.

1. அனைத்துக்குழந்தைகளும் காலையில் விவசாயப் பணிகளை முடித்து விட்டுத் தான் வகுப்பறைக்கு வருகின்றனர்.

2. விவசாயம் உட்பட சோப் தயாரித்தல், கயிறு திரித்தல், செங்கல் தயாரித்தல், கறவை மாடுகளில் பால் கறத்தல், இசை, கராத்தே, குங்பூ போன்று பல்வேறு விசயங்களைக் கற்றுக் கொண்டு மற்றவர்களை ஆச்சர்யப்பட வைக்கின்றனர்.



3. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளைக் கற்றுக் கொள்வதுடன் தமிழை தமிழாகவும், ஆங்கிலத்தை ஆங்கிலமாகவும் இந்தியை இந்தியாகவும் பேசுகின்றனர். எதை கற்றாலும் அம்மொழியை சிறப்பாக பயன்படுத்துகின்றனர்.

4. பாடங்கள் என்று தனியாக கற்பிக்கப்படாமல் விளையாட்டு கதை ஆகியவற்றின் மூலம் குழந்தைகள் விரும்பும் மகிழ்ச்சியான சூழ்நிலையில் கற்றுக் கொடுக்கின்றனர்.

5. வாரஇறுதி நாட்களில் இப்பள்ளிக்குச் சென்று பார்வையிட்டு வரலாம்.

**பனிரெண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு...**

எதைக்கற்றுக் கொள்வது? எதைக் கற்றுக் கொண்டால் எதிர்காலம் சிறப்பாக இருக்கும்? அடுத்து என்ன செய்யலாம்? என்ற குழப்பமான மனநிலையில் உள்ள பனிரெண்டு வயதிற்கு மேற்பட்டோருக்கு பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு, ஆலோசனை வழங்குவதற்காக சேலத்தில் ஒருவர் இருக்கிறார். அவர் பல ஆண்டுகளாக சேலத்தில் கல்வியில் ஆய்வு செய்து வரும் இவர் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்து ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இதனுடன் மென்பொருள் எனப்படும் சாஃப்ட்வேர்-ஐ தமிழில் எளிமையாக அனைவருக்கும் கற்றுத் தருகிறார். எந்த மாணவன், தமிழில் மென்பொருள் கற்றுக் கொள்கிறானோ. அவன் எந்த நாட்டிற்குச் சென்றாலும் எப்பொழுதும் திறம்படவேலை செய்பவனாக இருப்பான் என்று கூறுகிறார்.

ஆனால் ஆங்கிலத்தில் மென்பொருள் கற்றுக் கொண்டவர்கள் பணிகளில் உள்ள சிறுசிறு விசயங்களைப் பற்றிய புரிதல் இல்லாத காரணத்தினால் வேலையில் தாக்குப் பிடிக்க முடியாமல் வேலையை விட்டு வெளியேறுகின்றனர். ஏனென்றால் தாய்மொழியில் மென்பொருள் கற்றுக் கொள்ளும் பொழுது அதைப் பற்றி புரிந்து கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் ஆங்கிலத்தில் புரியாமல் கற்றுக் கொள்கிறார்கள். அதுதான் வித்தியாசம் என்கிறார் இவர்.

ஆங்கிலத்தில் கற்றுக் கொள்ளும் பொழுது ஒரு விசயம் மேலோட்டமாக மட்டுமே புரிந்து கொள்ளப்படுகிறது. அதனால், சொன்னால் செய்யும் அளவிற்குத் தான் அவர்களது வேலைத்திறன் இருக்கும். தேவைப்படும் சமயத்தில் சுயமாக சிந்தித்து மாற்றுவழியில் செயல்பட மாட்டார்கள். புதிய புதிய விசயங்கள் புகுத்தப்படும் பொழுது அதைப் பற்றி கற்றுக் கொண்டால் தான் இவர்களால் வேலையை தொடரமுடியும். ஆனால் அடிப்படையிலிருந்து சாப்ட்வேரை தாய்மொழியில் கற்றுக் கொண்ட ஒருவர் இதைப் போன்ற சூழ்நிலையில் உடனே புரிந்துகொண்டு சிறப்பாக அவர் வேலையில் ஈடுபடுவார். எந்த நாட்டிலும் இவர்களால் வெற்றிகரமாக பணியாற்ற முடியும்.

கம்ப்யூட்டரில் எந்த ஒரு குறிப்பிட்ட துறைச்சார்ந்த அறிவை மட்டும் வளர்த்துக் கொள்பவர்கள் அதில் பயன்படுத்தப்படும் சாப்ட்வேர் மாற்றத்திற்கு உள்ளாகும்

பொழுது வேலை இழக்கும் அபாயத்தை சந்திக்கின்றனர். சமீபத்தில் இதற்கு உதாரணம் கூறுவதைப் போல ஏராளமானோர் வேலையை இழந்த செய்தியை பலரும் அறிந்திருப்பீர்கள்.

கம்ப்யூட்டரில் ஏதாவது ஒரு விசயத்தை மட்டும் சிறப்பாக கற்றுக் கொண்டு பணிபுரியபவர்களின் நிலை என்றைக்கும் கேள்விக்குறியானது தான். ஆனால் அதிலேயே அடிப்படையிலிருந்து கற்றுக்கொண்டு சென்றவர்களால் எந்த ஒரு மாற்றத்தினையும் எளிதில் புரிந்துகொண்டு எல்லா காலத்திலும், எந்த நாட்டிலும் திறம்பட பணியாற்ற முடியும். கம்ப்யூட்டரில் பேஸிக் (Basic) என்பது தாய்மொழிக்கல்வி போன்றது. அதைப் புரிந்து கொண்ட பின்னர் எதையும் எளிதில் கற்றுக் கொள்ளலாம்.

“ஊற்றுக்கண்” எனும் சிற்றிதழ் கல்வி சம்பந்தப்பட்ட தகவல்களை தாங்கிவருகிறது. இதன் ஆசிரியர் திரு.எஸ். ஏரோனிமஸ். இவர் ஆசிரியர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு பலவருடங்களாக ஆய்வுகளை மேற்கொண்டு அதன்படி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் வழங்கி வருகிறார்.

திண்டுக்கல்லைச் சேர்ந்த பிரதீபா அவர்கள் ஒரு கல்லூரியில் பேராசிரியையாக பணிபுரிந்து வந்தார். அங்கு பாடங்களை இவர் தன்னுடைய நடையில் எளிதாக புரியும் படி மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். ஆனால் நிர்வாகத்திற்கு இது பிடிக்காததால் “சிலபஸில் பாடத்திட்டம், உள்ளவாறு மட்டும் கற்றுக்கொடு வேறு எதையும் கற்றுத்தராதே” என்று கூறி இருக்கின்றனர். இதனுடன் மெக்கானிக் கற்க வந்திருந்த மாணவர்களை, சிவிலில் குறைந்த மாணவர்கள் சேர்ந்திருந்ததால் அதைப்பற்றி உயர்வாக பேசி மெக்கானிக் மாணவர்களை அதில் சேரச் செய்தால் “கமிஷன்” கொடுப்பதாகவும் கூறி இருக்கின்றனர். இதுபோன்ற பல அக்கிரமங்களையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் தனது ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு இப்பொழுது முழுநேரமாக கல்வி சம்பந்தமாக ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறார். இவரைச் சந்தித்தும் கல்வி தொடர்பான ஆலோசனைகளைப் பெறலாம்.

**2 வருடத்தில் 200 மொழிகள் கற்கும் கலை**

2 வருடத்தில் 200 மொழிகள் கற்கும் கலை என்ற தலைப்பில் படியுங்கள். திரு. மொழிப்பிரியன் என்பவர் 200 மொழிகளை தானும் கற்று தன் 10 வயது மகனுக்கும் கற்றுக் கொடுத்துள்ளார். உங்கள் குழந்தைகளுக்கும் பல மொழிகளை கற்றுக் கொடுங்கள்.

**மிட் பிரைன் ஏக்டிவேசன் (Mid brain Activation)**

மிட் பிரைன் ஏக்டிவேசன் என்ற தலைப்பில் கட்டுரை, வீடியோ, யூடியூப் பாருங்கள். கண்களை மூடிக்கொண்டு குழந்தைகள் படிக்கிறது எனபல மோசடி நிறுவனங்கள் பெற்றோரையும். குழந்தைகளைப் ஏமாற்றி வருகிறது. படித்து, புரிந்து தெளிவு பெறுங்கள்.

**சிறந்த கல்விமுறை**

உலகில் மிகச்சிறந்த கல்விமுறையை கொண்டுள்ளது பின்லாந்து நாடு. பின்லாந்து கல்விமுறை என்ற தலைப்பில் இதைப்பற்றிய கட்டுரையில் காணலாம்.

இதுவரை நான் இங்கு குறிப்பிட்டிருந்த, பகிர்ந்து கொண்ட பல தகவல்களும் பல கட்ட ஆய்வுகளுக்குப் பின்னர் சேகரிக்கப்பட்டவை. கல்வியில் இன்று சிறப்பாக செயல்பட்டு வரும் குறிப்பிடத் தகுந்தவர்களை அடையாளம் கண்டு இன்றைய கல்வியை மேம்படுத்துவதற்கான துவக்கம் தான் இது.

இதை நான் மட்டுமே செய்து கொண்டு இருக்க இயலாது. என்னுடன் பலரும் இந்த முயற்சியில் கைகோர்க்கவேண்டும். அதற்கான தளத்தை நான் உருவாக்கி உள்ளேன்.

நல்லதை செய்ய நினைப்பவர்கள் யாவரும் ஒன்றிணைந்து செயல்படுவது இல்லை. ஆனால் கெட்டதே செய்யும் பலரும் அவர்களுக்குள் ஒற்றுமையாக செயல்படுகிறார்கள். அதனால் அவர்களின் செயல்கள் நம்மை பாதிக்கின்றன. ஆனால் நல்லவர்கள் யாரும் இப்படி ஒன்று சேர்ந்து இயங்குவதில்லை. நல்லவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துவிட்டால் அவர்கள் யாரும் நம்மை நெருங்கக் கூட முடியாது.

நான் மட்டுமே முன்னேற வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தை விட்டு நாம் அனைவரும் முன்னேற வேண்டும் என்ற பரந்த நோக்கத்தில் ஒருவருக்கு ஒருவர் கைகொடுத்து உதவினால் நிச்சயம் நமது நிலைமாறும். நல்லவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் ஒற்றுமையாக இல்லாமல் இருப்பதே நமது பலவீனம் என்பதைப் புரிந்து கொண்டு இனிமேல் நாம் இணைந்து செயல்படுவோம்.

கல்வியின் இன்றைய நிலை குறித்த பதிவுகளாக இரண்டு திரைப்படங்கள் வந்திருக்கின்றன. அதையும் இங்கு குறிப்பிடுகிறேன். “அப்பா” மற்றும் “அம்மா கணக்கு” ஆகிய படங்கள் உங்களுக்கு இன்றைய கல்வியைப் பற்றி தெளிவாக விளக்கும்.

பானுவீட்டுக்கல்வி முறையை பின்பற்றலாம் என முடிவெடுக்கும் முன்னர் இங்கு நான் சுருக்கமாக குறிப்பிட்டவற்றையும் இதன் பின்னர் வரும் பகுதிகளையும் முழுவதுமாகப் படித்து அறிந்து கொண்டு ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். அதுவரை உங்கள் குழந்தைகள் தற்போதைய கல்வி முறையைக் தொடர்ந்து கொண்டு இருக்கட்டும். உங்களுக்கு ஒரு தெளிவு ஏற்பட்ட பின்னர் இந்த தளத்தில் நாம் குறிப்பிட்டுள்ளவாறு கல்வியைத் தொடரலாம்.

கல்வியை ஒழுங்குப்படுத்து வதற்காக என்னுடன் இணைந்து சிறப்பாக செயல்படும் அன்பர்கள், நண்பர்கள், கல்வியாளர்கள் ஆகியோரை பற்றி குறிப்பிடுவதென்றால் அதுவே ஒரு பெரிய பட்டியலாய் நீளும். அவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம் !
கல்வியை மேன்மைப்படுத்துவோம் !
வாழ்க வையகம்! வாழ்க வளமுடன் !!

லோக்கலா வாழ்வோம் ! குளோபலா யோசிப்போம் !
- ஹீலர் பாஸ்கர்

# இந்த புத்தகத்தின் மூலம் என்னென்ன கற்றுக் கோள்ளலாம் என்பதை பின்வருமாறு அறியலாம்.

1. திருமணத்திற்கு முன்பு ஆணும், பெண்ணும் பின்பற்ற வேண்டியவை என்னென்ன?

2. கர்ப்ப காலத்தில் பெண்கள் எவ்வாறு இருக்கவேண்டும்?

3. தடுப்பூசிகள், மருந்து, மாத்திரைகள் ஆகியன இல்லாமல் சுகப்பிரசவமாக குழந்தை பெற்றுக் கொள்ள வழி என்ன?

4. தொப்புள் கொடியை வெட்டாமல் எப்படி குழந்தையை வளர்ப்பது?

5. முதல் ஒருவருடத்தில் குழந்தையை எவ்வாறு வளர்க்கவேண்டும்?

6. என்ன மொழியில் குழந்தையை கல்வி கற்கச் செய்யவேண்டும்?

7. ஜெர்மனியில் உள்ள கல்விமுறைக்கும், இந்தியாவில் உள்ள கல்விமுறைக்கும் என்ன வேறுபாடு?

8. ஒன்று முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வியை பள்ளிகளில் எவ்வாறு கற்றுத்தரவேண்டும்?

9. 5 வயது முதல் 12 வயது உரை உள்ள குழந்தைகளுக்கு பள்ளியில் பாடத்திட்டம் எவ்வாறு இருக்கவேண்டும்?

10. 12 வயதிற்கு மேல் எதைப் படிக்கவேண்டும்?

11. 2 வருடத்தில் 200 மொழிகளைக் கற்றுக் கொள்வது எப்படி?

12. கண்களை மூடிக்கொண்டு படிப்பதாக உள்ள பயிற்சிக்கு Midbrain Activation குழந்தைகளை அனுப்பலாமா?

13. பின்லாந்து நாட்டில் கல்வியை எவ்வாறு கற்றுத் தருகிறார்கள்?

14. கார்ட்டுன் சேனல்களை குழந்தைகள் ஏன் விரும்பிப் பார்க்கிறார்கள்? படிப்பில் ஏன் அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை?

15. பரீட்சையில் நிறைய மதிப்பெண்கள் எடுப்பது நல்லதா? கெட்டதா?

16. ஒரு ஆசிரியர் என்பவர் எப்படி இருக்கவேண்டும்?

17. பள்ளிகள் அல்லது கல்லூரிகள் எப்படி இருக்கவேண்டும்?

18. குழந்தைகளை எவ்வாறு நடத்த வேண்டும்?

மேற்சொன்னவாறு உள்ள பல விசயங்களையும், இதுவரை யாரும் கற்றுத்தராத பல புதிய கருத்துக்களையும் உங்களுக்கு இந்தப் புத்தகம் கற்றுத்தரும். எனவே இந்தப் புத்கத்தை முதலில் பொறுமையாக முழுவதும் படியுங்கள். அதன் பின்னர் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில பள்ளிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு வாருங்கள். அத்துடன் இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில நபர்களை அவர்களிடம் முன் அனுமதி பெற்று நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறு ஒரு வருடத்தினை கல்வி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியினை முடிவு செய்து கொண்டு உங்கள் குழந்தைகளை இதுபோன்ற கல்விமுறைக்கு மாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். அவசரப்பட்டு திடீரென முடிவெடுத்து குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடவேண்டாம்.

இந்தப் புத்தகத்தின் சில பகுதிகளை மட்டும் மேலோட்டமாக படித்துவிட்டு, அரைகுறையாக அறிந்துகொண்டு எந்த முடிவிற்கும் வரவேண்டாம். உங்கள் குழந்தைகளையோ, கல்வி நிறுவனங்களையோ குறை கூறுவதை விட்டு விட்டு முதலில் இந்தப் புத்தகத்தை முழுவதுமாகப் படித்துப் புரிந்து கொள்ளுங்கள். இது தான் சிறந்த தீர்வாக அமையும்.




உணவுர்களை Positive ஆக மாற்றினால்,
உங்கள் வாழ்க்கை Positive ஆக மாறும்

பாகம் 1



# பானு வீட்டுக் கல்விமுறை

பானு வீட்டுவழிக்கல்வி முறை என்பது ஒரு ஆரம்பம் மட்டும் தான். இதனது கொள்கைகளும், புரிதல்களும் அவ்வப்போதைய சூழலுக்கு ஏற்ப அடிக்கடி மாற்றப்பட்டு கொண்டே இருக்கும்.

இது தொடர்பாக மேலும் விபரங்கள் வேண்டுவோர் www.selfeducationathome.org என்ற இணையதளத்தில் பார்வையிடலாம். இவற்றை யூடியூப்பில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உங்களுடைய கேள்விகளை selfeducationathome@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

கல்வி தொடர்பான மேலும் உங்கள் தேவைகளுக்கு கீழ்க்கண்ட எண்களில் +91 8220667135 மற்றும் +91 8220667120 தொடர்பு கொள்ளலாம்.

வீட்டுக் கல்வி முறை என்ற இந்தக் கட்டுரையின் மூலம் பல்வேறு கேள்விகளுக்கு நாம் பதில் தெரிந்து கொள்ள இருக்கிறோம்.

1. உலகில் பல கல்வி முறைகள் இருக்கின்றன. இதில் எந்தக் கல்வி முறை சிறந்தது?
2. வாழ்க்கையில் நிம்மதியாக வாழ்வதற்கு கல்வி தேவையா?
3. படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் துன்பமும், துயரமும் சமமாக வருகிறதே ஏன்?
4. கல்வியில் புரட்சி தேவையா?
5. கல்வி சீர் கெட்டுவிட்டது என்று கூறுகிறார்கள்.

அதைக் கெடுத்தது யார்? அவர்களின் நோக்கம் என்ன? இதுபோன்ற பல்வேறு கேள்விகளுக்கு இங்கு நாம் விடைக்காண இருக்கிறோம். இந்தக் கட்டுரையைக் கல்விப் புரட்சி என்றே கூறலாம்.

## கல்வி என்றால் என்ன ?

இந்த உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இந்த உலகத்தில் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை விசயங்களைக் கற்றுக் கொள்ளும் ஒரு

அமைப்பிற்குப் பெயர் தான் கல்வி. அதாவது ஒரு மனிதன் அமைதியாக, நிம்மதியாக, சந்தோசமாக, ஆரோக்கியமாக, நல்ல தொழில் செய்து, வியாபாரம் செய்து குடும்பத்துடன் வளமாக அதே சமயத்தில் ஒழுக்கத்துடன் நன்னெறியுடன், அறத்துடன், தர்மத்துடன் வாழ்வதற்குத் தேவையான எல்லா நல்ல விசயங்களையும் கற்றுக் கொள்ளும் முறைக்குப் பெயர் தான் கல்வி.

ஆனால் இப்பொழுது பல்வேறு கல்வி முறை மூலம் கற்றவர்கள், அமைதியாக, நிம்மதியாக, சந்தோசமாக இருக்கிறார்களா என்பதை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்.கண்டிப்பாக இல்லை என்ற பதில்தான் வரும். ஏன்?

படித்தவர்களுக்கும் நோய் வருகிறது. படிக்காதவர்களுக்கும் நோய் வருகிறது. படித்தவர்களும் பிச்சை எடுக்கிறார்கள். படிக்காதவர்களும் பிச்சை எடுக்கிறார்கள். படித்தவர்களும், படிக்காதவர்களும் குடும்பத்தில் நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்.

படித்தால் தான் அதாவது கல்வி கற்றால் தான் இந்த உலகத்தில் வாழ முடியும் என்று ஒரு கட்டாயம் நிச்சயமாக இல்லவே இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். அதாவது இந்த உலகத்தில் நிம்மதியாக வாழ்வதற்குத் தேவையான அறிவு ஏதாவது ஒருவகையில் நமக்குக் கிடைத்தால் போதுமே தவிர பள்ளிக்கூடம் செல்லவேண்டும், கல்லூரிக்குச் செல்ல வேண்டும், படித்துப் பட்டம் பெற வேண்டும். சர்டிபிகேட் எனப்படும் அரசு சான்றிதழ் என்ற அங்கீகரிக்கப் பட்டவைகளை பெற வேண்டும் என்ற அவசியமே இல்லை என்பதைப் புரிந்து கொள்வோமாக !

கல்வித்திட்டத்தில் எதையெல்லாம் முக்கியமாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமோ இன்றைக்கு அவற்றையெல்லாம் கற்றுக் கொடுப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உதாரணமாக டாக்டரேட் பட்டம் பெற்ற ஒருவருக்கு எப்படிச் சாப்பிடவேண்டும் என்பது கூட தெரியவில்லை. ஒழுங்காக சுவாசிக்கத் தெரியவில்லை, தண்ணீர் குடிக்கத் தெரிவதில்லை. உடல் உழைப்பைப் பற்றி தெரியவில்லை. நிம்மதியாக தூங்கத் தெரியவில்லை. மனம் எங்கே இருக்கிறது? அதை எப்படி அமைதியாக வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை. புத்தியை ஒழுங்காக வைத்துக்கொள்ளத் தெரியவில்லை. சந்தோசமாக வாழத் தெரியவில்லை, காதல் செய்யத் தெரியவில்லை, ஆரோக்கியமாக இருக்கத் தெரியவில்லை, நிம்மதியாக வாழத் தெரியவில்லை, குடும்ப அமைதியைக் காக்கத் தெரியவில்லை, ஆன்மிகம் தெரிய வில்லை, எனவே இப்பொழுதிருக்கும் கல்வி என்பது மேலே சொன்ன எதையும் நமக்குக் கற்றுக்கொடுப்பதில்லை என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்.

இப்பொழுது நாம் கற்றுக் கொண்டிருக்கும் கல்வி, குறிப்பாக இந்தியாவில் கற்பிக்கப்படும் கல்வி எதற்காக உருவாக்கப்பட்டது எனில் மக்களை ‘மரமண்டை’களாக ஆக்குவதற்கு என்பதை தயவு செய்து புரிந்துகொள்ளுங்கள். இந்த உலகத்தையே ஆண்டு கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் பதின்மூன்று குடும்பத்தைச் சேர்ந்த ‘இலுமினாட்டிகள்’ என்ற இரகசிய குடும்பத்தினரால் உருவாக்கப்பட்ட போலிக் கல்வித் திட்டத்தினைத்தான் இன்று எல்லா நாடுகளிலும் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அதனால் தான் நமக்கு எதுவுமே

புரிவதில்லை என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.



இந்த இலுமினாட்டிகள் உலக நாடுகளில் உள்ள மக்களுக்கான கல்வித் திட்டத்தினை கடந்த 250 ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, குழப்பி, நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விசயங்களை மறைத்து தவறான விசயங்களை அறிவு என்ற பெயரில் நமது குழந்தைகளுக்கும், நமக்கும் திணித்து நம்மை பொம்மைகளாகவும், நடைபிணங்களாகவும் நடத்தி வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இந்தியாவில் மட்டுமல்ல அனைத்து நாடுகளிலுமே அவரவர்களின் தாய் மொழிக் கல்வி என்பதுதான் மிகவும் சிறப்பு வாய்ந்தது. உதாரணமாக பிரான்ஸ், ஜெர்மன் போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்று வந்தவர்களுக்கு இந்த விசயம் நன்கு தெரியும். பிரெஞ்சு மொழியிலும், ஜெர்மன் மொழியிலும் உள்ள கல்வி சிறப்பாக இருக்கிறது. இதனை ஆங்கில மொழிக் கல்வி முறையாக மாற்றப்படும் பொழுது குழப்பத்திற்கு அழைத்து செல்கிறது.

தாய்மொழியான தமிழ் மொழியில் நமது கல்விமுறைகள் இருக்கும் வரை அனைத்தும் ஒழுங்காகத்தான் இருந்தது. எப்பொழுது ஆங்கில வழிக் கல்வி உள்ளே நுழைந்ததோ அப்பொழுதே தவறான விசயங்கள் கற்பிக்கப்பட்டு அதை நாம் சரி என்று புரிந்து கொண்டிருக்கிறோம். பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் ஆங்கிலம் நுழைந்தவுடன் குழப்பங்கள் அதிகரித்து தரமான தாய்மொழிக்கல்வி சிதையத் தொடங்கியது. உலகம் முழுவதும் ஆங்கில வழிக் கல்வியாக மாற்றுவதே இந்த பதின்மூன்று குடும்பத்தினரின் (இலுமினாட்டிகள்) திட்டம்.

நமது கல்வித்திட்டம் ஒழுங்காக, சிறப்பாகத்தான் இருந்தது. இலுமினாட்டிகள் தான் அரசியல் வாதிகளையும், அதிகாரிகளையும் பயன்படுத்தி அதனைக் குழப்பி வைத்து இருக்கிறார்கள். எனவே நாம் அதிலிருந்து வெளியே வரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.நாம் படித்துக் கொண்டிருக்கும் வரலாறு, சத்தியமாக உண்மையான வரலாறு இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அனைத்து நாடுகளிலும் இதுபோலவே மாற்றி எழுதப்பட்ட வரலாறுகள் தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதே போல அறிவியலை சற்றுத் திரித்து வியாபார நோக்கத்துடன் தான் எழுதியிருக்கிறார்கள். உதாரணமாக நோய்கள் அனைத்தையும் கண்டிப்பாக குணப்படுத்த முடியும் என்று நபிகள் நாயகம், ஏசுநாதர், திருவள்ளுவர், திருமூலர், வள்ளலார் மற்றும் பல்வேறு ஞானிகளும், யோகிகளும் தெளிவாகக் கூறியிருக்கும் நிலையில் இப்பொழுதுள்ள அறிவியலின் படி எந்த வியாதிகளையும் குணப்படுத்த முடியாது என்று தவறாக மாற்றி எழுதி வைத்திருக்கிறார்கள்.

நாம் ஒழுங்கான வாழ்க்கை முறையை மேற்கொண்டால் ஆயிரம் ஆண்டுகள், இரண்டாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ முடியும் என்று கூறிய முன்னோர்களின் இரகசியங்களை மறைத்து நாற்பது வயதுக்கு மேல் நோய்கள் வரும், கண்பார்வை குறைவு வரும் என்று அறிவியலைக் தலைகீழாக திருப்பி எழுதி வைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு நாட்டு மொழிகளையும், அறிவியலையும், வரலாற்றையும் ஏன் புவியியலையும் கூட

இலுமினாட்டிகளுக்குத் தகுந்தாற்போல் மாற்றிவைத்து நம்மைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஐம்பது அல்லது நூறுவருடங்களுக்கு முன்பு இருந்த அனைத்து நாடுகளிலுள்ள தாய்மொழிக் கல்வியில் நல்ல விசயங்கள் மட்டுமே இருந்திருக்கிறது. அதை சிறிது சிறிதாக மாற்றி அந்தக் கல்வித்திட்டத்தை மொத்தமாக மாற்றி வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் குழந்தைகளை தயவு செய்து பள்ளிக்கோ, கல்லூரிக்கோ அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு சொன்னவுடன் உங்களுக்கு பல்வேறு கேள்விகள் எழும். வேறு எப்படி குழந்தைகளுக்கு உலக விசயங்களை கற்றுக்கொடுப்பது? எவ்வாறு அரசு சான்றிதழ் பெறுவது? எப்படி வேலைக்கு அனுப்புவது? பின்னர் எப்படி சம்பாதிப்பது? என்று பல்வேறு கேள்விகள் வரும். இதற்கான அத்தனை பதில்களையும் இந்தக் கட்டுரை உங்களுக்குத் தெளிவாகக் கூறும் என்று நம்புகிறேன்.

நான் ஏற்கனவே ‘பீஸ் ஓ மாஸ்டர்’ என்ற பெயரில் உலக அரசியல் பற்றிப் பேசியிருக்கிறேன். அதனைக் கேட்டவர்களுக்கு நான் இப்பொழுது சொல்வது தெளிவாகப்புரியும் இல்லையென்றால் அதை முழுவதும் கேட்ட பின்னர் இக்கட்டுரையைப் படியுங்கள்.

இந்த உலகில் உள்ள அனைத்து நாடுகளையும் இஸ்ரேலில் உள்ள பதின்மூன்று குடும்பங்களைச் சேர்ந்த இலுமினாட்டிகள் என்னும் இரகசியக் குடும்பத்தினர் பிடித்து வைத்துக் கொண்டு பொதுமக்களுக்கே தெரியாமல் ஆட்டிவைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களால் இதை எப்படி செய்ய முடிகிறது என்றால் இவர்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு நாம் படிக்கும் கல்வியைப் போன்ற சாதாரணக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதே கிடையாது. அவர்களை பள்ளிகளுக்கோ, கல்லூரிகளுக்கோ அனுப்புவதே கிடையாது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இலுமினாட்டிகளின் குடும்பத்தைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளும் பிறப்பிலேயே ஐம்பது மொழிகள் அனைத்து அறிவியல், உண்மையான வரலாறுகள் வாழ்க்கை இலட்சியம் இறைபக்தி எல்லாவிதமான தில்லு முல்லுகள் ஆகிய அனைத்தையும் கற்றுக் கொண்டு தான் அம்மாவின் வயிற்றிலிருந்து வெளியே வருகின்றனர்.

## இது உண்மையா ?

இது சாத்தியமா? என்று பலர் கேள்வி எழுப்பலாம். உண்மையிலேயே இது சாத்தியம் தான். இது எவ்வாறு சாத்தியம் என்று நம்புவதற்கு ஒன்றைக் கூறுகிறேன்.

ஒரு கணவனும், மனைவியும் குழந்தை பெற்றுக் கொள்வதற்கு முன்பாக, பல விசயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

1. “அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை” என்ற பெயரில் ஹீலர் பாஸ்கர் ஆகிய நான் நடத்தும் அனாடமிக் தெரபி நிகழ்ச்சியில் நேரடியாக வந்து கலந்து கொள்ள வேண்டும் அல்லது டிவிடி மூலமாக பார்த்தோ அல்லது புத்தகத்தின் மூலமாகப் படித்தோ அறிந்திருக்க வேண்டும்.

2. “மனதின் மணம்” என்னும் தலைப்பில் நான் பேசியிருப்பதை முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும்.

3. “இரகசியம்” (Secret) என்னும் டாக்குமென்ட்ரி படத்தினை பார்த்திருக்க வேண்டும்.

4. “ரங்கராட்டின இரகசியம்” என்பதைப் பற்றி அறிந்திருக்கவேண்டும்.

5. பீஸ் ஓ மாஸ்டர் (Peace o Master) என்ற பெயரில் “உலக அரசியல்” பற்றி நான் பேசியவற்றை முழுமையாக அறிந்திருக்கவேண்டும்.

6. “பெண்களே உங்களுக்காக” மற்றும் “இறைவழியில் இனிய சுகப்பிரசவம்” என்ற தலைப்பில் டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான் அவர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்திருக்கவேண்டும்.

மேலும் நமது அலுவலகத்தினைத் தொடர்பு கொண்டு கோவையை சேர்ந்த திருமதி. சாய்தேவி மற்றும் திருமதி. கோமதி ஆகியோரது தொலைபேசி எண் களைப் பெற்றுக் கொண்டு சுகப்பிரசவத்திற்கு உதவி செய்யும் இத்தகைய நல்ல ஆத்மாக்களோடு பெண்கள், குழந்தைகள் ஆரோக்கியம் குறித்த தகவல்களை அறிந்து வைத்திருக்கவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட விசயங்களை எல்லாம் கவனமாகப் புரிந்து கொண்டு அவற்றை செயல் படுத்திய பின்னர் இனிமேல் நான் கூற போகும் விசயங்களையும் சேர்த்துக் கடை பிடித்தால் நிச்சயமாக குழந்தை பிறக்கும் பொழுதே மிகப்பெரிய அறிவாளியாக உலகில் மிகப்பெரிய மனிதனாக, நிம்மதியாக வாழும் ஒரு குழந்தையை நம்மால் பெற்றெடுக்க முடியும்.

கர்ப்பகாலத்தின் போது தாய்மார்கள் எதையெல்லாம் கேட்கிறார்களோ, எதையெல்லாம் பார்க்கிறார்களோ, எதையெல்லாம் உணர்கிறார்களோ, எதையெல்லாம் நம்புகிறார்களோ அது பிறக்கப்போகும் குழந்தையின் ஆழ்மனதில் பதிந்து அந்தக் குழந்தை அதுவாக மாறிவிடுகிறது.

உதாரணமாக, கர்ப்பகாலத்தில் ஒரு பெண் மைக்கேல் ஜாக்ஸன் ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தால் குழந்தை பிறந்து வெளியே வந்தவுடன் மைக்கேல் ஜாக்ஸன் பாடலுக்கு எவரும் சொல்லிக் கொடுக்காமலே ஆட ஆரம்பித்து விடுகிறது.

கர்ப்பகாலத்தின் போது வேதாத்திரி மகரிஷி ஐயா அவர்களின் பேச்சை ஆடியோவில் கேட்டுக் கொண்டிருப்பாரானால் குழந்தை அதுவாக மாறிவிடுகிறது.



ஒருவேளை “பாழாய்ப் போன டிவி நாடகங்களைப் பார்த்து கொண்டிருந்தால் உங்கள் குழந்தை அதுவாகத்தான் வளரும்” என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உதாரணமாக எனது அம்மா நான் கர்ப்பத்தில் இருந்த சமயத்தில் நடிகர் மோகன் நடித்த படங்களை விரும்பிப் பார்த்திருக்கிறார். மோகன் என்ற தமிழ் திரைப்பட நடிகர் அதிகமான படங்களில் மைக்கைப் பிடித்து பாடிக்கொண்டே இருந்ததாலோ, என்னவோ நான் இப்பொழுது தினமும் ஐந்துமணிநேரம் முதல் எட்டுமணிநேரம் வரை மைக்கைப் பிடித்து பேசிக் கொண்ட இருக்கிறேன்.

கர்ப்ப காலத்தில் தாய் ஒரு விசயத்தைக் கற்றுக்கொண்டால் தான் குழந்தை கற்றுக்கொள்ளும் என்று அர்த்தம் இல்லை. தயவு செய்து புரிந்து

கொள்ளுங்கள். கர்ப்பகாலத்தில் ஒரு தாய் எந்த விசயத்தைக் கேட்கிறாரோ, பார்க்கிறோரோ அதைப் பற்றி அந்தத் தாய்க்குப் புரியாவிட்டாலும் அக்குழந்தை புரிந்து கொள்கிறது என்ற மாபெரும் உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

உதாரணமாக கர்ப்ப காலத்தில் ஒரு அம்மா ஜெர்மன் மொழியைக் கற்றுக் கொள்வதற்காக ஒரு வகுப்பிற்கு செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்பெண்மணிக்கோ ஜெர்மன் மொழி சிறிதும் புரியவில்லை. ஆறுமாதகாலம் அந்த மொழியைக் கற்றுக் கொள்வதற்காக தினமும் சென்று வந்து கொண்டிருக்கிறார். இந்நிலையில் அவருக்குக் குழந்தை பிறந்தவுடன் யாரும் அக்குழந்தைக்கு ஜெர்மன் மொழியைக் கற்றுக் கொடுக்காமலேயே அது பேச ஆரம்பித்துவிடும். ஆனால் அந்த அம்மாவிற்கு ஜெர்மன் மொழி தெரியாது. ஏனென்றால் அந்த அம்மா கர்ப்பம் தரித்த நாள் முதல் அது குழந்தையாக வெளியே வரும் நாள்வரை எந்த ஒரு விசயத்தையும் அந்தக் குழந்தைக்கு ஒரே ஒரு முறை சொன்னால் போதும். அதன் மனதில் நன்கு பதிவாகிவிடுகிறது. இதுவே குழந்தை பிறந்தது முதல் ஐந்து வயது வரை ஒரு விசயத்தைப் பலமுறை சொல்ல வேண்டியது இருக்கும். அப்பொழுது தான் புரியும்.

அதேபோல ஐந்துவயது முதல் பத்துவயது வரை உள்ள காலகட்டத்தில் பலமுறை ஒரு விசயத்தை சொல்ல வேண்டி இருக்கும். அதுவே பத்து வயது முதல் பனிரெண்டு வரை உள்ள காலகட்டத்திலோ மேலும் பலமுறை சொல்லவேண்டியது இருக்கும். இந்த இடத்தில் ஒரு முக்கியமான விசயத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். அதாவது பனிரெண்டு வயதிற்கு மேல் பலநூறு முறை சொல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவேதான் நமது முன்னோர்கள் குருகுலக் கல்வி என்ற முறையில் பனிரெண்டு வயதிற்கு முன்னரே ஒரு குருநாதரிடம் கல்வி பயில சேர்த்துவிடுவார்கள். பனிரெண்டு வயதிற்குப் பின்னர் சேர்த்துக் விடுவதனால் அந்தக்குழந்தைகளுக்கு புரிய வைப்பது சிரமம் என்ற காரணத்தினால் இந்த முறையைப் பயன்படுத்தி வந்தார்கள்.

பனிரெண்டு வயதிற்குள் ஒரு குழந்தைக் கான கல்வியை பயிற்றுவித்து விட வேண்டும். அப்பொழுது தான் அந்தக் கல்வி பயனுள்ளதாக அக்குழந்தைக்கு அமையும். அதற்குப் பின்னர் எதைக் கற்றுக் கொடுத்தாலும் அக்குழந்தையால் ஒழுங்காகப் புரிந்துகொள்ள முடியாது என்பதை நாம் புரிந்து கொள்வோமாக !

எனவே பனிரெண்டு வயதிற்குள் கணிதம், அறிவியல், வரலாறு வாழ்க்கையின் இலட்சியம், மன நிம்மதி, ஆரோக்கியம், சந்தோசம், குடும்ப நலம் போன்ற அனைத்து விசயங்களையும் கற்றுக் கொடுத்துவிட வேண்டும். ஆகவே கர்ப்ப காலத்திலிருந்தே பெண்கள் பல்வேறு மொழிகளைக் கற்றுக்கொள்ள பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லுங்கள். உங்களுக்குப் புரிந்தாலும் சரி, புரியா விட்டாலும் சரி, அந்தக் குழந்தைக்காக நீங்கள் செல்லவேண்டும். இது மட்டுமல்லாமல் பாட்டு, நடனம். வாஸ்த்து, யோகா, ஜோதிடம், ஆரோக்கியம், ஆன்மீகம், அலங்காரப் பொருள் தயாரிப்பு என்று பல்வேறு விதமான நல்ல பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டும்.கர்ப்ப காலத்தில் இவ்வாறான பயிற்சி வகுப்புகளுக்கு சென்றுவரும் பொழுது பிறக்கும் குழந்தை ஆரோக்கியமாக, அறிவுள்ளதாக, திறமையாக இருப்பதற்கு நீங்கள் கற்றுக் கொடுக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

கணவன், மனைவியிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படுவது, டிவி நாடகங்களைப் பார்ப்பது, டிவியில் கெட்ட விசயங்களைப் பார்ப்பது, தினசரி பத்திரிக்கை புத்தகங்களில் ஒழுங்கற்ற கெட்ட விசயங்களை படிப்பது என இவற்றையெல்லாம் பெண்கள் கர்ப்ப காலங்களில் சந்திப்பதால் தான் இப்பொழுதுள்ள குழந்தைகள் இதன் பாதிப்பால் ஒழுங்கானவர்களாக இல்லை. எனவே கர்ப்ப காலத்தில் உள்ள ஒரு அம்மாவின் மனம் பத்து மாதங்களில் காது, மூக்கு, கண் என இவற்றால் இதில் எதையெல்லாம் கேட்கிறார்களோ எதையெல்லாம் பார்க்கிறார்களோ, எவற்றையெல்லாம் கற்றுக் கொள்கிறார்களோ அவற்றின் பாதிப்பில் தான் குழந்தை வெளிவரும். குழந்தை பிறந்த பின்னர் எந்த நகரத்தில் எந்த பெரிய பள்ளியில் சேர்க்கலாம்? அதற்கு பணம் சம்பாதிக்க வேண்டுமே என்று யோசிப்பதை விட்டுவிட்டு கர்ப்ப காலத்திலேயே கல்வியை கற்பித்து முடித்துவிடலாம்.

இதற்கென பல பாடத் திட்டங்களையும், பல்வேறு வழிமுறைகளையும் நாம் ஆய்வு செய்து வருகிறோம். விரைவில் அது உங்கள் பயன்பாட்டிற்கு வரும். அதற்கு சில வருடங்கள் ஆகும். ஏனென்றால் உடனே செய்வதற்கு அது ஒன்றும் 'நூடுல்ஸ்' கிடையாது. எனவே இப்போதைக்கு அதாவது கர்ப்ப காலத்திலிருந்து குழந்தை பெற்றுகொள்ளும் காலம் வரை உங்களுக்கு எவை எவை நல்ல விசயங்கள் என்று தோன்றுகிறதோ எவையெல்லாம் உங்கள் குழந்தைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அது சம்பந்தப்பட்ட வீடியோக்கள், புத்தகங்கள், வல்லுனர்களின் பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை தேடிச் செல்லுங்கள்.

விரைவில் நாமே இவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்து கொடுத்து நல்ல விசயங்களை உங்களுக்கு வழங்க பல ஏற்பாடுகள் செய்ய இருக்கிறோம். அப்பொழுது உங்களுக்குத் தேவையான ஆடியோ, வீடியோ, புத்தகங்கள், ஹார்டுடிஸ்க், பாடத்திட்டங்கள் ஆகியன விரைவில் உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது.

இது சாத்தியமாக வேண்டு மென்றால் நாம் இப்பொழுது சொல்லும் வழிமுறைகளை கண்டிப்பாக அனைவரும் கடைபிடிக்கவேண்டும்.

குழந்தைகள் வாய் பேச ஆரம்பித்த நாள் முதல் பனிரெண்டு வயதிற்குள் இலட்சக்கணக்கான கேள்விகளைக் கேட்கிறார்கள். அந்த கேள்விகளுக்கு சரியான பதிலை மட்டும் கொடுத்து வந்தோம் என்றால் உலகில் உள்ள அனைத்து விசயங்களிலும் கை தேர்ந்த ஒரு ஞானியாக, புத்திசாலியாக பனிரெண்டு வயதிற்குள் அந்தக் குழந்தை உருவாகிறது. ஆனால் பெற்றோர்களும், மற்றவர்களும் குழந்தை தானே என்று நினைத்து கேட்கும் கேள்விகளுக்கு தவறான பதில்களையும், கேலிப் பேச்சுகளை மட்டும் தான் அந்தக் குழந்தையின் காதில் பதிலாகக் கூறுவதால் அதைக் கேட்டு வளரும் குழந்தை பெற்றவர்களையும், மற்றவர்களையும் மதிப்பது இல்லை.

உதாரணமாக ஒரு குழந்தை வானத்தைப் பார்த்து நிலாவைப் பார்த்து அது என்ன என்று கேட்கும் பொழுது பெற்றோர்கள் தமாசாக அது பாட்டி சுட்ட அப்பளம் என்று கூறும்பொழுது குழந்தை முதலில் அதை நம்பிவிடுகிறது. அந்தக் குழந்தை மற்ற குழந்தைகளிடமோ வேறு பெரிய மனிதர்களிடமோ இதைப்பற்றி கூறும்

பொழுது அவர்கள் நகைச்சுவையாக சிரித்துவிட்டு 'நீ கூறுவது தவறு' என்று கூறும்பொழுது அவமானமாகி விடுகிறது. அதன் பிறகு பெற்றோர்கள் எப்பொழுதுமே சரியான பதிலைத் தரமாட்டார்கள் என்று ஒரு முடிவிற்கு அந்தக் குழந்தை வருகிறது.

எனவே இனிமேல் குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் தெரிந்தால் தெரியும் என்று கூறுங்கள். தெரியாது என்றால் தெரியாது என்று கூறுங்கள். உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்த விசயத்தை மட்டுமே கூறுங்கள். ஒருவேளை தெளிவாக தெரியவில்லை என்றால் எனக்குத் தெரியவில்லை என்று ஒப்புகொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு பதில் கூறும் பொழுதும், பதில் கூறி முடித்த பின்னரும் "எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான் இன்னும் நிறைய விசயங்கள் இருக்கின்றன. விரைவில் அவற்றை யெல்லாம் நீ கற்றுக்கொள்" என்று கூறி குழந்தைகளை உற்சாகப்படுத்துங்கள்.

இந்த நேரத்தில் ஒரு விசயத்தினை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இண்டர்நெட், கூகுள், விக்கிப்பீடியா, செய்திதாள்கள் என எல்லாவற்றிலும் வெளியாகும் விசயங்கள் முற்றிலுமாக உண்மையில்லை என்று நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். குழந்தைகளுக்கும் இதைப் புரியவையுங்கள். இதை மட்டும் ஒரு குழந்தை நன்றாகப் புரிந்து கொள்ளுமானால் சரியான அறிவை அது தேடிப் பெற்றுக் கொள்ளும்.

குழந்தைகளுக்கு சரியான ஞானத்தைக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. எனவே இனிமேல் குழந்தைகளைக் கல்வி கற்க பள்ளிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. அந்தக் குழந்தைகளின் அறிவை விரிவுபடுத்த அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதிலைக் கூறி வளர்த்து வரும்பொழுது ஞானம் பிறக்கிறது.

இப்பொழுது உங்களுக்கு ஒரு கேள்வி கேட்கத் தோன்றும் "சரி நீங்கள் சொல்வது புரிகிறது. ஆனால் பெற்றோர் களுக்கு இதற்கென நேரம் இல்லை என்ன செய்வது?"

"பெற்றோர்களான எங்களுக்கே இன்னும் பல விசயங்கள் புரியவில்லை. நாங்கள் எப்படிக் குழந்தைக்கு கற்றுக் கொடுப்பது"

"இதைவிட ஒரு ஆசிரியருக்குத் தெரிந்த விசயங்கள் அனைத்தையும் நாங்கள் எப்படித் தெரிந்து கொண்டு கற்றுக்கொடுப்பது?"

நீங்கள் கேட்பது சரிதான். புரிந்துவிட்டது. எங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க நேரமும் இல்லை. மேலும் எல்லா விசயங்களும் தெரிந்தவர் களும் இல்லை. எனவே நாங்கள் என்ன செய்வது? என்ற கேள்வி எழும்.

இதற்கு தீர்வு காண்பதற்காகத் தான் நான் ஒரு அமைப்பை உருவாக்கி இருக்கிறேன். அதற்குப்பெயர் பானு வீட்டுக் கல்விமுறை. அந்த அமைப்பின் மூலமாக விரைவில் ஒரு பாடத் திட்டத்தை உருவாக்க இருக்கிறேன்.

குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு தேவையான அறிவியல், வரலாறு, கணிதம் மற்றும் பல்வேறு விதமான கலைகளை உள்ளடக்கிய பாடத் திட்டத்தினை வடிவமைப்பதற்காக நான் ஒரு

வல்லுனர் குழுவை ஏற்பாடு செய்திருக்கிறேன்.

அந்த வல்லுநர் குழுவால் உருவாக்கப்படும் பாடத்திட்டத்தினை விரைவில் பொதுமக்களுக்கு இலவசமாகக் கொடுக்க இருக்கிறோம். அதாவது ஒரு குழந்தை இந்த உலகில் வாழ்வதற்குத் தேவையான எல்லா விதமான அறிவினையும் ஒன்றாக சேர்த்துத் தொகுத்துக் கொடுக்க இருக்கிறோம். அதில் ஐம்பது மொழிகள், அனைத்து மதங்களிலும் உள்ள உண்மையான நினைவுகள், அனைத்து வகை கணிதம், எல்லாவிதமான அறிவியல், வரலாறு, புவியியல்,சமையல், பாட்டு, நடனம், பொறியியல் என அனைத்துவிதமான கலைகளும் இதில் அடக்கம், இத்தகைய பாடத் திட்டத்தினை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். என்பதை இக்கட்டுரையின் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

இந்த இடைப்பட்ட காலத்தில் உங்களுக்கு என்ன தெரியுமோ, அதை உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். நீங்கள் வளர்க்கும் குழந்தைக்கு நீங்கள் கற்றுக் கொடுப்பதே போதும். உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன். இப்போது வளரும் குழந்தைகள் இந்த கல்வி முறையில் நிறையக் கற்றுக்கொண்டு வளரும் பிள்ளைகள் பண்பாட்டோடு, அமைதியாக, நிம்மதியாக வாழ்கிறார்களா என்று யோசித்துப் பாருங்கள். படித்த நமது பிள்ளைகள் பல்வேறு விதமான கலாச்சார சீரழிவுகளில் சிக்கித் தவிக்கிறார்கள். இதற்குப் படிக்காமலேயே வீட்டில் பேசாமல் சும்மா இருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே இப்போதைக்கு உங்களுக்கு என்ன தெரியுமோ அதை உங்கள் குழந்தைக்குக் கற்றுக் கொடுங்கள். விரைவில் நாம் நமது பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்கிறோம். அதன் பிறகு அந்தப் பாடத்திட்டத்தை சொல்லிக் கொடுத்தால் போதும்.

இப்பொழுது உங்கள் குழந்தையை வளர்ப்பது யாரென்று உங்களுக்குத் தெரியுமா?

நிச்சயமாக இப்பொழுதுள்ள குழந்தைகள் யாரும் உங்கள் குழந்தைகள் கிடையாது. இவர்களெல்லாம் கார்ட்டூன் களால் வளர்க்கப்படும் குழந்தைகள். டிஸ்னியின் குடும்பத்தினரால் வளர்க்கப்படும் 'கேம்'களால் வளர்க்கப்படும் குழந்தைகள். டிவி வளர்க்கும் குழந்தைகள் செல்போன், இண்டர்நெட், கூகுள், விக்கிப்பீடியா ஆகியன வளர்க்கும் குழந்தைகள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இப்பொழுது உள்ள நிலையில் எந்தக் குழந்தையும் பெற்றோர் சொல்பேச்சுக் கேட்பதில்லை. ஏனென்றால் அனைத்து குழந்தைகளும் அறிவு என்ற பெயரில் குடும்பத்திலிருந்து விலகி இருப்பதே காரணம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். எனவே குழந்தைகள் கேட்கும் கேள்விக்கு மட்டும் சரியான பதிலைக் கொடுக்கும் பட்சத்தில் பள்ளிக்கு அனுப்பாமலேயே ஒரு குழந்தையை புத்திசாலி ஆக்க முடியும். அதற்கு நமக்கு என்ன வேண்டும்?

1. குறைந்தது நான்கு அல்லது ஐந்து மொழிகள், 2. கணிதம், 3. அறிவியல், 4. வரலாறு, 5. புவியியல், 6. ஓவியம்,7. நடனம், 8.இசை, 9. நீச்சல் போன்ற எல்லாவிதமான கலைகளையும் பனிரெண்டு வயதிற்குள் சரியாக முழுமையாக கற்றுக் கொடுத்து அவர்களை புத்திசாலியாக்கிவிடலாம். நம்புங்கள் எனவே நாம் இதற்கு ஒரு அமைப்பை உருவாக்கி இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் நிறையப்பேர் "ஹோம் எஜீகேஷன்" என்ற பெயரில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமலேயே வீட்டிலேயே சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். பல நாடுகளிலும் இந்த முறை இப்பொழுது பிரபலமாகி வருகிறது. உடனே உங்களுக்கு ஒரு கேள்வி வரும். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வில்லையென்றால் அரசு சான்றிதழ், வேலை, சம்பளம் அரசு கொடுக்கும் மானியம், சலுகைகள், ஸ்காலர்சிப் போன்றவை வாங்க நாம் என்னசெய்வது என்று உங்களுக்குத் தோன்றும்.

நாம் உருவாக்கும் அறிவாளிகளான அந்தக் குழந்தைக்கு உலகத்தில் யாரும் சான்றிதழ் அளிக்கத் தேவையில்லை. அந்தக் குழந்தைகள் மற்றவர்களிடம் வேலை செய்து சம்பாதிக்கும் சாதாரண குழந்தைகள் அல்ல. அந்தக் குழந்தைகள் வளர்ந்து நாளை உலகையே ஆளப்போகின்றன. நமது குழந்தைகள் சம்பளம் வாங்கும் குழந்தைகள் அல்ல, சம்பளம் கொடுக்கும் குழந்தைகள்.

இப்பொழுதுள்ள சூழ்நிலையில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஒருவேலை, ஒரு வருமானம், ஒரு வீடு, ஒரு கார் அல்லது டூவிலர், கிரெடிட் கார்டு போன்றவற்றைக் கொடுத்துவிட்டு அதற்காக வாழ்நாள் முழுவதும் அடிமைகளாக வேலை செய்து கொண்டு இன்பம், சந்தோசம், நிம்மதி என்றால் என்னவென்றே தெரியாமல் அவஸ்த்தையுடன் வாழவேண்டும் என்றுதான் இலுமினாட்டிகள் என்னும் இந்த 13 குடும்பத்தினர் திட்டமிட்டு உள்ளார்கள்.

இதிலிருந்து வெளியே வரவேண்டுமென்றால் நாம் விபரீத துணிச்சலுடன் சில முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இன்று இருக்கிறோம்.

பின்லாந்தில் உலகிலேயே மிகச் சிறந்த கல்வி முறையை அமல்படுத்தி வருகிறார்கள். அந்த முறையை உலகம் முழுவதும் கொண்டுவரவேண்டும்.

**பின்லாந்து கல்விமுறை**

சிறந்த கல்வியை நாம் குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும். என்றால் கண்டிப்பாக பின்லாந்து நாட்டில் என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. மிகச்சிறிய நாடான பின்லாந்து பல வருடங்களாக அந்நியர்களின் ஆக்கிரமிப் பினால் பாதிக்கப்பட்டு வந்தது. வறுமையிலும், பஞ்சத்திலும் அந்நாட்டு மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தார்கள். பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களும் பின்லாந்து நாட்டைப் பிடித்து அதன் வளங்களைச் சுரண்டிக் கொள்ளையடித்ததுடன் அந்நாட்டு மக்களை மிகவும் துன்புறுத்தி வந்தனர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு 1963ல் பின்லாந்து நாட்டில் உள்ள நல்லவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பின்லாந்து நாட்டை முன்னேற்றமடைய செய்ய வேண்டும் என்றால் அதற்குக் கல்வியை ஒழுங்குப் படுத்தினால் தான் முடியும் என்ற முடிவுக்கு வந்தனர். அன்றைய கால கட்டத்தில் அரசு பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் கற்பிக்கப்பட்ட பாடங்கள் சிறப்பானதாக இல்லை. எனவே பல்வேறு வெளிநாட்டு கல்வி நிறுவனங்களும், தனியார் சுயநிதிக் கல்லூரிகளும், தனியார் பள்ளிகளும் ஆரம்பிக்கப் பட்டன. ஆனால்



அவையெல்லாம் மிகவும் வசதியான நிலையில் இருந்தவர்கள் மட்டுமே பயன்படுத்திக் கூடிய நிலையில் இருந்தது. ஏனென்றால் அங்கெல்லாம் அவர்கள் கேட்கும் கல்விக்கட்டணம் மிகவும் அதிகமாக இருந்தது. எனவே பல்வேறு நல்ல உள்ளங்கள் ஒன்று சேர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும், புத்திசாலிகளையும் பயன்படுத்தி ஐந்துவருட கடினமான உழைப்புக்குப் பின்னர் 1968ஆம் ஆண்டு ஒரு சிறந்த கல்வி முறையை உருவாக்கினார்கள். அந்தக் கல்வி முறையில் படிக்கும் எந்த ஒரு குழந்தையும் ஆரோக்கியமாக, அமைதியாக, நிம்மதியாக, சந்தோசமாக, வளத்துடன் குடும்ப நிம்மதியுடன் ஒரு தலைசிறந்த மனிதனாக வாழ்வதற்கு உரிய அனைத்து பாடத் திட்டங்களையும் உள்ளடக்கிய மிகச் சிறந்த வழி முறையாக அது அமைக்கப் பட்டிருந்தது.

1973ஆம்ஆண்டு ஆசிரியர்களுக்கு என சில திட்டங்கள் கொண்டு வரப்பட்டது. அதாவது கல்வியின் பாடத்திட்டங்களை சரிசெய்வதை விட நல்ல ஆசிரியர்கள் மூலமாகத்தான் நல்ல குழந்தைகளை உருவாக்க முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். எனவே ஏற்கனவே 1968ஆம் ஆண்டு பாடத் திட்டங்களை உருவாக்கியிருந்தாலும் ஆசிரியர்கள் சரியான முறையில் பாடம் நடத்தத் தெரியாததால் குழந்தைகளுக்கு அது சரியாகச் சென்று சேரவில்லை என்பதைக் கண்டறிந்தனர். எனவே 1973ஆம் ஆண்டு ஒரு ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்ற வரையறையை நிர்ணயம் செய்தனர். அவ்வாறு பின்லாந்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் அனைத்து விசயங்களையும் சிறப்பாகத் தெரிந்தவர்களாக மட்டுமே இருக்குமாறு ஆசிரியர்கள் உருவாக்கப் பட்டார்கள்.

பல நாடுகளில் மருத்துவர்கள், இன்ஜினியர்கள் மட்டுமே அதிக சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த நிலையில் பின்லாந்தில் மட்டும் தான் முதன் முதலில் ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கப்பட்டது. இப்பொழுதும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

1990ஆம் ஆண்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட சமயத்தில் பின்லாந்து நாட்டில் ஆயிரம் பேரில் ஐந்து பேருக்கு மட்டுமே வேலை கொடுக்க முடியும் என்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது கூட ஆசிரியர்களின் சம்பளத்தை குறைக்கவில்லை. ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் குறைக்கவில்லை என்பது மிகவும் பாராட்டத்தக்க ஒரு நிகழ்வு.

பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னர் உலகில் கல்வித்தரத்தில் பதினைந்தாம் இடத்தில் இருந்த பின்லாந்து அதன் பின்னர் நேரடியாக முதலிடத்திற்கு வந்துவிட்டது.

பின்லாந்தில் தினசரி எழுபத்தைந்து நிமிடங்களுக்கு படிப்பு எதையும் கற்றுக் கொடுக்காமல் குழந்தைகளை சும்மா இருக்கச் சொல்கிறார்கள். ஒரு குழந்தை சும்மா இருக்கும் பொழுது மட்டும் தான் நான் யார் அது என்ன? இது என்ன? என்று யோசித்து சுய அறிவை வளர்த்துக் கொள்ளும் என்று அவர்கள் நம்புகிறார்கள். மேலும் பதினைந்து வயது வரை எந்த ஒரு குழந்தைக்கும் எந்த ஒரு பட்டமும் அவர்கள் சூட்டுவதில்லை அதாவது இந்தக் குழந்தை கோபக்காரக்குழந்தை.

இந்தக் குழந்தை 'மக்கு', இந்த குழந்தை புத்திச்சாலி என்று குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு எந்தப் பட்டத்தையும் ஆசிரியர்கள் அவர்களுக்கு

சூட்டுவதில்லை. ஏனென்றால் அந்தப் பட்டம் தற்காலிகமானது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இந்த திட்டத்திற்குப் பெயர் PISA (Programme for International School Assessment) புரோகிராம்ஃபார் இன்டர்நேனல் ஸ்கூல் அசஸ்மென்ட் என்பது இதன் விரிவாக்கம்.

இந்தியா உலகநாடுகளில் கல்வியின் தரத்தில் 72ம் இடத்தில் இருக்கிறது. 74 நாடுகளில் நாம் 72ம் இடத்தில் இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

பின்லாந்து கல்வி முறையில் போட்டியும், பொறாமையும் கிடையாது. ஏனென்றால் குழந்தைகளுக்குப் பரிட்சையுமில்லை. மதிப்பெண்களும் இல்லை. குழந்தைகளுக்குள் முதலாவது இரண்டாவது என்ற பேதமும் இல்லை. எனவே சிறுவயது முதலே போட்டி பொறாமையில்லாமல் குழந்தைகள் வளர்கின்றன.

இந்தப் பள்ளிகளில் "ரேங்க்கிங்" எனப்படும் முதலாவது இரண்டாவது என்பதையே தேவையில்லாதது என அனைவரும் நம்புகிறார்கள். பின்லாந்தில் கல்வியை நான்கு விதமாகப் பிரித்திருக்கிறார்கள்.

## 1. பிரைமரி



(ஏழு வயது முதல் பதினாறு வயது வரை) குழந்தைகளுக்கு பயிற்சி வகுப்பு உண்டு. ஆனால் எந்த ஒரு தேர்வும் கிடையாது. கல்வி கட்டணமும் கிடையாது,

## 2. ஹைஸ்கூல்

(பதினாறு வயது முதல் பத்தொன்பது வயது வரை)

பரீட்சை இருக்கிறது. பள்ளிக்கட்டணம் இருக்கிறது. ஆனால் கல்விக்கட்டணம் மிகவும் குறைவாக இருக்கும். பரீட்சை என்பது மதிப்பெண்கள் போட்டு முதலாவது, இரண்டாவது என்று பிரிப்பதற்காக அல்ல. குழந்தைகள் எந்த அளவிற்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் அறிந்து கொள்வதற்காக என்பது மட்டுமே தானே தவிர அதில் மார்க்குகள் போட்டு குழந்தைகளுக்கு காண்பிப்பதற்காக அல்ல என்பதே மிக முக்கியமான விசயம். 16வயது முதல் 19வயது வரையான கல்வியை வீட்டிலிருந்தும் படிக்கலாம் அல்லது பள்ளிக்குச் சென்றும் படிக்கலாம்.

## 3. காலேஜ் (College)

இதனை இரண்டாகப் பிரித்து யுனிவர்சிட்டி என்றும் பாலிடெக்னிக் என்றும் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

## 4. டாக்டரேட் டிகிரி (Doctorate Degree)

இதை நமது பாஷையில் கூறுவது என்றால் பி.எச்.டி எனலாம்.

எனவே பின்லாந்து கல்வி முறையை உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் பயன்படுத்தும் பொழுது கண்டிப்பாக தரம் வாய்ந்த குழந்தைகளாக, அறிவாளியாக, புத்திசாலியாக, இந்தச் சமுதாயத்திற்கு நல்ல காரியம் செய்யக்கூடிய குழந்தைகளாக உருவாவார்கள் என்று நாம் நம்புகிறோம், எனவே உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் நாம் இனிமேல் இந்தத் திட்டத்தினை செயல் படுத்துவதற்கு ஒவ்வொருவரும் அதற்கான முயற்சியை எடுப்போமாக!

எனவே நாம் விரைவில் அங்கு சென்று பின்லாந்து கல்விமுறையை கற்றுக் கொள்ள இருக்கிறோம். முடிந்தால் நீங்களும்

நேரடியாக பின்லாந்து சென்று கற்று வாருங்கள். இது சம்பந்தப்பட்ட பயிற்சிகள் அந்த நாட்டில் நடந்து வருகிறது.

மலேசியா நாட்டில் செரம்பான் என்ற ஊரில் சகோதரி பானு என்பவரை சில வருடங்களுக்கு முன்பு நான் சந்தித்தேன். குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் அவர்களுக்கு வீட்டிலேயே எப்படிக் கல்வி கற்றுக் கொடுப்பது என்பதற்கு இவர் ஒரு வாழும் உதாரணமாக இருந்து வருகிறார். இவர் பல வருடங்களாக டியூசன் சென்டர்களை நடத்திவருகிறார். அதன் மூலமாக நல்ல வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தது. இவர் தனது குழந்தையை ஒரு பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்துக் கொண்டு இருந்தார். ஆனால் கல்வி என்பது இன்றைக்குத் தவறான பாதையில் சென்று கொண்டிருப்பதனால் பள்ளிக்கு அனுப்புவதாலோ, டியூசனுக்கு அனுப்புவதாலோ ஒரு குழந்தையின் வாழ்க்கைக்கு தேவையான எந்த ஒரு விசயத்தையும் சரியாகக் கிடைக்கச் செய்துவிட முடியாது என்பதனை உணர்ந்த இவர் வீட்டிலேயே குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க முடியும் என்பதைப் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து கண்டறிந்து இப்பொழுது அதைப் பயன்படுத்தி வாழ்ந்து வருகிறார்.

பல்வேறு கிளைகளுடன் இயங்கிக் கொண்டிருந்த அவரது டியூசன் சென்டர்களைக் சுருக்கி இப்பொழுது சில கிளைகளை மட்டுமே நடத்திக் கொண்டு வருகிறார். ஏனென்றால் டியூசன் என்ற பெயரில் குழந்தைகளுக்குத் தேவையில்லாத விசயத்தைக் கற்றுக் கொடுப்பது தனக்குப் பிடிக்கவில்லை யென்று கூறுகிறார். மேலும் ஆன்மீகப் பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கும் இவர் தனது சொந்த மகனை பள்ளிக்குச் சென்று வருவதை நிறுத்திவிட்டு அவருக்கு வீட்டிலேயே சில வருடங்களாக பாடங்களைக் கற்றுக் கொடுத்து வளர்த்து வருகிறார்.

நான் அவரது வீட்டிற்குச் சென்றிருந்த சமயத்தில் அந்தக் குழந்தை என்னிடம் பேசிய முறையும், பழகிய முறையும், கேட்கும் கேள்கவிகளுக்கும், அந்தக் குழந்தை நடந்து கொள்ளும் முறைகளையும் வைத்துப் பார்க்கும் பொழுது மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. சிறுகுழந்தையாக இருந்தாலும் மிகவும் புத்திசாலித்தனமாகவும், அதே சமயத்தில் அன்புடனும், தெளிவுடனும் பேசுவதை அன்று தான் நான் முதன் முதலில் பார்த்தேன்.

அந்தக் குழந்தை கேட்கும் பல கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அந்த மாதிரி கேள்வி கேட்பதற்கே ஒரு அறிவு வேண்டும் என்பது அப்போதுதான் புரிந்தது.

சகோதரி செரம்பான் பானு அவர்கள் சில விசயங்களை என்னிடம் கூறினார். அவற்றைத் தொகுத்து நான் இப்பொழுது உங்களுக்கு கூறிகிறேன்.

1. ரமணர், ஆதிசங்கரர், தாமஸ் ஆல்வா எடிசன் இவர்களில் யாருமே பள்ளிக்குச் செல்லவில்லை.

2. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் வகுப்பில் பாடம் நடத்தும் ஆசிரியர்களிடம் புத்திசாலித்தனமாகப் பல கேள்விகளை கேட்கும் பொழுது அந்தக் குழந்தைகளை நோயாளிகள் என்று பெயர் சுமத்துகிறீர்கள் இது நியாயமா?

உதாரணமாக குழந்தைகள் கேள்வி கேட்கும் பொழுது அந்தக் குழந்தைக்கு ஏடி, எச்.டி., அதிகப்பிரசங்கி ஹைப்பர் ஆக்டிவிட்டி என்றெல்லாம் பட்டம் கட்டி அவர்களுக்கு

மருந்து மாத்திரைகள் கொடுத்து அவர்களை மனரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறுகிறீர்களே இது நியாயமா?

3. ஒவ்வொரு குழந்தையும், ஒவ்வொரு விசயத்தில் தனித்துவமான ஆற்றல் பெற்றிருக்கும். அதை கண்டு பிடித்து அதற்கு ஏற்றாற்போல் பாடம் நடத்தாமல் தேவையில்லாத விசயங் களைக் கற்றுக்கொடுத்து அதை அந்தக் குழந்தை கவனிக்காமல் இருக்கும் பொழுது அதை முட்டாள் என்று கூறுகிறீர்களே இது நியாயமா?

4. சமுதாயமும், ஆசிரியர்களும், கல்வித்துறையும் ஒன்று சேர்ந்து ஒரு குழந்தை எப்படிப்பட்ட குழந்தை என்று முத்திரை குத்துகிறீர்களே முதலில் நீங்கள் எப்படிப்பட்ட ஆள் என்று உங்களுக்குத் தெரியுமா?

உதாரணமாக வகுப்பில் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் 'சண்டைக்காரன்' ஒரு குழந்தை கோபப்பட்டால் 'கோபக்காரன்' என்று முத்திரை குத்தி மாணவர்களின் உணர்ச்சிகளைப் பொறுத்து பழக்க வழக்கங்களை பொறுத்து அவர் இப்படிப்பட்டவர்கள் என்று முத்திரை குத்திவிடுகிறீர்களே இது நியாயமா?

5. மக்கள் இப்பொழுது படித்துப் பட்டம் வாங்குவது என்பது உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும், ஒரு அங்கீகாரத்திற்காகவும், ஒரு பந்தாவிற்காகவும், கல்யாணப் பத்திரிக்கையில் பெயருக்குப் பின்னால் போட்டுப் கொள்வதற்காகவும் தான் இருக்கிறது. இது நமக்குத் தேவையா?

6. ஒரு குழந்தையின் தற்காலிகமான குணங்களை வைத்து அந்தக் குழந்தைகளுக்குப் பட்டங்களைக் கொடுப்பதை ஆசிரியர்கள் தயவு செய்து உடனே நிறுத்தவேண்டும்.

7. ஒரு சில நாடுகளில் உள்ள சில பள்ளிகளில் ஒரு குழந்தையின் நடவடிக்கையை வைத்து சிடுமூஞ்சி, கோபக்காரன், முட்டாள் என்று அவர்களின் அடையாள அட்டையில் (ஐடி கார்டு) கம்ப்யூட்டரின் உதவியுடன் பதிவு செய்கிறார்கள். அவரின் குணங்களை வைத்து சில பட்டங்களை அதில் பதிவு எண்ணுடன் பதிவு செய்யப்பட்டிருப்பதால் கம்ப்யூட்டரில் அடித்தவுடன் அக்குழந்தை ஹைப்பர் ஆக்டிவிட்டி என்று முதலிலேயே தெரிந்துவிடுகிறது. எனவே பல கல்லூரிகளில், பல பள்ளிகளில் அவர்களை சேர்த்துக் கொள்ள அச்சப்படுகிறார்கள்.

எனவே தயவு செய்து தற்காலிமான குணநலன்களை வைத்து ஒரு குழந்தையின் எதிர்காலத்தைப் பாழாக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

8. ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு நேரத்திலும் பல்வேறு விதமான உணர்ச்சிகளில் பாதிக்கப்படுகிறான்.

உதாரணத்திற்கு நீங்களாகட்டும், நானாகட்டும் சில நேரங்களில் கோபமாக இருப்போம். சில விசயங்களில் நாம் முட்டாளாக இருப்போம். சில விசயங்களில் 'மக்காக' இருப்போம். சில விசயங்களில் நாம் புத்திசாலியாக இருப்போம். உங்களை யாராவது இப்படிப்பட்ட முத்திரைகளை குத்தி அதைக் கம்ப்யூட்டரில் நமது புகைப் படத்துடன் பதிவு செய்துவிட்டு முதன் முதலில் பார்த்தவுடன் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்ட ஆதாரத்துடன் நம்மைப் பற்றிய ஜாதகத்தை கூறினால் உங்களுக்கு மன நிலை எப்படி இருக்கும் என்று சற்று யோசியுங்கள்.

9. குழந்தைகளைக் கட்டுப்படுத்தாதீர்கள். அவர்களுக்கு தேவையான சுதந்திரத்தைக் கொடுங்கள். ஆனால் எல்லைக் கோட்டை நிர்ணயுங்கள். கட்டுப்பாட்டை விதிக்கும் பொழுது குழந்தைக் கட்டுப்பாட்டை மீறத் துடிக்கிறது. ஆனால் சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டு ஒரு கோடுபோட்டு வைத்துவிட்டால் இந்தக் கோட்டை மீறிச் செல்லும் பொழுது வரும் விபரீதத்திற்கு நீங்கள் தான் பொறுப்பு என்று அந்தக் குழந்தைகளுக்கும் புரிய வைத்தால் அதாவது எல்லைக் கோட்டை தாண்டும் பொழுது ஏற்படும் விபரீதத்தினைப் புரியவைப்பதன் மூலமாக ஒரு குழந்தையை கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாக ஒழுங்காக வாழவைக்க முடியும்.

10. ‘நான் பட்ட கஷ்டம் என் குழந்தைகள் படக் கூடாது’ என்று எல்லாப் பெற்றோர்களும் நினைக்கிறார்கள். தயவு செய்து அந்த எண்ணத்தை மாற்றிவிடுங்கள். நீங்கள் கஷ்டப்பட்ட காரணத்தினால் தான் அது உங்களுக்கு அனுபவமாக மாறி இருக்கிறது. உங்கள் குழந்தைகளும் கஷ்டப்பட்டால் மட்டுமே அவர்கள் நன்றாக இருப்பார்கள். இவ்வாறு சிறுவயது முதலே கஷ்டம் என்றால் என்ன? பசி என்றால் என்ன? வறுமை என்றால் என்ன? என்பதெல்லாம் தெரியாமலேயே குழந்தைகளை வளர்த்து வருவதால் திடீரென இந்தப் பாதிப்புகள் அந்தக் குழந்தைக்கு வரும் பொழுது அதனால் தாங்க முடிவதில்லை. அது இந்த உலகில் வாழ்வதற்கான தகுதியை இழந்து விடுகிறது. எனவே குழந்தைகள் கஷ்டப்படும் பொழுது அதற்கு அனுபவம் ஏற்படுகிறது என்று நம்பிக்கையுடன் காத்திருங்கள். வருத்தப்படாதீர்கள்.

11. குழந்தைகளை இயந்திர மனிதர்களாகப் பார்க்காதீர்கள். இரத்தமும், சதையுமாக, உணர்ச்சியுள்ள ஒரு மனிதனாகப் பாருங்கள். பல பெற்றோர்களும், பல ஆசிரியர்களும் அவர்களைத் தங்கள் சொல் பேச்சுக் கேட்கும் இயந்திர மனிதர்களாக அதாவது ரோபோட்களாக இருந்தால் மட்டும் தான் அவர்களை நல்ல குழந்தைகள் என்று கூறுகிறார்கள். தயவு செய்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாதீர்கள். கடைக்குச் சென்று ஒரு ரோபோட்டை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

12. உங்களது அனுபவத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்காதீர்கள். ஏனென்றால் அனுபவித்தால் மட்டுமே அனுபவங்கள் கிடைக்கும். ஒருவருக்கு உங்கள் அனுபவத்தைச் சொல்வதால் அறிவுரை மட்டுமே கிடைக்கும். அனுபவங்கள் கிடைக்காது என்பதைப் புரிந்துகொண்டு உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தினை குழந்தைகளிடம் திணித்து உங்களைப்போன்ற ஒரு மனிதனாக வாழ வழி செய்து விடாதீர்கள். அந்தக் குழந்தைக்கு ஏற்படும் அனுபவத்தினை வைத்து அது ஒரு புதிய பரிமாணத்தில் புதிய வாழ்க்கை வாழ்வதற்கு அதற்கு உதவி செய்யுங்கள்.

13. தினமும் இரவு தூங்கச் செல்லும் முன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் (டெய்லி சர்க்கிள் டைம்) உருவாக்கி குழந்தையிடம் அமர்ந்து அமைதியாக, பொறுமையாக பின்வருமாறு யோசிக்கச் சொல்லுங்கள். “இன்றைய தினத்தில் காலையிலிருந்து இரவு வரை நீ செய்த விசயங்களைப் பற்றி நீயே யோசித்து இன்று முதல் எது நல்லது? எது கெட்டது? என்று ஒரு முடிவினைச் செய்” என்று கூறுங்கள். இதற்கென குழந்தைகளுக்கு அரைமணிநேரம் அல்லது ஒருமணிநேரம் அவகாசம் கொடுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் உங்கள் குழந்தைகளுடன்

அமர்ந்து உங்கள் அனுபவத்தினைப் பேசிக் குழந்தைகளைக் குழப்பாதீர்கள். ஒரு குழந்தை சொந்தமாக யோசிக்கும் பொழுது நிச்சயமாக நல்ல விசயங்களை மட்டும் தான் யோசிக்கும் என்று நம்புங்கள்.

14. எது சரி? எது தவறு? என்பதைத் திரும்பத்திரும்ப கூறிக்கொண்டே இருக்கா-தீர்கள். எது சரி எது தவறு என்பதைக் குழந்தைகளே சொந்த மாக யோசிக்கும் பொழுது மட்டும் தான் அவர்களுக்குச் சிறப்பாக புரியுமே தவிர நீங்கள் சொல்வதால் அவர்களுக்குப் புரியபோவதில்லை.

உதாரணமாக விளக்கில் கை வைத்தால் சுடும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் குழந்தைகளுக்குத் தெரியாது. ஒரு குழந்தை எப்பொழுது விளக்கில் கை வைத்து சூடுபட்டு கையை வெடுக்கென்று எடுக்கிறதோ அதன்பிறகு தான் அது விளக்கில் கை வைப்பதை நிறுத்துமே தவிர நாம் சொல்லும் பொழுது கண்டிப்பாக அதற்குப் புரியாது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சரி, தவறு என்பதை மீண்டும் மீண்டும் கூறி குழந்தைகளைக் குழப்பாமல் எப்பொழுதாவது ஒருமுறை தேவை கருதிக் கூறலாம். நிச்சயமாக அந்தக் குழந்தை தனக்கு ஒரு அனுபவம் ஏற்படும் பொழுது தன்னைத் தானே சரி செய்து கொள்ளும் என்று நம்புங்கள்.

15. ஒரு குழந்தை தவறே செய்யாமல் வளர முடியாது என்பதை புரிந்து கொள்ளுங்கள். விழுந்து விழுந்து எழுந்தால் தான் நடக்க முடியும் என்பதைப்போல எந்த ஒரு விசயத்திலும் குழந்தைகள் தோற்றுபோகும் பொழுது அல்லது தவறாக செய்யும் பொழுது அக்குழந்தைக்கு புரியவைப்பதற்கு மட்டுமே நீங்கள் முயற்சி செய்யுங்கள். தவறே செய்யாத ஒரு குழந்தையை நீங்கள் பார்க்க முடியாது என்பதைத் தயவு செய்து நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

எனவே தவறு செய்யலாம், தப்பு செய்யலாம். ஆனால் அதை மீண்டும் மீண்டும் செய்வதுதான் பெரிய தவறு என்பதைப் புரிந்துகொண்டு முதல் முறை இரண்டாம் முறை தவறு செய்யும் பொழுது குழந்தைகளுக்குப் புரிய வைக்க முயற்சி செய்யுங்கள். ஆனால் குழந்தையை அவமானப்படுத்தி அசிங்கப்படுத்தி குழந்தைகளைக் கஷ்டப்படுத்த வேண்டாம்.

16. பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைத்து அவர் வேலைக்குச் சென்று சம்பாதித்து பிற்காலத்தில் தங்களுக்கு சோறு போடுவான் என்ற நம்பிக்கையில் வளர்க்கிறார்கள். ஆனால் குழந்தைகள் என்பவர்கள் ஒன்றும் ஏ.டி.எம் மெஷின் கிடையாது. குழந்தைகள் நன்றாக நிம்மதியாக வாழவேண்டும் என்று மட்டுமே விரும்புங்கள். நீங்கள் இவ்வாறு நினைக்கும் பொழுது பெற்றோர்களைக் கவனித்துக் கொள்வதை அந்தக் குழந்தைகள் கட்டாயம் செய்வார்கள்.

17. குழந்தைகளை வீட்டிலேயே படிக்க வையுங்கள். பத்து வயது அல்லது பதினைந்து வயது வரை நீங்கள் வீட்டிலேயே கற்றுக் கொடுத்து வாருங்கள். பின்னர் என்டரி எக்ஸாம் அல்லது என்ட்ரன்ஷ் எக்ஸாம் என்று அழைக்கப்படும். பரீட்சைக்கு அனுப்பி வைத்து டிகிரி அல்லது டிப்ளமோ பட்டத்தினைப் பெறச் செய்யலாம். சமுதாயத்திற்காகவும் அரசாங்கத்திற்காகவும் ஒரு சான்றிதழை வாங்கிக் கையில் கொடுத்து விடுங்கள். நிச்சயமாக அந்தப் பிள்ளை நல்லபடியாக வாழும் என்று நம்புங்கள்.

18. பரஞ்சோதி மகான் என்ன கூறுகிறார் என்றால் பனிரெண்டு வயது வரை ஒரு குழந்தைக்கு எந்த மொழியையும் சொல்லிக் கொடுக்காமல் நாட்டு நடப்புகளைக் கூறாமல் இருந்தால் அந்தக் குழந்தை இந்த உலகில் அறிவாளியாக, புத்திசாலியாக உலகை ஆளுகிற, நல்ல எண்ணம் படைத்த ஒரு குழந்தையாக மட்டுமே வளரும், வாழும் என்று கூறியிருக்கிறார்.

19. பரஞ்சோதி மகான் எழுதிய நான் கடவுள் என்ற புத்தகத்தினை படியுங்கள். அதில் 170ம் பக்கத்தில் குழந்தைகளுக்கு எப்படி சிறப்பான கல்வியைத் தர முடியும் என்று அதில் விளக்கமாக அவர் கூறியிருக்கிறார்.

நண்பர்களே ! செரம்பான் பானு என்னும் மலேசியாவைச் சேர்ந்த இந்த சகோதரி ஒரு வாழும் உதாரணமாக இருந்து தன் குழந்தைக்கு வீட்டிலிருந்தே கல்வியைக் கற்றுக் கொடுத்துக் கொண்டு வருகிறார். இவர் கலந்துரையாடும் பொழுது நிறைய விசயங்களை என்னிடம் பகிர்ந்து கொண்டார். பல்வேறு விசயங்களை அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன். நான்அவரிடமிருந்து கேட்ட விசயங்களைத் தொகுத்து இங்கு 19 பத்திகளாக உங்களுக்குக் தொகுத்து கொடுத்துள்ளேன்.

அவரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு நீங்கள் இதுபற்றி பேசும் பொழுது பல்வேறு விசயங்களை நீங்கள் கற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புக்கு : தொலைபேசி எண் மலேசியா +60123619294.
Email : banusuppiah@gmail.com

நான் இதுவரை பலரிடமும் வீட்டுக்கல்வி முறையைப் பற்றி பேசியிருக்கிறேன். ஆனால் யாரும் இதுவரை சரியான தீர்வு கொடுக்க வில்லை. ஒருவேளை நான் அப்படிப்பட்ட நபர்களை சந்திக்கவில்லையோ என்னவோ? சகோதரி செரம்பான் பானு அவர்கள் மட்டும் தான் இதைப் பற்றி தெளிவாக அறிந்து கொண்டு வீட்டுக்கல்வி முறையை நன்றாக செயல்படுத்தி வருகிறார். எனவே நமது கல்வித் திட்டத்திற்கு பானு வீட்டுக்கல்வி முறை என்று பெயர் வைத்திருக்கிறோம். (BHES) Banu Home Educational System.

**படிக்காத மேதைகள்**

1. தமிழக முதல்வராக பல வருடங்கள் ஆட்சி புரிந்த கர்ம வீரர் காமராஜர் ஐயா அவர்கள்.

2. விஞ்ஞானத்திலும், மோட்டார் துறையிலும் பல அரிய கண்டுபிடிப்பு களைக் கண்டுபிடித்த ஜி.டி.நாயுடு ஐயா அவர்கள்.

3. 1976 ஆம் ஆண்டு அன்னக்கிளி என்ற தமிழ்சினிமாவின் மூலமாக இசைத் துறையில் அறிமுகமாகி பல்வேறு சாதனைகள் புரிந்த இசைஞானி இளையராஜா.

4. பல்வேறு சாதி, மதங்களை ஒன்று சேர்க்கப் பாடுபட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஐயா அவர்கள்.

5. உலகிற்கு பூஜ்ஜியத்தை அறிமுகம் செய்த கணிதமேதை இராமனுஜம்.

6. கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட் என்னும் உலகமே வியக்கும் வண்ணம் கோவிலைக் கட்டிய இரண்டாவது சூரியவர்மன்.

7. எட்டு வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கிய இரவீந்திரநாத் தாகூர்.

**பானு வீட்டுக் கல்விமுறை**

விரைவில் உலகின் பல்வேறு பாகங்களில் முற்றிலும் புதிதான ஒரு கல்விக் கூடத்தை நாம் அனைவரும் உருவாக்க வேண்டும். அதில் ஒரு ஆசிரியர் பாடம் கற்பிக்க 20 முதல் 50 மாணவர்கள் மட்டுமே இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் துவங்கி பள்ளிப் பாடங்கள் நடத்தப்பட வேண்டும். மற்ற பள்ளிகளைப் போல இந்தக் கல்விக் கூடத்தில் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டம் கிடையாது.

ஒவ்வொரு குழந்தையின் மனநிலையையும், திறமையையும் பொறுத்து அக்குழந்தைக்கு ஏற்றவாறு பொருத்தமான கல்வியை கற்றுத்தரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். உதாரணமாக ஒரு குழந்தை தனக்குத் தூக்கம் வருகிறது என்று பாடவேளையில் கூறினால் அக்குழந்தை தூங்குவதற்கு அனுமதிப்பது தான் ஒரு ஆசிரியரின் வேலை. ஒரு குழந்தை பசிக்கிறது என்று கூறினால் அதற்கு உண வளிக்க வேண்டும். விளையாட வேண்டும் என்று விருப்பம் இருக்கும் பொழுது அக்குழந்தைக்கு அப்பொழுது விளையாட்டுப் பயிற்சியைத் தான் அளிக்கவேண்டும்.

குழந்தைகள் கேள்விகள் கேட்கும் பொழுது அப்போதைக்கு அந்தக் கேள்விக்கு மட்டும் சரியான பதில் கூறி அதைச் சார்ந்த பாடத்தினை ஆரம்பிக்க வேண்டும்.

ஒரு குழந்தை என்ன மனநிலையில் இருக்கிறதோ, அதற்குத் தகுந்தாற்போல, அதற்கு ஏற்றாற்போல கற்றுக் கொடுக்கும் பொழுது ஒரு குழந்தை நன்கு புரிந்து கொள்கிறது. தூக்கக் கலக்கத்தில் இருக்கும் பொழுது ஒருகுழந்தைக்குக் கணிதம் சொல்லிக் கொடுக்கும் பொழுது அதற்குக் கணிதம் புரிவதில்லை. கணிதம் கற்றுக்கொள்ளும் விருப்பம் உள்ள மனநிலையின்போது அதைவிட்டுவிட்டு விளையாட்டைக் கற்றுக் கொடுத்தால் விளையாட்டில் ஆர்வம் இல்லாமல் போய்விடுகிறது.

எப்பொழுதுமே ஒருவருடைய மனநிலையை அறிந்துகொண்டால் தான் ஒரு விசயத்தைக் கற்றுக் கொடுக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உடனே இதற்கு நிறைய நேரமும், நிறைய பணமும் விரைய மாகும் என்று நீங்கள் நினைத்துவிட வேண்டாம். இதைவிட நமக்கு வேறு என்ன வேலை இருக்கிறது ?

நமது குழந்தைகளுக்கு நல்ல விசயத்தைகற்றுக் தருவதை விட வேறு எதற்காக நாம் பணம் சம்பாதிக்கிறோம் ? எதற்காக சொத்து சேர்க்கிறோம்? என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

குழந்தைகளின் மனநிலை எவ்வாறு இருக்கிறதோ, அதற்கு ஏற்ற கல்வியைக் கற்றுக் கொடுக்கும் பொழுது தான் அவர்களால் அதை சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும். கல்வி மட்டுமன்றி நமது அன்றாடப் பணி களைக் கூட நமது மனநிலைக்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ளும் பொழுது நிறைய வேலைகளை மிக எளிதாக செய்து முடித்துவிடலாம்.

உதாரணமாக நான் பல்வேறு விசயங்களைக் கற்றுக் கொள்வதற்கும் நேரம் ஒதுக்குகிறேன். உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கும் பயணம் செய்து தினசரி பயிற்சிவகுப்புகளை நாள் முழுவதும் நடத்தி வருகிறேன். இதனிடையே தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொள்ளும் பலருக்கும் “கவுன்சிலிங்” அளிக்கிறேன். இதற்கிடையே என் குடும்பத்தாரையும் கவனிக்க நேரம்

ஒதுக்குகிறேன். இவ்வாறு பல வேலைகளை என்னால் சிறப்பாக செய்து முடிப்பதற்கு ஒரே காரணம் நான் எனது மனநிலைக்கு தகுந்தவாறு பணிகளை அமைத்துக் கொள்வதுதான். தினசரி செய்ய வேண்டிய வேலைகளை பட்டியலிட்டுக் கொண்டு எனது மனநிலைக்கு அப்போது எதைப் பிடித்திருக்கிறதோ அதை மட்டுமே செய்வேன்.

எப்பொழுதுமே நமது மனநிலை எந்த நிலையில் இருக்கிறதோ அந்த நிலையில் அதற்கேற்ற வேலையைச் செய்யும் பொழுது நமக்கு சக்தி விரயம் ஏற்படுவதில்லை. மேலும் நமக்கு உற்சாகம் பிறக்கிறது. எனக்கிருக்கும் பல்வேறு வேலைகளை என்னுடைய மனநிலை அந்த சமயத்தில் எப்படி இருக்கிறது என்று யோசித்துப் பார்த்துத் தான் செய்வேன். இவ்வாறு செய்யும் பொழுது நான் திட்டமிட்டிருந்த, செய்ய வேண்டிய வேலைகளின் வரிசையில் சற்று மாற்றம் இருக்கும். ஆனால் அதிகப்படியான வேலைகளை இதன் மூலம் செய்து முடிக்கிறேன்.

உதாரணமாக ஒரு வேலைக்கு இன்னொரு வேலை தான் ஓய்வு (Rest) என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். மனதுக்குப் பிடித்த வேலையைச் செய்யும் பொழுது மூச்சுக் காற்று ஒழுங்காக இருக்கிறது. உடல் ஆரோக்கியமாக இருக்கிறது.

மனதுக்குப் பிடிக்காத வேலையைச் செய்யும் பொழுதோ அல்லது ‘மூட்’ இல்லாதபோது ஒரு வேலையைச் செய்யும் பொழுதோ நமது உடலிலும் மனதிலும் சக்தி விரயாமாகிறது. அதனால் நமக்கு ஓய்வு தேவைப்படுகிறது.

உதாரணமாக ஒரு கட்டிட வேலைசெய்யும் மேசன் (கொத்தனார்) சம்பளத்திற்காக வேலை செய்யும் பொழுது மெதுவாக வேலை செய்வார். குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் வேலை செய்யும் பொழுது எனக்கு உடல் வலிக்கிறது. கை வலிக்கிறது என்று வேலையை நிறுத்திவிடுவார். ஆனால் அவர் தன்னுடைய வீட்டினைக் கட்டும்பொழுதோ அதிகாலையிருந்தே ஆரம்பித்து இரவு வரை நேரம், காலம் பார்க்காமல் சந்தோசமாக வேலை செய்வார். அப்போது அவருக்கு கையும் வலிக்காது. காலும் வலிக்காது.

ஒரு வேலையை விருப்பப்பட்டு மனதாரச் செய்யும் பொழுது சக்தி அதிகரிக்கிறது. அதே வேலையை விருப்பமில்லாமல் கடமைக்காகச் செய்யும்பொழுது சக்தி விரயமாகிறது.

இந்த அடிப்படையில் நமது மனநிலைக்கு எற்றாற்போல் ஒரு புத்தகம் படிக்க வேண்டும் என்று விரும்பிய சமயத்தில் படிக்கும் பொழுது ஒருமுறை படித்தாலே நன்றாகப் புரிந்துவிடுகிறது. சக்தியை இழப்பது கிடையாது. மேலும் நமக்கு மகிழ்ச்சியும் கிடைக்கிறது.

எனவே ஒரு குழந்தை எந்தக் கேள்வி கேட்கிறதோ அதற்குப் பதில் சொல்வது போல ஆரம்பித்து அந்தக் குழந்தைக்குப் பல்வேறு விசயங்களை நாம் கற்றுக் கொடுக்கும் பொழுது அந்தக் குழந்தை நன்றாகப் புரிந்துகொள்கிறது. உதாரணமாக, ஒருநாளில் அதிகாலை ஐந்து மணிமுதல் இரவு பனிரெண்டு மணிவரை பல்வேறு வேலைகளை நான் செய்து கொண்டு இருப்பேன். ஒவ்வொரு நாளும் காலையிலேயே இன்று என்னென்ன வேலைகள் செய்யவேண்டும் என்று ஒரு பேப்பரில் எழுதி வைத்துக்கொள்வேன்.

எல்லா வேலைகளையும் வரிசையாகப் பட்டியலிட்டபின் அதில் எந்த வேலையைச் செய்ய மனதிற்குப் பிடித்திருக்கிறதோ அந்த வேலையை மட்டும் செய்வேன். எந்த வேலை செய்ய மனதிற்கு அப்பொழுது விருப்பம் இல்லாமல் இருக்கிறதோ அந்த வேலையை ஒத்திப்போடுவேன். இவ்வாறு செய்வதால் அன்றைய தினத்திற்குள் நான் எல்லா வேலைகளையும் முடித்துவிடுகிறேன்.

ஒரே ஒரு விசயம் என்னவென்றால் வேலைகளின் வரிசை தான் மாறியிருக்குமே தவிர மற்றபடி எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு விடும். உதாரணமாக எனது மின்னஞ்சலுக்கு 100 ஈமெயில் வந்திருக்கிறது. அதற்கு பதில் சொல்லவேண்டும். 30 பேரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச வேண்டும். வெளியிடங்களில் 5 பகுதிகளுக்கு நேரில் செல்ல வேண்டும் என்றபடி அன்றைய தினம் எனக்கு வேலைகள் இருந்தால் அதில் எனக்கு அப்போது எதைச் செய்யப் பிடித்திருக் கிறதோ அந்த வேலையைச் செய்ய ஆரம்பித்துவிடுவேன். அந்த வேலை எப்பொழுது போர் அடிக்க ஆரம்பிக் கிறதோ அதை நிறுத்திவிட்டு மிச்சம் உள்ள வேலைகளில் அப்பொழுது எதை பிடிக்கிறதோ அதை செய்ய ஆரம்பித்து விடுவேன். எனவே ஓய்வே இல்லாமல் எல்லா வேலை களையும் செய்யும் பொழுது எனக்கு சோர்வு ஏற்படுவது இல்லை. அதே சமயம் எல்லா வேலைகளும் முடிந்துவிடுகிறது. ஆனால் நாம் இப்பொழுது இந்த வேலையை முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மனதில் விருப்பமில்லாமல் மூட் இல்லாமல் கஷ்டப்பட்டு ஒரு வேலையைச் செய்யும் பொழுது அந்த வேலை முடிய காலதாமதம் ஏற்படுகிறது. அது மட்டுமன்றி திறனும் குறைந்து விடுகிறது.

அதே போல பஸ்ஸில் பயணம் செய்யும் பொழுதோ அல்லது இரயிலில் பயணம் செய்யும் பொழுதோ பல்வேறு புத்தகங்களைப் பயணத்தின் போது படிப்பது என் வழக்கம். என் கைவசம் எப்பொழுதும் ஐந்தாறு புத்தகங்களைப் எடுத்துச் செல்வேன். ஏதாவது ஒரு புத்தகத்தினை அந்தச் சமயத்தில் எடுத்துப் படிப்பேன். அது பிடித்து இருந்தால் மட்டுமே தொடர்ந்து தொடங்குவேன். இல்லையென்றால் அதை வைத்துவிட்டு வேறு புத்தகங்களைப் படிக்கத் தொடங்குவேன். ஏதாவது ஒரு புத்தகம் அப்போதைய மனநிலைக்கு ஒத்து வருவதைப்போல இருப்பதைப் படிக்க பிடிக்கும். அதைப் படித்து முடித்துவிடுவேன். நிச்சயமாக மற்றொரு நாள் மற்ற புத்தகங்களைப் படிப்பதற்கான மனநிலைவரும் பொழுது அவற்றைப் படிப்பேன்.

சரி நாம் இப்பொழுது என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பார்க்கலாம்.

1. கர்ப்ப காலம் முதல் ஒரு குழந்தை பெற்றெடுக்கும் காலம் வரை ஒரு தாய் எவற்றையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் ஒரு பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும். அவற்றைப் புத்தகமாகவும், ஆடியோக வாகவும், வீடியோகவாகவும்,வடிவமைக்க வேண்டும் ஆரம்ப கட்டமாக இதனை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வடிவமைக்க வேண்டும். பின்னர் பல்வேறு மொழிகளில் அதனை மொழி பெயர்க்கபட வேண்டும்.

2. குழந்தை பிறந்தது முதல் ஐந்து வயது வரை அந்தக் குழந்தைக்கு வீட்டிலேயே எதைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கல்வித் திட்டத்தினை உருவாக்க வேண்டும்.

3. 5 வயது முதல் 12 வயது வரை உள்ள காலகட்டத்தினை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. வீட்டிலிருந்த படியே பாடங்களை கற்பிக்கலாம் (அல்லது)

2. பள்ளிக்கு அனுப்பலாம். இந்த இடத்தில் பள்ளி என்று நாம் குறிப்பிடுவது உலகில் இப்பொழுது உள்ள பள்ளிகளை அல்ல நாம் உருவாக்கும் பள்ளிகள்.

இந்த மூன்று விசயங்களையும் நாம் கட்டமைக்கவேண்டும் எனில் அதற்கு நமக்குப் பல்வேறு விசயங்கள் தேவைப்படுகின்றன. அவை : 1. கல்வித் திட்டம், 2. இதை உருவாக்குவதற்கு நல்ல எண்ணம் உடைய ஆசிரியப் பெருமக்கள். 3 பொருளாதாரம், 4. நாம் அனைவரும் ஒன்று கூடி விவாதிப் பதற்கான ஒரு இடம். 5 . இணையதளம், 6 ஈமெயில், 7. தொலை தொடர்பு வசதி, 8. அலுவலர்கள்.

இதுபோன்ற பல்வேறு விசயங்கள் நமக்குத் தேவைப்படுகிறது. இதில் பங்கேற்க நல்ல உள்ளங்களை அன்புடன் வரவேற்கிறோம். ஏனென்றால் இதை நான் ஒருவன் மட்டும் உருவாக்கப் போவதில்லை. இந்த விசயத்தில் உடன்பாடு உள்ள பல்வேறு பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத உலக விசயங்களை மக்களுக்கு கற்றுக் கொடுக்க நினைக்கும் நல்ல உள்ளங்களும், பல நல்லவர்களும் ஒன்று சேர்ந்து தான் இப்பணியை நிறைவேற்றப் போகிறோம்.

ஆரம்ப கட்ட நிலையில் 11பேர் சேர்ந்த குழுவை தற்போது அமைத்து உள்ளோம்.

பானு வீட்டுக் கல்விமுறை என்னும் இந்த வீட்டுக் கல்விமுறை கோவையை மையமாகக் கொண்டு இயங்கும். முதல்கட்ட நடவடிக்கையாக இதற்கான ஒரு இணையதளம் வெப்சைட் துவங்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் முகவரியும் (ஈமெயில்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக முதல்கட்டப் பணியாக இந்த வீட்டுக் கல்வி முறையில் ஆர்வம் உள்ளவர்கள் உலகில் எந்த பாகத்தில் இருந்தாலும் அவர்கள் உடனே எங்களை தொடர்பு கொண்டு உங்களது கருத்துக்களை எங்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். இந்தக் கல்வித் திட்டத்தினை உருவாக்குவதற்குத் தேவையான உதவிகளைச் செய்யுங்கள்.

இந்த முதல்கட்ட பணிகளைப் பொறுத்தவரை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. வீட்டுக் கல்வித்திட்டத்தினை எனக்கு அனுப்பி வையுங்கள் என்று கேட்பவர்கள் தங்களின் பெயர் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் ஈமெயில் முகவரியைப் பதிவு செய்யுங்கள்.

2. இந்தக் கல்வித் திட்டத்தில் பாடங்களை உருவாக்குவதில் நானும் உதவி செய்கிறேன் என்று கூறுபவர்களும் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி, ஈமெயில் முகவரி ஆகியவற்றைப் பதிவு செய்யுங்கள்.

இரண்டாவதாக இந்தக் கல்வித் திட்டத்தினை எவ்வாறு உருவாக்குவது என்பதை நாம் அனைவரும் ஒன்றுகூடி விவாதித்து முடிவு செய்ய இருக்கிறோம். பின்னர் முடிவு செய்யப்பட்ட திட்டத்தினை செயல் வடிவத்திற்கு கொண்டு வருவோம்.

இறுதியாக, வரையறுக்கப்பட்ட ஒரு முழுமையான சிறந்த பாடத் திட்டத்தினை

உருவாக்கியப்பின் உலக மக்கள் அனைவருக்கும் அதை இலவசமாக புத்தக வடிவில் டிவிடியில் மற்றும் இணையதளம், கூகுள் டிரைவ், யூடியூப்,பென்டிரைவ், ஹார்டுடிஸ்க், மின்னஞ்சல், கூரியர் என்று எந்தெந்த வழிமுறைகள் உள்ளனவோ அனைத்து வழிகளிலும் பல்வேறு மொழிகளில் கொடுக்க இருக்கிறோம்.

மேலும் இதுதொடர்பாக பெற்றோர்களுக்கு பயிற்சி வகுப்புகளும் நடத்த இருக்கிறோம். இந்த பாடத்திட்டத்தின் வழியாகப் படித்த குழந்தைகளுக்கு என்ட்ரி எக்ஸாம் எனப்படும் நுழைவுத் தேர்வை எழுதச் செய்து அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு செய்கிறோம்.

வாங்க ! புதிய உலகத்தை ! புதிய கல்வியை ! புதிய சமூகத்தை, புதிய பரிமாணத்தை உருவாக்குவோம் !

உங்கள் பெயர் மற்றும் முகவரியை முதலில் பதிவு செய்யுங்கள் விரைவில் உங்களுக்குத் தேவையான கல்விமுறை தொடர்பான விசயங்கள் வந்து சேரும்.

புதிய கல்வித்திட்டத்தினை நாம் உருவாக்குவோம் ! வீட்டுக்கல்வி முறைத்திட்டத்தினை உருவாக்குவதற்கு எனக்கு உந்து சக்தியாக இருந்து உதவிய, அந்த எண்ணத்தை எனக்கு தூண்டிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி !

Web : www.selfeducationathome.com
Email : selfeducationathome@gmail.com

முகவரி : நிஷ்டை சர்வதேச வாழ்வியல் பயிற்சி மையம், பானு வீட்டுக்கல்வி முறை, நெ.1 லக்ஷ்மி நகர், பரிபூர்ணா எஸ்டேட் அருகில், கோவைபுதூர். கோயமுத்தூர் - 641042. தமிழ்நாடு. இந்தியா. தொலைபேசி எண் : 8220667120, 8220667135,

Illuminati கடந்த 250 வருடங்களாக இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த சீக்ரேட் சொசைட்டி எனப்படும் இலுமினாட்டிகள் உலகில் உள்ள எல்லா நாட்டுக் கல்வித் திட்டத்தையும் மாற்றி அமைத்து வைத்திருக்கின்றனர். நமது குழந்தைகளை தவறான பாதைக்கு இழுத்துச் செல்லுகின்ற தரமற்ற கல்வியை வழங்கி வரும் அந்தக் குடும்பத்திலிருந்து நமது குழந்தைகளை காப்பாற்றி சிறந்த குழந்தைகளாக வளர்ப்பதற்கும், இந்த உலகினை நல்வழிப்படுத்துவதற்கும்,நமது குழந்தைகளுக்கு நல்ல கல்வியினை அளிக்க ஒரு வாய்ப்புத் தாருங்கள். நாம் பிறந்தோம். சாப்பிட்டோம் குழந்தை பெற்றுக் கொண்டோம். இறந்தோம் என்று இல்லாமல் இனி மேலாவது நல்ல குழந்தைகளை நல்ல சமுதாயப் பணிகளுக்கு அர்ப்பணியுங்கள்.

உங்கள் குழந்தையை உலகம் போற்றும் ஒரு உன்னதக் குழந்தையாக மாற்றவேண்டும் என்று உங்களுக்கு எண்ணமிருந்தால் நான் சொல்வதை வரிசையாக செய்யுங்கள்.

1. நான் நடத்தும் ஐந்துநாள் பயிற்சி முகாமிற்கு கணவனும், மனைவியுமாக வந்து கலந்து கொள்ளுங்கள்.

2. விபாசனா எனப்படும் பத்து நாள் தியான முகாமிற்கு கணவன், மனைவி இருவரும் சென்று வாருங்கள்.

3. டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான் அவர்கள் எழுதிய அனைத்துப் புத்தகங்களையும் படியுங்கள்.

4. திருமதி. கோமதி, கோவை. திருமதி. சாய்தேவி -சென்னை, பவுனம்மாள்-செஞ்சி, ஆகியோரிடம் நேரிலோ, தொலை பேசியிலோ கலந்து உரையாடி

அனுபவங்களை கற்றுக்கொள்ளுங்கள்.

5. குழந்தை பெற்றுக் கொள்ள திட்டமிடும் முன்னரே மேற்சொன்ன விசயங்களை செய்து முடித்துவிட்டு கர்ப்பம் தரிப்பது சிறந்தது.

6. குழந்தையின் 2 அல்லது 15 வயது வரை உங்கள் குழந்தைகளுக்காக முழுநேரத்தை ஒதுக்கி ஒரு தலை சிறந்த குழந்தையை உருவாக்குங்கள்.

7. அதன்பிறகு அந்தக் குழந்தையிடம் மகனே, மகளே நீ தனியொருவனாக சென்று அல்லது தனியொருத்தியாகச் சென்று இந்த உலகத்தை மாற்றி அமை என்று அனுப்பி விடுங்கள்.

நமது குழந்தைகள் இனி உலகத்தை ஆளும் குழந்தைகள் நமது குழந்தைகளை இந்த உலகத்தில் அன்பு, கருணை, சந்தோசம், அமைதி, ஆரோக்கியம், சாந்தி, சமாதானம் ஆகியவற்றை உருவாக்கும் குழந்தைகளாக மாற்றவேண்டும்.

உலகத்தில் தலைசிறந்த கல்வி பின்லாந்து கல்வி, உலகத்தில் தலைசிறந்த தொழில் நுட்பம் ஜெர்மன் தொழில்நுட்பம், உலகத்தில் தலைசிறந்த காதல் திட்டம் பிரான்ஸ் நாட்டில் உள்ளது, உலகத்தில் தலைசிறந்த விருந்தோம்பல் மியான்மர் (பர்மா) நாட்டில் காணலாம்.

இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விசயம் சிறந்த விசயமாக இருக்கிறது.

இந்தக் கட்டுரையில் கல்வியைப் பற்றிப் பார்த்தோம். விரைவில் ஜெர்மன் தொழில் நுட்பத்தையும், பிரெஞ்சு காதலையும், பர்மாவின் விருந்தோம் பலையும் இது தவிர ஒவ்வொரு நாட்டிலுள்ள தலைசிறந்த விசயங்களையும் ஒவ்வொன்றாக நாம் பார்க்க இருக்கிறோம்.

ஆகவே இனிமேல் நமது குழந்தைகளை சிறந்த குழந்தைகளாக வளர்ப்பதற்கு நாம் முழு முயற்சி எடுப்போமாக !

## உலகம் போற்றும் படிக்காத மேதைகள்

ஜார்ஜ் வாஷிங்டன் (முன்னாள் அமெரிக்க அதிபர்), 2. ஆபிரகாம் லிங்கன் (முன்னாள் அமெரிக்க அதிபர்), 3. ஹாரிட்ருமேன் (முன்னாள் அமெரிக்க அதிபர்), 4. க்ரோவர் க்ளிவ்லேண்ட் (முன்னாள் அமெரிக்க அதிபர்), 5. ஹாரி டெய்லர் (முன்னாள் அமெரிக்க அதிபர்), 6. ஆன்ட்ரு ஜான்சன் (முன்னாள் அமெரிக்க அதிபர்), 6.ஜான்க்ளென் (யு.எஸ்.செனட்டர்), 7. பேரி கோல்டுவாட்டர் (யு.எஸ்.செனட்டர்), 8. பெஞ்சமின் பிராக்ளின்(யு.எஸ்.செனட்டர்), 9. வின்ஸ்டன் சர்ச்சில் (இங்கிலாந்து பிரதமர்), 10. ஜான் மேஜர் (இங்கிலாந்து பிரதமர்), 11. ராபர்ட் ஃப்ரேட் (கவிஞர்), 12. பிளாரன்ஸ் நைட்ங்கேல் (செவிலியர்), 13. ஃபக்மின்ஸ்டர் புல்லர் , 14. ஜார்ஜ் ஈஸ்ட்மேன் (நிறுவனர் ஈஸ்ட்மேன் கொடாக்), 15. ரேக்ரோக் (நிறுவனர் மெக் டொனால்ஸ்), 16. டேவ் தாமஸ் (நிறுவனர் வெண்டிஸ்), 17. ரல்ப்பொரென் (ஆடை வடிமைப்பாளர்), 18. டோரிஸ் வெஸ்லிங் (நோபல் பரிசு பெற்ற இலக்கியவாதி), 19. ஜார்ஜ் பெர்னாட்டான்டஸா (நாடக ஆசிரியர்), 20. பீட்டர் ஜென்னிங்ஸ் (பிபிசி செய்தியாளர்), 21. கிறிஸ்டோபர் கொலம்பஸ் (கண்டுபிடிப்பாளர்), 22.டிடி ஜேக்ஸ் (பாதிரியார்), 23. ஜோயஸ் ஆஸ்ட்டீன் (பாதிரியார்), 24. ஜான்டிராக் ஃபெல்லர் (நிறுவனர் ஸ்டேண்டர்டு ஆயில்), 25. கார்ல் ரோப் (தலைமை ஆலோசகர்), 26. டெட் டர்னர் (நிறுவனர் சி.என்.என்), 27.க்ளென்டின் டொரன்டினோ (திரைப்பட இயக்குநர்), 28. பீட்டர் ஜேக்ஸன் (திரைப்பட

இயக்குனர் லார்ட் ஆப் தி ரிங்ஸ்), 29. மார்க் ட்வைன் (ஆசிரியர்), 30. பியோன் யூரிஸ் (ஆசிரியர்), 31. கார்ல் பெனஸ்ட்டின் (வாஷிங்டன் போஸ்ட் நிருபர்), 32. கார்லி ஃபியாரினா (சி.இ.ஓ. ஹபவ்லெட் பாக்கார்ட்), 33. சார்ல்ஸ் டிக்னெஸ் ( ஆசிரியர்), 34.ஆன்ட்ரு கார்னகி (தொழிலதிபர்), 35. வில்லியம் ஃபாக்னர் (நோபால் மற்றும் பில்லிச்சர் விருது பெற்றவர்), 36. லி.கா. சிங் (ஆசியப் பணக்காரர்), 37.ரிச்சர்ட் பிரான்சன் (நிறுவனர் அட்லாண்டிக் ஏர்வேஸ் அன்ட் வர்ஜின் ரெக்கார்ட்ஸ்), 38. என்ஸோ பெர்ராரி (நிறுவனர் ஃபெராரி), 39. ஹென்ஸி ஃபோர்டு (நிறுவனர் ஃபோர்டு மோட்டர் கம்பெனி), 40. ஜெ. பால் (நிறுவனர், 41. ஜேக் (ஆசிரியர்), 42. ஹால்லீசன் (நிறுவனர்), 43. டாம் ஆண்டர்சன் (நிறுவனர் மைஸ்பேஸ்), 44.மார்க் ஸீக்கர்பெர்க் (நிறுவனர்பேஸ்புக்), 45.ஸ்டீவ் ஜாப்ஸ் (நிறுவனர் ஆப்பிள்), 46. ஸ்டீவ் வாஸ்னியாக் (நிறுவனர் ஆப்பிள்), 47. பில்கேட்ஸ் (நிறுவனர் மைக்ரோசாப்ட்), 48. பால் ஆலொன் (நிறுவனர் மைக்ரோசாப்ட்), 49. ரிங்கோ (ஸ்டார் பீட்டில்).

பானு வீட்டுவழிக்கல்வி முறை என்பது ஒரு ஆரம்பம் மட்டும் தான். இதனது கொள்கைகளும், புரிதல்களும் அவ்வப் போதைய சூழலுக்கு ஏற்ப அடிக்கடி மாற்றப்பட்டு கொண்டே இருக்கும்.

மேலும் விபரங்களுக்கு www.selfeducationathome.com என்ற இணையதளத்தை அடிக்கடி பார்வை யிடுங்கள். உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைப் போக்கித் தெளிவு பெற selfeducationathome@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வையுங்கள்.

பானுவீட்டுக்கல்வி முறை பற்றிய மேலும் விபரங்களுக்கு கீழ்காணும் தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம். இந்தியா +91 82206 67120, 82206 67135.

மேற்குறிப்பிட்ட எண்களின் வாட்ஸ் அப் மூலமும் உங்களை இணைத்துக் கொண்டு அவ்வப்போது வெளியிடப்படும் புதிய தகவல்களையும் தெரிந்து கொண்டு பயன்பெறுங்கள்.





# கார்ட்டூன் கல்விமுறை

நமது கல்விமுறை எந்த இடத்தில் இருக்கிறது என்பதை கார்ட்டூன் கல்விமுறை எனும் இந்த கட்டுரையைப் படிக்கும் பொழுது புரிந்து கொள்வீர்கள். இதை முதலில் படியுங்கள்.

குழந்தைகள் கார்ட்டூன்களைத் தான் விரும்பிப் பார்க்கிறார்கள். ஆனால் பள்ளிப்பாடங்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை" என்பது தான் அனைத்துப் பெற்றோர்களும் ஒருமித்து புகார்களாக கூறிக் கொண்டே இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? குழந்தைகளை கார்ட்டூன் பார்ப்பதிலிருந்து படிப்பில் கவனம் செலுத்தும் குழந்தைகளாக மாற்றுவது எப்படி என்பதை இந்தக்கட்டுரை உங்களுக்கு விளக்கமாகப் புரிய வைக்கும்.

குழந்தைகளுக்கு என்ன பிடிக்கும் என்பதைப் பற்றி முதலில் பெற்றோர்களும், ஆசிரியர்களும், கல்வித் துறையினைச் சேர்ந்த அதிகாரிகளும், கல்வி நிறுவனங்களும் யோசிப்பதே கிடையாது. ஆசிரியருக்குப் பிடித்ததைப் போன்று பள்ளிக் கூடம் நடத்தினால் அதில் ஆசிரியரே படித்துக் கொள்ளவேண்டியது தான். குழந்தைகளுக்குப் பிடித்தது போல் பள்ளியை நடத்தினால் தான் குழந்தைகள் ஒழுங்காகப் படிக்கும்.

குழந்தைகளுக்கு என்னென்ன பிடிக்கும் என்பதைப் பார்ப்போம்.

**1. குழந்தைகளுக்கு கைகளை, கால்களை ஆட்டுவது பிடிக்கும்**

ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு கையை, காலை ஆட்டாமல் இருப்பது எந்தக் குழந்தைக்கும் பிடிக்காது தன் மனவிருப்பம் போல் கை, கால்களை ஆட்டுவது தான் பிடிக்கும். ஆனால் பள்ளிகளில் நடப்பதோ வேறு. "கையை ஆட்டாதே, காலை ஆட்டாதே, அசையாமல் ஒரே இடத்தில் உட்கார்" என்று பள்ளிகளில் கூறுகின்றனர். இது ஒரு குழந்தையை குழந்தையாக இருக்காதே என்று கூறுவதற்கு ஒப்பானது.

ஆனால் கார்ட்டூன் சேனல்களில் வரும் பொம்மைகள் கையை காலை ஆட்டி உற்சாகமாக இருப்பதைப் போல் வரும் காட்சிகளைப் பார்க்கும் குழந்தைகள் தாங்களும் விரும்பி அதே போலச் செய்து கையை, காலை ஆட்டி மகிழ்ச்சியாக

இருக்கிறார்கள். எனவே கார்ட்டூன்கள் பார்ப்பது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கிறது.

**2. குழந்தைகளுக்குப் பாடல்கள் பிடிக்கும்**

ஒரு விசயத்தை சாதாரணமாக உரை நடையாக கூறுவதை விட பாடல்கள் மூலம் கூறுவதை மட்டுமே குழந்தைகள் விரும்புகின்றனர். ஆனால் பள்ளிக் கூடங்களில் உரை நடைவடிவில் ஆசிரியர்கள் பாடம் நடத்துவதையும், கரும்பலகையில் சாக்பீசால் எழுதிப்போட்டு பாடம் நடத்துவதையும் மட்டும் செய்து வருவதால் குழந்தைகள் பாடங்களைப் புரிந்து



கொள்வார்கள் என்று நம்பிக் கொண்டிருப்பதில் நிச்சயமாக எந்த பலனும் ஏற்படப்போவதில்லை. பெரியவர்களுக்கு வேண்டுமானால் உரை நடைவடிவில் பாடங்களைப் புரிய வைக்க முடியும். ஆனால் குழந்தைகளுக்கு பாடல் வடிவில் தான் எளிதில் புரியும்.

நமது பள்ளிகளில் பாடல்கள் மூலம் கற்பிக்கப்படும் கல்விமுறை இல்லை. ஆனால் கார்ட்டூன் சேனல்களில் அடிக்கடி பாடல்கள் வருவதனால் அந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்பது குழந்தைகளுக்குப் பிடித்திருக்கிறது.

**3. குழந்தைகளுக்கு இசை பிடிக்கும்**

குழந்தைகளைக் கவரும் வகையில் உள்ள இசை ஒளிபரப்பாகும் பொழுது அதைப் பார்க்க, கேட்க, படிக்க குழந்தைகள் மிகவும் விரும்புகின்றனர். கார்ட்டூன் சேனல்கள் இத்தகைய விசயங்களைப் புரிந்து கொண்டு அதை ஒளிபரப்பு செய்கின்றன. குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு எந்த இசைபிடிக்கும் என ஆராய்ச்சிகள் செய்து அதற்கேற்ற வகையில் கார்ட்டூன்களை உருவாக்கி ஒளிபரப்புகிறார்கள். குழந்தைகளும் அதை விரும்புகிறார்கள். ஆனால் பள்ளிகளில் இசை சேர்க்கப்படாத கல்வியாக இருப்பதால் பள்ளிப்பாடங்கள் குழந்தைகளுக்குப் பிடிப்பதில்லை.

**4. குழந்தைகளுக்கு நடனம் பிடிக்கும்**

கார்ட்டூன்களில் வரும் எல்லா பொம்மைகளும், பேசும் பொழுதும், நடக்கும் பொழுதும், பாடும்பொழுதும் நடனமாடிக் கொண்டே இருப்பதுபோல் காட்சிகள் அமைத்து ஒளிபரப்புகிறார்கள்.

எனவே கார்ட்டூன் பார்ப்பது குழந்தைகளுக்கு பிடித்திருக்கிறது. ஆனால் பள்ளிகளிலோ ஆசிரியரும் நடனம் ஆடாமல் குழந்தைகளையும், நடனம் ஆட வைக்காமல் உரை நடையாகவும், புத்திமதி கூறியும் பாடங்களை நடத்துவதால் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. ஆசிரியர்கள் நடனத்தின் மூலமாக எவ்வாறு குழந்தைகளுக்குப் பாடம் நடத்தலாம் என்பதை நாம் கற்றுத் தருகிறோம்.



**5. குழந்தைகளுக்கு விலங்குகள் பறவைகள் பிடிக்கும்**

எந்த ஒரு கதையைச் சொல்லும்போதும் முயல், மான், யானை, எருமை, மயில், காகம், சிங்கம், குதிரை, புறா, குருவி, புலி போன்ற விலங்கினங்கள்,

பறவையினங்கள் இடம்பெறும் கதையைச் சொன்னால் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் பள்ளிப்பாடத்தில் இவை பற்றிஇல்லாமல் நேரடியாக பாடத்தை மட்டும் கற்பிக்கப்படுவதால் குழந்தைகளுக்குப் பிடிப்பதில்லை. ஆனால் கார்ட்டுன் சேனல்களில் எப்பொழுதும் விதவிதமான பறவையினங்கள், விலங்கினங்கள் போன்றவை காட்சிகளில் வருவதால் அதைப் பார்க்க குழந்தைகளுக்குப் பிடித்திருக்கிறது. எனவே நாமும் நமது பள்ளி கல்விமுறையில் பாடத்திட்டங்களை உருவாக்கும் பொழுது மரங்கள், பறவையினங்கள், விலங்கினங்கள் ஆகியனவற்றுடன் பாடல், இசை, நடனம் மற்றும் கற்பனை வளத்துடன் கொண்ட பாடத்திட்டமாக உருவாக்கி அதை ஆசிரியர்கள் கற்பிக்கும் பொழுது அது குழந்தைகளுக்குப் பிடிக்கும்.



**6. குழந்தைகளுக்கு கற்பனை செய்ய பிடிக்கும்**

கற்பனை சக்தி அதிகம் உடையவர்கள் குழந்தைகள். எனவே அது தொடர்பான விசயங்கள் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். உதாரணமாக குதிரை தண்ணீரில் குதித்து உள்நீச்சல் அடிக்கவேண்டும். ஆமை ஆகாயத்தில் மேகத்தின் மேல் பறக்கவேண்டும். மான் சிங்கத்தைப் பிடித்து உதைக்க வேண்டும்.இவ்வாறு நடைமுறையில் நடக்க முடியாத விசயங்களை கற்பனை செய்து பார்ப்பது குழந்தைகளுக்குப் பிடிக்கும். ஆனால் முயல் பறக்கும் என்று ஒரு குழந்தை பள்ளிக்கூடத்தில் கூறும்பொழுது “உனக்கு அறிவில்லையா? உனக்கு புத்தி இல்லையா? முயல் எப்படிப் பறக்கும்” ? என்று கேட்டு அக்குழந்தையின் கற்பனைத்திறனை மதிக்காமல் அதை அவமானப்படுத்தி, அசிங்கப்படுத்திவிடும் எந்த ஒரு ஆசிரியரையும் குழந்தைகளுக்குப் பிடிக்காது. அன்பாக, அமைதியாக பொறுமையாக குழந்தைகள் கூறுவதைக் கேட்டுக் கொண்டு இது கற்பனையான விசயம் என்றும் அதில் உள்ள உண்மையான நிலையை எடுத்துக் கூறிவிட்டு “கற்பனை செய்வது நல்ல விசயம். நீ அழகாக கற்பனை செய்கிறாய் ஆனால் அப்படி இல்லை” என்று அக்குழந்தைகளைப் பாராட்டவும், ஊக்கப்படுத்தவும், புரிந்து கொள்ளவும் வைக்கவேண்டும். இதைத் தான் குழந்தைகள் எதிர்பார்க்கிறார்கள்.

எனவே கார்ட்டுன் சேனல்களில் பாடல்கள், இசை, நடனம் ஆகியவற்றுடன் கற்பனை வளத்துடன் பல காட்சிகளை பறவைகள், விலங்கினங்கள் ஆகியவற்றுடன் கதைகளை இணைத்து குழந்தைகள் கையை, காலை ஆட்டி ரசிக்கும் படியும், மகிழ்ச்சி அடையும் படியும் செய்கின்றன. மேற்சொன்ன இந்த ஆறு காரணங்கள் தான் கார்ட்டுன்களை அவர்கள் விரும்பிப் பார்க்கும் படியும், இது இல்லாத பள்ளிக்கு ஆர்வமில்லாமல் கல்வி கற்க வருவதற்கும் உரிய காரணங்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.



அன்பு நண்பர்களே! டிஸ்னி வேர்ல்ட் (Disney World) எனும் இலுமினாட்டிகளுக்கு சொந்தமான ஒரு அமெரிக்க நிறுவனம் தான் உலகில் உள்ள நாடுகளில் ஏற்கனவே உள்ள தலைசிறந்த கல்விமுறையை ஒழித்து அல்லது சிதைத்துவிட்டு புதிதாக ஒன்றுக்கும் உபயோகப்படாத கல்விமுறையை பரப்பி வருகின்றனர். உலக நாடுகளில் உள்ள அனைத்துக் கல்வித் திட்டத்தையும் ஆராய்ச்சி செய்து அதிலுள்ள நல்ல விசயங்களை மாற்றி அல்லது வேறு உபயோக மில்லாத கல்விமுறையைத் திட்டமிட்டுப் புகுத்துவது தான் இவர்களது வேலை. உதாரணமாக இந்தியாவில் இருந்த குருகுல கல்வி முறையையும், ஜெர்மனியின் “வாவ்” கல்விமுறையையும் பின்லாந்தின் தலைசிறந்த கல்விமுறையையும் எடுத்துக் கொண்டு ஆய்வு செய்கின்றனர். இதனுடன் உலகில் தலைசிறந்த மனோதத்துவ நிபுணர்கள், கல்வியாளர்கள், அறிஞர்கள் ஆகியோர் இணைந்து புதிது புதிதாக குழந்தைகளைக் கவரும் வகையில் கார்ட்டூன்களை வடிவமைப்பதில் பங்காற்றி வருகின்றனர். இதற்கென அமெரிக்காவில் மிகப்பெரும் ஆய்வுக்கூடமே இயங்கிவருகிறது. கோடிக்கணக்கான நிதி இதற்கென ஒதுக்கப்படுகிறது. இதில் வேலைசெய்யும் ஒவ்வொருவருக்கும் கணிசமான சம்பளமும், சொகுசான வாழ்க்கையையும் டிஸ்னிவேர்ல்ட் கொடுக்கிறது. இதற்கு காரணம் ஒன்று தான் குழந்தைகளின் கவனம் கார்ட்டூன் பார்ப்பதில் இருக்கவேண்டும். அவர்கள் அறிவை மழுங்கடிப்பது, தீயவற்றைக் கற்றுக் கொடுப்பது, பெற்றோர் சொல் கேட்காதவர்களாக இருப்பது போன்றவைதான் இந்த கார்ட்டூன் மூலம் கற்றுத்தரப்படுகிறது. நமது பாரம்பரிய நல்ல பழக்க வழக்கங்களிலிருந்து குழந்தைகளை விடுவித்து கார்ட்டூன்களில் சொல்வது மட்டுமே செய்யுமாறு அவர்களை நம்ப வைப்பது, அவர்களை முட்டாளாக்குவதும், இலுமினாட்டிகளின் வியாபாரப் பொருட்களை குழந்தைகள் மூலம் அதிகம் ஈர்க்கச் செய்து வியாபாரம் செய்வதும் தான் அவர்களின் தந்திரம், எனவே டிஸ்னி வேர்ல்டால் உருவாக்கப்பட்ட இந்த கார்ட்டூன் சேனல்களிலிருந்து குழந்தைகள் தப்புவது கடினம்.



நீங்கள் நினைப்பது போன்று சுட்டிடிவி, கார்ட்டூன் டிவி, போகோ டிவி போன்ற எந்த டிவி சேனல்களும் தனித்தனியான நிறுவனங்களும் அல்ல. இவை அனைத்தும் ஒரே முதலாளிகள் கீழ் இயங்கும் வெவ்வேறு பெயர் கொண்ட டிவி சேனல்கள் அவ்வளவே. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அரசியல்வாதிகள். அதிகாரிகள் போன்ற செல்வாக்கு மிக்க நபர்கள் அந்தந்த நாடுகளில் தங்கள் பெயரில் டிவி சேனல்கள் நடத்த அந்த முதலாளியால் இவர்கள் அனுமதிக்கப்பட்டவர்கள். எல்லா கார்ட்டூன் சானல்களுக்கும் ஒரே முதலாளி டிஸ்னி வேர்ல்ட்.

எனவே மேற்சொன்ன விசயங்களை எல்லாம் நன்றாகப் புரிந்துகொண்டு இதிலிருந்து நாம் கற்றுக்கொண்டு இருக்கும் விசயம் ஒன்றுதான். குழந்தைகளை முட்டாளாகவும், தீய விசயங்களை கற்றுக் கொடுக்கவும் கார்ட்டூன் சேனல்களை எப்படி அவர்கள் பயன்படுத்து கிறார்களோ, அதேபோல பாணியைப் பின்பற்றி குழந்தைகளுக்கு நல்ல விசயங்களைக் கற்றுக் கொடுப்பதற்காக கார்ட்டூன் சேனல்களைப் போலவே நமது பள்ளிகளையும், பாடத்திட்டங்களையும் நடத்துவதே புத்திசாலித்தனம்.

அது எப்படி என்பதை நாம் பார்க்கலாம்.

நமது பள்ளிகளில் கார்ட்டூன் வழி கல்விமுறையில் பாடத்திட்டங்களை வகுக்கவேண்டும். இதற்கு பாடப் புத்தகங்களைக் கொடுத்து படித்து மனப்பாடம் செய்யும் பழக்கத்தை குழந்தைகளிடமிருந்து நீக்கவேண்டும். இங்கு மனப்பாடம் செய்யும் கல்விமுறையானது. PRE KGயிலிருந்து ஒன்றாம், இரண்டாம் வகுப்புகளில் தொடர்ந்து அதையே கல்வியாக போதித்துக் கொண்டுள்ளனர். ஆனால் உண்மையில் குழந்தைகளுக்கு எந்தப் புத்தகங்களையும் கொடுக்காமல் அவர்களுக்கு காட்சிகள் வழியாகவும், கற்பனைக் கதைகள் வழியாகவும் பாடங்களைப் புரிய வைப்பது தான் சிறந்த கல்விமுறை.

பாடப்புத்தகங்கள் என்பவை குழந்தைகளின் கைகளில் கொடுத்து படிக்கச் செய்வதற்கு அல்ல. அவற்றை அவர்களிடம் தரவே கூடாது. அந்தப் பாடப்புத்தகங்கள் அவர்களுக்காக அல்ல. அந்தப் பாடப்புத்தகங்களில் உள்ளவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் படித்துப் புரிந்து கொண்டு அதை எப்படி குழந்தைகளிடம் கதையாக, சிங்கம் புலி, கரடி, என கற்பனைகள் புனைந்தும், நடனம் ஆடியும், பாட்டு பாடியும் அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளுபடி கையை, காலை ஆட்டி கற்பிக்கலாம் என்பதை முன்பே திட்டமிடவேண்டும். இதை முன்பே தயாரித்து அந்த பாடத்தை மறுநாள் வந்து வகுப்பில் விளக்குவதாக இருக்கவேண்டும். இதற்குத் தான் ஆசிரியர் வேண்டுமே தவிர குழந்தைகளை புத்தகங்கள் செய்து வலியுறுத்துவதும், அவர்களை மனப்பாடம் செய்து தேர்வில் அதிகமதிப்பெண்கள் பெறவைப்பது என்பது ஒரு ஆரம்பக்கல்வி ஆசிரியரின் பணி அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு பள்ளிகளில் தேர்வுகள் நடத்துகின்றனர். அது எதற்காக என்பதும் அதன் நோக்கம் என்ன என்பது பற்றியும் சற்று விரிவாக பார்ப்போம்.

முதலில் பள்ளிகளில் குழந்தை களுக்குத் தேர்வுகள் நடத்துவதே தவறு. அப்படியே தேர்வுகள் நடத்தினாலும் அதில் குழந்தைகள் பெற்ற மதிப்பெண்களை அவர்களிடம் காண்பிப்பதுஅதைவிட தவறு, அதேபோல அவர்கள் பெற்ற மதிப்பெண்களை மற்றவர்கள் முன்னிலையில் ஒருவரோடு மற்றவரை ஒப்பிட்டுப் பேசுவது மிகப் பெரும் தவறு.

நண்பர்களே ! குழந்தைகளுக்குத் தேர்வுகள் நடத்துவதன் நோக்கம் அவர்கள் எழுதிய தேர்வுத்தாள்களை எடுத்துக் கொண்டு ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும், பிரின்சிப்பாலும் தாங்கள் நடத்திய பாடம் குழந்தை களுக்கு எந்த அளவிற்குப் புரிந்து இருக்கிறது என்பதை ஆய்வு செய்து அறிந்து கொள்ள மட்டும் தான். கல்வியை கற்பித்தலில் தங்களின் பணியை எவ்வாறு செய்துள்ளோம் என்பதில் அவர்கள் தங்களின் மதிப்பெண்களை அறிந்து கொள்வதற்காகத்தானே தவிர குழந்தைகளின் அறிவுத்திறனை சோதிப்பதற்காக அல்ல. ஒருவேளை ஒரு மாணவர் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் ஆசிரியர் தான், தனக்கு



பாடம் நடத்த தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டு கற்பித்தலில் அணுகுமுறையை மாற்றவேண்டுமே தவிர குழந்தைகளைக் குறை கூறக்கூடாது. குறைந்த மதிப்பெண்கள் பெற்றதற்காக அவர்களைத் திட்டி, அவமானப்படுத்தி, அசிங்கப்படுத்தி தண்டிப்பதையும், அவர்களது பெற்றோர்களைஅழைத்துவரச் செய்து "உங்கள் குழந்தை ஒழுங்காகப் படிக்கவில்லை" என்று புகார் கூறுவதையும் வழக்கமாக செய்துவருகிறார்கள். இது சரியான முறை அல்ல.

நான் பல வருடங்களாக, பல விசயங்களை எனது வகுப்புகளில் பேசி மக்களுக்குப் புரிய வைத்து வருகிறேன். நான் எந்த விசயங்களையும் மனப்பாடம் செய்து கொள்ளுங்கள் என்று கூறுவதில்லை. அவர்களுக்கு எந்த தேர்வுகளும் வைப்பதில்லை. எந்த தலைப்பில் வேண்டுமானாலும் அது சம்பந்தப்பட்ட விசயத்தை எவரிடமும் என்னால் கூறி புரியவைத்து விடமுடியும். அவர் எந்த வயதினராகவும், படித்தவராக அல்லது படிக்காதவராக கூட இருக்கலாம் என்ற பொழுதும் என்னால் ஒரு விசயத்தை ஒருமணிநேரத்தில் அவர்களுக்கு எளிதில் புரியவைத்து விடமுடியும். ஆகவே ஆசிரியர் தான் குழந்தைகளுக்குப் புரியும் படி கற்பிக்க வேண்டுமே தவிர குழந்தைகள் புரிந்து கொள்ளாதது அவர்கள் தவறல்ல. எனவே அதற்கான முன் தயாரிப்பு பணியாக "ஹோம் ஒர்க்" செய்து வர வேண்டியது ஆசிரியர்கள் தானே தவிர குழந்தைகள் அல்ல.

பாடம் நடத்திமுடித்துவிட்டு "புரிகிறதா? இல்லையா?" என்று எந்த ஆசிரியர் கேட்கிறாரோ அவருக்கும் அந்தப் பாடம் புரியவில்லை என்று பொருள். நடத்திமுடிக்கப்பட்ட பாடம் அனைத்து மாணவர்களுக்கும் புரிந்து இருக்கும் என்று நம்பும்படி அதற்கான சிறந்த வழிமுறைகளைக் கையாள்வதே ஆசிரியரின் சிறந்த பணியாகும்.

ஒரு பாடத்தை படித்து மனப்பாடம் செய்து தேர்வில் அப்படியே எழுதி மதிப்பெண்கள் பெறும் மாணவனைவிட ஒரு பாடத்தைப் படித்துவிட்டு அப்படியே காப்பியடிக்காமல் தன் சொந்த உரை நடையில் எழுதும் மாணவனின் அறிவே சிறந்தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே குழந்தைகளை மனப்பாடம் செய்து எழுதுவதை விட்டுவிட்டு சொந்த உரைநடையில் அந்தபாடத்தைப் புரிந்து எழுதுவதற்குத் தான் எப்பொழுதும் ஊக்குவிக்க வேண்டும்.



நான் சிறுவயதிலிருந்தே பள்ளியில் பாடங்களைப் படித்து மனப்பாடம் செய்து அப்படியே உள்ளவாறு அதை எழுதமாட்டேன். நான் புரிந்துகொண்டதை சொந்த உரை நடையில் எழுதுவேன். இதனால் பல தேர்வுகளிலும் நான் குறைந்த மதிப்பெண்களையே பெற்றேன். ஏனென்றால் எனது விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியருக்கு புத்தகத்தில் உள்ளதை அப்படியே எழுதியிருக்கவேண்டும் என்ற கருத்தும் அப்படி எழுதி இருந்தால் தான் மாணவன் புத்திசாலி என்றும் எண்ணம் கொண்டிருப்பவராக இருந்ததால் நான் அவர் பார்வையில் முட்டாளாக தோன்றியிருக்கிறேன் போலும்.

ஒவ்வொரு பள்ளிகளிலும் கல்விமுறையில் குழந்தைகளுக்கு ஏற்ப

நிறைய மாற்றங்கள் செய்யவேண்டியுள்ளது. கார்ட்டுன் சேனல்கள் எப்படி யோசித்து, கற்பனையாக காட்சிகளை உருவாக்கி குழந்தைகள் மனதில் எளிதில் பதியும்படி வெளியிடுகிறார்களோ,அதைப் போன்று பள்ளியின் பாடத்திட்டங்களை வடிவமைக்க வேண்டும். பாடப் புத்தகங்களை குழந்தைகளின் கண்களில் ஆசிரியர் காண்பிக்க கூடாது. ஆனால் பாடங்களைக் குழந்தைகளுக்கு கார்ட்டுன் பாணியில் கதைகளாக, நடனமாக, இசையாக என பல வடிவங்களிலும் கற்பனை செய்து வடிவமைத்து ஆசிரியர் பாடம் நடத்த வேண்டும். கார்ட்டுன்களில் வருவதைப் போன்று ஒரேமுறை சொன்னாலே பாடங்கள் மனதில் புரியம்படி குழந்தைகளிடம் கற்பிப்பதே சிறந்த கல்விமுறை. இதைத்தான் ஜெர்மன், பின்லாந்து போன்ற நாடுகளில் செய்து வருகிறார்கள். இதையேதான் நமது குருகுலக் கல்விமுறையில் நமது முன்னோர்கள் வழிவழியாக பின்பற்றி வந்தனர். வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, பொம்மலாட்டம் போன்ற கலைவடிவங்கள் குருகுலக் கல்வியில் மிகச்சிறந்த அம்சங்களாக விளங்கி வந்தன. குருகுலக் கல்விமுறையில் நாம் கற்றுக் கொண்டிருந்தது வரை நமது கல்விமுறை சிறப்பாக இருந்தது. எனவே குருகுலக் கல்வி மறைந்து விட்ட இன்றைய காலகட்டத்தில் கார்ட்டுன் கல்வியை மாற்றாக எடுத்துக் கொண்டு அனைத்து நாடுகளிலும் கார்ட்டுன் கல்விமுறையை நடைமுறைப்படுத்தி அனைத்து மாணவர்களுக்கும் நல்ல விசயங்களையும், சிறந்த கல்வியையும் கற்றுக்கொடுக்க நாம் முன்வரவேண்டும். இவ்வாறு குழந்தைகள் மிகவும் விரும்பும் கார்ட்டுன்கள் பாணியில் கல்வியை வடிவமைத்து தரும் பொழுது எல்லா குழந்தைகளும் தவறாமல் பள்ளிகளுக்கு கல்வி கற்க வருவார்கள். காய்ச்சல் வந்த போதும் கூட கம்பளி போர்த்திக்கொண்டாவது பள்ளிக்கு வந்து விடுவார்கள். பொய் கூறி விடுமுறை எடுக்கமாட்டார்கள்.



எல்லா நாடுகளிலுமே ஆசிரியர்களுக்கு இப்பொழுது தேவையில்லாத பணிச்சுமைகளை அளித்து அவர்களை கல்வியில் சரியாக பணிசெய்ய முடியாத அளவிற்கு முட்டுக்கட்டை போடுகின்றனர். பேப்பர்ஒர்க், ப்ராஜக்ட் ஒர்க், மக்கள் தொகை கணக்கெடுப்பு வாக்காளர்கள் கணக்கெடுப்பு, ஆதார் அட்டைகள் வழங்கும் பணி, குடும்ப அட்டைகள் கணக்கெடுக்கும் பணி என்று பல்வேறு வேலைகளைக் கொடுத்து அவர்களது நேரத்தை வீணடிப்பதுடன் அவர்கள் கல்வி கற்பிக்கும் பணிகளுக்காக யோசிக்க விடாமல் அதற்கு நேரம் ஒதுக்க முடியாமல் செய்துவிடுகின்றனர். தேவையற்ற இந்த பணிகளில் எல்லாம் அவர்களை ஈடுபடுத்துவதால் அவர்கள் சிந்திக்கும் திறன் குறைந்துவிடுகிறது. இப்பொழுது உள்ள நிலையில் உலகிலேயே கடினமான வேலை ஆசிரியர் வேலை என்று சொல்லிவிடலாம். ஏனென்றால் ஆசிரியர்கள் அந்த அளவிற்கு நிம்மதியின்றி வேலை செய்து வருகின்றனர். வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போய்விடலாம் என்று தோன்றினாலும் வேலையை விட்டுவிடமுடியாது. ஏனென்றால் அதை நம்பி பல கடன்கள் வாங்கியிருப்பர். தொடர்ந்து வேலை செய்யவும் முடிவதில்லை ஏனென்றால் அங்கு நிம்மதியில்லை. எனவே இவர்கள் டென்சனுடனும், மன நிம்மதியும்

இன்றி மனவருத்தத்துடன் இருப்பதால் குழந்தைகளுக்கு ஒழுங்காக பாடம் நடத்தமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே அரசாங்கத்தை நம்பாமல் நாமே இதற்கு தக்க முடிவெடுத்து அதை நடைமுறைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு ஆசிரியரும், ஒவ்வொரு கல்வி நிறுவனத்தின் தலைவர்களும், ஒவ்வொரு தனி மனிதனும் இதைப் புரிந்து கொண்டு நமக்கு நாமே திட்டமிட்டு கல்வியை ஒழுங்குப்படுத்துவது தான் சிறந்த முறையாகும்.

அன்பர்களே !

போராட்டம் செய்வது சாதாரண மனிதர்களின் வேலை ! உலகத்தை மாற்றுவது தலைவர்களின் வேலை !

எனவே நாம் சாதாரண மனிதர்களைப்போன்று சாலையில் இறங்கி "கல்வியை மாற்று கல்வியை மாற்று" என்று கூச்சலிட்டு போராடுவதை விட்டுவிட்டு அமைதியாக, நூதன முறையில் நமக்கு நாமே திட்டங்களைத் தீட்டி இப்பொழுதுள்ள கல்வி முறையை சிறப்பானதாக மாற்றிமைக்கும் வேலைகளைச் செய்து கல்வியை ஒழுங்குபடுத்துவோமாக ! ஏனென்றால் நாம் தலைவர்கள் !

குறிப்பு : கார்ட்டூன் கல்விமுறை என்ற தலைப்பில் கட்டுரையை பார்த்த பிறகு, கார்ட்டூன் நல்லது என்று நினைக்க வேண்டாம். கார்ட்டூன் மூலம் ஏற்படும் ஆபத்தை "கார்ட்டூன் ஒரு சாபம்" என்ற பெயரில் யூடியூப்பில் பார்த்து தெளிவடையுங்கள்.

கார்ட்டூனால் பாதித்து தெளிந்த கோவையை சார்ந்த ஷமீர் உசேன் பேசியது.

வாழ்க வளமுடன் !
வாழ்க வையகம் !!




நீங்கள் சரி என்பதால் நான் தவறாக முடியாது.
நாம் பார்க்கும் கோணம் வித்தியாசமாக இருக்கலாம்.

**அவரவர் நிலையில் அவரவர் சரியே !**

- ஹீலர் பாஸ்கர்



# வாவ் கல்விமுறை மற்றும் வைத்தியம்!

## (ஜெர்மனி கல்விமுறை)

ஜெர்மனியில் உள்ள கல்வி முறைக்கு நான் வாவ் கல்விமுறை என்று பெயரிட்டுள்ளேன். இந்தக் கட்டுரையைப் படிக்கும் பொழுது கல்வி சம்பந்தப்பட்ட உங்களது அனைத்து கேள்விகளுக்கும் விடை கிடைக்கும்.

ஹீலர் பாஸ்கர் ஆகிய நான் கடந்த ஆண்டு (2016) கல்வி மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக்காக ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு சென்றிருந்தேன். அங்குள்ள கல்விமுறை, மருத்துவமுறை மக்களின் வாழ்வியல் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆய்விற்கு எடுத்துக்கொண்டேன். இந்த மூன்று விசயங்களையும் ஆய்வு செய்த போது பல விசயங்கள் எனக்குப் புரிய வந்தது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆராய்ச்சிக்கு உதவி செய்த ஜெர்மனியில் வசிக்கும் திரு. திலீப்குமார். திருமதி. ஜெய ஸ்ரீ திலீப்குமார் மற்றும் பல நல்ல உள்ளங்களுக்கும் நன்றிகள் கோடி !

இந்தக் கட்டுரையில் நாம் ஏழு விசயங்களைப் பார்க்க இருக்கிறோம்.

1.கல்விக்கு அரசாங்கம் செய்யும் நிதி உதவி.
2. ஒன்று முதல் ஆறு வயது வரை கல்விமுறை (Kinder Garden).
3. ஆறு முதல் பத்து வயது வரை கல்விமுறை (Prஷ்துழிரதீ).
4. பத்து முதல் பதினெட்டு வயது வரை கல்விமுறை (Secondary).
5. 18 வயதிற்குமேல் உள்ளவர்களுக்கு கல்விமுறை .
6. மக்களின் பண்பு.
7. வைத்தியம்.

**1. கல்விக்கு அரசாங்கம் செய்யும் நிதி உதவி.**

ஜெர்மனி அரசு நாடு முழுவதும் அரசுபள்ளிக் கூடங்களை தேவையான அளவு நிறுவி வைத்துள்ளது. இந்தியா போன்ற நாடுகளில் உள்ள தனியார் பள்ளிகளில் உள்ள வசதிகளைவிட அதிகப்படியான வசதிகள் ஜெர்மன் அரசுப்பள்ளிகளில் உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

மேலும் அனைத்து அரசுப் பள்ளிகளும் முற்றிலும் இலவசமாக நடத்தப்படுகிறது. ஜெர்மனியில் தனியார் பள்ளிகள் மிகமிக குறைவு. தனியார் பள்ளிகளை விட அரசு பள்ளிகளில் வசதிகள் அதிகமாக அல்லது சமமாக இருப்பதால்

மக்கள் அரசு பள்ளிகளையே விரும்புகின்றனர்.

ஜெர்மனி அரசு, குழந்தைகளை வளர்ப்பதற்கும், கல்வி கற்பதற்கும் பெற்றோர்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. முதல் குழந்தைக்கு ஒவ்வொரு மாதமும் 192 யூரோவும் (இந்திய மதிப்பில் ரூபாய் 14000) இரண்டாவது குழந்தைக்கு ஒவ்வொரு மாதமும் 192 யூரோவும் (இந்திய மதிப்பில் ரூ.14000), மூன்றாவது குழந்தைக்கு ஒவ்வொரு மாதமும் 198யூரோவும் (இந்திய மதிப்பில் ரூ.14000) மற்றும் நான்காவது குழந்தைக்கு ஒவ்வொரு மாதமும் 223 யூரோவும் (இந்திய மதிப்பு ரூ.16000) வழங்குகிறது.

இவ்வாறு அரசாங்கம் அனைத்து வசதிகளுடன் பள்ளிகளை இலவசமாக நடத்துவதுடன் பெற்றோர்களுக்கு மாதா மாதம் நிதிஉதவியும் அளிக்கிறது. இதனால் இங்கு மாணவர்களும், பெற்றோர்களும் மகிழ்ச்சியுடன் கல்வியைப் பெறுகின்றனர். ஜெர்மனியைப் போன்று அனைத்து நாடுகளும் இருந்தால் கல்வி சிறப்பாக இருக்கும்.

**1 முதல் 6 வயது வரை கல்வி திட்டம் (Kinder Garden)**

இந்தியா போன்ற நாடுகளில் இருப்பதைப் போன்று எல்.கே.ஜி, யு.கே.ஜி. என்பது ஜெர்மனியில் இல்லை. ஒரு வயது முதல் கின்டர் கார்டன் எனப்படும் பள்ளிகளுக்கு குழந்தைகள் செல்கின்றனர். ஏ.பி.சி.டி கற்பித்தலோ, பரீட்சையோ கிடையாது. ரைம்ஸ் படித்து ஒப்பிக்கத் தேவையில்லை. கரும்பலகை (Board) கிடையாது. இங்கு விளையாடுவதற்கு மட்டுமே அனுமதிக்கிறார்கள். இத்துடன் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத் தருகின்றனர்.



சாப்பிடுவது எப்படி என்பதைக் கற்றுத் தருகின்றனர். சாப்பிடும் பொழுது உதட்டைபிரித்து சாப்பிட்டால் ஒழுங்காக ஜீரணம் ஆகாது. எனவே உதட்டை மூடி சாப்பிடவேண்டும் என்று நாம் பல வருடமாக "அனாடமிக் தெரபி" என்ற பெயரில் அறிவுறுத்தி வருகிறோம். ஆனால் ஜெர்மனியில் குழந்தைகளுக்கு இரண்டு அல்லது மூன்று வயதிலேயே இந்த வித்தையைக் கற்றுக் கொடுத்து விடுகின்றனர்.

**LEGO PLAY**



இந்த கிண்டர் கார்டன் வகுப்பில் Lego Play என்ற ஒரு வகுப்பு நடத்தப்படுகிறது. அதாவது 6 வயது வரை குழந்தைகளுக்கு விளையாட்டு மட்டுமே தேவை என்று கூறுகிறார்கள். Lego Play என்பது தனித் தனியாக பிரிக்கப்பட்ட பொருட்களை ஒன்று சேர்ப்பது ஒன்று சேர்ப்பது ஒன்று சேர்த்த பொருட்களை தனித்தனியாக பிரிப்பது. இது குழந்தைகளுக்கு கற்றுத் தரப்படுகிறது. இத்தகைய அறிவு கற்பிக்கப்பட்டு இருப்பதால் ஒவ்வொரு பொருளையும் சேர்ப்பதும், பிரிப்பதும் எப்படி என்பது அவர்களின் ரத்தத்திலேயே ஊறி இருக்கிறது.

உதாரணமாக கடைக்குச் சென்று சைக்கிள் வாங்கும் பொழுது சைக்கிளின் பாகங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு ஒரு டப்பாவில் அடைத்து வைத்திருப்பார்கள். ஒரு துண்டுக் காகிதத்தில் அதை எவ்வாறு இணைக்க வேண்டும் என்று படங்களுடன் குறிப்பு இருக்கும். வீட்டிற்கு அதை வாங்கி வந்த பின்னர் அதில் குறிப்பிட்டவாறு

அப்படியே இணைத்து சைக்கிளாக உருவாக்குகிறார்கள். இதுபோன்று வீட்டிற்குத் தேவைப்படும் பொருட்களையும் பொதுவாக தனித் தனியாகத்தான் கொடுக்கிறார்கள். வாங்கு பவர்கள் தான் அதை ஒன்றிணைத்துக் கொள்ளவேண்டும். இது மிகவும் அருமையான திட்டமாக இருக்கிறது.

எனவே ஆறு வயது வரை குழந்தைகளை விளையாட விடுவதற்கும், பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பதற்கும் முக்கியத்துவம் அளித்தால் போதும். ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் ஏ.பி.சி.டி யைக் கற்றுக் கொடுத்தும், எழுதச் சொல்லியும், மனப்பாடம் செய்யச் சொல்லியும் குழந்தைகளை குழந்தைகளாக வாழவிடாமல், தேவையில்லாமல் குழந்தைகளைக் கொடுமைப்படுத்து கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**6 வயது முதல் 10 வயது வரை கல்விதிட்டம் (PRIMARY)**

(1 முதல் 4 ஆம் வகுப்பு வரை) பிரைமரி பள்ளிகளில் 6 வயது பூர்த்தியான மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஐந்தரை வயது ஐந்தே முக்கால் வயது என்றாலும் சேர்த்துக் கொள்வது கிடையாது. ஆறு வயது வரை மனப்பாடம் செய்தல், பரீட்சை எழுதுதல் ஆகியன குழந்தைகளுக்கு இருக்கக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள்.

இங்கு ஒன்பது வயது வரை ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுப்பதே இல்லை. ஆங்கிலம் என்பது அறிவு கிடையாது. அது ஒரு பாஷை என்பதை ஜெர்மனியர்கள் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் மற்ற நாடுகளில் ஆங்கிலம் என்பதை அறிவு போல படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் பேசினால் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தாய்மொழியில் பேசுவதையும், எழுதுவதையும் அவமானம் என்று நினைக்கிறார்கள். ஆங்கிலத்தில் பேசினால் புத்திசாலி என்று நினைப்பது “வெள்ளையாக இருப்பவன் பொய் சொல்லமாட்டான்” என்பதைப் போல இருக்கிறது.

இந்த கல்வி முறைக்கு வாவ் (ழலிழ) கல்விமுறை என்று ஏன் பெயரிடப்பட்டது என்று அறிந்து கொள்வோம்.

குழந்தைகளுக்கு ஆங்கிலம் பேச தெரியாது எனில் இந்தியா போன்ற நாடுகளில் அவமானமாக நினைக்கிறோம். குழந்தைகள் ஆங்கிலத்தில் பேசினால் பெருமையாக நினைக்கிறோம். ஆனால் ஜெர்மனியில் குழந்தைகளுக்கு ஆங்கிலம், தெரியவில்லையெனில், பெருமையாக நினைக்கிறார்கள். ஒருவேளை ஆங்கிலம் தெரிந்தால் தான் அவமானமாக கருதுவார்கள் போல.



நமது நாட்டில் ஒரு குழந்தை ஆங்கிலம் பேசவில்லையெனில் அதைப் பேச வைக்க முயற்சி செய்கிறோம். ஜெர்மனியில் குழந்தைக்கு ஆங்கிலம் தெரியாது எனில் அதை "வாவ்" என்று கூறுகிறார்கள். அதே சமயம் ஜெர்மன் மொழியே தெரியாமல் இருந்தாலும் அதைப்பற்றி கவலை கொள்வது கிடையாது. ஏனென்றால் ஒன்பது அல்லது பத்து வயது வரை குழந்தைகளுக்கு எதையுமே வலிந்து திணிப்பதை இவர்கள் விரும்புவதில்லை. எனவே குழந்தைகள் குழந்தைகளாக வளர்கிறார்கள்.

அன்பு நண்பர்களே ! மொழி என்பது மிக முக்கியமான ஒன்று. தாய்மொழியில் புரிந்து கொண்ட விசயத்தை உலகில் உள்ள எந்த மொழியிலும் மற்றவர்களுக்கு நாம் புரியவைக்க முடியும். உதாரணமாக ஜப்பானிலிருந்து டெக்ஸ்டைல் இன்ஜினியர் ஒருவர் ஜெர்மனிக்கு வந்திருக்கிறார். அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுடன் பேசி பல விசயங்களைப் புரிய வைத்திருக்கிறார். ஆனால் அவருக்கு ஜெர்மன் மொழி தெரியாது. அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஜப்பானிய மொழி தெரியாது. இரண்டே இரண்டு வார்த்தைகளை வைத்து அவர் அந்த தொழிலாளர்களுக்கு புரிய வைத்து அங்குள்ள இயந்திரங்களை பழுது நீக்கி இருக்கிறார். அந்த இரண்டு வார்த்தைகள் ஒன்று கோ, மற்றொன்று நோகோ, கோ என்றால் சரி, நோ கோ என்றால் தவறு.

இரண்டே இரண்டு வார்த்தைகளை மட்டும் வைத்துக் கொண்டு மொழி தெரியாத இரு தரப்பினர் இடையே பல விசயங்களைப் பேசி புரிந்து கொண்டுள்ளனர். எனவே ஆங்கிலம் தெரிந்தால் தான் புத்திசாலி என்ற எண்ணத்தை தயவு செய்து மறந்து விடுங்கள்.

இந்தியாவில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பிரைமரி என்று அழைக்கிறார்கள். ஆனால் ஜெர்மனியில் 1 முதல் 4 ஆம் வகுப்பு வரை பிரைமரி என்று அழைக்கின்றனர். ஐந்து வயதில் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பது இந்தியாவில் வழக்கம். ஆனால் பத்து வயது வரையான காலகட்டத்தில் பிரைமரி கல்வியை முடிக்கவேண்டும் என்பதால் 6 வயதில் தான் முதல் வகுப்பு துவங்குவதால் பத்து வயதில் தான் நான்காம் வகுப்புடன் பிரைமரி கல்வி ஜெர்மனியில் நிறைவுபெறுகிறது.

1 முதல் 4 ஆம் வகுப்பு வரை குழந்தைகளை அவரவர் வீட்டின் அருகே உள்ள பள்ளியில் தான் படிக்க வைகக வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்ட முக்கிய விதி. குழந்தைகள பள்ளிகளுக்கு செல்ல நீண்ட தூரம் பயணம் செல்லக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். ஆனால் பல நாடுகளில் குழந்தைகள் வீட்டிலிருந்து பள்ளிகளுக்கு சென்றடைய ஒரு மணிநேரம், இரண்டுமணிநேரம் பயணம் செய்யும் படி அவர்களை அனுப்புகிறோம். இதனால் நேரம் விரயம் ஆகிறது. ஆனால் ஜெர்மனியில் அதை சரியாக கையாள்கிறார்கள். இடம் இல்லை என்று வேறு பள்ளிக்கு திருப்பி அனுப்புவதில்லை. அதே போல இத்தனை மாணவர்கள் தான் ஒரு பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற வரைமுறையும் வைத்துக் கொள்வதில்லை. எத்தனை மாணவர்களை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்கிறார்கள். அதற்கு ஏற்ப பள்ளி கட்டிடங்களை அதிகரித்துக் கொள்கிறார்கள். வீட்டின் அருகிலேயே குழந்தைகளுக்கு பள்ளிகூடம் இருக்கவேண்டும் என்பதில் அவ்வளவு தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கின்றனர்.

1 முதல் 4 ஆம் வகுப்பு வரை ஒரே ஆசிரியர் தான் இருக்கவேண்டும் என்பது முக்கியவிதியாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த பிரைமரி பள்ளியில் பரீட்சை கிடையாது. மதிப்பெண்கள் கிடையாது. பாஸ், பெயில் என்ற வரைமுறை கிடையாது. ஒரே ஆசிரியர் நான்கு வருடங்கள் அதே குழந்தைகளை கவனித்தால் தான் படிக்கும் திறனையும் அளவிட முடியும் என்பதனால் ஒரே ஆசிரியர் முறையை கடைபிடிக்கின்றனர். ஆனால் பல நாடுகளில் ஒவ்வொரு வகுப்பிற்கும் பல ஆசிரியர்கள் வந்து பாடம் கற்பிக்கின்றனர். இதனால் ஒவ்வொரு குழந்தைக்கும் என்ன தெரியும், தெரியாது என்பது ஆசிரியர்களுக்கு தெரிவதே இல்லை.

தேர்ச்சி முறையில் கையாளப்படும் பாஸ், ஃபெயில் என்பது பிரைமரியில் இல்லை. ஒருவேளை எந்த குழந்தையாவது சரியாக எதையும் புரிந்து வைத்து கொள்ள வில்லையெனில் ஆசிரியர் அக்குழந்தைகளின் பெற்றோர்களை அழைத்து “இந்த குழந்தை மீண்டும் மூன்றாம் வகுப்பு படிக்கவேண்டும் என நான் விரும்புகிறேன்.” என சொல்லும் போது அவர்கள் “வாவ்” என சந்தோசமாக சரி என்று கூறுவார்கள். ஆனால் நமது நாட்டிலோ ஒரு குழந்தை மீண்டும் அதே வகுப்பில் படிப்பதை அதாவது ஃபெயிலாகி மீண்டும் அதே வகுப்பில் படிக்கவேண்டும் என்றால் அதை அவமானமாக கருதுகிறோம். ஆனால் அங்கு சந்தோசமாக ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**10 முதல் 16 வயது வரை (ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரை செகண்டரி (SECONDARY)**

நான்காம் வகுப்பு முடித்த (பிரைமரி) மாணவர்கள் ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயில வேறு பள்ளிக்குச் செல்கின்றனர். இதற்கு செகண்டரி என்று பெயர். செகண்டரி வகுப்புகளை மூன்று வகைகளாக பிரிக்கின்றனர்.

**I. பெஸ்ட் - ஜிம்னாசியம் ஸ்கூல் (GYMNASIUM)**

மூளைக்கு அதிக வேலை தரும். பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்துறையின் உச்சபட்ச மதிப்புகளுடையவை (Higher Profession) இந்த பிரிவில் பாடமாக கற்றுத் தரப்படுகிறது.

**II. பெஸ்ட் - ரியல் ஸ்கூல் (REAL SCHOOL)**

கலை, நிர்வாகம், பண்பாடு என்பன போன்றவற்றில் பட்டம் (டிகிரி) பெறும் தகுதியான மாணவர்களை உருவாக்கும் துறையாக இந்தப் பிரிவு செயல்படுகிறது.

**III. பெஸ்ட் - (HAUPT SCHOOL)**

எலெக்ட்ரிசியன், ஃபிட்டர், பெயிண்டர் போன்ற தொழில்களைக் கற்றுக் கொள்வதற்காக பிரத்யேகமாக இந்த பிரிவு செயல்படுகிறது.

முதலாவது பெஸ்ட் ஸ்கூல் என்பது ஐந்து முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பெஸ்ட் ஸ்கூல் என்பது ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் செயல்படுகின்றன.




நான்காம் வகுப்பு (பிரைமரி) பள்ளியை முடித்த ஒரு மாணவர் மேற்சொன்ன மூன்று வகையான பெஸ்ட் ஸ்கூலில் எந்த பள்ளியில் சேர வேண்டும் என்பதை வகுப்பு ஆசிரியரும், பெற்றோர்களும் கூடி முடிவெடுத்து அதன் பின்னரே பள்ளியில் சேர்க்கின்றனர்.

பள்ளியில் சேர்க்க நன்கொடை அளிப்பது. லஞ்சம் கொடுப்பது, பெருமைக்காக ஒரு பள்ளியில் சேர்த்துப் படிக்கவைப்பது போன்ற எந்த விசயங்களும் ஜெர்மனியில் இல்லவே இல்லை.

ஒன்று முதல் நான்காம் வகுப்பு வரை ஒரே ஆசிரியரிடம் கல்வி கற்க வேண்டும் என்பதன் நோக்கம் ஒரு குழந்தையின் தனித்திறனையும், கல்வி கற்கும் பாங்கினையும் முழுவதும் அறிந்தவராக இருப்பார் என்பது தான். செகண்டரி பள்ளி படிப்பிற்கு பின்னர் அக்குழந்தை எதில் படிக்கலாம் என்பதை அவர் தன் கருத்தை தீர்மானித்து கூறுவார். உதாரணமாக மிக நன்றாக படிக்கும் குழந்தைகளை மருத்துவம், இன்ஜினியரிங் படிப்பதற்கு முதலாவது பெஸ்ட் ஸ்கூலில் படிக்க பரிந்துரை செய்கிறார். சுமாராக படிக்கும் மாணவர்களை இரண்டாவது பெஸ்ட் பள்ளியில் சேர்க்க முடிவு செய்கிறார்கள். படிப்பு சரியாக வராத ஆனால் மற்ற திறமைகள் அதிகமிருக்கும் குழந்தைகளை மூன்றாவது பெஸ்ட் ஸ்கூலில் சேர்க்க முடிவு செய்கின்றனர்.

அன்பர்களே ! நண்பர்களே !

இந்த இடத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விசயம் என்னவென்றால் எல்லா குழந்தைகளும் முதல் மதிப்பெண் எடுக்க முடியாது. எல்லா குழந்தைகளும், மருத்துவரோ, இன்ஜினியரோ ஆக முடியாது. அது தேவையும் இல்லை. உங்கள் குழந்தைக்கு என்ன வருகிறதோ அந்த வேலையைச் செய்ய அனுமதியுங்கள்.

ஆனால் பெற்றோர்கள் அனைவரும் தன் குழந்தை அதிகமாகப் படிக்கவேண்டும். நிறைய மார்க் எடுக்கவேண்டும். டாக்டர் ஆகவேண்டும், இன்ஜினியர் ஆகவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறார்கள். எல்லோரும் டாக்டர்ஆகிவிட்டால் பிளம்பர் வேலையை யார் சார் செய்வது? செருப்பு தைக்கும் வேலையை யார் பார்ப்பது? இவ்வாறு நமது நாட்டில் அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின் கீழ் தேவையின்றி அனைவரையும் கட்டாயமாக படிக்கச் செய்வது விடுகிறார்கள். இதனால் சாதாரண வேலை செய்வதற்கு கூட ஆளே இல்லாமல் மிக அவதிப்படுகிறோம். ஆனால் ஜெர்மனியில் அந்தந்த வேலைக்கு அந்தந்த ஆட்கள் சிறப்பாக இருக்கிறார்கள்.

பிரைமரி பள்ளியை முடித்த பின்னர் செகண்டரி பள்ளியில் மூன்றாவது பெஸ்ட் ஸ்கூலில் சேர்க்கலாம் என்று ஒரு மாணவர் பற்றி முடிவு செய்து இருந்தாலும் அதுபற்றி ஆசிரியரோ, பெற்றோர்களே துளியும் வருத்தப்படுவதில்லை. “வாவ்” என்று மகிழ்ச்சி கொள்ளவே செய்கின்றனர். “என் குழந்தை பெயிண்டர் பிளம்பர் வேலைக்குத் தான் படிக்கிறதா? ரொம்ப சந்தோசம்” என்று ஏற்றுக் கொள்கின்றனர்.

இதுதான் சிறந்த கல்வி.

ஒரு நாட்டில் அனைத்து வேலைகளையும் செய்வதற்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள். ஐந்தாம் வகுப்பிலிருந்தே ஒவ்வொரு மாணவனையும் பிளம்பர், அக்கவுண்டன்ட், இன்ஜினியர் டாக்டர், எலக்ட்ரிசியன் என்று அவரவர் தகுதிக்கேற்றவாறு ஏதோ ஒரு துறையில் சிறப்பானவர்களாக மாற்றிக் கொள்ள தேர்ந்தெடுத்து பயிற்சி அளிக்கிறார்கள். இங்கு எந்த தொழில் செய்கிறோம் என்பது குறித்து யாரும் அவமானமாக நினைப்பது இல்லை. எந்த தொழில் செய்தாலும் அதில் திறமையாக செயல்படுவதை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கின்றனர். அதையே மிகவும் விரும்புகின்றனர்.

செகண்டரி பள்ளிகளில் தேர்வுகள் உண்டு. ஆனால் பத்து தேர்வுகள் எழுதினால் பத்திலும் தேர்ச்சி ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இரண்டு தேர்வுகளில் சரியாக செய்யவில்லை என்றாலும் ஏற்றுக் கொள்கிறார்கள். அதே போல தேர்வு என்பது கல்வியாண்டின் இறுதியில் நடத்துவது இல்லை. ஆண்டின் மத்திய காலத்திலேயே நடத்துகிறார்கள். இதனால் ஒருவேளை சில மாணவர்கள் தேர்வில் நன்றாக செய்யாமல் இருந்தால் அந்த மாணவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி மீண்டும் அவ்வருட இறுதிக்குள் தேர்ச்சி அடைந்து விடுமளவிற்கு அவர்களுக்கு கற்றுக்கொடுத்து புரிய வைக்க முயற்சி செய்கிறார்கள்.

ஒரு சில மாணவர்களுக்கு தேர்வின் போது எழுதுவதற்கு இயலவில்லை என்றால் அவர்கள் முன்பே வகுப்பு ஆசிரியரிடம் அனுமதி பெற்று கேள்விக்கான பதிலை வாய் மொழியாக கூறினாலும் போதும். உதாரணமாக எனக்கு எழுதுவதற்கு வராது. எழுதவதைவிட பேசுவதில் என்னால் ஒரு விசயத்தை எளிதாக மற்றவர்களுக்கு புரியவைத்துவிட முடியும். இந்த கட்டுரையை கூட நான் எழுதவில்லை. கடந்த மூன்றாண்டுகளாக நமது அமைதியும் ஆரோக்கியம் இதழில் வெளியாகும் எந்த ஒரு கட்டுரையையும் நான் எழுதியதில்லை. பேனா பிடித்து எழுதும் போது என்னால் சரியாக சிந்தித்து எழுத முடிவதில்லை. ஆனால் பேசும் போது கோர்வையாக பேச மூளை நன்றாக வேலை செய்கிறது. எனவே இந்தகட்டுரையையும் தனியாக ஓரிடத்தில் அமர்ந்து ஆடியோ வடிவில் ஒலிப்பதிவு செய்து என் உரையினை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பேன். என் அலுவலகத்தில் பணிபுரியும் என்னுடைய நண்பர் சுகுமார் அந்த ஆடியோவினை இயர்போன் மூலம் கேட்டு எழுதிய பின்னர் டைப் செய்து என் பார்வைக்கு அனுப்பி வைப்பார். நான்அதை சரிபார்த்து பிரசுரிக்க அனுமதிப்பேன்.

ஆனால் பல நாடுகளில் பாடத்தை நன்கு புரிந்துகொண்ட மாணவர்கள் எழுத்து வழித் தேர்வில் நன்கு சிறப்பாக எழுதினால், அதிக மதிப்பெண்கள் எடுத்தால் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் எழுத வராத மாணவர்கள் வாய்மொழியாக அதே விசயத்தைக் கூறுவதற்கு அனுமதிப்பதில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு அல்லது பனிரெண்டாம் வகுப்பு வரை நடத்தப்படும் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும் என்பது கட்டாயமில்லை. மாணவர்களுக்கு பாடங்கள் புரியவைக்கவேண்டும் என்பதை தான் நோக்கமாக கொண்டுள்ளனர். எனவே மதிப்பெண்களை அவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. மேலும் தேர்வில் பெற்ற மதிப்பெண்களை குறிப்பிட்ட அந்தந்த மாணவர்களிடம் மட்டுமே பகிர்ந்து கொள்கின்றனர். அனைவருக்கும் அதை தெரிவிப்பது இல்லை. தேர்வில் பெறும் மதிப்பெண் என்பது ஒரு தனிப்பட்ட விசயம். எனவே ஒருவர் தேர்வில் பெற்ற மதிப்பெண்னை வெளிப்படையாக அறிவிக்கும் பொழுது சக மாணவர்களிடம் அது ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டு மதிப்பெண்களை வெளிப்படையாக அனைவரின் முன்னிலையிலும் கூறுவதில்லை. தனித்தனியே ஒவ்வொரு மாணவரிடத்தில் மட்டுமே அவர் பெற்ற மதிப்பெண்களை கூறுகின்றனர். அதிலும் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை திட்டாமல், அடிக்காமல் அவர்களுக்கு புரிய வைக்கவும், ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளை

மட்டுமே செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

செகண்டரி வகுப்புகளின் இறுதியில் அதாவது பத்தாவது அல்லது பனிரெண்டாம் வகுப்பு இறுதியில் தான் தேர்வுகளை நடத்துகிறார்கள். அந்த தேர்வுகளிலும் அனைவரும் புரிந்து கொண்டு பயின்றிருப்பதனால் அதிக மதிப்பெண்கள் பெறுகின்றனர். ஏனென்றால் கல்விமுறை அந்த அளவிற்கு சிறப்பாக இருக்கிறது.

**18 வயதிற்கு மேல் கல்விமுறை**

பதினெட்டு வயதிற்கு மேல் பள்ளி அல்லது கல்லூரி வகுப்பினை படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு அங்கிருந்து ஒரு கடித்தினை அனுப்புகின்றனர். "அதில் உங்கள் குழந்தை பெரிய மனிதர்களாகிவிட்டனர். எனவே மாணவர்கள் குறித்து எந்த ஒரு விசயத்தையும் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்த மாட்டோம். இனிமேல் அவர்களைப் பற்றிய எந்த முடிவும் அவர்களே சொந்தமாக எடுக்க அனுமதி அளிக்கிறோம்" என்று பெற்றோர்களுக்கு ஒரு கடிதம் அனுப்புகின்றனர்.

பதினெட்டு வயது பூர்த்தியடைந்த மாணவன் தானே சிந்தித்து சுதந்திரமாக செயல்படும் தகுதி உள்ளவன் என்பதால் அவன் சார்ந்த விசயங்களை அவனே முடிவுசெய்கிறான். இதனால் பெற்றோர்களிடம் அவனைக் குறித்து எதுவும் பள்ளி / கல்லூரி நிர்வாகம் சொல்வதில்லை. பெற்றோர்களின் கையெழுத்தும் அந்த மாணவனுக்கு எங்கும் தேவைப் படுவதில்லை. ஒருவேளை அந்த மாணவன் தவறு செய்தாலா, முறைகேடாக நடந்து கொண்டாலோ நேரடியாக காவல் துறையில் தான் புகார் அளித்து நடவடிக்கை மேற்கொள்கின்றனர். பின்னர் தான்



பெற்றோர்களுக்கு தெரிவிக்கின்றனர்.

எந்த வயதினராக இருந்தாலும், யார் துன்புறுத்தினாலும் காவல்துறையின் புகார் செய்து நடவடிக்கை எடுக்கலாம். ஒருவேளை தன் பெற்றோர் கொடுமைப்டுத்துவதாக கூட பாதிக்கப்பட்ட மாணவர் புகார் அளித்தால் நடவடிக்கை மேற்கொள்கின்றனர். இந்த விசயத்தில் நார்வே நாடு மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்கிறது.

பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட மாணவன் தனியாக, சுதந்திரமாக வாழ தகுதி பெற்றவன் ஆகிறான்.

எனவே பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஒரு மாணவனை அழைக்கும் பொழுது மிஸ்டர் என்பதை சேர்த்தே கல்லூரியில் அழைக்கிறார்கள். மேலும் பதினெட்டு வயது பூர்த்தியான ஒரு மிஸ்டர் கல்லூரியில் சேரவேண்டும் எனில் பெற்றோர்களின் கையெழுத்து தேவையில்லை. அந்த மிஸ்டரின் சொந்த கையெழுத்து மட்டுமே போதுமானதாகும்.

13 வயதைக் கடந்த மாணவர்கள் பகுதி நேரமாக ஏதாவது ஒரு வேலை, வியாபாரம் செய்து சம்பாதிப்பதை ஆரம்பித்து விடுகின்றனர். எனவே சிறுவயது முதலே வியாபாரம் செய்துவது எப்படி? பணம் சம்பாதிப்பது எப்படி? அதை பொறுப்பாக செலவு செய்வது எப்படி? என்பதை அவர்கள் கற்றுக் கொள்ள இது

ஒரு அருமையான வாய்ப்பாக இருக்கிறது. பதின்மூன்று வயதிற்கு மேற்பட்ட ஒரு மாணவன் பாக்கெட் மணியை பெற்றோர்களிடம் பெரும்பாலும் எதிர்பார்ப்பது இல்லை. ஏனென்றால் தங்கள் தேவைக்கு அவர்களே சொந்தமாக சம்பாதித்து கொள்கின்றனர்.

கல்லூரியில் பயிலும் மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகள் (Project Work) சமர்பிக்கவேண்டி வரும் பொழுது இணையதளமான கூகுள், விக்கிப்பீடியா போன்றவற்றில் இருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகளையோ, வாக்கியங்களையோ பயன்படுத்தினால், அந்த கட்டுரைகள் நிராகரிக்கப்படுவதுடன் 5000யூரோ அபராதமும் விதிக்கப்படுகிறது.

நண்பர்களே ! இங்கு ஒரு விசயத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். கூகுள், விக்கிபீடியாவில் உள்ள அனைத்து விசயங்களும் சரியான விசயங்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதை இவர்கள் மிகவும் தெளிவாக புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் பல நாடுகளில் மக்கள் இணையத்தில் தேடி அதில் முதலில் வரும் விசயங்களை உண்மை என்று நம்பி வாழ்வது சரியானது அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். தங்களின் வியாபார நோக்கத்திற்காக இந்த உலக மக்களை பல ஆண்டுகளாக ஏமாற்றிவரும் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 13 குடும்பத்தைச் சேர்ந்தவர்களான இலுமினாட்டிகள் தான் இணையதளம், கூகுள், விக்கிபீடியா போன்றவற்றை சொந்தமாக வைத்துக் கொண்டு மக்களின் அறிவை திசைதிருப்பி வருகின்றனர். எனவே இந்த விசயத்தை தெளிவாகப் புரிந்து கொண்டு வாழ்வதே சிறப்பானதாகும்.



கல்லூரிகளில் மாணவர்கள் ப்ராஜக்ட் ஒர்க் (Project Work) என்று சமர்பிக்கும் ஆய்வுக்கட்டுரைகளில் உள்ள வார்த்தைகளை ஒரு சாப்ட்வேர் மூலம் பரிசோதிக்கிறார்கள். அதே வார்த்தைகள், அதே வாக்கியங்கள் கூகுள், விக்கிப்பீடியா போன்றவற்றில் இருக்கிறதா என்பதை அறிய ஒருகுழு அமைத்திருக்கிறார்கள். எனவே அங்குள்ள மாணவர்கள் ஒவ்வொரு வார்த்தைகளையும் சொந்தமாக எழுதுகிறார்கள். இதுவே சிறந்த முறை.

பல வருடங்களுக்கு முன்பாக நான் அக்குபஞ்சர் வைத்தியம் கற்பிக்கும் பிரபலமான ஒருநிறுவனத்தில் அந்த பயிற்சியை கற்றுக்கொண்டேன். எனக்கு பயிற்சியளித்தவர் ஒரு பிரபல மருத்துவர். பயிற்சியின் நிறைவில் தேர்வு வைத்தார்கள். என்னுடன் பயின்ற மாணவர்கள் அனைவரும் புத்தகத்தில் தாங்கள் படித்த விசயங்களை அப்படியே மனப்பாடமாக எழுதியிருந்தார்கள். இவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டது. ஆனால் நான் ஒவ்வொரு கேள்விக்கும் சொந்தமாக என் பதிலை எழுதினேன். எனக்கு மிகவும் குறைந்த மதிப்பெண்களை கொடுத்தார்கள். அதாவது சொந்தமாக எழுதும் ஒருவருக்கு அறிவு அதிகமாக உள்ளது என்பதை புரிந்து கொள்ளாத கல்வித்திட்டமாக இருக்கிறது என்பதற்கு இதை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். மனப்பாடம் செய்துகொண்டு ஒரு எழுத்து, ஒரு வார்த்தை விடாமல் அப்படியே பிரதி எடுக்கும் வேலையை

செய்தால் புத்திசாலி என்று கூறுவது சரியானவிசயம் அல்ல. ஒரு பாடத்தை படித்துவிட்டு சொந்த நடையில் ஒருவர் எழுதினால் அவருக்குத்தான் அதிகமாக புரிந்திருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

கல்விமுறை பற்றிய சில முக்கியமான அம்சங்களை நாம் இதுவரை பார்த்து வந்தோம். ஜெர்மன் கல்விமுறை குறித்துப் பேசுவதற்கு இன்னும் நிறைய இருக்கிறது. இது ஒரு ஆரம்பம் மட்டுமே. இவ்வாறு சிறந்த கல்விமுறையில் படித்த மாணவர்கள் பொதுமக்களாகி தங்கள் வாழ்க்கையை எப்படி வாழ்கிறார்கள் என்பதை இனி வரும் பகுதிகளில் பார்க்கலாம்.

**இண்டர்நேஷனல் பள்ளி**

ஜெர்மனியில் இண்டர்நேனல் பள்ளிகள் இருக்கின்றது. ஆனால் அதில் ஜெர்மனியில் வசிக்கும் எவரும் படிப்பதே இல்லை. ஏனென்றால் இப்பள்ளிகளில் ஆங்கில வழியில் பாடங்கள் கற்பிக்கப்படுகிறது. பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் ஆங்கில வழியில் கல்வி கற்பதை யாரும் விரும்புவதில்லை. ஏனென்றால் ஆங்கிலத்தில் மட்டுமே அறிவு தவறாக இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தாய்மொழியில் படிப்பதையே சிறப்பாக கருதுகிறார்கள். அதுதான் உண்மை.

எனவே நண்பர்களே ! இண்டர்நேனல் பள்ளி என்பது பல ஊர்களுக்கு, நாடுகளுக்கு வேலை நிமித்தமாக மாறி மாறி செல்லும் சில நபர்களின் குழந்தைகளுடைய வசதிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கல்விமுறை. அதாவது ஒவ்வொரு வருடமும் வேறு வேறு நாட்டில் வேறு வேறு மொழிகளில் கல்விக் கற்க வைத்தால்



அக்குழந்தை குழப்பமடைந்து விடும் என்பதற்காக உருவாக்கப்பட்டவை தான் இண்டர்நேனல் பள்ளிகள். ஆனால் பல நாடுகளில் இண்டர்நேனல் பள்ளிகளில் குழந்தைகள் படிப்பதை பெருமையாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இதை நாம் யோசிக்கவேண்டும். மேலும் ஆங்கிலத்தில் குழந்தைகள் படிப்பதை பெருமையாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் சத்தியமாக ஆங்கிலத்தில் படிக்கும் ஒரு குழந்தைக்கு அறிவு குறைவாக தான் இருக்கும். தாய்மொழியில் படித்தால் மட்டுமே அக்குழந்தைக்கும் புரியும். நல்ல விசயங்களையும் கற்றுக் கொள்ளும்.

உதாரணமாக ஒரு விசயத்தை ஆங்கிலத்தில் கூகுள், விக்கிப்பீடியா ஆகியவற்றின் மூலம் தேடி கற்றுக் கொள்ளுங்கள். பின்னர் அதே விசயத்தை தமிழ், அரபிக், ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற பிறமொழிகளில் தேடி அதில் என்ன வருகிறது என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். ஆங்கிலத்தில் உள்ளதை பிற மொழியில் உள்ள விசயங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆங்கிலத்தில் இருப்பது வியாபாரிகளுக்கு சாதகமாகவும், மற்றவை பொது மக்களுக்கு சாதகமாக இருப்பதையும் புரிந்து கொள்ள முடியும். எனவே ஜெர்மனியில் அனைவரும் தாய் மொழியான ஜெர்மன் மொழியிலேயே கல்வி கற்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதை ஆங்கிலம் மட்டும் தெரிந்த ஜெர்மன்

மொழி தெரியாத நபரிடம் பேசுவதற்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள். தாய்மொழி கல்வியினால் உடல் ஆரோக்கியம், மன நிம்மதி, புத்தியில் தெளிவு, வியாபாரம், செல்வவளம் ஆகியன மக்களிடம் சிறந்து காணப்படுகிறது. இதையே நாமும் பின்பற்றும் பொழுது நிச்சயம் நமது வாழ்வு முன்னேறும்.

தமிழ்நாட்டில் நடத்தப்படும் பல பள்ளிகளில் தமிழில் பேசினால் அபராதம் என்று கூறுகிறார்கள். என்ன திமிர்? என்ன தைரியம்? அது கூட பரவாயில்லை. வீட்டிலும் தமிழ் பேசாதே ! ஆங்கிலமே பேசு! என்று கற்றுத் தருகின்றனர். அன்பர்களே ! தமிழைக் கூட கற்றுத் தராத அந்த கல்வி வேறு எதைக் கற்றுக் கொடுத்துவிடும் என்று நம்பி உங்கள் குழந்தைகளை அப்பள்ளிகளுக்கு அனுப்புகிறீர்கள்? யோசியுங்கள்.

**மக்களின் பழக்க வழக்கங்கள்**

ஜெர்மன் மக்களின் பழக்க வழக்கத்தை ஆராய்ச்சி செய்து பேசுவதற்கு நிறைய விசயங்கள் இருக்கிறது. இருப்பினும் அதில் மூன்றே மூன்று விசயங்களை மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்போகிறோம்.
1. உணவு முறை, 2.மரியாதை, 3. நேரத்தை செலவிடும் முறை (Time Management).

**ஜீரணத்திற்கு வாழ்த்து**

உணவு சாப்பிடத்துவங்குவதற்கு முன்பே குட்டேன் அபெடிட் (Guten Appetit) என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொள்கின்றனர். இதன் பொருள் என்னவெனில் நன்கு பசியெடுத்து உணவு உண்ணுங்கள் என்பதாகும். ஒருவேளை நீங்கள் சாப்பிடும் பொழுதோ, மற்றவர்கள் சாப்பிடச் செல்லும் பொழுதோ குட்டென் அபெடிட் என்று வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்ளவில்லை எனில் வருத்தப்படுவார்கள். கோபப்படுவார்கள். நீங்கள் இவ்வாறு வாழ்த்த வில்லையெனில் உங்களுக்கு மரியாதை தெரியவில்லை என்று நினைத்துக் கொள்வார்கள்.

உதாரணமாக, நமது நண்பர் ஒருவர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது நடந்து சென்று கொண்டு இருந்த முகம் தெரியாத வேறொரு நபரிடம் அருகில் சாப்பாட்டுக் கடை எங்குள்ளது? என்று விசாரித்துள்ளார். அந்த நபர் உணவகத்திற்கு வழிகாட்டியதுடன் "குட்டேன் அபிடேட்" என்று சொல்லிவிட்டு போனாராம்.
சாப்பாட்டுக்கடைக்கு செல்லும் ஒருவர் நன்கு பசியெடுத்தால் மட்டுமே சாப்பிடுவதன் அவசியமும் பசியெடுக்காமல் சாப்பிடும் உணவு கெட்ட சர்க்கரையாக, கெட்டகொழுப்பாக மாறி உடலுக்குள் சென்று பல வியாதிகளை ஏற்படுத்தும். எனவே பசியெடுத்து சாப்பிடுவதே சிறந்தது என்று ஒவ்வொரு நாளும் நமது காதுகளில் பலமுறை விழுமாறு அங்கு அனைவரும் பேசிக் கொள்வதே மிகவும் அருமையாக இருக்கிறது. இதே போல் பிரான்சு நாட்டிலும் உணவு அருந்துவதற்கு முன்னால் "சாந்தே" என்று சொல்லிவிட்டுத்தான் உணவு அருந்துகிறார்கள். பிரான்சில் ஒயின் குடிப்பதற்கு முன்னும் கூட இது உடல் ஆரோக்கியத்திற்காக என்று பொருள் படும்படி "சாந்தே" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர்.

**தொழிலுக்கு மரியாதை**

ஜெர்மனியில் எந்த தொழில் செய்யும் மனிதராக இருந்தாலும் அனைவரையும் சமமாக மதித்து மரியாதையுடன் பழகுகின்றனர். ஜாதி, மதம், தொழில் ஆகியவற்றில் வேற்றுமை இருந்தாலும் அனைவரும் ஒருவரையொருவர் சரிசமமாக மதித்து பழகுவது மிகவும் ஆச்சர்யமாகவும், வியப்பாகவும் இருக்கிறது. அதேபோல



வேலையின்றி வீட்டில் சும்மா இருப்பதையும் இங்கு யாரும் அவமானமாக கருதுவதில்லை. அது இயல்பானதும், ஏற்றுக் கொள்ளக் கூடியதும் ஆகும் என்று சாதாரணமாக வாழ்கின்றனர். ஏனென்றால் வேலையின்றி வீட்டிலிருக்கும் பொழுதும் அவர்கள் இறுதியாக வாங்கிய சம்பளத் தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஊதியமாக அரசாங்கம் மாதாமாதம் கொடுத்து வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் கொடுத்து வந்தாலும் சில வருடங்களுக்குப் பின்னர் வேலைக்குச் செல்லாமலிருக்கும் அந்த நபரை அழைத்து நீங்கள் ஏன் வேலைக்கு செல்லாமல் இருக்கிறீர்கள்? நாங்கள் ஏதாவது உதவி செய்யவேண்டுமா? என்று அரசாங்கம் அதிகாரிகளை நேரடியாக அனுப்பி வைத்து அந்த நபரிடம் கேட்கிறது.

மேலும் வேலையின்றி வீட்டிலிருக்கும் நபருக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நாட்டில் காலியாக உள்ள பணியிடங்கள் பற்றிய தகவல்களை அனுப்பி வைத்து அவர்கள் வேலையில் சேருவதற்கு உதவி செய்கிறார்கள். இவ்வாறு அந்த அரசாங்கம் செய்வதன் நோக்கம் என்னவெனில் ஒரு மனிதனுக்குத் தேவையான உணவு, தங்குமிடம், தண்ணீர் ஆகியன எப்பொழுதுமே தனக்குக் கிடைக்கும் என்ற எண்ணம் இருக்கும் பொழுது வாழ்வில் ஒரு நிம்மதி பிறக்கிறது. அப்பொழுதுதான் நாம் தொழிலை மிகவும் சிறப்பாக செய்யமுடியும். ஆனால் பல நாடுகளில் மக்களுக்கு எந்த ஒரு வருமானத்தையும் அரசாங்கம் கொடுக்காததினால், வேலையின்றிப் போனால் நமது குடும்பம் என்னவாகும்? என்ற கவலையிலேயே மனதிற்குப் பிடிக்காத வேலையை பலரும் செய்து வருகின்றனர். இதனாலேயே ஆரோக்கியத்தை, மனநிம்மதியை, குடும்பநிம்மதியை இழந்து பல்வேறு சிக்கலுக்கு ஆளாகின்றனர். ஜெர்மன் போன்ற நாடுகளில் மேற்சொன்ன விசயம் சாத்தியம். ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் இது சாத்தியமில்லை என்ற கருத்து உடையவராக ஒருவேளை நீங்கள் இருந்தால் நான் அதை மறுக்கிறேன்.

ஐரோப்பிய நாடுகளை விட இந்தியா, இலங்கை, மியான்மர் போன்ற நாடுகளில் அனைத்து வளங்களும் நிறைந்து இருக்கின்றன. வேறெந்த நாட்டையும் நம்பி இல்லாத அளவிற்கு போதுமான வளங்கள் உள்ள நாடுகள் இவை. நிச்சயம் நம்மால் ஜெர்மனியை விடவும் சிறப்பாக வாழமுடியும்.

உலக அளவில் பயன்படுத்தப்படும் பல கருவிகள் ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டவை என்றால் அவை சிறந்தது என்று பெயர் பெற்றவை. அதில் சிறந்த தொழில்நுட்பமும் தரமும் வேறு எந்த நாட்டிலும் அதே போன்று செய்ய முடியாது. இதற்கு ஒரே ஒரு காரணம் இருக்கிறது. இங்குள்ள அனைத்து மக்களுக்கும் தேவையான வசதிகளை அரசாங்கமே செய்து கொடுப்பதால் வேலை செய்யும் தொழிலாளர்களும், அலுவலர்களும் தங்களின் முழுதிறமையை பொருள்கள் உற்பத்தி புதுமை படைத்தல் போன்ற விசயங்களில் பயன்படுத்துவதால் மற்ற நாடுகளை விட சிறந்த பொருட்களை இவர்களால் கொடுக்க முடிகிறது.

உதாரணமாக ஒருவரை அவர் வீட்டில் சந்தித்து நீங்கள் என்னவேலை செய்கிறீர்கள்? என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். "வேலையில்லாமல் சும்மா

இருக்கிறேன்" என்று சொல்வதை அவர் அவமானமாக நினைப்பது இல்லை. அதே சமயம் கேட்பவரும் அதை ஒருபோதும் அவமானமாக நினைத்துப் பேசுவது இல்லை. எனவே வேலைக்கு செல்பவர்களும், வேலைக்கே செல்லாதவர்களும் ஜெர்மனியைப் பொறுத்தளவில் சந்தோசமாக வாழ்கின்றனர்.

எனவே தான் இங்குள்ள மக்கள் அனைவரும் அன்புடன்ஒற்றுமையாக இருக்கின்றனர். உதாரணமாக ஒரு பெயிண்டரும், ஒரு பாத்திரம் கழுவும் தொழிலாளியும், ஒரு ஹோட்டலின் சர்வரும் ஒரு டாக்டரும், ஒரு இன்ஜினியரும் ஒரே இடத்தில் சரிசமமாக அமர்ந்து சாப்பிடுகின்றனர். நட்பு ரீதியாக பழகுகின்றனர். மனதில் எவ்வித வேற்றுமையும், ஏற்றத்தாழ்வும் இல்லாமல் சமமாக ஒவ்வொருவரையும் நினைக்கின்றனர். இதைப்போல் நாமும் பின்பற்றி வாழும்பொழுது அனைவரும் ஒற்றுமையாக இருக்க முடியும்.

ஜெர்மனியில் அனைத்து தொழில்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. உதாரணமாக ஒரு பெயிண்டராக இருப்பவர் பெயிண்டிங் செய்வதில் உள்ள அனைத்து நுணுக்கங்களையும், அனைத்து உபகரணங்களையும் அறிந்து வைத்திருப்பார். அவரைப் போன்று மற்றவர் அந்த வேலையை செய்யமுடியாது. ஒரு பிளம்பர் எனில் அவர் தன்னுடைய வேலையில் நிபுணத்துவம் பெற்ற நபராக இருப்பார். கல்வித்திட்டத்தில் ஐந்தாம் வகுப்பு முதலே பெயிண்டிங், பிளம்பர் என்று தனியாக பிரிவுகளை ஏற்படுத்தி கல்வி கற்கச் செய்துவிடுகின்ற காரணத்தினால் அந்தந்த வேலையை கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு இரத்தம், புத்தியில் ஊறிய ஒன்றாக மாறிவிடுகிறது. இதனால் அவர்களால் ஒவ்வொரு தொழிலிலும் பிரகாசிக்க முடிகிறது. நாமும் ஒவ்வொரு தொழிலையும் இதேபோல் சமமாக மதித்தால் நாட்டில் ஒற்றுமை நிலவும்.

இங்கிலாந்து நாட்டில், பிரித்தாளும் சூழச்சியை இன்றும் நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். இங்கிலாந்து நாடு முன்பு எந்த நாட்டையெல்லாம் கைபற்றியதோ, இப்பொழுது எந்த நாட்டையெல்லாம் பிடித்துக் கொண்டுள்ளதோ அந்த நாடுகளில் எல்லாம் பிரித்துப் பிரித்துப் பல பிரிவுகளாக மக்களை வைத்திருக்கின்றனர். அதனால் தான் நம் நாட்டிலும் ஜாதி, மதச் சண்டைகளை நாம் எப்பொழுதுமே செய்து கொண்டிருக்கிறோம். இங்கிலாந்தில் ஒரு கேண்டீனுக்கு செல்லவேண்டும் எனில் ஆபிசர் கேண்டீன், லேபர் கேண்டீன்,ஓனர் கேண்டீன் என்ற பிரிவுகளைப் ஏற்படுத்தி வைத்திருப்பார்கள். அந்தந்த பிரிவினர் அதற்குரிய இடங்களுக்கே செல்லவேண்டும். இதனால் மனிதர்களிடம் பிரிவினை ஏற்படுகிறது. ஆனால் ஜெர்மனியில் அனைத்து உணவகங்களிலும் இந்த பிரிவினைகள் கிடையாது. அனைவரும் சரிசமமாக ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். அனைவரும் ஒற்றுமையாக பழகுகின்றனர்.

பேசும்பொழுது தெரியாத விசயம் எதுவும் இருந்தால் அதை "தெரியாது" என்று கூறுகின்றனர். எந்தக் கேள்விக்கேனும் பதில் தெரியவில்லை என்றால் "தெரியாது" என்று கூறுவதை சரி என்று தான் நினைக்கின்றனர். அதை அவமானமாக கருதுவதில்லை. ஆனால் பலரும் தெரியாத விசயத்தைத் "தெரியும்" என்று கூறுவதுடன் அதன் மூலம் பலருக்கும் அதை பற்றிய தவறான தகவல்களை பரப்புகின்றனர். இதனால் அனைவருக்கும் கெட்ட பெயர் உண்டாகிறது. ஆனால் இங்கு எந்த கேள்வியாக

இருந்தாலும் சரியாக தெரிந்தவற்றை மட்டுமே கூறுகிறார்கள். இல்லையெனில் "தெரியாது" என்று கூறுகின்றனர்.

உதாரணமாக திருச்சியிலிருந்து சென்னைக்கு எவ்வளவு கிலோமீட்டர் தூரம் என்று கேட்டால் ஒருவர் சரியாகத் தெரிந்தால் மட்டுமே கூறுவார் இல்லையெனில் "தெரியாது" என்று கூறிவிடுவார். ஆனால் நாமோ சுமாராக 300கி.மீ தூரம் இருக்கும் என்று கூறுவோம். ஆனால் ஜெர்மனியில் சுமார் என்ற வார்த்தையை பயன்படுத்துவதே இல்லை. தெரியாது என்று கூறிவிட்டு உடனே புத்தகத்திலோ, செல்போனிலோ, இணையதளத்திலோ சென்று தேடி ஆராய்ச்சி செய்து 292கி.மீ என்று துல்லியமாக கூறுவதுடன் அதை மனப்பாடம் செய்து கொண்டு இனிமேல் தேவைப்படும் பொழுது சரியான பதிலை கூறுவதற்கு பயன்படுத்திக் கொள்வர். ஒரு பொருளின் விலையைக் கேட்கும் பொழுது சுமாராக 500 ரூபாய் வருமென்று கூறமாட்டார்கள். அதே போல தவறான ஒரு பதிலை கூறிவிட்டால் அதற்காக ஏளனமாக சிரிக்கமாட்டார்கள். அவர்களைத் தவறென்றும் கூறமாட்டார்கள். "இந்தக் கேள்விக்கு இப்படி ஒரு பதிலை நீ ஏன் கூறினாய் ?" என்று திரும்ப கேள்வி கேட்பார்கள். இதன் மூலம் இந்த விசயத்தை இப்படிக் கூட யோசிக்க முடியுமா என்று யோசிப்பார்கள்.

உதாரணமாக "கோவையிலிருந்து சென்னைக்கு செல்ல எத்தனை கி.மீ?" என்று ஒருவரிடம் கேட்டால் அதற்கு 1500 கி.மீ என்று அவர் பதிலளித்தால் உடனே சிரித்து, அவரை அவமானப்படுத்தி "அவ்வளவு எல்லாம் வராது. நான் பத்து வருடமாக போயிட்டு வந்திட்டு இருக்கேன். 500கி.மீ வரும். ஏன் இப்படி சொல்லிட்டீங்க?" என்று அவரை கேலி செய்து அவமானப்படுத்த மாட்டார்கள். அதற்கு பதிலாக "ஏன் இப்படி சொன்னீர்கள்?" என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் தரும் விளக்கத்தை வைத்து "ஓ இந்த இடத்தில் இவ்வாறு தவறாக குறிப்பிட்டு இருக்கிறார்களா? இதனால் தவறாக புரிந்து கொண்டீர்களா?" என்பதைக் கேட்டு புரிந்து கொண்டு அதன் பின்னர் அவர்களுக்கு மரியாதையுடன் சரியான பதிலை கூறுகின்றனர். இது மிகவும் நல்ல விசயமாக இருக்கிறது.

ஆனால் நடைமுறை வாழ்வில் நாம் ஏன் ஒரு விசயத்தை தெரியாது என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் பழக்கம் இல்லாதவர்களாக இருக்கிறோம்? எனில் நம்மைப்பற்றி குறைவாக மதிப்பிட்டு விடுவார்களோ, நம்மை கேலிசெய்து அசிங்கப்படுத்தி பேசிவிடுவார்களோ என்று தயங்குகிறோம். இதை விடுத்து இன்று முதல் தெரியாத விசயத்தை "தெரியாது" என்று ஒப்புக்கொள்ள பழகுங்கள். இதனால் விரைவில் அறிவால் சிறந்த ஞானியாக நாம் நிச்சயம் மாறமுடியும்.

அன்பு நண்பர்களே ! வழக்கமாக ஆயிரம் பேர் அமர்ந்து என்னுடைய வகுப்பில் எட்டுமணிநேரம் எனது பேச்சை கவனிக்கின்றனர். இறுதியாக பலரும் கேள்வி பதில் நிகழ்ச்சியில் பல கேள்விகள் என்னிடம் கேட்பர். அதில் பதில் தெரியாத கேள்விக்கு "தெரியாது" என்று பகிரங்கமாக அந்த மேடையில் கூறுவதை நான் என்றுமே அவமானமாக கருதியதில்லை.

ஜெர்மனியில் யார் என்ன சொன்னாலும் அப்படியே நம்புவார்கள். ஏனென்றால் அனைவரும் புத்திசாலிகள், சரியாகத்தான் பேசுவார்கள் என்று நம்புவார்கள். ஆரம்பத்தில் நீங்கள் சொல்லும் பதிலையும் உண்மை என்று எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்துபார்ப்பார்கள். அவ்வாறு ஒன்றிரண்டு

முறைக்கு மேல் ஒரு விசயத்தைப் பற்றி தெரியாமல் நீங்கள் தவறுதலாக உளறிக் கொண்டிருந்தால் அதன் பின்னர் தான் நீங்கள் பேசுவதை இனிமேல் நம்பக் கூடாது என்ற முடிவுக்கு வருவார்கள். ஆனால் முதலிலேயே அப்படி முடிவெடுத்து விடமாட்டார்கள். ஏனென்றால் இங்குள்ள அனைவரும் புத்திசாலிகள் என்றும் சரியான விசயத்தை சரியாக மட்டுமே பேசுவார்கள் என்றும் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே நாமும் இந்த முறையைப் பின்பற்றினால் நமது அறிவு அதிகரித்து முன்னேற்றமான ஒரு வாழ்க்கையை பெறமுடியும்.

**நேரம் செலவிடும் முறை (TIME MANAGEMENT)**

ஜெர்மனியில் நேரத்தை செலவிடுவதை மிகவும் சிறப்பாக செய்கிறார்கள். எந்த நேரத்தில் என்ன செய்யவேண்டும் என்பதை தெளிவாக திட்டமிட்டு சரியாக செய்கிறார்கள்.

வெள்ளிக்கிழமை இரவு எட்டுமணிக்கு மேல் வியாபார, அலுவலக, சம்பந்தமான தொலைபேசி அழைப்புகளை அணைத்து வைத்துவிடுகிறார்கள். மீண்டும் திங்கட்கிழமை காலை எட்டு மணிக்குத்தான் செயல்பாட்டிற்கு கொண்டு வருகின்றனர். சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களை தனக்காகவும், தங்கள் குடும்பத்திற்காகவும் முழுமையாக செலவு செய்கின்றனர். இதை வீக்என்ட் (Weekend)



என்று அழைக்கின்றனர். இந்த நாட்களில் அவர்களின் சொந்த உபயோகத்திற்கான செல்போனை மட்டுமே பேசுவதற்கு வைத்திருப்பார்கள். அந்த எண் குடும்ப உறுப்பினர்களுக்கும், நண்பர்களுக்கும் மட்டுமே தெரிந்ததாக இருக்கும். எனவே சனி, ஞாயிறு தினங்களில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது இல்லை. கெட்டுகெதர் எனப்படும் ஒன்றாக சேர்ந்து சாப்பிடுவது, அரட்டை அடிப்பது போன்ற எந்த நிகழ்ச்சியையும் யாரும் ஏற்பாடு செய்வதில்லை. ஒருவேளை அப்படி யாராவது ஏற்பாடு செய்திருந்தால் மற்றவர்கள் யாரும் கலந்து கொள்ள வரமாட்டார்கள். ஏனென்றால் “நான் குடும்பத்துடன் செலவு செய்யும் அந்த நேரத்தில் உங்களை யார் அப்பொழுது நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய சொன்னார்கள்?” என கேட்பார்கள். திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் வெள்ளிகிழமை இரவு 8 மணிவரை அனைத்து வேலைகளையும் செய்கிறார்கள். அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார்கள். சனி, ஞாயிறு என இரு தினங்களை குடும்பத்திற்காக செலவு செய்கின்றனர். இவ்வாறு செய்வதால் குடும்பத்துடன் அவர்களுக்கு வாழும் நேரம் அதிகரிக்கிறது. ஆனால் பல நாடுகளில் பணம் சம்பாதிப்பதற்காக இரவு, பகல் என்று பார்க்காமல், விடுமுறை தினங்கள் என்று பார்க்காமல் எல்லா நேரங்களிலும் உழைத்து நிறைய பணம் சம்பாதித்துவிட்டு குடும்பம் குழந்தைகள் எனப்பார்க்காமல் அவர்களுடன் அன்னியோன்யமாக வாழாமல் இருப்பது வேடிக்கையாக இருக்கிறது. இதை நாம் சிந்திப்போமாக !

உலகில் பிரபலமாக உள்ள பல முதலாளிகளின் நிறுவனங்களும், பல சிறந்த தொழில்நுட்பங்களும் ஜெர்மனியை சேர்ந்தவையே. ஆனால் அங்கு வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே வேலை

செய்கிறார்கள். அதே சமயம் வாரத்தில் ஏழு நாட்களும் இரவு பகலாக வேலை செய்யும் பல நாட்டு நிறுவனங்களும் ஜெர்மன் நிறுவனத்திடம் அடிமைகளாக இருக்கின்றன.நமது மூளைக்கு ஓய்வு கொடுத்தால் தான் சிறப்பாக வேலை செய்யும். பல மணிநேரங்கள் தொடர்ந்து ஓய்வின்றி வேலை செய்வதை விட சரியான அளவில் ஓய்வெடுத்து வேலை செய்வதால் குறைந்த நேரத்தில் அதிக வேலையை செய்துவிடலாம் என்பது முதலாளிகளின் தத்துவம். இதுபுரிந்த மனிதர்கள், நாடுகள் மட்டுமே உலகில் முன்னேற்ற பாதையில் பயணிக்க முடியும்.

எந்த வேலையைச் செய்தாலும் ஒரு மணிநேரத்திற்கு மூன்று நிமிடம் ஓய்வு என்பதை இங்கு வழக்கத்தில் வைத்திருக்கின்றனர். ஒருமணிநேரம் காரை ஓட்டினால் எங்கவாது ஓரிடத்தில் காரை நிறுத்தி மூன்று நிமிடங்கள் ஓய்வு எடுத்துக் கொள்கிறார்கள். ஒருமணிநேர வேலைக்கு மூன்று நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்வதால் அடுத்த ஒருமணிநேரத்தை புத்துணர்ச்சியுடன் வேலை செய்வதற்கான சக்தி அந்த ஓய்வின் மூலம் கிடைக்கிறது. அன்பர்களே இந்த இடத்தில் ஒரு விசயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். ஒருமணிநேரம் வேலை செய்தால் மூன்று நிமிடம் ஓய்வு எனில் இரண்டு மணிநேரம் தொடர்ந்து வேலை செய்தால் எவ்வளவு ஓய்வு தேவைப்படும்? ஆறு நிமிடங்கள் என்று நாம் நினைப்போம். ஆனால் அது விடையல்ல. ஒன்பது நிமிடநேரம் ஓய்வு தேவைப்படும். அதாவது ஓய்வின்றி எவ்வளவு நேரம் அதிகமாக வேலை செய்கிறோமோ அதே போல ஓய்வின் நேரமும் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஒருமணிநேரம் வேலை செய்யும் பொழுது மூன்று நிமிடம் ஓய்வு என்றால் பத்துமணிநேரம் தொடர்ந்து வேலை செய்தால் 30 நிமிடம் ஓய்வு என்று நினைத்து விடாதீர்கள். மூன்று மணிநேர ஓய்வு தேவைப்படும். எனவே ஜெர்மனி யினரைப் போன்று நாமும் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொண்டு வேலை செய்யும் பொழுது நமது, உடல், மனம், புத்தி ஆகியன ஒருமணிநேர வேலையில் இழந்த சக்தியைப் பெற்றுவிடுகிறது. இதைத்தான் பல ஞானிகளும், பல குருநாதர்களும் "சும்மா இருத்தல்" என்று அழைக்கிறார்கள். சும்மா இருக்கும் நேரத்தில் உடல், மனம். புத்தி ஆகியன தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்வதுடன், புத்துணர்ச்சியுடன் இருக்கிறது. எனவே அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொண்டு வேலை செய்யும் பொழுது நிச்சயம் நமது உடல், மனம், புத்தி ஆகியன ஆரோக்கியமாக இருக்கும் என்பதை புரிந்து கொள்வோமாக!



நேரத்தை ஜெர்மனியினர் மிகவும் சிறப்பாக நிர்வாகம் செய்கின்றனர் என்பதற்கு மற்றொரு உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு நபர் சாலையில் "வாக்கிங்" போய்க்கொண்டு உள்ளார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது திடீரென நண்பர் ஒருவர் எதிரே வந்துவிட்டால் நாமாக இருந்தால் உடனே அந்த நபரை நலம் விசாரித்து சிறிது நேரம் பேசிவிட்டுப்பின்னர் அருகில் இருக்கும் கடைக்குச் சென்று டீ, வடை, போண்டா என சாப்பிட்டு பல மணிநேரம் அரட்டை அடித்தும் அவரை அனுப்பிவைப்போம் அல்லது அந்த நபரை வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்து இரண்டு, மூன்று மணிநேரம் நாம் செலவு செய்கிறோம். பொதுவாக இப்படிச் செய்வதை மரியாதை என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் உண்மையில் நமது நேரத்தை இது வீண் செய்யும் வேலை.

உதாரணமாக காலை வேளையில் வாக்கிங் சென்று வந்த பின்னர் குளித்து, புத்தகம் சிறிது வாசித்து காலை உணவை முடித்துக் கொண்டு புறப்பட்டு தங்களது அலுவலகம், வியாபார நிமித்தமாக அடுத்த பணியை தொடர வேண்டும் என்று ஒரு திட்டபடி ஏற்கனவே நாம் தயராகி கொண்டிருக்கும் நேரத்தில், இந்த திட்டத்தை ஒரே வினாடியில் ஒரு நபரின் சந்திப்பால் மாறிப் போய்விடுகிறது. இதனால் பல்வேறு வேலைகள் நிலுவையில் இருக்கும்படி ஆகிறது அல்லது செல்ல வேண்டிய இடத்திற்கு காலதாமதமாக செல்ல நேரிடுகிறது. ஆனால் ஜெர்மனியில் இதுபோன்று நடைபாதையில் ஒருவரை சந்தித்தால் அவர் வீடு பத்தடி தூரத்தில் இருந்தால் கூட "வீட்டிற்கு வாங்க" என்று அழைப்பது கிடையாது. அப்படியே அழைத்தாலும் அந்த அழைப்பை ஏற்று அவர்கள் செல்வதும் இல்லை. ஏனென்றால் அவரது வேலையை, அவரது நேரத்தை தான் வீணடிக்கக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். அவ்வாறு வீட்டிற்கு அழைக்கவில்லை என்றாலும் அதை மரியாதை குறைவாக யாருமே நினைப்பதுமில்லை. அந்த நேரத்தில் இரண்டு, மூன்று நிமிடங்கள் மட்டும் பேசிவிட்டு அவரது தொலைபேசி எண்ணைப் பெற்றுக்கொண்டு "தற்பொழுது நேரமில்லை பிறகு உங்களை அழைக்கிறேன் என்று கூறி அனுப்பி விடுகின்றனர். அதே போல சாவகாசமாக ஒரு சமயத்தில் முன்பு சந்தித்த நலம் விசாரித்த அந்த நபரின் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு ஓய்வாக நீங்கள் இருக்கும் நேரத்தில் என் நலம் விசாரித்துவிட்டு வீட்டிற்கு வாருங்கள். வரும் ஞாயிறு அன்று நான் வீட்டிலேயே இருப்பேன் என்று இதேபோல் எந்த ஒன்றானாலும் அனுமதி பெற்றுக் கொண்ட பின்னர் சந்தித்துக் கொள்கின்றனர். இது மிகவும் சிறப்பாக இருக்கிறது. இது தான் எனக்கும் பிடித்திருக்கிறது. அன்பர்களே ! இந்த உலகில் மிகப்பெரிய சாதனை செய்த ஒருவருக்கும் சாதாரணமான மனிதருக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம் நேரத்தைச் செலவிடுவது தான். யார் ஒருவர் 24 மணிநேரத்தை திட்டமிட்டு சரியாக பயன்படுத்துகிறார்களோ, அவர்களே வாழ்வில் வெற்றி பெற முடியும். நேரத்தை ஒழுங்குபடுத்த முடியாத ஒருவரை வாழ்க்கை அதன் போக்கில் இழுத்துச் செல்லும். நேரத்தை ஒழுங்குபடுத்தக் கூடிய ஒருவர் வாழ்க்கையை தன் போக்கில் இழுத்துச் செல்வார். இதுதான் இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்.

உதாரணமாக நான் திரு. திலீப் மற்றும் திருமதி. ஜெய ஸ்ரீ திலீப் அவர்களது வீட்டில் தங்கியிருந்த பொழுது அவர்கள் எனக்கு சிறப்பான முறையில் உணவு தயாரித்துக் கொடுத்து நன்கு என்னை உபசரித்து வந்தனர். அப்பொழுது ஜெர்மனியில் வசிக்கும் ஒரு நண்பர் எனது புத்தகத்தைப் படித்துவிட்டு மிகவும் சிறப்பாக இருக்கிறது என்று என்னை நேரில் சந்திக்க அனுமதி கேட்டார். நான் ஒரு தினத்தை குறிப்பிட்டு அன்று 11 மணியிலிருந்து 12 மணிவரை சந்திக்கலாம் என்று கூறியிருந்தேன். இங்கு ஒரு முக்கியமான விசயத்தை நீங்கள் கவனிக்கவேண்டும். பொதுவாக நாம் ஒருவரை சந்திக்க வேண்டுமெனில் 11 மணிக்கு வாருங்கள் என்று மட்டும் கூறிவிடுவோம். ஆனால் அவர்களுக்கு 11 மணிக்கு வந்தால் திரும்ப எத்தனை மணிக்கு செல்ல வேண்டும் என்பதையும் குறிப்பிட்டுக் கூறவேண்டும். அப்பொழுதுதான் சந்திக்க கூடிய இருவரது நேரத்தையும் திட்டமிட்டு சிறப்பாக செயல்பட முடியும் என்பதை புரிந்து



வைத்திருக்கிறார்கள். நான் 11 மணிக்கு அந்த நபரின் வருகைக்காக காத்திருந்தேன். அவரால் 11.30 மணிக்குத்தான் வந்து சேர முடிந்தது. அவரால் நான் இருந்த முகவரியை சரியாக கண்டுபிடிக்க முடியாததால் வந்து சேர 30 நிமிடம் காலதாமதமாகி விட்டிருந்தது. 11.30 மணிக்கு வந்த அந்த நபர் என்னுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது சரியாக 12 மணிக்கு கடிகார மணி அடிக்கும் பொழுது ஒரு வினாடிகள் கூட தாமதிக்காமல் உங்களை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி ! பை என்று கூறி விடைபெற்று கிளம்பிவிட்டார். நண்பர்களே ! நேரம் மிகவும் பொன்னை விட மேலானது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆனால் பல நாடுகளில் அடுத்தவர் நேரத்தை நாம் மரியாதை என்ற பெயரிலும், சம்பிரதாயம் என்ற பெயரிலும் தேவையில்லாமல் செலவு செய்கிறோம். நமது நேரத்தையும் வீணடித்து, மற்றவர்கள் நேரத்தையும் வீணடித்துக் கொண்டிருக்கிறோம். எனவே இனிமேல் நமது நேரத்தையும், மற்றவர்கள் நேரத்தையும் பொன்னாக கருதி திட்டமிட்டு செயல்பட்டால் அனைவரும் நிம்மதியாக வாழலாம்.

உதாரணமாக ஒரு வீட்டில் தந்தையார் ஒரு அறையில் அமர்ந்து கொண்டு டிவி பார்த்துக் கொண்டுள்ளார். மற்றொரு அறையில் அவரது மகன் சும்மா உட்கார்ந்திருக்கிறார். டிவியில் நல்ல நிகழ்ச்சியோ, படமோ ஓடிக் கொண்டுள்ள பொழுது “மகனே டிவியில் நல்ல நிகழ்ச்சி நடக்கிறது. இங்கு வந்து பார்” என்று அழைத்தால் அவர் வந்து ஒரு சில வினாடிகள் பார்த்துவிட்டு “டாடி எனக்கு இதைப் பார்க்க நேரமில்லை” என்று சொல்லிவிட்டு மீண்டும் தன் அறைக்குச் சென்று சும்மா உட்கார்ந்திருப்பார். ஏனென்றால் அரைமணிநேரம் சும்மா இருந்தால் அடுத்த வேலையைப் பார்க்கலாம் என்று அவர் திட்டமிட்டு இருக்கலாம். அவரது திட்டத்தை டிவியில் வரும் நிகழ்ச்சியைப் பார்த்து கெடுத்துவிடக்கூடாது என்று அவர் தெளிவாக இருக்கிறார். அதே சமயத்தில் அந்த டிவி நிகழ்ச்சியை மனதில் வைத்துக்கொண்டு தான் ஓய்வாக இருக்கும் வேறொரு சமயத்தில் யூடியூப்பில் பார்த்துக் கொள்ளலாம் என்று அவர் முடிவு செய்திருப்பார். நண்பர்களே! நேரத்தை ஒழுங்குபடுத்துவது என்பது மிகப்பெரிய ஒரு கலை. அதைக் கற்றுக் கொண்டால் மட்டுமே நமது வாழ்வில் மிகப்பெரிய சாதனைகளைச் செய்ய முடியும் என்பதைப் புரிந்து கொள்வோமாக !

**வாவ் “WOW” மருத்துவம்**

ஜெர்மனி மொழியில் படித்த மருத்துவர்கள் மற்றும் ஜெர்மன் மருத்துவத்தினைப் பற்றி பயிற்சி எடுத்துக் கொள்வதற்காக இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற பிற நாடுகளில் மருத்துவத்துறையில் ஈடுபட்டிருப்போர் அங்கு சென்று பார்த்து வரவேண்டும். குறைந்தபட்சம் 10 நாட்களாவது தங்கியிருந்து என்ன செய்கிறார்கள் என்று ஜெர்மன் மருத்துவத்தைப் பற்றி நேரடியாக அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். அப்பொழுது தான் மருத்துவதுறையில் தாங்கள் என்ன தவறுகள் செய்கிறோம் என்று மருத்துவர்களுக்கே தெரியும். அன்பு நண்பர்களே ! ஜெர்மனியில் உள்ள

அலோபதி மருத்துவர்கள் ஜெர்மன் மொழியில் அந்த மருத்துவத்தைப் படித்திருக்கிறார்கள். ஆனால் மற்ற நாடுகளில் ஆங்கிலத்தில் படித்திருக்கிறார்கள். ஆங்கில மொழியில் வைத்தியம் பற்றிப் படிப்பதற்கும், தாய்மொழியில் வைத்தியம் படிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஆங்கிலத்தில் அனைத்து வைத்தியர்களும் தவறாக சிகிச்சை அளிக்கின்றனர். தாய்மொழியில் படித்த அனைத்து வைத்தியர்களும் ஒழுங்காக சிகிச்சை அளிக்கின்றனர். ஆனால் ஆங்கிலத்தில் படித்த அனைத்து மருத்துவர்களும் மற்ற மொழியில் படித்த மருத்துவர்களின்



அறிவுடன் தங்களை ஒருபோதும் ஆராய்ந்து பார்க்காததால் அவர்கள் தாங்கள் தான் புத்திசாலி என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆம் நண்பர்களே !

அனாடமிக் செவிவழித்தொடு சிகிச்சை என்ற பெயரில் ஹீலர் பாஸ்கர் ஆகிய நான் கடந்த எட்டு ஆண்டுகளாக மருந்தில்லாமல் அனைத்து வியாதிகளையும் எப்படி குணப்படுத்தலாம் என்பதை பொது மக்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறேன். அதில் சளி வந்தால் சிந்த வேண்டும். மருந்து சாப்பிடக்கூடாது என்றும் அதே போல மூக்கு ஒழுகுதல், காய்ச்சல், வாந்தி, பேதி ஆகியன ஏற்படும் பொழுது மருந்து மாத்திரை எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் உடல் கழிவுகளை உடலே நீக்குகிறது என்பதால் இவையெல்லாம் நல்லது என்று நாம் கூறிவருகிறோம். இதையே தான் ஜெர்மன் நாட்டில் அம்மொழியில் பயின்ற அலோபதி மருத்துவர்களும் கூறி வருகின்றனர். வயிற்றுப்போக்கு எனப்படும் மலம் தொடர்ச்சியாக வெளியேறினால் நிறுத்த மருத்துவம், பார்க்க ஒருவர் சென்றால் ஜெர்மன் மொழியில் படித்த அலோபதி மருத்துவர் எனில் அதற்கு அவர் மருந்து கொடுக்க மாட்டார். “உடலில் உள்ள குப்பை வெளியேறுகிறது” என்று அறிவுரை கூறி சாதாரண சத்து மாத்திரைகளைக் கொடுத்து அந்த நபரை வீட்டிற்கு அனுப்பிவிடுவார். அதே போல காய்ச்சலுக்கும் ஊசி, மருந்து போடுவதில்லை. இதை ஜெர்மன் மக்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இந்தியா. மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து ஜெர்மன் வரும் மக்கள் ஏற்கனவே ஆங்கில வழியில் அலோபதி மருத்துவம் படித்த மருத்துவரின் ஆலோசனைப்படி வாழ்ந்து பழகியிருப்பதால் ஜெர்மன் நாட்டு மருத்துவர்களின் இந்த சரியான மருத்துவப் பின்பற்றுதலை புரிந்து கொள்ளாமல் அவர்களிடம் சண்டையிடுகின்றனர். எந்த டாக்டர் ஊசி போடவில்லையோ, எந்த டாக்டர் மருந்து, மாத்திரை தரவில்லையோ, அந்த டாக்டருக்கு ஒன்றுமே தெரியவில்லை என்றும் அவர்கள் நோயாளிகள் மீது அக்கரை காட்டவில்லை என்றும் நினைத்துக் கொண்டு அந்த மருத்துவர்களிடம் இந்த மக்கள் செல்வதில்லையாம். ஒரே நகைச்சுவையாக இருக்கிறது.

உதாரணமாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து சென்ற ஒரு நபர் ஜெர்மனியில் ஒரு மருத்துவரிடம் தனக்கு தொடர்ந்து பேதியாகிக் கொண்டிருக்கிறது என்று சிகிச்சைக்காக சென்றிருக்கிறார். அந்த

மருத்துவர் மருந்து ஊசி எதுவும் கொடுக்காமல் "வீட்டிற்கு சென்று நன்கு ஓய்வு எடுங்கள். சரியாகி விடும்" என்று கூறி அனுப்பி இருக்கிறார். பேதியாகியதில் அவர் உடல் இளைத்து ஒல்லியாகிவிட்டிருக்கிறார். மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதே மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வந்திருக்கிறார். இப்பொழுதும் அந்த மருத்துவர் உடல் தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ளும். எனவே ஊசி, மருந்துகள் எதுவும் தேவையில்லை என மருத்துவமனையில் ஓய்வெடுக்க வைத்திருக்கிறார். பயந்துபோன அவர் குடும்பத்தார் மருத்துவரிடம் மருந்துகள் கொடுத்து சிகிச்சையளிக்கும்படி சண்டைக்குச் சென்றும் கூட அவர் அமைதிகாக்க வேண்டுமென்று கூறி "மருந்துகளே இன்றி அவர் உடல் தன்னைத்தானே குணப்படுத்திக்கொள்ளும் என்பதை விளக்கமாக கூறி புரிய வைத்திருக்கிறார். அந்த நபர் தற்பொழுது ஆரோக்கியமாக நிம்மதியாக வாழ்கிறார். ஆனால் இதே போன்றில்லாமல் ஆங்கில வழியில் படித்த மருத்துவர்கள் இந்தியாவிலிருந்தும், பிற நாடுகளிலும் சென்று வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் ஜெர்மனியில் மேற்சொன்னவாறு உடல்கழிவு நீக்கும் வேலையைக் கூட புரிந்து கொள்ளாமல் சிகிச்சை பெற வருபவர்களுக்கு ஊசி, மருந்து மாத்திரைகளை கொடுத்து உடலுக்கு சிகிச்சை என்ற பெயரில் தீங்கு விளைவித்துக் கொண்டுள்ளனர்.

எனது அன்புள்ளம் கொண்ட, ஆங்கில மருத்துவம் பயின்ற அலோபதி மருத்துவ மேதைகளே ! உங்கள் மீது எனக்கு எவ்வித கோபமும் கிடையாது. நீங்களும் எமது குடும்பத்தில் ஒருவர் தான் எனவே நான் மருத்துவர்களை குறைசொல்லவில்லை. ஆங்கிலவழியில் உள்ள மருத்துவமுறையானது மருந்து, மாத்திரை கம்பெனிகளால் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்பதை ஆங்கில மருத்துவர்கள் புரிந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகள் நல மருத்துவர்கள் குழந்தைகளுக்கு சளி, காய்ச்சல் போன்ற தொந்தரவுகள் இருக்கும் பொழுது வாட்டர் பாட்டில்களில் உள்ள நீரைக் குடிக்க தரவேண்டாம் குழாய் தண்ணீரையே குடிக்க கொடுங்கள் என்று ஜெர்மனியில் வலியுறுத்துகின்றனர். குழாய் தண்ணீர் தான் உடல் நலத்திற்கு சிறந்தது என்பதை அவர்கள் புரிந்து வைத்திருக்கின்றனர். மேலும் அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கும் தண்ணீரை மீன்தொட்டி வழியாக மெதுவாக செல்லுமாறு அமைத்திருக்கின்றனர். இதன் காரணம் என்னவெனில் தண்ணீர் தொட்டி வழியே வரும்பொழுது மீன் உயிருடன் இருந்தால் அது நல்ல தண்ணீர் நல்லது எனவும், மீன் இறந்துவிட்டால் அந்த தண்ணீரில் மனிதர்களுக்கு கேடு செய்யும் பொருட்கள் எவையோ, இருக்கின்றன என்று புரிந்து கொண்டு உடனே அதை சரிசெய்கிறார்கள். இது தவிர தண்ணீரில் உள்ள கெட்ட பொருட்களை மீன்கள் சாப்பிட்டுவிடும் என்பதற்காகவும் இந்த முறையை கையாள்கின்றனர்.

ஜெர்மன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் வருடத்தில் பருவத்தில் மூன்று மாதத்திற்குத்தான் சூரிய வெளிச்சம் அதிகம் இருக்கும். மற்ற மாதங்களில் பனிப்பொழிவும், குளிர்ச்சியும் தான் அதிகமிருக்கும். எனவே சூரிய வெளிச்சம் உள்ள காலங்களில் குறைந்த அளவு ஆடை அணிந்து கொண்டு கடற்கரையில் படுத்து சன்பாத் எனப்படும் சூரிய குளியலை எடுத்துக் கொள்கிறார்கள். இந்த மூன்று மாத

காலத்தில் சூரிய ஒளி எவ்வளவு உடலில் படுகிறதோ அந்த அளவிற்கு மீதம் உள்ள 9 மாதங்களுக்கு தேவையான உடல் ஆரோக்கியத்திற்கு அது உதவும் என்பதை பொதுமக்கள் நன்கு புரிந்து வைத்துக்கொண்டு செயல்படுத்துகின்றனர். மருத்துவர்களும் இதற்கு ஆலோசனை கூறுகின்றனர். இந்த சமயத்தில் குறைந்த ஆடை அணிந்திருப்பதால் தம் உடல் மற்றவர்கள் பார்க்குமாறு உள்ளதே என்று யாரும் கூச்சப்படுவதில்லை. அவ்வாறு கூச்சப்பட்டால் அந்த நாட்டில் யாரும் ஆரோக்கியமாக வாழமுடியாது. ஆனால் பிற நாடுகளில் இருந்து அங்கு சென்று வசிக்கும் நபர்கள் உடலை மற்றவர்கள் பார்த்துவிடுவார்கள் என்ற கூச்சத்தாலும், சூரிய குளியலின் அருமை தெரியாததாலும் அதை செய்யாமல் தைராய்டு, தோல்வியாதிகள் போன்றவற்றால் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே சூரியன் வருடம் முழுவதும் உள்ள நமது நாடுகளில் மாதம் ஒருமுறையாவது எண்ணெய் குளியலை எடுத்துக்கொண்டு நாம் ஆரோக்கியமாக வாழ்வோமாக !

நண்பர்களே!

பல நாடுகளில் பாதி வளங்கள் மட்டுமே இருக்கின்றன. இந்தியா, இலங்கை, மியான்மர், மலேசியா போன்ற நாடுகளில் வளங்கள் நிறையவே இருக்கின்றன. ஆனால் நமக்கு அருமை தெரியவில்லை. எனவே நாம் இதைப் புரிந்து கொண்டு நமது நாட்டில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்கவும், பயன்படுத்தவும் செய்வோமாக ! இதனுடன் ஆங்கில வழியில் மருத்துவம் கற்றவர்களின் மருத்துவ சிகிச்சையை புறக்கணித்து விட்டு தாய்மொழியில் மருத்துவம் கற்றவர்களை மட்டுமே அணுகி நாம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வோமாக.

முடிவுரை

இந்தக் கட்டுரையில் ஜெர்மனியில் உள்ள கல்விமுறை மற்றும் மருத்துவம் பற்றி முழுவதுமாக ஆராய்ச்சி செய்து சொல்லவில்லை. மிகவும் குறைந்த விசயங்களையே இங்கு நாம் சிந்தித்து அறிந்துள்ளோம். இதுகுறித்து மேலும் பல தகவல்களை அறிந்தவர்கள் நமக்குத் தெரியப்படுத்தலாம். மேலும் இக்கட்டுரையின் நோக்கம் ஜெர்மனியின் பெருமையை பேசுவதல்ல என்பதை குறிப்பிட்ட விரும்புகிறேன். இந்திய நாட்டில் ஏற்கனவே இருந்த குருகுல கல்விமுறையை மீண்டும் நாம் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் இதை இங்கு பதிவு செய்கின்றேன்.

ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுதுள்ள கல்விமுறையும், மருத்துவமும், ஏற்கனவே நம் நாட்டில் இருந்தது தான். அதை இஸ்ரேல் நாட்டிலுள்ள சீக்ரெட் சொசைட்டியினர் எனப்படும் இலுமினாட்டிகள் தான் கெடுத்து வைத்துள்ளனர். நம் நாட்டில் மட்டுமன்றி பிறநாடுகளிலும் இந்த இலுமினாட்டிகளால் பாரம்பரிய மருத்துவமும், கல்வியும் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் வருகிறது. ஆனால் நாம் ஜாதி, மதம், இனம் நாடு ஆகியவற்றால் பிரிந்து கிடப்பதால் நம்மால் அதை ஒழுங்கு செய்யமுடியவில்லை. இந்து, முஸ்லீம், கிறிஸ்து என்று பிரிவினை பாராட்டாமல் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நம் அனைவருக்கும் ஒரே எதிரியான 13 குடும்பத்தைச் சேர்ந்த இலுமினாட்டிகளின் வியாபார தந்திரத்தை முறியடிப்பதற்காக நாம் கல்வியை ஒழுங்குபடுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே இனிமேல் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் கூட்டுப்பிரார்த்தனை செய்து இந்த




உலகத்தினை ஒழுங்குப்படுத்த ஒவ்வொரு நாளும் முயற்சி செய்வோமாக! இதைத்தான் ஜெர்மனியினர் குளுபன் விவேகன் பெர்ஜ் (Glauben bewegen Berge). என்று அழைக்கிறார்கள். இதன் பொருள் : Faith moves Mountain.

இதைத்தான் முஸ்லீம்கள் இன்னாமல் அஹ்மல் நியாஹ் எண்ணத்தை பொறுத்தே உங்களுக்கு கூலி என்று அழைக்கின்றனர். எனவே நாம் இந்த வினாடி முதல் என்ணங்களை ஒழுங்குபடுத்தி, ஒற்றுமையாக வாழ்ந்து, கூட்டுப் பிரார்த்தனை செய்து, அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து ஆரோக்கியமாக நிம்மதியாக வாழ்வதற்கான பணிகளை செய்வோமாக.

நன்றியுரை

ஜெர்மன் மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு என்னை அழைத்துச் சென்று தங்குமிடம், உணவு, போக்குவரத்திற்கான செலவுகள் ஆகியன ஏற்றுக் கொண்டு செய்து கொடுத்த திரு. திலீப்குமார் மற்றும் திருமதி. ஜெய ஸ்ரீ தம்பதியர்க்கு மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு உள்ளேன். இந்த தம்பதியர் ஜெர்மனியில் குயிங்ஸ் என்ற ஊரில் வசித்து வருகின்றனர்.

ஜெர்மனியின் கல்வி தொடர்பான உங்களது சந்தேகங்களை திரு. திலீப்குமார் அவர்களிடம் கேட்டு தெளிவுப்படுத்திக் கொள்ளலாம். அவரது இமெயில் முகவரியை உங்களுக்குதருகிறேன். அதன் மூலம் இவரிடம் தொடர்புகொண்டு விளக்கங்கள் பெற்றுக்கொள்ளுமாறு உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

திரு. திலீப்குமார், dilip@eurotextiles.de

மேலும் பிரான்ஸ் நாட்டில் எனது பயணத்திற்கு உதவிசெய்த திரு. மதி, திரு. குரு, திரு. மகாதேவன் மற்றும் மரி ஆகியோருக்கும் பல்வேறு நல்ல உள்ளங்களுக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒழுங்குப்படுத்துவோம் கல்வியை!
ஒன்றுபடுத்துவோம் உலகத்தை !!
செழிக்கட்டும் விவசாயம் !
சீர்படட்டும் நிர்வாகம் !!
உலக மக்கள் முகங்களில்
நிலவட்டும் புன்சிரிப்பு !
வளர்க ஆன்மீகம் ! வாழ்க வாழ்வாங்கு !!
சந்தோசம்



## பானு வீட்டுக்கல்வி முறை

எப்போது பள்ளிக்கு விடுமுறை என அறிவித்தால் குழந்தைகள் மனம் வருந்துகிறார்களோ, பள்ளி வேண்டும் என அடம்பிடிக்கிறார்களோ, அப்போதுதான் உண்மையான கல்விநடக்கிறது என்று அர்த்தம் !

**- ஹீலர் பாஸ்கர்**



# கரு உருவாவதற்கு முன்பு என்ன செய்யவேண்டும்?

ஹீலர் பாஸ்கர் ஆகிய நான் நடத்தும் ஐந்து நாள் பயிற்சி வகுப்பிற்கு நேரடியாக வந்து கலந்து கொள்ளவேண்டும். கணவனும், மனைவியும் சேர்ந்து வந்து கலந்துகொள்வது சிறப்பு. இந்த பயிற்சி வகுப்பு கோவை, சென்னை, சிங்கப்பூர், மலேசியா, குவைத் போன்ற பல்வேறு இடங்களில் ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வருகிறது.

மேலும் விபரங்களுக்கு 8870666966 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்.

நேரில் வர முடியாதவர்கள் ஐந்து நாள் பயிற்சி வகுப்பின் வீடியோவினை நமது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொண்டு வீட்டிலேயே அதைப் பார்க்கலாம். அல்லது 5 நாள் பயிற்சி வகுப்பின் ஆடியோவினை முழுவதுமாகக் கேட்டுப் பின்பற்றலாம். அல்லது www.anatomictherapy.org என்ற இணையதளத்தின் யூடியூப்பின் உள்ள வீடியோக்களை வரிசையாகப் பார்த்தும் பயன்பெறுங்கள். அல்லது onestoneninemango@gmail.com என்ற எனது மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு வேண்டுகோளை மின்னஞ்சல் செய்தால் என்னிடம் உள்ள பயிற்சி வகுப்பு தொடர்பான வீடியோ, ஆடியோ அனைத்தும் உங்கள் மின்னஞ்சலுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

விபாசனா எனும் 10 நாள் தியான வகுப்பிற்கு ஒருமுறையேனும் சென்று வருவது சிறப்பு. இது தொடர்பான எனது வீடியோ, விபாசனா எனும் யூடியூப் தளத்தில் விரிவாக அறியலாம். அத்துடன் இப்பயிற்சியில் கலந்து கொள்வதற்கு www.dhamma.org என்ற இணையதளத்தினுள் சென்று உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள்.

10 நாள் விபாசனா தியான மையத்திற்கு சென்று கலந்து கொள்ள நேரம் ஒதுக்க இயலாதவர்கள் நான் நடத்தும் யோகவிபாசனா எனும் 3 நாள் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாம். இது ஒவ்வொரு மாதமும் கோவையில் நடக்கிறது. மேலும் விபரங்களுக்கு +91 88706 66966. என்ற எண்ணை தொடர்பு கொள்ளுங்கள்.

பாகம் 5



# மசக்கை

கர்ப்பகாலத்தில் பெண்கள் என்ன செய்யவேண்டும்? என்ன செய்யக்கூடாது? என்பதை பின்வருமாறு உள்ள பட்டியலின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1. “பெண்களே உங்களுக்காக” எனும் நூலை (டாக்டர் பஸ்லூர் ரஹ்மான் அவர்கள் எழுதியது) முழுவதுமாக படித்துப் புரிந்து கொள்ளவேண்டும்.

2. “இறைவழியில் இனிய சுகப்பிரசவம்” எனும் டாக்டர் பஸ்லூர் ரஹ்மான் அவர்கள் எழுதிய புத்தகத்தை முழுவதுமாகப் படிக்கவேண்டும்.

3. மசக்கை பாகம் 1 மற்றும் மசக்கை பாகம் 2 எனும் தலைப்புகளில் அமைதியும் ஆரோக்கியமும் இதழில் வெளியான இரண்டு கட்டுரைகளைப் பெற்றுக் கொண்டு அதைப் படித்தறிய வேண்டும். (இங்கு பின்வரும் பகுதிகளில் இணைக்கப்பட்டுள்ளது.)

4. கர்ப்பகாலத்தில் செய்யவேண்டிய உடற்பயிற்சிகளைப் பற்றிய வீடியோ ஒன்றினை வீடியோ, டிவிடி மற்றும் யூ டியூப்பிலும் விரைவில் வெளியிட உள்ளோம். அதைப் பார்த்து பயிற்சி செய்து வரவும்.

5 சுகப்பிரசவம் ஏற்படுவதற்கு திருமதி. மணிமொழி அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு பயன்பெறலாம். அவர்களின் தொலைபேசி எண். +91 9600779081.

6. சுகப்பிரசவம் தொடர்பான சந்தேகங்களைக் கேட்டுக் தெளிவுப்படுத்திக் கொள்ள திருமதி. கோமதி அவர்களை +91 8883332768 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

7. சுகப்பிரசவம் சம்பந்தமாகவும், கர்ப்பகாலத்தில் செய்ய வேண்டியவை குறித்த அறிவுரைகளையும் பெற திருமதி. சாய்தேவி அவர்களை 9790602414 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



**கர்ப்ப காலத்தில் செய்யக் கூடாதவை**

கர்ப்பகாலத்தில் ஆங்கில மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை மற்றும் சிகிச்சை பெறுதல் கூடாது.

தடுப்பூசிகள் மற்றும் இரும்புச்சத்து, கால்சியம் சத்துபோன்ற எந்த ஒன்றையும் கர்ப்பகாலத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

பிரசவ சமயத்திலும் மருத்துவ மனைக்குச் செல்லாமல் வீட்டிலேயே சுகப்பிரசவம் செய்து கொள்ள வேண்டும்.

ஐந்து நாள் பயிற்சி வகுப்பில் ஏற்கனவே நீங்கள் கலந்து கொண்டவராக இருப்பின் இதைப் பற்றிய தெளிவான விளக்கம் உங்களுக்கு முன்பே கொடுக்கப் பட்டு இருப்பதை அறிவீர்கள்.

இந்தக் கட்டுரையில், மசக்கை நேரத்தில் வரும் பல கேள்விகளுக்கு பதில் கிடைக்கும்.

1. சுகப்பிரசவத்துக்கும், பூப்பெய்தும் சமயத்திலும் செய்ய வேண்டியவைகள் என்ன?
2. மாதத் தீட்டு வெளிவராவிட்டால் என்ன செய்ய வேண்டும்?
3. வாந்தி, குமட்டல், தலை சுத்தல் என்ன செய்ய வேண்டும் ?
4. இரும்பு சத்து அதிகரிக்க என்ன செய்ய வேண்டும் ?
5. உதிரப் போக்கு சரி செய்யவது எப்படி?
6. முடி கொட்டாமலிருக்க என்ன செய்ய வேண்டும் ?
7. அழகான குழந்தை பெற என்ன செய்யவேண்டும்.
8. போலிக் அமிலம் அதிகரிக்க என்ன செய்ய வேண்டும் ?
9. சுண்ணாம்பு சத்து அதிகரிக்க என்ன செய்யவேண்டும்.
10.தாய்ப்பால் சுரக்க என்ன செய்ய வேண்டும் ?
11. பெண்கள் இடுப்பு எலும்பு உறுதி பெற என்ன செய்ய வேண்டும் ?
12. பால் சுரப்பை தடுக்க என்ன செய்ய வேண்டும் ?
13. சுகப்பிரசவ டிப்ஸ்.
14. இயற்கை லட்டு.
15. காரட் அல்வா
16. மசக்கை டீ & காபி.
17. பீட்ரூட் ஊறுகாய்.
18. வாழைப்பழ சிப்ஸ்.
19. நெல்லிக்காய் சிப்ஸ்.
20. கேழ்வரகு.

**சுகப்பிரசவத்திற்கு தேவையான உணவுகள்**

சுகப்பிரசவத்தின் போதும் பூப்பெய்தும் சமயம் செய்ய வேண்டியவை.

பதட்டத்துடன் இருக்கும். குளிக்க வைத்து தனி அறையில் உட்கார வைத்தப்பின் அன்பாக ஒவ்வொரு மாதமும் இந்த நிகழ்வு இருக்கும் என்று அந்த பெண்ணுக்கு சொல்லி தர வேண்டும். பயம் தேவையில்லை இயல்பான ஒரு வியம் ஒவ்வொரு முறையும் டிஸ்சார்ஜ் ஆகும் போது சுத்தமாகப் பராமரித்து ஓய்வு எடுக்க சொல்லி தர வேண்டும்.

தொடர்ந்து 10 நாட்கள் முழு ஓய்வில் இருக்கவேண்டும். காரட், பீட்ரூட், மனத் தக்காளி கீரை. இட்லி இடியாப்பம் பால் தர வேண்டும்.

3வது நாளிலிருந்து காலையில் நாட்டு கோழி முட்டை, நல்லெண்ணெயில் பொரியல் செய்து சாப்பிடச் செய்யவும்.

தினமும் காலை உணவாக வெந்தய இட்லி, தோசை, காரரிசி புட்டு தரவேண்டும்.

பகல் முழுவதும் இடை இடையே உளுந்தில் செய்த பலகாரங்கள் மாதுளை, ஆப்பிள் உலர்ந்த பழங்கள், ஆகியன உண்ணக் கொடுக்க வேண்டும். வெல்லம் தர கூடாது. கருப்பட்டி தரலாம்.

10 நாட்கள் முழு ஓய்வில் இருந்து பகலில் மோர் இளநீர் குடிக்கவேண்டும்.

இரவில் கட்டாயம் பசும்பால் சாப்பிட வேண்டும். இந்த 10 நாட்களும் உறவினர்கள் அந்த பெண்ணை மகிழ்ச்சியாக வைத்திருக்கவேண்டும்.

இதையெல்லாம் பின்பற்றும் போது ஒரு பெண்ணுக்கு சுகப்பிரசவம் தான் ஆகும்.

பூப்பெய்திய மூன்றாவது நாளில் எண்ணெய் தேய்ப்பு குளியல் வேண்டும்.

மாதத் தீட்டு வெளிவராவிட்டால் வேலிப்பருத்தி இலையை இடித்து அதன் சாற்றில் தேக்கரண்டி அளவு கொடுக்கவும். மூன்று நாட்கள் காலையில் மட்டும் அருந்துவது போதுமானது. பத்தியம் : புளி கூடாது. எள்ளினை உணவில் சேர்த்து வர முறையான மாதவிடாய் சுழற்சி ஏற்படும்.

பெண் குழந்தை பூப்பு அடைய உத்தாமணி என்கிற வேலிப்பருத்தியின் இலை 7 எண்ணிக்கை, மிளகு 11 எண்ணிக்கை கூட்டி அரைத்து காலை பொழுதில் மட்டும் சாப்பிடச் செய்யவும். 5 வேளை மருந்து போதுமானது. பத்தியம் புளி, மீன், புகையிலை இதை கொடுத்து பூப்பு அடையாவிட்டால் 15 நாள் கழித்து மறுபடியும் 5 வேளை கொடுக்கவும்.

வாந்தி, குமட்டல், தலைசுத்தல் மசக்கை சமயத்தில் வாந்தி, குமட்டல், தலை சுத்தல் இருக்கும். நம் பாட்டி காலத்திலிருந்தே இஞ்சியை பயன்படுத்தி வருகிறோம்.

சாப்பிட்ட உடன் அரைமணிநேரம் கழித்து வெதுவெதுப்பான இஞ்சி தண்ணீர் குடித்தால் குமட்டலை கட்டுப்படுத்தும்.

வாந்தி குறைய அரி நெல்லிச்சாறு, எலுமிச்சை சாறு சாத்துக்குடிச் சாறு கொடுக்கலாம். மல்லி துவையல் இரண்டு, மூன்று முறை சாப்பிட வேண்டும்.

மசக்கை காலங்களில் முளைகட்டிய சிறிது மிளகு தூள் சேர்த்து சாப்பிட வேண்டும்.



இந்த (மசக்கை) சமயத்தில் மண், சாம்பல், அரிசி, சுண்ணாம்பு, தேடி தேடி சாப்பிட தோன்றும். இதற்கு காரணம். உடலில் சுண்ணாம்பு சத்து இரும்பு சத்தும் குறைந்து உள்ளது ஆகும்.

தினமும் நான்கு பேரிச்சம்பழம் ஒரு நெல்லிக்கனி சாப்பிட வேண்டும்.

கர்ப்ப காலத்தில் களைப்பு, சோர்வு, மயக்கம், தலைசுற்றல் வரும் சமயம் ஓய்வு உறக்கம் தான் தேவை.

தினமும் ஒரு கப் வெள்ளரி, தக்காளி, மாதுளை, காரட், பேரீச்சை, உலர்திராட்சை, தர்பூசணி வாழைப்பழம் கலந்த பழக்கலவையோ, பழச்சாறோ, காய்கறி கலவையோ சாப்பிட வேண்டும். வாந்தி அதிகமாக எடுத்து நெஞ்சு எரிச்சல் இருந்தால் வெண்பூசணி பச்சடி சாப்பிடவேண்டும்.

இரும்புச்சத்து அதிகரிக்க மசக்கை காலங்களில் முளைகட்டிய தானியங்களோடு சிறிது மிளகு சேர்த்து சாப்பிட பழகிக்கொள்ள வேண்டும்.

**கர்ப்பிணி பெண்களுக்கு இரும்பு சத்து நிறைந்த பேரீட்சை கீர்**

| | |
|---|---|
| பேரீட்சை | - 200 கிராம் |
| முந்திரி | - 50 கிராம் |
| தேங்காய் துருவல் | - 2 மூடிகள் |
| ஏலக்காய் - | - 4 |

செய்யும் முறை

பேரீட்சை பழங்களை ஊறவைத்து கொட்டை நீக்கி மிக்ஸியில் அரைத்து தேங்காய்ப் பால் எடுத்து தேவையான நீர் கலந்து ஏலத்தூள் கலந்து பேரீட்சை சாறு கலந்தால் பேரீட்சை கீர் ரெடி.

**உதிரப்போக்கு சரிசெய்ய**

கர்ப்ப காலத்தில் சில பெண்களுக்கு உதிர போக்கு இருக்கும். அது இந்த உணவு மூலம் சரியாகும். கர்ப்ப காலத்தில் கால்சியம் அதிகமாக தேவைப்படுகிறது. முளைக்கட்டிய தானியம் கம்பு, பாசிபயறு மிக்சியில் அடித்து பாலாக எடுத்து சிறிது கருப்பட்டி சாறு கலந்து குடிக்கலாம்.

கர்ப்ப காலத்தில் முடி கொட்டாமல் இருக்க இயற்கை தரும் கருவேப்பிலை கீர் ஒரு கைப்பிடி கருவேப்பிலை, ஒரு கைப்பிடி தேங்காய் பூ, நாட்டுச்சர்க்கரை தேவையான அளவு ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி அரைத்து வடிகட்டி குடிக்க வேண்டும்.

**அழகான குழந்தைப் பெற ரோஜாப்பூ குல்கந்து**

| | |
|---|---|
| ரோஜாப்பூ | - (லைட் ரோஸ்) |
| இதழ்கள் | - 1/4 கிலோ |
| தேன் | - 1/4 கிலோ |
| வெண்பூசணி | - 1/4 கிலோ |
| பனங்கற்கண்டு | - 125 கிராம் |

செய்யும் முறை



ரோஜாப்பூ இதழ்களை சுத்தம் செய்து பனங்கற் கண்டை தூள் செய்து தேனில் போட்டு அதன் மேலே மெல்லிய பருத்தி துணியால் மூடி ஒருவாரம் வெயிலில் புடம் போட்டு பத்திரப்படுத்தலாம் அல்லது ரோஜாப்பூ இதழ்களை காய வைத்து தேனுடன் சேர்க்கலாம். சிறிதாக வெட்டிய வெண் பூசணியையும் உடன் சேர்க்கலாம்.

ஒரு வேளைக்கு ஒரு டீஸ்பூன் சேர்க்கலாம். இரத்தசோகை விலகும். சளி இருமல் விலகும். பெண்ணின் கர்ப்பபை கோளாறு வெள்ளைப்படுதல், வயிற்றுவலி சூடு குறையும். போலிக் அமிலம் அதிகரிக்கிறது. வேர்வைத் துர்நாற்றம் விலகும். ரோஜாப்பூ போல குழந்தை அழகு பெறும்.

**போலிக் அமிலம் நிறைந்துள்ள காய்கறிகள்.**

கத்தரிக்காய், கொத்தவரங்காய் புடலங்காய், புதினா, கருவேப்பிலை கோவைக்காய், வெள்ளரிக்காய் வாழைக்காய், பீன்ஸ் வைட்டமின் டி சூரிய ஒளி மூலம் கிடைக்கிறது. காலை, மாலை சிறிது நேரம் சூரிய ஒளியில் கர்ப்பிணி பெண்கள் நிற்க வேண்டும்.

**சுண்ணாம்பு சத்து நிறைந்த கேழ்வரகு அல்வா**

| | |
|---|---|
| கேழ்வரகு மாவு | 1 கப் |
| வெல்லம் | 2 கப் |
| நெய் | தேவையான அளவு (100மிலி) |
| உப்பு | 1 கரண்டி |
| ஏலக்காய் தூள் | 1 கரண்டி |
| சுக்குத் தூள் | 1 கரண்டி |
| முந்திரி | 1 கரண்டி |
| உலர் திராட்சை | 1 கரண்டி |

செய்யும் முறை

1. வெல்லத்துடன் அரை கப் நீர் சேர்த்து கேழ்வரகு மாவை கட்டியில்லாமல் கரைத்து கொண்டு சிறு தீயில் நெய்யை சூடாக்கி கேழ்வரகு மாவுக் கலவையை சேர்த்து நன்கு கலக்கவும்.

2. கேழ்வரகு மாவு கலவை சட்டியில் ஒட்டாமல் வரும் வரை சிறிது சிறிதாக நெய்யை சேர்த்து கைவிடாமல் கிளறவும்.

3. நெய்யில் வறுத்த திராட்சை முந்திரி, ஏலக்காய் தூள், சுக்குத்தூள் சேர்த்து சாப்பிடவேண்டும்.

**கர்ப்ப காலத்தில் ஹீமோகுளோபின் அதிகரிக்க**

வெண்பூசணி, ரோஜா குல்கந்து, காரட் அல்வா, பீட்ரூட் அல்வா, காரட் ஆப்பிள், தேன், நெல்லி, வெண் பூசணி, அத்தி பேரீட்சை, ஜாம், குழந்தையின் நிறம் அதிகரிக்க ரோஜா இதழ், கற்கண்டு, தேன், பேரீட்சை, அத்தி, உலர் திராட்சை ஆகியவற்றை உரலில் போட்டு இடித்து ரோஜா குல்கந்து குங்குமப்பூ சேர்க்கலாம். தினமும் ஓரிரு டீஸ்பூன் அளவு போதும் சுகப்பிரசவத்திற்கு உதவுவதுடன் பிறக்கும் குழந்தையின் ஹீமோகுளோபின் அதிகரித்து நல்ல நிறம் கிட்டும்.

உடல் சூடு, இரத்தக் குறைவு கால்சியம், இரும்புச்சத்து சீராக்கும் உணவுகள் ஆகும்.

**தாய்ப்பாலை சுரக்க வைக்கும் சுரைக்காய் பசுங்கலவை பொறியல்**

தேவையான பொருட்கள்

1. சுரைக்காய்
2. தேங்காய்
3. கொத்தமல்லித் தழை
4. உப்பு
5. கருவேப்பிலை

செய்யும் முறை

1. சுரைக்காயை கழுவி தோல் நீக்கி பொடியாக நறுக்கவேண்டும்.

2. தேங்காயைத் துருவிக் கொள்ளவும், மல்லித்தழை கருவேப்பிலை பொடியாக நறுக்கி கொள்ள வேண்டும்.

3. சுரைக்காய், தேங்காய் துருவல் கொத்தமல்லி, கருவேப்பிலை, உப்பு சேர்த்து கலந்தால் பொரியல் ரெடி. அருகம்புல் தாய்ப்பால் குறைவாக உள்ளவர்களுக்கு அதிகமாகவும், தாய்ப்பால் இல்லாத தாய்மார்களுக்கு தாய்ப்பால் சுரக்கவும் உதவுகிறது.

**பார்லி அரிசி**

கர்ப்பிணிப் பெண்களின் கை மற்றும் கால்கள் வீக்கமாக இருக்கும். பார்லி கஞ்சி குடித்தால் வீக்கம் குறையும்.

**பால் சுரக்க**

கீழாநெல்லி வேரை அரைத்து பசும் பாலில் கலந்து குடிக்க பால் சுரக்கும்.

**பெண்கள் இடுப்பு எலும்பு உறுதி பெற...**

1. பிரண்டை, 2. மாதுளை, 3. கொள்ளு 4. எள்ளு, 5. திணை, 6.ராகி, 7. கம்பு 8. பாசிப்பயிறு, 9.கறிவேப்பிலை ஆகியவற்றை அதிகம் சேர்க்கவும்.

**பால் சுரப்பை தடுக்க**

வாழைப் பிஞ்சை அரைத்து முலையில் பற்றுப்போட பால் சுரப்பது நிற்கும். மல்லிகைப் பூவை நிறைய வைத்துக் கட்டினால் பால் சுரப்பது நின்றுவிடும். பிள்ளை பெற்ற நஞ்சு விழ எள் இலையைக் கொண்டு வந்து தண்ணீரில் கையால் பிசைந்து வடிகட்டிக் குடிக்க நஞ்சு விழும்.

**சுகப்பிரசவம்**

கர்ப்பிணிப் பெண்கள் வலி இல்லாமல் சுகமாகப் பிரசவிக்க வேண்டு

மானல் கர்ப்பம் தரித்த 5வது மாதத்திலிருந்து பிரசவம் வரை தினமும் காலையிலும், மாலையிலும் ஒவ்வொரு எலுமிச்சம் பழரசத்தைத் தண்ணீர் விட்டு தேன் கலந்து குடித்துக்கொண்டு இருக்கவேண்டும்.

இலுப்பை மரவேர் எலுமிச்சை மரவேர் இரண்டையும் சமபங்கு எடுத்துக் கொண்டு உலர வைத்துப் பொடி செய்து ஒரு கரண்டிப் பொடியில் ஒரு கரண்டி தேன் விட்டுக் கலந்து கர்ப்பிணிப் பெண்கள் உண்டு வந்தால் சுகப்பிரசவம் ஏற்படும்.

**கர்ப்ப காலத்தில் சமைக்கப்படாமல் செய்யப்பட்ட இயற்கை லட்டு கொடுக்கலாம்.**

| | |
|---|---|
| முந்திரி பருப்பு | - 50 கிராம் |
| பாதாம் பருப்பு | - 50 கிராம் |
| வெள்ளரி விதை | - 100 கிராம் |
| பேரீச்சை | - 50 கிராம் |
| உலர் திராட்சை | - 10 கிராம் |
| பிஸ்தா | - 10 கிராம் |
| ஏலக்காய் | - 2 |
| தேங்காய் துருவல் | - அரை மூடி |

பேரீச்சை கொட்டை நீக்கி சுத்தப் படுத்தி அனைத்தும் சேர்த்து உரலில் (அ) மிக்ஸியில் அரைக்கலாம். பின்னர் சின்ன சின்ன உருண்டை பிடிக்க வேண்டும்.

**காரட் அல்வா**

காரட், தேங்காய், பேரீட்சை, அத்தி, உலர்திராட்சை, வெல்லம், முந்திரி கலந்து செய்யலாம். காரட்டிற்கு பதில் பீட்ரூட் அல்வா, வெண்பூசணி அல்வா அடிக்கடி செய்து சாப்பிடலாம்.

**கர்ப்ப காலத்தில் டீ காபிக்கு பதில்**

செம்பருத்தி பூ, தாமரைப்பூ, ஆவாரம் பூ, ரோஜாப் பூ, மகிழம் பூ, மதனகாமப்பூ, சுக்கு, வெல்லம் கலந்து சாப்பிடலாம் இரத்தம் சுத்தமாகும்.

**பீட்ரூட் ஊறுகாய்**

| | |
|---|---|
| பீட்ரூட் | - 1/4 கிலோ |
| எலுமிச்சை | - 3 |
| இஞ்சி | - 25 கிராம் |
| கல்உப்பு | - சிறிதளவு |

செய்யும் முறை

பீட்ரூட்டை நன்றாகக் கழுவி தோல் எடுத்து விட வேண்டும். சிறியதாக துருவ வேண்டும். இஞ்சி தோல் நீக்கி சாறு எடுத்து அதில் பீட்ரூட் துருவலை சேர்க்க வேண்டும் எலுமிச்சையை கொட்டை நீக்கி சாறு எடுத்து அத்துடன் சேர்த்து தேவையான அளவு உப்பு சேர்த்தால் பீட்ரூட் ஊறுகாய் ரெடி.

பீட்ரூட்டுக்குப் பதில் முள்ளங்கி துருவல் வைத்து முள்ளங்கி ஊறுகாய் செய்யலாம். முள்ளங்கி ஊறுகாய்க்கு தயிரும் சேர்க்கலாம்.

**வாழைப்பழ சிப்ஸ்**

வாழைப்பழம் - 10 கனிந்த வாழைப்பழத்தினை மெலிதாக வட்டமாக வெட்டி வெள்ளைத் துணியில் பரப்பி வடகம் காய வைப்பது போல் சூரிய ஒளியில் காய வைக்கவும். நன்றாக உலர்ந்த பின் கண்ணாடி பாட்டிலில் போட்டு வைக்கவேண்டும்.



**நெல்லிக்காய் சிப்ஸ்**

முழு நெல்லிக்கனி - 100 எண்ணிக்கை நன்றாக விளைந்த முழு நெல்லிக்கனிகளை கழுவி கொட்டை நீக்கி சதைப் பகுதிகளை சிறு துண்டுகளாகச் சீவி அல்லது அறுத்து வெள்ளைத்துணியில் சூரிய ஒளியில் காய வைக்கவேண்டும். நன்றாகக் காய்ந்த பின்பு கண்ணாடி பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

நெல்லியை வேக வைக்காமல் பயன்படுத்த வேண்டும். உப்பு சேர்க்கக் கூடாது. நெல்லியை காய வைப்பதால் வைட்டமின் சி மற்றும் ஈ குறைவதில்லை நெல்லிக்கனி வற்றல் சளிப்பிடிப்பதில்லை இப்படி தயாரித்த வற்றலை வருடம் முழுவதும் பயன்படுத்தலாம்.

ஒரு டம்ளர் நீரில் 5 அல்லது 6 சிப்ஸை ஊற வைத்து நெல்லிபானம் செய்யலாம்.

**கேழ்வரகு**

இதில் சுண்ணாம்புச் சத்து மற்றும் இரும்புச்சத்து அதிகம். மதியம் கேழ்வரகு களியாக கீரையுடன் எடுத்துக் கொண்டால் தாய்க்கும் குழந்தைக்கும் நல்லது. கேழ்வரகை முருங்கைக்கீரையுடன் சேர்த்து அடையாகவும் அல்லது வெல்லம் சேர்த்து இனிப்பு அடையாகவும் சமைத்துக் கொடுத்தால் ஊட்டச்சத்துக்கள் மேலும் அதிகரிக்கும்.

**நீயூரோதெரபி**

கண்ணன் ஹெல்த் சென்டர்
9, ரேவதி பவனம், இந்திரா நகர்,
முத்துச்சாமி காலனி பஸ் ஸ்டாப்,
செல்வபுரம், கோவை. செல் : 88833 32707,
88833 32768.

தாய்மை அடைந்த பெண்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விசயங்கள் நிறைய உள்ளன. உடலையும், மனதையும் ஆரோக்கியமாகவும், ஆனந்தமாகவும் வைத்திருக்க வேண்டியது மிகமிக அவசியம். குறிப்பாக கர்ப்ப காலத்தில் செய்ய வேண்டிய சில பயிற்சிகளைப் பற்றியும் அதன் நன்மைகள் பற்றியும் பின்வருமாறு அறிந்துகொண்டு பின்பற்றி பயனடையலாம்.



1. குழந்தை பிறந்த பின்னர் சில குழந்தைகள் தாய்ப்பால் அருந்தாமல் அழும். இதை சரி செய்வதற்கு எளிய வழி ஒன்று உள்ளது.

ஒரு பெண் கருவுற்ற நான்கு அல்லது ஐந்தாவது மாதங்களில் அப்பெண்ணின் மார்பக காம்புகளை மெதுவாக இழுத்துவிட வேண்டும். இதனால் குழந்தை பிறந்த பிறகு பால் குடிக்க மிகவும் ஏதுவாக இருக்கும்.

2. கருவுற்ற பெண்கள் உறங்கும் பொழுது கவனிக்கவேண்டிய வழிமுறைகள்.

இடது பக்கவாட்டிலோ அல்லது வலது பக்கவாட்டிலோ தலை வைத்து உறங்கவேண்டும். மல்லாந்து படுத்து உறங்கக் கூடாது. இடது பக்கத்தில் இருந்து வலது பக்கத்திற்கு அல்லது வலது பக்கத்தில் இருந்து இடது பக்கத்திற்கோ திரும்பிப் படுக்கவேண்டும் எனும் நிலையில் படுக்கையில் அமர்ந்த நிலைக்கு வந்து பின்னர் ஏதாவது ஒரு பக்கமாக தலை வைத்துப்படுத்துக் கொள்ளலாம்.

படுக்கையிலிருந்து எழும் பொழுது முதலில் படுக்கையில் அமர்ந்த நிலையில் இருக்க வேண்டும். பின்னர் பத்து வினாடிகளுக்குப் பிறகு நிதானமாக எழுந்து நிற்கவேண்டும். நான்கு அல்லது ஐந்து பெருமூச்சுகளை இழுத்து சுவாசித்துவிட்டு பின்னர் நகரலாம். இதனால் இரத்த ஓட்டமும், காற்றோட்டமும் சீராக அமைந்து எளிதில் நடக்கமுடியும். இவ்வாறு பின்பற்றும் பொழுது தலைசுற்றலைத் தவிர்க்கலாம்.

# எளிமையான உடற்பயிற்சி முறைகள்



1

This Posture gives muscles around anus and vagina more relaxation.

படுத்து கால் முட்டிகளை உயர்த்தவும். ஆசன வாயிலும் அதைச் சுற்றியுள்ள தசைகளும் பலம் அடையும்.



2

To relax pelvis and thighs sit in delivery position.

அமர்ந்து முட்டிகளை உயர்த்தி காலை பிரிக்கவும். தொடைப்பகுதி வலுவடையும்.



3

Bending forward helps knees, overcome lower backside.

குழந்தைபோல தவழ்தல் முதுகு வலி இல்லாது போகும் அல்லது குறைந்து கொண்டு வரும்.



4

In this position, push knees, lift thighs and lower them for a good flexibility.

வண்ணத்துப்பூச்சி போல், மடக்கி கால்களை உயர்த்தித் தாழ்த்தவும் மூட்டுத், தொடைப்பகுதிகள் விரிவடைந்து அசைந்து கொடுக்கும்.



5

To tone up, sit and tighten the abdomen and tilt towards back.

கைகளை பின்னால் தாங்கி, இரு கால்களையும், நீட்டவும். வயிற்றின் அடிப்பகுதி இறுகும்.



6

Massage helps to overcame pain during labour.

மண்டியிட்டு சற்றே குனியவும். ஒத்தடம் பிரசவ வலிக்கு இதமாகும்.



7

Keeping legs apart and sitting like this prevent constipation and backside.

மெதுவாக மலம் கழிப்பதுபோல அமரவும். முதுகுவலிக்கு சுகமாக இருக்கும். மலச்சிக்கல் இருக்காது.



8

Lying with cushion gives comfort.

நாற்காலியில் அமர்ந்த நிலை முதுகுத்தண்டு வலுவடையும். முதுகுத்தண்டு நேராக வைத்திருக்கவும். நன்றி !

திரு. ஆர். தண்டபாணி அவர்கள் எழுதிய கருவிலிருந்து பூமி வரை நூலிலிருந்து...



# மருட்டி சுகப்பிரசவம்

தொப்புள் கொடியை வெட்டாமல் எப்படி குழந்தையை ஆரோக்கியமாக வளர்ப்பது என்பது பற்றி இந்த மருட்டி சுகப்பிரசவம் எனும் கட்டுரையை முழுவதும் படித்துப் புரிந்து கொள்வீர்கள். மேலும் இந்த மருட்டி சுகப்பிரசவ முறையை பின்பற்றி குழந்தை பெற்றுக் கொண்ட, உலகம் முழுவதும் பலரின் அனுபவங்களை நீங்கள் கேட்டு அறிந்து கொள்ள 82206 67135 என்ற எண்ணில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அவர்களின் பெயர், ஊர் மற்றும் தொலைபேசி எண்களைப் பெற்றுக் கொண்டு அவர்களுடன் உரையாடுவதன் மூலம் மருட்டி சுகப்பிரசவம் பற்றிய நம்பிக்கையான விளக்கத்தை பெறலாம்.

இந்த புத்தகத்தின் மூலம் என்னென்ன கற்றுக் கொள்ளலாம் என்பதை பின்வருமாறு அறியலாம்.

1. திருமணத்திற்கு முன்பு ஆணும், பெண்ணும் பின்பற்ற வேண்டியவை என்னென்ன?

2. கர்ப்ப காலத்தில் பெண்கள் எவ்வாறு இருக்கவேண்டும்?

3. தடுப்பூசிகள், மருந்து, மாத்திரைகள் ஆகியன இல்லாமல் சுகப்பிரசவமாக குழந்தை பெற்றுக் கொள்ள வழி என்ன?

4. தொப்புள் கொடியை வெட்டாமல் எப்படி குழந்தையை வளர்ப்பது?

5. முதல் ஒருவருடத்தில் குழந்தையை எவ்வாறு வளர்க்கவேண்டும்?

6. என்ன மொழியில் குழந்தையை கல்வி கற்கச் செய்யவேண்டும்?

7. ஜெர்மனியில் உள்ள கல்விமுறைக்கும், இந்தியாவில் உள்ள கல்விமுறைக்கும் என்ன வேறுபாடு?

8. ஒன்று முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வியை பள்ளிகளில் எவ்வாறு கற்றுத்தரவேண்டும்?

9. 5 வயது முதல் 12 வயது உரை உள்ள குழந்தைகளுக்கு பள்ளியில் பாடத்திட்டம் எவ்வாறு இருக்கவேண்டும்?

10. 12 வயதிற்கு மேல் எதைப் படிக்கவேண்டும்?

11. 2 வருடத்தில் 200 மொழிகளைக் கற்றுக் கொள்வது எப்படி?

12. கண்களை மூடிக்கொண்டு படிப்பதாக உள்ள பயிற்சிக்கு midbrain activation குழந்தைகளை அனுப்பலாமா?

13. பின்லாந்து நாட்டில் கல்வியை எவ்வாறு கற்றுத் தருகிறார்கள்?

14. கார்ட்டூன் சேனல்களை குழந்தைகள் ஏன் விரும்பிப் பார்க்கிறார்கள்? படிப்பில் ஏன் அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை?

15. பரீட்சையில் நிறைய மதிப்பெண்கள் எடுப்பது நல்லதா? கெட்டதா?

16. ஒரு ஆசிரியர் என்பவர் எப்படி இருக்கவேண்டும்?

17. பள்ளிகள் அல்லது கல்லூரிகள் எப்படி இருக்கவேண்டும்?

18. குழந்தைகளை எவ்வாறு நடத்த வேண்டும்?

மேற்சொன்னவாறு உள்ள பல விசயங்களையும், இதுவரை யாரும் கற்றுத்தராத பல புதிய கருத்துக்களையும் உங்களுக்கு இந்தப் புத்தகம் கற்றுத்தரும். எனவே இந்தப் புத்தகத்தை முதலில் பொறுமையாக முழுவதும் படியுங்கள். அதன் பின்னர் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சில பள்ளிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு வாருங்கள். அத்துடன் இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில நபர்களை அவர்களிடம் முன் அனுமதி பெற்று நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறு ஒரு வருடத்தினை கல்வி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியினை முடிவு செய்து கொண்டு உங்கள் குழந்தைகளை இதுபோன்ற கல்விமுறைக்கு மாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். அவசரப்பட்டு திடீரென முடிவெடுத்து குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடவேண்டாம்.

இந்தப் புத்தகத்தின் சில பகுதிகளை மட்டும் மேலோட்டமாக படித்துவிட்டு, அரைகுறையாக அறிந்துகொண்டு எந்த முடிவிற்கும் வரவேண்டாம். உங்கள் குழந்தைகளையோ, கல்வி நிறுவனங்களையோ குறை கூறுவதை விட்டு விட்டு முதலில் இந்தப் புத்தகத்தை முழுவதுமாகப் படித்துப் புரிந்து கொள்ளுங்கள். இது தான் சிறந்த தீர்வாக அமையும்.

தடுப்பூசிகள், மருந்து, மாத்திரைகள் என எதுவும் இல்லாமல் மருத்துவமனைக்கும் செல்லாமல் கத்தியைப் பயன்படுத்தாமல் சுத்தமான ஆர்கானிக் குழந்தைகளைப் பெற்று சமுதாயத்தில் குழந்தைகளை சிறப்பாக வளர்ப்போமாக !

பிரணவ் எனும் ஒரு பதினைந்து வயது சிறுவனைப் பற்றித்தான் மருட்டி சுகப்பிரசவம் என்னும் இந்த கட்டுரையில் நாம் பார்க்க இருக்கிறோம்.

இந்த சிறுவன் பிரணவ் பற்றி கூறுவதற்கு ஒரு சிறப்பு விசயம் ஒன்று இருக்கிறது. இவர் அமெரிக்காவில் சுகப்பிரசவத்தில் பிறந்தவர். இதுவரை எந்த ஒரு தடுப்பூசியும் போடாதவர். தொப்புள் கொடியை அறுக்காதவர். பள்ளிக் கூடமே செல்லாதவர். இதுவரை எந்த வியாதிக்காகவும் மருத்துவர்களைச் சென்று பார்க்காதவர்.



இவர் புத்திசாலி ! உலகில் உள்ள பல விசயங்களையும், பல மொழிகளையும் தெரிந்து வைத்திருக்கும் ஒரு அதிசய

நான் இதுவரை பார்த்த, கேள்விப்பட்ட வரையில் "ஒரிஜினல் அக்மார்க் ஆர்கானிக் குழந்தை" இந்த பிரணவ் தான். பிரணவ் வாழ்க்கை வரலாற்றை தெரிந்து கொள்வதன் மூலம் பின்வரும் கேள்விகளுக்கு நாம் விடை காணமுடியும்.

1. சுகப்பிரசவம் என்றால் என்ன?
2. பிரசவத்தின் போது வலி ஏற்பட்டால் இயற்கையாக எவ்வாறு சரிசெய்வது?
3. தொப்புள் கொடியை அறுக்காமலேயே எவ்வாறு குழந்தையை வளர்ப்பது?
4. வீட்டிலேயே குழந்தைகளுக்கு கல்வியை எப்படி போதிப்பது?
5. மருட்டி சுகப்பிரசவ முறை என்றால் என்ன?

போன்ற பல்வேறு கேள்விகளுக்கு இக்கட்டுரையில் விடைகாண இருக்கிறோம்.

தற்போது உலகில் உள்ள கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பதனால் ஹீலர் பாஸ்கர் ஆகிய நான் கல்வியில் புதிய தளத்தினை ஏற்படுத்துவதற்காகப் பானு வீட்டுக்கல்வி முறை (Banu Home Education) என்ற பெயரில் உருவாக்கி கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக மக்களுக்கு கொடுத்து வருகிறோம். இதற்கு பல்வேறு நல்ல உள்ளங்கள் உதவி செய்கின்றனர்.

பானுவீட்டுக்கல்வி முறை பற்றி அறிந்து கொள்ள விரும்புவோர் banuhomeeducation என்ற இணையதள யூடியூப் முகவரியில் பார்க்கலாம். இதுவரை பனிரெண்டு பகுதிகளாக யூடியூப்பில் பதிவேற்றப்பட்டுள்ள அவற்றை முழுவதுமாக பார்த்து அறிந்து கொள்வதன் மூலம் கல்விமுறை பற்றிய ஒரு தெளிவு கிடைக்கும்.

இணையதளத்தில் நமது பானு வீட்டுக் கல்வி முறை யூடியூப்பினைப் பார்த்த கண்ணூரைச் சேர்ந்த திரு. சக்கரவர்த்தி என்பவர் எனக்கு ஒரு இமெயில் அனுப்பி இருந்தார். இவர் (Nift Fashion Technology) கல்லூரியில் அசிஸ்டெண்ட் புரொஃபஸராக பணியாற்றி வருகிறார். இவரிடமிருந்து நான் ஒரு இமெயில் வரப்பெற்றேன். அதில் யுனி 5 என்றொரு பள்ளியில் நமது பானு வீட்டுக் கல்வி முறை போன்றே சிறப்பாக கல்வியை கற்றுக் கொடுக்கிறார்கள். ஆராய்ந்து பாருங்கள் என்று அந்த ஈமெயிலில் குறிப்பிட்டிருந்தார். பள்ளியின் நிறுவனரை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி, இமெயில் முகவரி ஆகியன அதில் குறிப்பிடப்பட்டு இருந்தன.

யுனி 5 பள்ளி நிறுவனரை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் பெயர் திரு. பிரதீப் அமெரிக்காவில் வசித்து வருகிறார். தொலைபேசியில் பேசும்பொழுது பல்வேறு விசயங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார். அப்பொழுது பதினைந்து வயது நிரம்பிய அவரது மகன் பிரணவ் பற்றியும் குறிப்பிட்டார். பிரணவ் பற்றி அவர் கூறிய விசயங்கள் மிகவும் ஆச்சர்யமாக இருந்தன.

இந்த பிரணவ் தான் இதுவரை நான் சந்தித்த கேள்விப்பட்ட வரையில் முதல் ஒரிஜினல் அக்மார்க் ஆர்கானிக் குழந்தை.

திரு.பிரதீப் என்பவர் யுனி 5 என்ற கல்வி திட்டத்தை உருவாக்கி தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் நடத்தி வருகிறார். இதைப் பற்றி அடுத்த கட்டுரையில் நாம் விரிவாகப் பார்க்கலாம்.

இந்தக் கட்டுரையில் இவரது மகன் பிரணவ் எவ்வாறு பிறந்தார் ? எப்படி வளர்ந்து வருகிறார் என்பதைப் பற்றித் தான் பார்க்கப் போகிறோம். இது மிகவும் சுவாரசியமானது.

திரு. பிரதீப்பிற்கு 1999 ம் ஆண்டு பிரியாவுடன் திருமணம் நடந்தது. கணவன், மனைவி இருவருமே ஒரு விசயத்தில் தீர்மானமாக இருந்தனர். அதாவது தங்களுக்கு குழந்தை பிறக்கும் பொழுது அது சுகப்பிரசவமாகத்தான் இருக்கவேண்டும் என்று ஆரம்பத்தில் இருந்தே திட்டம் தீட்டி இருக்கின்றனர். எனவே திருமணம் முடிந்தவுடன் பல மாதங்கள் இருவரின் உடலையும், மனதையும், சுத்தப்படுத்தி ஒழுங்குப்படுத்திக் கொள்ளும் பணிக்கு என்று ஒதுக்கியுள்ளனர்.

நல்ல தரமான சிறந்த குழந்தையை சுகப்பிரசவத்தில் பெற்றெடுக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு விசயங்களை ஆய்வு செய்து அதை நடைமுறைப்படுத்தி அதன்படியே வாழ்ந்திருக்கின்றனர்.

பால் வாங்குவதற்கு முன்பே அதை எந்த பாத்திரத்தில் பெறுகிறோமோ, அது சுத்தமாக இருக்கவேண்டும். அது சுத்தமாக இருந்தால் தான் பால் சுத்தமாக இருக்கும் என்பதைப் போல கரு உருவாவதற்கு முன்பே பால் பாத்திரமாகிய கணவனும், மனைவியும் சுத்தமாக இருக்கவேண்டும் என்பதை இந்த தம்பதிகள் நன்கு புரிந்து வைத்திருந்தனர்.

பஞ்சபூதங்களை உடலில் ஒழுங்கு படுத்துவதன் மூலமாக மட்டும் தான் தரமான குழந்தையைப் பெற்றெடுக்க முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். அதையே அவர்கள் பின்பற்றினார்கள். நீர் சிகிச்சையை (Water Therapy) இருவரும் கடைபிடித்தனர். உடலையும், மனதையும் இருவரும் ஒழுங்குபடுத்தினார்கள்.

2000 வது ஆண்டுகளில் ஆர்கானிக் உணவுகள் அமெரிக்காவில் கிடைத்து இருக்கின்றன. அதைத் தேடி தேடி இருவரும் வாங்கி சாப்பிட்டு இருக்கின்றனர்.

மூச்சுப்பயிற்சிகள் பலவற்றை இருவரும் கற்றுக் கொண்டு செய்து வந்து இருக்கின்றனர். காலைத் தொங்கப் போட்டு உட்காராமல் இருவரும் சம்மணங்கால் இட்டு உணவினை சாப்பிட்டு இருக்கின்றனர். அவ்வாறு அமர்ந்தே பல வேலைகளையும் அவர்கள் பார்த்து இருக்கின்றனர். இவ்வாறு இருவரும் மகிழ்ச்சியாக, சந்தோசமாக பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு சுகப்பிரசவம் ஏற்படுவதற்கான வழிமுறைகள் ஒவ்வொன்றையும் பின்பற்றி வந்திருக்கின்றனர்.

ஆனால் இவர்களது பெற்றோர் களுக்கு இதைப்பற்றி எதுவும் புரியவில்லை. அதனால் இவர்கள் செய்யும் எதுவும் அவர்களுக்கு பிடிக்கவில்லை. பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தொடர்ந்து வற்புறுத்தியதால் ஆங்கில மருத்துவரிடம் சென்றிருக்கின்றனர். மருத்துவர் சில பரிசோதனைகளுக்கு எழுதிக் கொடுத்ததுடன் மருந்து மாத்திரைகளையும் சாப்பிடக் கூறி இருக்கிறார். ஆனால் ஒரு போதும் எந்த மருந்து, மாத்திரைகளையும் பயன்படுத்தவே இல்லை. பெற்றோர்கள் வற்புறுத்தலுக்காக மட்டும் ஆங்கில மருத்துவரிடம் ஆலோசனை பெறச் சென்றிருக்கின்றனர்.

சைவ உணவை மட்டுமே இருவரும் உண்ணும் பழக்கத்தினை கொண்டு இருக்கின்றனர். தேவைப்படும் சமயத்தில் ஆயுர்வேத மூலிகைகளை மட்டும் பயன்படுத்தி இருக்கின்றனர். இந்தியாவில் இருந்து எடுத்துச் சென்ற ஒரிஜினல் நெய்யை நிறைய பயன்படுத்தி இருக்கின்றனர்.

கர்ப்ப காலத்தில் வயிற்றிலிருக்கும் குழந்தை அப்பா,அம்மா மற்றும் மற்றவர்கள் பேசுவதை கேட்கிறது, புரிந்து கொள்கிறது, உணருகிறது என்பதையும் அதுவே அந்த குழந்தையின் வாழ்க்கையாக மாறுகிறது என்பதையும் புரிந்து கொண்ட இந்த தம்பதியினர் கர்ப்ப காலத்தில் நல்ல விசயங்களை மட்டுமே பேசியிருக்கின்றனர். நல்ல விசயங்களை மட்டுமே பார்த்திருக்கின்றனர். முடிந்தவரை கெட்டவிசயங்களை பார்க்காமல், கேட்காமல் அதிலிருந்து விடுபட்டு வெளியே வந்திருக்கின்றனர்.

கர்ப்பகாலத்திலேயே தனது மகனுக்கு பல நல்ல ஒழுக்கங்களை கற்றுக் கொடுக்க ஆரம்பித்து இருக்கின்றனர். வயிற்றிலிருக்கும் சமயத்திலேயே அது நன்றாகப் புரிந்து கொள்ளும் என்பதை அவர்கள் உறுதியாக நம்பினார்கள்.

பிரசவத்திற்கு உரிய அந்த சமீபகாலத்தில் பெற்றோர்கள் இந்தியாவிலிருந்து புறப்பட்டு அமெரிக்காவில் உள்ள அவர்களது வீட்டிற்கு வந்திருக்கின்றனர். இந்த தம்பதியினர் மேற்கொண்டுவரும் ஒவ்வொரு செயலையும் பார்த்து அந்த பெற்றோர்கள் மிகுந்த பயம் கொண்டுள்ளனர். அவர்கள் இந்த தம்பதியினரை அவசியம் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்றும் வயிற்றிலிருக்கும் குழந்தையை ஸ்கேன் செய்து பார்க்கவேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர். மருத்துவர்கள் தரும் மருந்து, மாத்திரைகளையும் கட்டாயம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தி இருக்கின்றனர். ஆனால் இவை அனைத்தையும் இந்த தம்பதியினர் மறுத்து விட்டனர்.

தம்பதிகளில் ஒருவரான திரு. பிரதீப் கேரளாவில் கொடுங்கல்லூரில் ஊசி, மருந்து, மாத்திரைகள் என எதுவும் இன்றி சுகப்பிரசவத்தில் குழந்தையாக பிறந்தவர். அதே போல அவரது மனைவி திருமதி. பிரியா பாலக்காட்டில் சுகப்பிரசவ குழந்தையாகப் பிறந்தவர். அப்படி இருக்கும் பொழுது தங்களது குழந்தைக்கு மட்டும் பிரசவ சமயத்தில் ஏன் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று தங்கள் பெற்றோர்களிடம் வாதிட்டு இருக்கின்றனர். இறுதியாக, பெற்றோர்களின் வற்புறுத்தல் அதிகமாக இருந்த காரணத்தினால் மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றிருக்கின்றனர். மருத்துவமனைக்குச் சென்ற தம்பதியினர் அங்குள்ள மருத்துவர்களிடம் தங்கள் நிலையை விபரமாக எடுத்துக் கூறி புரிய வைத்து இருக்கின்றனர். மருந்து, மாத்திரைகளோ, ஸ்கேன், பரிசோதனைகளோ என எதையும் எடுக்காமல் பிரசவ வலி ஏற்படும் சமயத்தில் நாங்களே மருத்துவமனைக்கு வந்து விடுகிறோம். இதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர்களிடம் கெஞ்சி கேட்டு கொண்டு பின்னர் வீடு திரும்பிவிட்டனர்.

திரு. பிரதீப், திருமதி, பிரியா ஆகிய இருவரும் சுகப்பிரசவம் தான் ஏற்பட வேண்டும் என்பதில் மிக தெளிவாக இருந்திருக்கின்றனர். இவர்கள் ஒருமுறை கூட ஸ்கேன் பரிசோதனை செய்துகொள்ளவே இல்லை.

இந்த சமயத்தில் ராபின் லிம் என்னும் நர்ஸ் (Mid Wife) ஆக பணி புரிபவரின் அறிமுகம் இவர்களுக்கு கிடைத்திருக்கிறது. சுலபமாக புரிய சொல்வதென்றால் தமிழ்நாட்டில் நாம் ஆயா என்று அழைப்போம் அல்லவா? குழந்தை பிறப்பின் போது உடனிருந்து உதவி செய்யும் ஆயாக்களைத்தான் மிட் வைஃப், நர்ஸ் என்று அங்கு அழைக்கின்றனர்.



நமது ஊர்களில் சில வருடங்களுக்கு முன்பு வரை எவரும் மருத்துவமனைக்குச் சென்று குழந்தை பெற்றுக் கொண்டதே இல்லை. பக்கத்து வீடுகளில் வசிக்கும் ஆயா, பிரசவ சமயத்தில் உடனிருந்து உதவி செய்து குழந்தை பிறந்த பின் அக்குழந்தையை குளிப்பாட்டி கழிவுகளை எல்லாம் சுத்தம் செய்து அகற்றிவிட்டுச் சில கடைபிடிக்க வேண்டிய அறிவுரைகளையும் பற்றிக் கூறி செல்வார்.

நமது ஊரில் உள்ள ஆயாக்கள், பெரியோர்கள் போன்றோருக்குத் தெரிந்த நல்ல விசயங்கள் உலகில் எவருக்குமே தெரியாது. அப்படியிருக்கும் பொழுது நாம் அமெரிக்காவில் இருக்கும் ஆயாவான ராபின் லிம் என்பவரைப் பற்றித் தெரிந்து கொள்ள இருக்கிறோம். அங்கு இவர்களை மிட் வைஃப் என்று அழைக்கின்றனர். நாம் இந்தக் கட்டுரையில் அவர்களை ஆயா என்றே அழைக்கலாம்.

ராபின் லிம் எனும் இந்த அமெரிக்க ஆயா, இந்தியாவின் கலாச்சாரத்தை விரும்பி கற்றுக் கொண்டவர். இவர் அமெரிக்காவில் வசித்தாலும் நம் நாட்டில் உள்ள பல்வேறு பாரம்பரிய மருத்துவ முறைகளையும், யோகா முறைகளையும் கற்றுக்கொண்டு அதை அமெரிக்காவில் சிறப்பாக பயன்படுத்தி வருகிறார்.

திரு. பிரதீப், பிரியா தம்பதியினர் தங்களது பெற்றோர்களின் வற்புறுத்தல் காரணமாகவும், வேறு வழி இல்லாத சூழ்நிலையிலும், பெற்றோர்களை சமாதானபடுத்தவேண்டி ராபின் லிம் ஆயாவை பிரசவ சமயத்தில் உடன் வந்து உதவும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். "பிரசவ வலி ஏற்படும் சமயத்தில் நாங்கள் உங்களை அழைக்கிறோம். நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து சுகப்பிரசவம் அடைய உதவி செய்யுங்கள்" என்று ராபின் ஆயாவிடம் கேட்டிருக்கின்றனர். அவரும் அதற்கு சம்மதித்து இருக்கிறார்.

ராபின் ஆயாவின் அமைதியான பேச்சும், சுகப்பிரசவம் சம்பந்தமான தெளிவான அவரது அணுகுமுறைக்கும், இந்திய கலாச்சாரத்துடன் இணைந்த அவரது அனுபவ ஞானமும் இணைந்திருந்ததால் பெற்றோர்கள் இதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

ஒருநாள் திருமதி. பிரியாவிற்கு பிரசவ வலி இலேசாக ஆரம்பித்திருக்கிறது. உடனே ராபின் ஆயாவை அவர்கள் வீட்டிற்கு அழைத்திருக்கின்றனர். பிரசவ வலி ஆரம்பித்த நிமிடம் முதல் லலிதாசகஸ்ர நாமத்தினை குடும்பத்தில் உள்ள அனைவரும் ஜெபிக்க ஆரம்பித்து விட்டனர். இந்து மதம் அல்லாத மற்ற மதத்தினைச் சார்ந்த அன்பர்கள் இந்த பகுதியில் நாம் குறிப்பிட்டுள்ளதைப் போன்று லலிதா சகஸ்ர நாமத்திற்கு பதிலாக தங்கள் மதத்திற்கு உரிய சுலோகங்களை, மந்திரங்களை தங்கள் விருப்பப்படி ஜெபித்துக் கொள்ளலாம்.

இஸ்லாமிய மதத்தவராக இருப்பின், குர்ஆனை ஓதலாம். கிறிஸ்துவர்கள்

பைபிளைப் படிக்கலாம். இவ்வாறு எந்த நாட்டினராக இருந்தாலும், எந்த மதத்தினைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரவர்க்கு உரிய நம்பிக்கையான மந்திரங்களை, வாசகங்களை ஜெபிக்கலாம்.

ஒவ்வொரு தாயும் தேவிக்கு நிகரானவர்கள்தான் என்று ராபின் ஆயா கூறியிருக்கிறார். எனவே பிரசவ வலி ஆரம்பித்தவுடன் பிரியாவிற்கு தலையை நன்றாக வாரி, ஜடைபின்னி அலங்காரம் செய்திருக்கிறார். பட்டாடை அணிந்துகொள்ளச் செய்து, ஆபரணங்கள், அணிவித்து முகத்துக்கு மஞ்சள் பூசி அவரை 'தேவி'யாக மாற்றி இருக்கின்றனர். இப்படி செய்யும் பொழுது தெய்வீக தரிசனம் ஒன்று கிட்டுகிறது. இந்த தெய்வீக தரிசனம் வீட்டில் உள்ள அனைவருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. எனவே வீட்டில் உள்ள அனைவரும் தைரியமாக சுகப்பிரசவத்தினை எதிர்கொள்ள தயாராகின்றனர். இவ்வாறு பிரியாவை ஒரு தேவியாக அலங்காரம் செய்து இருக்கின்றனர்.

சிறிது நேரத்தில் வலி மிகவும் அதிகமாகி பிரசவம் ஆரம்பிக்கும் சமயத்தில் அவர் அணிந்திருந்த உடைகளை விலக்கி இருக்கின்றனர். மேலும் அந்த அறையில் பிரியாவின் கணவர், ராபின் ஆயா ஆகியோர் மட்டுமே பிரியாவுடன் இருந்திருக்கின்றனர். மற்ற அனைவரையும் அறைக்கு வெளியே அனுப்பிவிட்டனர்.

பிரசவ வலி ஏற்பட்ட சமயத்தில் மூச்சுப்பயிற்சியும் மந்திரங்களை ஜெபிப்பது மட்டுமே நடந்து வந்திருக்கிறது. சிறிது நேரத்தில் ஒரு அழகான குழந்தை பிரசவித்து வெளியே வரும் சமயத்தில், யாரும் பற்றி வெளியே இழுக்கவும் இல்லை. தொப்புள் கொடியை வெட்டவும் இல்லை. குழந்தை தானே வெளியே வந்த பின்னர் 45 நிமிடங்கள் காத்திருக்கின்றனர். அதன் பின்னர் தான் பனிக்குடப்பை உடைந்து தொப்புள் கொடியுடன் சேர்ந்து வெளியே வந்து விழுந்திருக்கிறது.

பொதுவாக மருத்துவமனைகளில் குழந்தை பிறக்கின்ற சமயத்தில் குழந்தையைப் பற்றி வேகமாக வெளியே இழுப்பார்கள். இவ்வாறு இழுக்கக் கூடாது. இவ்வாறு இழுப்பது குழந்தைக்கு நல்லதல்ல. மேலும் குழந்தை பிறந்தவுடனேயே தொப்புள் கொடியை வெட்டிவிடுவார்கள். இதுவும் குழந்தைக்கு நல்லதல்ல.

குழந்தை பிறக்கும் சமயத்திலேயே கத்தியைப் பயன்படுத்தி வன்முறையில் ஈடுபடாதீர்கள் என்று ராபின் ஆயா கூறி இருக்கிறார். எந்த ஒரு விலங்கினமும் தொப்புள் கொடியை வெட்டுவதில்லை. மனிதர்கள் மட்டும் ஏன் வெட்டவேண்டும்?

எந்த ஒரு மிருகமும் குட்டிகளை ஈனும் சமயத்தில் இழுப்பதற்கு ஆள் வைத்துக் கொள்வதில்லை. தொப்புள் கொடியை வெட்டுவதற்கு ஆள் வைத்துக் கொள்வதில்லை. எனவே தான் எந்த ஒரு விலங்கினத்திற்கும் சர்க்கரை, பி.பி போன்றவையும் ஃடவுன் சின்ரோம், ஆட்டிசம், மூளை வளர்ச்சி குன்றிய குழந்தை என எந்த நோயும் வருவதில்லை.

குழந்தையை இழுப்பதாலும், தொப்புள் கொடியை வெட்டுவதாலும் தான் மூளைக்கு இரத்த ஓட்டம் ஒழுங்காக செல்லாமல் மூளைவளர்ச்சி குன்றிய குழந்தை, ஃடவுன்சின்ரோம், ஆட்டிசம், ஏ.டி.எச்.டி, ஐ.டி.பி.டி என்று ஆங்கிலத்தில் நான்கு எழுத்துக்களை மாற்றி மாற்றிப்போட்டு பல்வேறு வியாதிகளை உருவாக்கி வருகின்றனர் இந்த வைத்தியத் துறையினர்.

எனவே குழந்தை பிறந்தவுடன்

தொப்புள் கொடியை வெட்டவேண்டிய அவசியமே இல்லை என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இதனால் தாயும், சேயும் ஆரோக்கியமாகத்தான் இருப்பார்கள். எனவே அந்த சமயங்களில் பொறுமையாக காத்திருங்கள். சில நேரங்களில் பத்து நிமிடத்திலும், சில நேரங்களில் ஒருமணிநேரம் கழித்தும் கூட பனிக்குடம் உடைந்து தொப்புள் கொடி தானே வெளியே வரும். இவ்வாறு தானே வருவதுதான் சுகப்பிரசவம் ஆகும். நாமே தொப்புள் கொடியை அறுப்பது சுகப்பிரசவம் அல்ல ஏனென்றால், அந்த தொப்புள் கொடியில் தான் சுமார் பத்து முதல் முப்பது நாட்கள் வரை அக்குழந்தைக்கு தேவையான உணவும், வாழ்நாள் முழுவதற்கும் தேவையான அறிவும் பொதிந்திருக்கின்றன.

தொப்புள் கொடியை கட்டாயம் அறுத்துத்தான் ஆகவேண்டும் எனில் இறைவனின் படைப்பின் போதே அதை அறுத்து குழந்தையை வெளியே தள்ளியிருக்கலாம் அல்லவா?

இவ்வாறு 45 நிமிடங்கள் கழித்து வெளியே வந்த பனிக்குடப் பையினை ராபின் ஆயா அவர்கள் தண்ணீர் விட்டு சுத்தம் செய்திருக்கிறார். அதில் உள்ள சளி, கோழை, இரத்தம் போன்றவற்றை முற்றிலுமாக சுத்தம் செய்து அந்த பையினை சிறிதாக மடித்துக் கொண்டுஅதை ஒரு சிறிய துணியினால் நூலால் கட்டியது போன்று இலேசாக கட்டி வைத்துக் கொண்டார்கள். அது ஒரு கேரிபேக்கினைப் போன்று



இருந்தது. இந்த பைக்கு பிளசன்டா பேக் என்று பெயர். தமிழில் பனிக்குடப்பை என்று நாம் கூறிக் கொள்ளலாம். இந்தப் பையினை நாம் சுத்தம் செய்து முடித்தவுடன் மஞ்சள் தூள் மற்றும் துளசி பொடி ஆகிய இரண்டையும் தூவி ஒரு சிறு பொட்டலமாக கட்டி வைத்து விடவேண்டும்.

பிரதீப் தம்பதியினருக்கு காலை 12.30க்கு குழந்தை சுகப்பிரசவமாக பிறந்தது. பிறந்த குழந்தை சிறிதும் அழவில்லை. சிரித்துக் கொண்டே இருந்திருக்கிறது. குழந்தை பிறக்கும் பொழுது அழவேண்டும் என்று யார் சொன்னது?

ஒரு குழந்தை பிறந்தவுடன் அதன் தொப்புள் கொடியை வெட்டுவதால் தான் அது அழுதுகொண்டே இருக்கிறது. தொப்புள் கொடியை வெட்டவில்லை என்றால் அது சிரித்துக் கொண்டே தான் இருக்கும். எனவே குழந்தை பிறந்தவுடன் அழுதால் தான் நல்லது என்று தயவு செய்து யாரும் முடிவு செய்யவேண்டாம்.

உங்கள் குழந்தை அழவேண்டுமா? அல்லது சிரிக்க வேண்டுமா ? என்பது அக்குழந்தைக்குத் தெரியும். எனவே அழுதாலும், சிரித்தாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.

இந்த விசயங்களை எல்லாம் பார்த்து அந்தப் தம்பதியின் பெற்றோர்கள் ஆச்சர்யப்பட்டு இருக்கின்றனர். குழந்தை பெற்றெடுத்த பின்னர் தாய் நிம்மதியாகத் தூங்கி இருக்கிறார். குழந்தையும், நிம்மதியாக தூங்கி இருக்கிறது. தொப்புள் கொடியை வெட்டப்படவில்லை. பனிக்குடப்பையானது குழந்தையின் அருகே ஒரு பொட்டலம் போல் வைக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் தான் குடும்பத்தில் உள்ள அனைவரும் பல மணிநேரங்கள் நிம்மதியாக தூங்கி இருக்கின்றனர். குழந்தை பிறந்தவுடன் தாயும், சேயும் பலமணிநேரம் வரை நிம்மதியாக தூங்குவது மிகமிக சிறந்தது. இவ்வாறு தூங்கி விட்டால் அம்மாவின் உடலுக்கு எல்லா சக்தியும் கிடைத்துவிடும். குழந்தைக்கும் பல சக்திகள் கிடைத்து பலவானாக வளரும்.

குழந்தை பிறந்தவுடன் இவர்கள் தாய்ப்பால் கொடுக்கவில்லை. ஏனெனில் உடனடியாக தொப்புள் கொடியை அறுக்காத காரணத்தினால் அந்த தொப்புள் கொடி வழியாக குழந்தைக்கு தேவையான சக்தி போய்க்கொண்டு இருந்தது. எனவே அவர்கள் தாய்ப்பால் கொடுக்கவில்லை.

ஆனால் குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியை உடனே அறுக்கவேண்டும். தாய் நன்றாக சாப்பிடவேண்டும். குழந்தைக்கு உடனே பால்கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இது சரியான வழிமுறை அல்ல.

மருத்துவத்துறையைத் சேர்ந்த பல்வேறு ஆராய்ச்சியாளர்களும் இதுவரை சுகப்பிரசவம் தொடர்பாக 240 ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டு இருக்கின்றனர். அந்த கட்டுரையின் பெயர் டிலே கட் (Delay Cut) அதாவது தாமதமாக தொப்புள் கொடியை வெட்டுவது என்று பெயர். குழந்தை பிறந்தவுடன் இரண்டு நிமிடங்கள் கழித்து தொப்புள் கொடியை வெட்டினாலே அந்த இரண்டு நிமிட இடைவெளியில் குழந்தைக்கு பல்வேறு சக்திகள் கிடைக்கின்றன என்று அந்த 240 ஆய்வு முடிவுகளும் தெரிவிக்கின்றன.

ஆனால் தற்பொழுதுள்ள நவீன மருத்துவ முறையில் குழந்தை வெளிவரும் பொழுது பிடித்து இழுக்கின்றனர். பின்னர் உடனே தொப்புள் கொடியை வெட்டுகின்றனர். இவை அனைத்துமே குழந்தைக்கு நல்லதல்ல.

தொப்புள் கொடி தானாகத்தான் விழவேண்டும். அதை அறுக்கக் கூடாது. அது எப்படி என்பதை இப்பொழுது நாம் பார்க்க இருக்கிறோம்.

தொப்புள் கொடியை இரண்டு நிமிடங்கள் தாமதமாக வெட்டினாலே குழந்தைக்கு பல்வேறு ஆரோக்கியம் கிடைக்கும் என்று பல்வேறு மருத்துவத் துறையைச் சேர்ந்த மேதைகளும், ஞானிகளும் கூறும்பொழுது அந்த தொப்புள் கொடி தானாக விழும் வரை பொறுமையாக காத்திருந்தால் எப்படி இருக்கும்?

இந்த பனிக்குட பொட்டலத்தினை வெட்டிவிடாமல் குழந்தையுடனே பல நாட்கள் வைத்திருக்கின்றனர். குழந்தையை தூக்கும் பொழுதும், குளிப்பாட்டும் பொழுதும் இதனால் சற்று சிரமமாக இருந்திருக்கிறது. ஏனென்றால் குழந்தை எடுக்கும் பொழுதெல்லாம் அந்த தொப்புள் கொடியையும், அந்த பையினையும், சேர்த்தே எடுக்கவேண்டிய சூழல் இருந்திருக்கிறது. ஆனால் இது மட்டும் தான் சிரமமே தவிர குழந்தைக்கு மிகமிக நல்லது.

குழந்தை பிறந்த மறுதினமே தேங்காய் எண்ணெயை உடல் முழுவதும் ஊற்றித் தேய்த்தும், காதுகளில் நிறைய எண்ணெய் விட்டும் உடல் முழுவதும் மற்றும் உச்சந் தலையிலும் நன்றாக ஆயில் மாசஜ் செய்திருக்கின்றனர். கேரளாவைப் பூர்வீகமாக கொண்டவர்கள் என்பதனால் தேங்காய் எண்ணெயில் குளிப்பாட்டி இருக்கின்றனர்.

தமிழகம் எனில் நல்லெண்ணெயில் குளிப்பாட்டுவார்கள். எண்ணெய் குளியலை எடுத்துக் கொண்ட குழந்தை நன்றாக தூங்கி இருக்கிறது. ஆனால் இப்பொழுது உள்ள மருத்துவர்கள் குழந்தைகளுக்கு எண்ணெய் குளியல் கொடுக்க கூடாது என்றும் காதுகளில் எண்ணெய் ஊற்றக் கூடாது என்றும் கூறுகின்றனர். மருத்துவர்களே ! இதைச் சற்று யோசியுங்கள்.

ஆறாவது நாளில் அந்த பனிக்குடப் பையினை கையில் பிடிக்கும் பொழுது அது துடித்து இருக்கிறது. இருதயம் துடிப்பது போல பனிக்குடப்பை துடித்திருக்கிறது. இந்த முறைக்கு கேரளாவில் மருட்டி என்று கூறுகின்றனர். எனவே தான் இந்த கட்டுரைக்கு தலைப்பாக “மருட்டி சுகப்பிரசவம்” என்று பெயர் வைத்து இருக்கிறோம். தொப்புள் கொடியை அறுக்காமல் வைத்திருந்து குழந்தையைப் பெறுவதற்குத்தான் மருட்டி சுகப்பிரசவம் என்று பெயர்.

இவ்வாறு பத்துநாட்கள் அந்த பனிக்குடப் பையுடன் குழந்தையையும் சேர்ந்தே பாதுகாத்து வைத்து இருந்து உள்ளனர். பத்தாவது நாள் அந்தக் குழந்தை தொப்புள் கொடியை தன் கையால் பற்றி இருக்கிறது. அதைப் பற்றி பிடித்துக் கொண்டே இருந்திருக்கிறது. சுற்றியிருந்தவர் களுக்கு எல்லாம் ஏதோ சந்தேகம் ஏற்பட்டு உடனே ராபின் ஆயாவினை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுள்ளனர். அவர் “தொப்புள் கொடியை பிரிக்கும் நேரம் வந்துவிட்டது. எனவே காத்திருங்கள்” என்று கூறியிருக்கிறார்.

சரியாக இரவு 7.30 மணியளவில் அந்த தொப்புள் கொடியினை அக்குழந்தை தானாகவே ‘ஈ’ என்ற சப்தத்துடன் பிரித்துக் கீழே போட்டுவிட்டது.



அதிசயம் ஆனால் உண்மை. இந்த ஏற்பாடு இறைவனுக்குத் தெரிந்து நடக்கிறது. குழந்தைக்கும் நன்றாகத் தெரிகிறது. ஆனால் மருத்துவர்களுக்கு மட்டும் தான் எதுவுமே தெரிவது இல்லை.

தொப்புள் கொடியை பிரித்த இடத்தில் எந்த வலியோ, எவ்வித அடையாளமோ எதுவும் இல்லை. குழந்தைக்குத் தெரிகிறது நாம் எப்பொழுது தொப்புள் கொடியை பிரிக்க வேண்டும் என்று.

நமது முன்னோர்கள் இவ்வாறு தானாக விழுந்த தொப்புள் கொடியையும், பனிக்குடப் பையினையும் அவரவருடைய சொந்த ஊரில், சொந்த வீட்டில் பாதுகாத்து வந்துள்ளனர். வீட்டின் தெற்குப் பக்கமாக ஆழமாக குழிதோண்டி அதில் ஒரு தேங்காயை உடைத்து வைத்து, வாழைப்பழம், பனிக்குடப்பை ஆகியவற்றையும் அதன் அருகே ஒரு படையலைப் போல் இட்டு வணங்குகின்றனர். குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் பிறந்த குழந்தை ஆரோக்கியமாக, நிம்மதியாக வாழவேண்டும் என்று ஒன்று சேர்ந்து அந்த சமயத்தில் பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். பின்னர் இந்த படையலை அவ்வாறே குழியில் போட்டு புதைத்து விடுகின்றனர்.

இவ்வாறு எதை பிரார்த்தனையாக நினைத்து நாம் புதைக்கிறோமோ, எந்த மண்ணில் பனிக்குடத்தினைப் புதைக் கிறோமோ அவற்றைப் பொறுத்து அந்த குழந்தை பிரார்த்தனையின் வலிமையுடன், மண்ணின் கலாச்சாரத் தன்மையும் அக்குழந்தையின் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றப்படும்.

இதுபோன்று பல்வேறு நல்லவிசயங்கள், பல வருடங்களாக நம்முடைய பழக்க வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. சிலரால் அப்படியே இது மறைக்கப்பட்டு மெல்ல மறைந்துவிட்டன. இவ்வாறான நல்ல விசயத்தில் ஒன்று தான் தொப்புள் கொடியை மண்ணில் புதைக்கிற பழக்கமும். திரு. பிரதீப் தம்பதியினர் தொப்புள் கொடியை தங்கள் சொந்த ஊரில் புதைக்க முடிவு செய்தனர்.

அமெரிக்காவில் வசிக்கும் இந்த தம்பதியினர் தொப்புள் கொடியை புதைக்கவேண்டும் என்று நினைக்கும் இடமோ தங்கள் சொந்த ஊரான கேராளவில் தரபாடு என்ற தங்களின் சொந்த வீட்டில். எனவே தொப்புள் கொடியை இந்தியா வரும் சமயத்தில் கொண்டு வந்து புதைத்துவிட திட்டமிட்டனர். ஆனால் உடனடியாக புறப்பட வாய்ப்பில்லாத காரணத்தினால் இந்தியா வரும் பயணம் ஒரு மூன்று மாத காலம் ஒத்திப்போடப்பட்டது. எனவே மூன்று மாதங்கள் வரை அந்த தொப்புள் கொடியை ஒரு குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பாதுகாத்து வைத்துள்ளனர்.

மூன்று மாதங்களுக்குப் பின்னர் இந்தியா வந்த அவர்கள் கேரளாவில் கொடுங்கல்லூரில் உள்ள தங்கள் சொந்த வீடான தரபாடுவிற்கு தொப்புள் கொடியை எடுத்து வந்துள்ளனர். வீட்டின் தெற்குப் பக்கமாக ஆழ குழிதோண்டி அதில் தேங்காய் உடைத்து வைத்து பின் வாழைப்பழம், பனிக்குட பை ஆகியவற்றையும் சேர்த்து வைத்து குடும்பத்தில் உள்ள அனைவரும் பிரார்த்தனை செய்திருக்கின்றனர். பின்னர் அப்படியே அந்த தொப்புள் கொடியை புதைத்துவிட்டனர்.

அந்தக் குழந்தைக்கு “பிரணவ்” என்று பெயர். தற்பொழுது பதினைந்து வயது நிரம்பிய சிறுவன். தமிழ், மலையாளம், ஆங்கிலம், இந்தி போன்ற பல்வேறு மொழிகளை சரளமாக பேசுகிறார். அவருடைய ஆரோக்கியம், ஆற்றல், சுறுசுறுப்பு ஆகியன நிச்சயமாக அவர் வயதுடைய மற்றவர்களுக்கு இருக்காது.

கேரளாவில் நகைச்சுவைக்காக இப்படி சொல்வது வழக்கம். அதாவது யாராவது குறும்பு செய்து கொண்டிருந்தால் “உன் தொப்புள் கொடி புதைத்த இடத்தில் பூனை கடித்துவிட்டு சென்று விட்டதா? நீ பூனைபோல நடந்து கொள்கிறாயே?” என்று கேட்பார்களாம்.

யாராவது தந்திரமாக செயல்படுகிறார்கள் என்றால் “உன் தொப்புள் கொடி புதைத்த இடத்திலிருந்து நரி தூக்கி சென்று விட்டதா? அதனால் தான் நீ தந்திரமாக இருக்கிறாய்” என்று கூறுவார்களாம்.

இவ்வாறு பக்தியுடன், பிரார்த்தனையுடன் சரியான நிலத்தில் புதைக்கவேண்டிய நமது உயிரை மருத்துவமனைகளில் தற்பொழுது குப்பைத் தொட்டியிலும், பாத்ரூமிலும், கழிப்பறையிலும் போடும் அவலம் ஏற்பட்டிருக்கிறது. இதைக் கூட கற்றுக் கொடுக்காத ஒருதுறைக்கு பெயர் மருத்துவத் துறையா? யோசியுங்கள்.

இரண்டு நிமிடங்கள் தாமதமாக தொப்புள் கொடியை வெட்டினாலே குழந்தை ஆரோக்கியமாக இருக்கும் எனும் நிலையில் பத்து நாட்களுக்குப் பின்னர் தானாக தொப்புள் கொடிவிழுந்திருக்கிறது. அந்த குழந்தைக்கு (பிரணவ்) எவ்வளவு ஆற்றல் இருக்கும் என்று யோசியுங்கள். அக்குழந்தையான பிரணவிற்கு ஒரு

தடுப்பூசியும் போடப்படவில்லை. மருத்துவமனைக்கு சென்றதே இல்லை. ஆனால் ஆரோக்கியமாக, நிம்மதியாக வாழ்ந்து வரும் ஒரு திறமையான குழந்தை.

பிரணவ் இதுவரை கல்வி கற்க பள்ளி சென்றதே இல்லை. ஆனால் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டுதான் இருக்கிறார். பள்ளிக்கூடம் அனுப்பாமல் குழந்தைகளை எப்படி படிக்க வைப்பது என்பதை நாம் பிறகு பார்க்கலாம்.

பிரணவ் பிறந்து, வளர்ந்தது எல்லாம் அமெரிக்கா தான், ஆனால் அவரை நேரில் பார்க்கும் எவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர் என்று கூறிவிட முடியாது. அந்த அளவிற்கு அவர் தனது தொப்புள் கொடியை புதைத்த இடத்தின் தன்மையான கேரள மாநிலத்தை சேர்ந்தவர் போன்று தான் இருப்பார்.

பல நாடுகளுக்குச் செல்லும் இவர்கள் கடைகளில் விற்கப்படும் வாட்டர் பாட்டிலை வாங்கி குடிப்பதே இல்லை. அங்குள்ள குழாய் தண்ணீரைத்தான் குடிக்கிறார்கள்.

பிரணவ் தன் பெற்றோர்களிடம் கேட்கும் மிக முக்கியமான கேள்வி, "என்னை ஏன் இன்னும் அமெரிக்காவில் வைத்திருக்கிறீர்கள்? நான் கேரளா செல்கிறேன். அதுவே எனது தாய்நாடு" என்று கூறுகிறாராம்.

ராபின் லிம் என்ற ஆயா அமெரிக்காவிலிருந்து தற்பொழுது இந்தோனேஷியாவிற்கு சென்றுவிட்டார். அங்கு பலருக்கு சுகப்பிரவசங்களை பார்த்து உதவி செய்து வருவதில் அங்கு மிகவும் பிரபலமாகிவிட்டார். ராபின் லிம்மின் ஆசை என்னவெனில் தான் இத்தகைய விசயங்களைக் கற்றுக் கொள்ள உதவிய இந்தியாவிற்கு வந்து சேவை செய்யவேண்டும் என்பதுதான்.

எனவே ராபின் லிம் என்ற ஆயாவைப் பற்றி பெருமையாகப் பேசுவதற்கு நாம் இந்த கட்டுரையை எழுதவில்லை. அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த ராபின் லிம், இந்தியாவில் சில விசயங்களைக் கற்றுக் கொண்ட அவரே இவ்வளவு பெயருடனும், புகழுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது நாம் நமது பொக்கிஷங்களான நமது தாத்தாக்களையும், பாட்டிகளையும் மதிக்கவேண்டும். என்பதற்காகக் தான் அவரைப்பற்றி இங்கு குறிப்பிடுகிறோம்.

நமது வீட்டில் உள்ள தாத்தா பாட்டியினர்க்கு உள்ள அறிவு உலகில் வேறு எவருக்கும் இல்லை. ஆனால் நாம் அதை மதிப்பதில்லை. இனிமேலாவது நமது முன்னோர்களும், நமது தாத்தா, பாட்டியினர் விட்டுச் சென்ற வைத்திய முறைகளையும், அறிவையும், பொறுமையாக அவற்றை கவனித்து புரிந்துகொண்டு செயல் படுத்தினால் போதும், நம்முடைய சந்ததி நன்றாக, ஆரோக்கியமாக வாழும், வளரும்.

இந்தியா, இலங்கை, பர்மா என எல்லா நாடுகளிலும் உள்ள ஊர்களில், தெருக்களில் பல ராபின் லிம் ஆயாக்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேடுவோம். அவர்களுக்கு மரியாதை கொடுத்து பல நல்ல விசயங்களை அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வோம்.

திரு. பிரதீப், பிரியா தம்பதியினர் தங்களுக்கு சுகப்பிரசவம் ஏற்பட வழி ஏற்படுத்திக் கொண்டதைப் போன்று தங்கள் இரு நண்பர்களின் மனைவியருக்கும் சுகப்பிரசவம் ஏற்பட உதவி செய்திருக்கின்றனர். அதில் ஒருவர்

ஆந்திராவைச் சேர்ந்த திருமதி. ஜோதி. ஜோதி தனது குடும்பத்தாருடன் அமெரிக்காவில் வசித்து வருகிறவர் ஆவார். பிரசவம் ஏற்படக் கூடிய சமயத்தில் பிரதீப் தம்பதியினரைப் போன்று மருத்துவமனைக்கு சென்றிருக்கின்றனர். சுகப்பிரசவம் ஏற்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டு மருத்துவர்களிடம் இது பற்றி தெரிவித்து அதற்கு உதவும்படி கோரிக்கை வைத்துள்ளனர். ஜோதி அவரது கணவர் மற்றும் பிரதீப், பிரியா ஆகியோரும் இவர்களுடன் அச்சமயத்தில் மருத்துவரை சந்தித்துள்ளனர்.

பிரசவ வலி அதிகரித்தவுடன் பிரசவ வார்டிற்கு ஜோதி கொண்டு செல்லப்பட்டுள்ளார். அந்த வார்டினுள் ஜோதியுடன் ஒரு மருத்துவர், நான்கு நர்சுகளும், பிரியாவும், ஜோதியின் கணவரும் இருந்தனர். பிரதீப் மட்டும் அறைக்கு வெளியே வந்துவிட்டார்.

அந்த அறைக்குள் இருந்த மருத்துவரும், நர்சுகளும், இவர்களைப் பார்த்து ஆச்சர்யப்பட்டு இருக்கின்றனர். அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் மட்டும் வைக்கப்பட்டது. நீங்கள் அமைதியாக இருங்கள். நாங்களே பிரசவம் பார்த்துக் கொள்கிறோம் என்று கூறி தங்கள் வேலையை ஆரம்பித்து இருக்கின்றனர். நடப்பதையெல்லாம் கவனித்த அந்த மருத்துவருக்கும், நர்சுகளுக்கும் எல்லாம் ஒரே ஆச்சர்யமாக இருந்திருக்கிறது.

வழக்கம் போல பிரசவ வலி ஏற்படும் சமயத்தில் லலிதா சகஸ்ரநாமத்தினை ஜெபித்து இருக்கின்றனர். மூச்சுப்பயிற்சி கற்றுக் கொடுத்து அதை அவ்வாறே செய்ய சொல்லி இருக்கினறனர்.

இந்த இடத்தில் நாம் ஒரு விசயத்தை தெளிவுபடுத்துகிறோம். பிரசவ வலி ஏற்படும் சமயத்தில் வலி இருக்கும் அந்த இடத்தை கவனத்தில் வைத்து மூச்சுப்பயிற்சி செய்தால் குழந்தையின் அம்மாவிற்கு அது தாங்கிக் கொள்ள கூடிய இலேசான வலியாக மட்டுமே இருக்கும். எனவே வலி இருக்கும் இடத்தை கவனத்தில் வைத்து மூச்சுப் பயிற்சி செய்ய வேண்டும்.

கடலில் நீர்ச்சறுக்கு விளையாட்டு வீரர்கள் விளையாடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதற்கு “சீ டைவிங்” (Sea Diving) என்று பெயர். காலில் தட்டையான ஒரு தட்டினை மாட்டிக் கொண்டு கடலலைகளின் மீது இலாவகமாக வீரர்கள் ஊர்ந்து செல்லும் ஒரு பயிற்சியினை செய்வார்கள். கடலில் ஒவ்வொரு அலையை எதிர்கொள்ளும் பொழுதும் அந்த அந்த அலையின் மீது எகிறிக் குதித்து அதன் மீது ஊர்ந்து வருவார்கள். இவ்வாறே ஒவ்வொரு அலையையும் சுலபமாகக் கடந்து கடல் நீரில் சறுக்கி விளையாடுவதை நாம் கவனித்திருப்போம். இதே போன்று வலி என்பதை அலையாக கற்பனை செய்து கொண்டு மூச்சுப்பயிற்சி செய்வது காலில் தட்டினை மாட்டிக் கொண்டு கடலலைகளில் ஊர்ந்து கடப்பதற்கான சாதனமாக அதைக் கருதவேண்டும்.

அதாவது பிரசவ வலி ஏற்பட்ட ஒரு பெண்மணி அந்த வலி என்னும் அலையின் மீது மூச்சுப்பயிற்சி எனும் தட்டை வைத்து கவனித்து வந்தாலே அந்த அலை தானாக கடந்து மறைந்துவிடும்.

இவ்வாறு மூச்சுப்பயிற்சியும், மந்திரங்களும் ஜெபிக்கும் அந்த வேளையில் ஜோதியைப் பரிசோதித்த மருத்துவர் பிரசவம் நடப்பதற்கு பதினான்கு மணிநேரம் ஆகும் என்று கூறி இருக்கிறார். ஆனால் ஒரே

மணிநேரத்தில் குழந்தை எந்த ஒரு சிக்கலும் இன்றி சுகப்பிரசவத்தில் இனிதே பிறந்திருக்கிறது. அந்த மருத்துவருக்கோ ஒரே ஆச்சர்யம். ஏனென்றால் அந்த மருத்துவர் பார்க்கும் 300வது பிரசவம் அது. அவர் அதற்கு முன்பு வரை பார்த்த அனைத்து பிரசவங்களும் கத்தியால் அறுக்கப்பட்ட பிரசவங்களே ஆகும். அந்த மருத்துவர் கூறியிருக்கிறார். "நான் வாழ்நாளில் பார்த்தவற்றிலேயே கத்தியின்றி பார்த்த பிரசவம் இதுதான்" என்று கூறி நமது மரபு கலாச்சார முறைக்கு அவர் தாள் பணிந்திருக்கிறார். மேலும் அந்த மந்திரங்களையும், மூச்சுப்பயிற்சி பற்றியும் ஆங்கிலத்தில் குறிப்பு எழுதிக்கொண்டு சென்றுள்ளார்.

45நிமிடங்கள் கழித்து பனிக்குட பை வெளியே வந்து விழுந்திருக்கிறது. ஜோதியின் பெற்றோர்கள் பனிக்குடப் பையினை பத்துநாட்கள் வரை வைத்திருக்கத் தயாரில்லை என்பதனாலும் அவர்களின் வற்புறுத்தலாலும் தொப்புள் கொடி அப்பொழுதே வெட்டப்பட்டு உள்ளது.

விலங்குகள் குட்டிகளை ஈன்றவுடன் தனது நாவால் நக்கி சுத்தம் செய்கின்றன. விலங்குகளுக்கு தண்ணீர் கூட இல்லை. நமக்கோ எல்லாமே இருக்கிறது. ஆனால் தொப்புள் கொடியை வெட்டிவிடுகிறோம்.

பிரணவ் தூங்க வேண்டும் என்றால் அவர்களது பெற்றோர் "ஐகிரி நந்தினி" என்று உச்சரிக்க ஆரம்பித்தால் போதும் தூங்கி விடுவாராம். பிரசவ சமயத்தில் எதை உச்சரிக்கிறோமோ அந்த மந்திரத்திற்கு மிகவும் சக்தி இருக்கிறது. எனவே பிரசவ சமயத்தில் நல்ல வார்த்தைகளையே உச்சரிக்க வேண்டும்.

அன்பர்களே! நண்பர்களே! நான் இதுவரை பார்த்த கேள்விப்பட்ட வரையில் ஒரிஜினல் அக்மார்க்க தூய ஆர்கானிக் குழந்தை என்று பிரணவைக் குறிப்பிடுகிறேன். எனவே குழந்தைப் பெற விரும்புவோர் இதுபோன்ற முறையில் சுகப்பிரசவமாக குழந்தைகள் பிறக்கவேண்டும் என்று விரும்புவோமாக!

தடுப்பூசிகள், மருந்து, மாத்திரைகள் என எதுவும் இல்லாமல் மருத்துவமனைக்கும் செல்லாமல் கத்தியைப் பயன்படுத்தாமல் சுத்தமான ஆர்கானிக் குழந்தைகளைப் பெற்று சமுதாயத்தில் அக்குழந்தைகளை சிறப்பாக வளரப்போமாக !

இது தொடர்பான மேலும் விபரங்களுக்கு திரு. பிரதீப்குமார் அவர்களை ஈமெயில் மூலம் தொடர்பு கொள்ளலாம்.
ஈமெயில் : pradeepkumar@hotmail.com

மேலும் இவரை நேரடியாக தொடர்புகொள்ளவேண்டும் என்று விரும்புவோர் நமது வாடிக்கையாளர் சேவை எண்களில் தொடர்புகொண்டு அவரது தொலைபேசி எண்களைப் பெறலாம்.
இந்தியா : +91 9500378441, 9500378449.

மருட்டி சுகப்பிரசவம் செய்வோம் !
மகிழ்ச்சியாக வாழ்வோம் !!

பாகம் 7



# குழந்தை வளர்ப்பு

(முதல் ஒரு வருடம்)

இந்தக் கட்டுரையில் முதல் ஒரு வயது வரை குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதை விரிவாக எழுதியுள்ளோம். அதைப் படித்துப் புரிந்து கொள்ளுங்கள்.

இந்த கட்டுரை மூலம் குழந்தை பிறந்த நொடி முதல் ஒரு வயது வரை என்ன செய்யவேண்டும் என்பதை தெளிவாக கற்றுக் கொடுக்கிறார் டாக்டர். மாதேஸ்வரன்.

குழந்தை பிறந்தவுடன் வீட்டுக்குக் கொண்டு வந்த பின் ஓராண்டு வரை எவ்வாறு உடல் ரீதியாக பேணுவது என்று இப்பகுதி பெற்றோர்களுக்கு வழிகாட்டும். டாக்டர் மரியா மாண்டிசோரி அம்மையாரின் குழந்தை வளர்ப்பு பயிற்சி Infancy Training Sessions மூலம் இதை அறிகிறோம். நாட்டுக்கும், சூழ்நிலைக்கும் தட்பவெட்பத்துக்கும், வாழ்வியல் முறைக்கும் ஏற்ப மாற்றங்கள் வரும்.

வீட்டில் உள்ளவர்கள் தாய் - சேய் நலனின் அக்கறை கொண்டு உறுதுணை செய்க ! குறிப்பாக கணவன்.

தாயும் சேயும் மிக நெருக்கமாக இருக்கவேண்டிய சூழலை ஏற்படுத்துக.

அவர்களின் தனிமை மிக முக்கியம். குறிப்பாக அடுத்த 41 நாட்களுக்கு இருவரும் ஆழமான உடல் மனம் ஆகிய தன்மையில் ஒருங்கிணைய இத்தனிமை அவசியம். கணவன் கூட தேவையில்லாமல் குறுக்கிட வேண்டாம்.

இத்தனைக் காலம் வயிற்றுள் இருந்த கரு இப்போது முதன்முதலில் வெளியுலகை காண்பதால் அதற்கு அச்சூழலை ஏற்கக் கால அவகாசம் தேவை.

முதல் 41 தினங்களுக்கு அளவான தொடுதலுடன் பிறர் அதிக சத்தம், அதிகம் தூக்குதல் இல்லாமல் சேயை விடுதல் அவசியம்.

யார் தாய்க்குப் பணிவிடை செய்கிறாரோ அவர் அதிகம் கையாள்க.

வீட்டில் உள்ளவர்கள் அதிகம் கூட்டம் போட்டு சத்தம் போடுவதை தவிர்ப்பது மிக அவசியம்.

அதீத வெளிச்சம், அதீத சத்தம்,

அதீத அதிர்ச்சிகள் தாயையும் சேயையும் பாதிக்கும்.

இக்காலக்கட்டத்தில் வீட்டில் உள்ளவர்கள், குறிப்பாகத் தம்பதிகள் வீண் சண்டை சச்சரவுகளைத் தவிர்ப்பது நலம்.

**தாய் - சேய் அறை**

சுத்தம், சுகாதாரம், இயற்கையான தட்ப வெப்பம் (வாழும் பூமிக்கு ஏற்ப காற்றோட்டம், மிதமான வெளிச்சம் தினமும் இருவேளை கூட்டிப்பெருக்கித் தண்ணீரால் துடைத்தல், தூய்மையான படுக்கை, கருப்பு, வெள்ளை விரிப்பு கூடிய வரை பருத்தி விரிப்புகள் அவசியம். கூடிய மட்டும் ஈரமற்ற துணிகள் பயன்படுத்துக. டயாஃபர் தவிர்த்திடுக. அதன் மூலம் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதை உளவியல் ஆய்வுகள் காட்டும்.

மிதமான ஏ.ஸி, (அதைத் தவிர்த்தல் நலம்), மின்விசிறிக் காற்று சுவற்றில் வெளிர்பச்சை, வெளிர் மஞ்சள், வெளிர் நீலம் அல்லது தூய நாட்டுச் சுண்ணாம்புப் பூச்சு இருத்தல் நலம்.

அழகான இயற்கைக் காட்சி கொண்ட படம் சுவற்றில் தொங்கலாம். அது குழந்தையின் கண்பார்வைக்கு நேராக இருத்தல் அவசியம்.

அறையின் ஓர் ஓரத்தில் தரமான அலமாரியில் தாய் சேயின் உடைகள், கழிவறைப் பொருட்கள், குழந்தையின் பொருட்கள் மிக நேர்த்தியாக ஒழுங்குடன் இருப்பது அவசியம். கழிவறையின் சுகாதாரம் மிக மிக முக்கியம். முடிந்தவரை இயற்கையான குளியல் பொருட்கள் பயன்படுத்துக.



**தாய்க்கு சில முக்கிய டிப்ஸ்...**

தூக்கம், பால் கொடுத்தல், உங்கள் உணவு, குளியல், மக்கள் தொடர்பு ஆகியன கூடிய மட்டும் காலம் தவறாமையுடன் இருக்கட்டும்.

அதன் மூலம் குழந்தைக்குள் முறைப்படுத்தல் (Regularity) வரும் மன அழுத்தம். முறைபடுத்தல் தேவையில்லாத பிரச்சனைகள் ஆகியவற்றை தலையில் ஏற்றிக் கொண்டு சேயைக் கையாளாதீர்.

அதன் உடலும் மனமும் மிகமிக மிருதுவானது (Sensitive). உங்கள் அதிர்வலைகள் மிக விரைவில் சேயை பாதிக்கும் என்பதில் கவனம் கொள்க.

குழந்தையிடம் மிக மிதமான குரலில் சரியான தாய்மொழியில் பேசிக் கொண்டே இருங்கள்.

உதாரணமாக இப்போ "அப்பா வருவார். உன்னைப் பாட்டி தான் கொஞ்ச நேரம் கையில் தூக்குவார். நான் சிறிது நேரம் அப்பாவிற்குத் தேவையானதைச் செய்து விட்டு இருவரும் உன்னிடம் வருவோம்." முடிந்த வரை சேயை முன்கூட்டியே தயார் செய்க. கூடிய மட்டும் எல்லோரும் ஒரே பக்கம் கைகளால் தூக்குவது நலம்.

வீட்டுக்கு விருந்தினர் வரும் முன் அதைக் குறித்துக் கூறுக. குழந்தையின் ஆழ்மனம் அதை ஏற்கும் புரிந்து கொள்ளும்.

**இரவில்...**

சரியான வேளையில் உண்க.

தொலைக்காட்சி தவிர்த்தல் நலம். அலைப்பேசியை அதிகம் பயன்படுத்தாதீர். அதிகம் குழந்தையை உடல் மன ரீதியில் அணுகுக.

இரவில் கூடிய மட்டும் மென்மையாக சேயை அணைத்துக் கொண்டு உறங்குக.

அடிக்கடி இரவில் சேயைப் பார்த்துத் தடவித் தருக.

மார்பிலும் வயிற்றின் மீதும் குழந்தையை சாய்த்துக் கொள்வது மிக முக்கியம். அப்போது இருவருக்கும் இடையில் ஒரு வித அலை அணுக்கள் ஈர்ப்புடன் பாய்வதாக ஆய்வுகள் காட்டும்.

இரவில் சேயின் பசிக்குரல் அழைத்த பின்னே பால் தருக.

ஏனோ நாம் கொடுத்தோம் தூங்கினோம் என்று இருக்க வேண்டாம். இரவில் மிக அதீத சத்தம் இல்லாமல் இருக்கட்டும்.

முதல் 41 நாட்களுக்குக் கணவன், மனைவி உறவும் முற்றும் சேய் நலனுக்காக விலகியே இருக்கட்டும்.

கணவன் சேயை மிக அன்புடன் மென்மையுடன் கையாள்வது அவசியம்.

**முதல் மூன்று, ஆறு மாதங்களுக்கு...**

அதிக நகைகள், இறுக்கமான உயர் ரக பட்டு ஆடைகள் தவிர்ப்பது நலம் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற ஆடைகள் மிக முக்கியம்.

மூன்று மாதங்கள் கழித்தே கண்கள் வண்ணங்களை அடையாளம் கொள்ளும் அதன் பின்னே வண்ணங்கள் பயன்படுத்துக.

**பாலூட்டுதல்**

மன அழுத்தம், கோபம் இருக்கும் போது பால் ஊட்டுவதைத் தவிர்த்திடுக. பால் ஊட்டும் போது நல்ல பாஸிட்டிவ் எண்ணங்களுடன் ஊட்டுக.

இறை நாமம் மனதுள் சொல்லிய படி பால் ஊட்டுவது உயர்ந்தது. குழந்தையின் மேன்மையான உயர் குணங்கள் குறித்துப் பாராட்டி மனதுள் பேசியபடியே பாலூட்டுக.

அக்காலத்தில் மூன்று ஆண்டுகள் வரை பாலூட்டினர்.

இப்போது பால் சுரக்கும் வரை ஊட்டுக. அதனுடன் தாயின் மனோபாவம் மிக மிக முக்கியம்.

**தொட்டில் படுக்கை...**

தரையிலிருந்து நிற்கும் போது, அவரது அடிவயிற்றின் உயரத்தில் தொட்டில் தொங்குவது கர்ப்பப் பையின் உயர அளவுக்கு இணையாகும்.

தொட்டில் என்பது கர்ப்பப் பையின் மறுவடிவம். கூடிய மட்டும் தாய், பாட்டி, அத்தை. தாய் மாமன் வேட்டி ஆகிய வற்றிலோ தூய வெள்ளாடையிலோ தொட்டில் இடுவது மிக முக்கியம்.

முன் பின் ஆட்டுவது மிக முக்கியம். குழந்தையின் முதுகின் தண்டுவடத்தின் நேர் கீழ் தரையில் இரும்புத் துண்டு இடுவது அதன் முதுகு தண்டின் சக்தி (Spinal Energy) யை பூமியின் ஈர்ப்பு சக்தியால் பாதிப்பு (Disturb)ஆகாமல் இருக்கும்.

தாலாட்டுப் பாடுவது மிக நன்று. இதுமொழி வளர்ச்சிக்கு உதவும். அதே வேளை தரையிலும் தரமான மென்மையான விரிப்பின் மீது படுக்க வைத்துப் பழக்கவும்.



வெயில் காலத்தில் கோரைப்பாய் விரிப்பு நல்லது. இறுக்கமான காலணிகள், ஷீ இறுக்கிய உடைகள் கைகளை இறுக்கும் ால், ஸ்வெட்டர் ஆகியன தவிர்த்தல்.

கைகளும், கால்களும் எளிதில் நாலாபுறமும் இயங்கும் வண்ணம் விடுக. கண்கள் நன்கு சுழன்று பார்க்க வேண்டும்.

மேற்கத்திய தேசங்களில் படுக்கையைக் கீழே போடுகிறார்கள். அதுவும் சுவற்றை ஒட்டியே போடுவர். படுக்கை மிக உயரமாக இருக்கக் கூடாது. தரையில் தரமான விரிப்பு பயன்படுத்தவும் குழந்தை நீந்த ஆரம்பித்தவுடன் தரையில் அதிகம் உலாவவிடுக. தடை செய்யாதீர்.பின் தலை அடிபடா வண்ணம் விரிப்பு கனமாக இருக்கட்டும்.

மேற்கத்திய தேசங்களில் சுவற்றில் படுக்கையை ஒட்டிக் கண்ணாடியும் பெரிதாய் மாட்டி அதில் சேய் தன்னை, தன் செயலைக் காண வழி செய்கிறார்கள் சுய அடையாளம் காணுதலில் வளர்ச்சி. (Self Identity Development) என்று இதைக் கூறுவர்.

அலைப்பேசி குழந்தையின் தலைக்கு அருகில் இருக்கக் கூடாது. அலைப்பேசியை கையில் தராதீர். கைகள் விரிந்து, விரல்கள் மூடித் திறக்கும் வண்ணம், பிடிமானம் கொள்ளும் வண்ணம் சிறிய மரச்சாமான் பொம்மைகள் தருக.

நீந்தும் காலத்தே தரையில் சற்று இயக்கம் (Movement) செய்யும் பொம்மைகள் தருக.

குழந்தையின் பொருட்கள் மிக நேர்த்தியாக இருத்தல் அவசியம். ஆபத்து இன்றி அக்குழந்தை எதையும் செய்யவிடுக.

உட்காரும் நடைவண்டி (Seating Walker), உருளும் நடைவண்டி (Rolling Walker) ஆகியன தவிர்த்திடுக.

Please avoid artificial nipples (pacifier) to chew.

செயற்கையாக தயாரிக்கப்பட்ட நிப்பிள்கள் பயன்படுத்த வேண்டாம். இயற்கைக்கு எதிராக எதையும் விரைவில் செய்ய ஊக்குவிக்கக் கூடாது.

But Please expose to nature, weather and take care.

அந்தந்தப் பருவத்தில் சில முக்கிய செயல்பாடுகள் வளரவில்லை எனில் மருத்துவரை அல்லது நியூரோதெரபி சிகிச்சையை நாடலாம்.

மாற்றுத் திறனாளிக் குழந்தைகளை மிக எளிதில் அடையாளம் காணலாம். தயவு செய்து தாமதிக்காமல் குடும்ப கௌரவம், பட்சாதாபம், சுய கௌரவம் பார்க்காமல் மருத்துவரை அல்லது நியூரோதெரபி சிகிச்சையை நாடலாம். (அத்தகைய சேய் பிறக்கக் கூடாது என்று தெய்வ சத்தியத்தை பிரார்த்திக்கிறோம்.)

கொசுவலை அவசியம், நடைவண்டி தரலாம். இடுப்பில் அமர்த்தி, கையால் முதுகை வளைத்து இந்திய முறைப்படித் தூக்குக. அதுவே கழுத்து எலும்புக்கும் தண்டு வடத்துக்கும் நன்மை செய்யும்.

"உதை, குத்து, மூத்திரம் போ, கதவை அடிக்கலாம் போன்றவாறு பலவும்.

அன்பின் அதீதத்தால் தவறான செயல்பாடுகள் பேச்சுக்கள் கூடாது.

இது அக்கா, இது மாமி உன்னைப் பார்க்க வந்திருக்கிறார். அவரிடம் போ என்று உறவு வளர்க்க.

அழகு பொம்மைகள் (Fancy Toys) வாங்கிக் குவிக்காதீர். அதற்கு பதில் கைகள் நன்கு இயங்கும் பொம்மைகள் தருக.

வித விதமான சப்த ஒலிகள், இயற்கை காட்சிகள் அறிமுகம் அவசியம். சரியான தரமான தாய்மொழியில் பேசுக.

பயங்கர சண்டை, கோரக் காட்சிகள், அதீத சப்தம் தவிர்த்தல் வேண்டும்.

உட்காரும் காலத்தில், நிற்கும் காலத்தில், தவழும் காலத்தில் , நடக்கும் காலத்தில் சுதந்திரம் தருக. ஆனால் கவனமாக அருகில் இருந்திடுக.

எல்லோரிடமும் குழந்தை போக வேண்டும், பழகவேண்டும் படியான சூழலை மெதுவாக உருவாக்குக.

மிகப் பொறுமையுடன் இருந்தால் தான் தரமான குழந்தை வளர்ப்பு செய்ய முடியும்.

**உட்கிரகிக்கும் மனம் (Absorbent Mind)**

முதல் வாரக் கரு முதல் மூன்றரை வயது வரை மனிதக் குழந்தைக்குள் உட்கிரகிக்கும் மனம் (Absorbent Mind) என்ற மனோ சக்தி விளங்கும். அது ஒரு ஸ்பாஞ்ச் போல் அனைத்தையும் உள்வாங்கி கிரகிக்கும் அதே மனோ சக்தி மனித மனமாக மாறும். அதனால் தான் இத்தனை கவனம். மூன்றரை வயதுக்குள் ஏற்படும் தீய பாதிப்புகளை மாற்றவே இயல்வதில்லை என்று ஆய்வுகள் கூறும்.

“எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவன் ஆவதும், தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பதிலே.” என்ற உயர் ஞானமொழியைக் கருத்தில் கொள்க. தரமான குழந்தையைச் சமூகத்துக்குத் தருக.

இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை நமக்கு அளித்தவர் டாக்டர் மாதேஸ்வரன்.

டாக்டர் மாதேஸ்வரன் பி.எஸ்.ஜி-ல் பயோ கெமிஸ்டரி படித்து மதுரை காமராஜர் பல்கலைக்கலகத்தில் தமிழ் பயின்று, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் Phd., செய்து இரண்டு வருடம் மான்டிசோரி பள்ளியில் பணியாற்றியவர். மூன்றுவருடம் ஈரோடு பாரதிய வித்யாபவனில் பணியாற்றி பத்து வருடம் சென்னை அபாகஸ் பள்ளியில் பணியாற்றியவர். 9 வருடங்களாக யுனி 5 பள்ளியில் டைரக்டராக சேவை செய்பவர்.

பிறந்த நாள் முதல் 5 வயது வரை குழந்தையை எப்படி வளர்க்க, படிக்க, பேணவேண்டும் என்பதை முழு நேரமாக ஆராய்ச்சி செய்து பொதுமக்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறார்.

இவரது சேவை உலகிற்கு தேவை இவருக்கு என் மனப்பூர்வமான நன்றிகள் கோடி.

டாக்டர் மாதேஸ்வரன் அவர்களை தொடர்பு கொள்ள நமது சேவை மையத்தினை அழைக்கவும் : இந்தியா +91 95003 78441, 95003 78449.

வாழ்க வையகம் !
வாழ்க வளமுடன் !!

பாகம் 8



# தாய்மொழி கல்வியே சிறந்தது!

எந்த மொழியில் கல்வி கற்க வேண்டும்? கல்வியை அழிக்கும் ஆங்கில மாயை எனும் தலைப்பில் உள்ள ஒரு மணிநேர ஆவணப்படத்தை வாங்கி முழுவதுமாகப் பார்க்கும் பொழுது கல்வி எந்த மொழியில் இருக்கவேண்டும் என்பது தெளிவாகப் புரியும். மேலும் இந்தப்புத்தகத்தில் உள்ள தாய்மொழி கல்வியே சிறந்தது எனும் கட்டுரையை முழுவதும் நீங்கள் வாசிக்கும் பொழுது தாய்மொழிக்கல்வியின் சிறப்பினை உணர்வீர்கள். இதன் பின்னர் ஆங்கிலவழிக் கல்விக்கு உங்கள் குழந்தையை கல்வி கற்க நிச்சயமாக அனுப்பமாட்டீர்கள்.

கல்வியை எந்த மொழியில் கற்றால் சிறப்பாக புரியும்? ஆனால் நாம் எந்த மொழியில் கற்றுக் கொண்டு இருக்கிறோம்?

மொழி என்பது கல்வியில் எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி இந்த கட்டுரையில் விரிவாகப் பார்க்க இருக்கிறோம்.

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் தேதியன்று பானு வீட்டுக் கல்வி முறை என்ற ஒரு திட்டத்தினை நாம் அறிமுகம் செய்து வைத்தோம். இந்த நிகழ்வு கோவையில் உள்ள கோவைப்புதூரில் அமைந்துள்ள நமது நிஷ்டை சர்வதேச வாழ்வியல் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.ஏராளமானோர் பங்கு கொண்ட இந்த நிகழ்ச்சியில் தோழர். சுரேஷ் என்பவர் என்னை நேரில் சந்தித்து இன்றைய கல்வியைப் பற்றிய ஒரு மணிநேர ஆவணப்படம் ஒன்றின் குறுந்தட்டினை என்னிடம் கொடுத்தார். திரு. வே.பி. வினோத்குமார் என்பவரால் அந்த ஆவணப் படம் மக்கள் திரையின் மூலம் உருவாக்கப் பட்டிருந்தது. அந்த ஆவணப்படத்தின் தலைப்பு “கல்வியை அழிக்கும் ஆங்கில மாயை.” இந்த ஆவணப்படத்தில் கல்வி என்றால் என்ன?ஒரு குழந்தை எந்த மொழியில் படிக்கவேண்டும்? தமிழ்நாட்டில் தற்பொழுது தாய்மொழிக் கல்வியின் நிலை என்ன? போன்ற அனைத்து கேள்விகளுக்கும் மிக தெளிவாகவும், விளக்கமாகவும் கூறப்பட்டு இருந்தது. இந்த ஆவணப் படத்தின் மூலம் கல்வி குறித்து நான் கற்றுக் கொண்ட விசயங்களை இப்பொழுது உங்களுடன் பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

ஒரு குழந்தை தாய்மொழியின் மூலம் கல்வி கற்றால்தான் அக்குழந்தைக்குப் புரியும். வேறு மொழியில் கல்வி கற்கும் பொழுது அரைகுறையாகப் புரிந்து கொள்ளும் அல்லது தவறாகப் புரிந்து கொள்ளும். இதனைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும், கல்விதுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் புரிந்து கொண்டால் மட்டுமே கல்வியை ஒழுங்குப்படுத்த முடியும்.

உதாரணமாக ஆங்கிலவழிக்கல்வி (English Medium) கற்பிக்கும் பள்ளிகளில், ஆசிரியர்கள் பல மணிநேரம் ஆங்கிலத்தில் பாடம் நடத்துகின்றனர். பல குழந்தைகளுக்கு அந்த பாடங்கள் அரைகுறையாகப் புரிகிறது. பல குழந்தைகளுக்கு அது புரிவதே இல்லை. அந்தப்பாடம் தங்களுக்கு புரியவில்லை என்று புரியாத மாணவர்கள் ஆசிரியர்களின் அறைக்கு தனியே சென்று சந்தேகங்களை கேட்கின்றனர். அப்பொழுது அதே ஆசிரியர்கள் ஆங்கில மொழியில் ஒரு மணிநேரம் வகுப்பில் நடத்திய பாடத்தினை ஐந்தே நிமிடத்தில் தமிழில் கூறும்பொழுது அந்த மாணவர்களுக்கு எளிதில் புரிந்துவிடுகிறது. இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் கர்ப்ப காலத்தில் ஒரு குழந்தை எந்த மொழியைக் கேட்கிறதோ அந்த மொழியே தாய்மொழியாகும். அந்த மொழியில் ஒரு விசயத்தைக் கற்றுக் கொள்ளும் பொழுது மட்டுமே அக்குழந்தைகளுக்கு புரியும். அதை விட்டுவிட்டு ஐந்து வயதிற்கு மேல் பத்து வயதிற்கு மேல் கற்றுக் கொள்ளும் அன்னிய மொழிகளின் மூலம் எந்த ஒரு விசயமும் சரியாகப் புரியாது.



தாய்மொழி என்று நான் குறிப்பிடும் பொழுது தமிழ்மொழியை மட்டும் நான் குறிப்பிடவில்லை. உதாரணத்திற்கு கேரளாவில் இருக்கும் மாணவர்கள் மலையாளத்தில் படித்தால் மட்டுமே புரியும். ஆந்திராவில் வசிக்கும் மாணவர்கள் தெலுங்கில் படித்தால் மட்டுமே புரியம். அதாவது இந்த கட்டுரையில் தாய்மொழி என்று குறிப்பிடப்படுவது தமிழ்மொழியை மட்டும் அல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

எனவே தாய் மொழிக் கல்வியை உடனடியாக உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மட்டும் தான் நமது சந்ததிகளுக்கு ஒழுங்கான, பயனுள்ள கல்விமுறை கிடைக்கச் செய்ய முடியும்.

2012 - 13 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள 320 அரசு தமிழ்வழிப் பள்ளிகளை ஆங்கில வழிப் பள்ளிகளாக தமிழக அரசு மாற்றியது. 2013-14 ஆம் கல்வி ஆண்டில் 3200 அரசுப்பள்ளிகளையும், 2014-15 ஆம் கல்வி ஆண்டில் 6594 அரசுப் பள்ளிகளையும் தமிழ் வழிக் கல்வியிலிருந்து ஆங்கில வழிக்கல்வி கற்பிக்கும் பள்ளிகளாக தமிழக அரசு மாற்றியிருக்கிறது. இந்த அறிவிப்பை அப்பொழுது தமிழக முதல்வராக இருந்த செல்வி. ஜெயலலிதா அவர்கள் அதிகாரப் பூர்வமாக அறிவித்திருந்தார்.



அரசுப்பள்ளிகளை தமிழ்வழியிலிருந்து ஆங்கில வழிக்கல்விக்கு மாற்றியதற்கு முக்கியக் காரணமாக தமிழக அரசு கூறுவது என்னவெனில், மக்கள் அரசுப் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளை சேர்க்க முன்வருவதில்லை. மக்கள் தனியார் பள்ளிகளில் தங்கள்குழந்தைகள் கல்வி கற்பதை விரும்பி அங்கே சேர்க்கின்றனர். எனவே தனியார் பள்ளகளில் அளிப்பதைப் போன்ற ஆங்கில வழிக்கல்வி அளிப்பதற்காக அரசுப்பள்ளிகளை ஆங்கில வழிக்கல்விக்கு

மாற்றுவதாக அரசு அறிவித்தது. மேலும் அரசுப் பள்ளிகளில் ஒவ்வொரு கல்வி ஆண்டிலும், மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கிறது என்பது மற்றொரு காரணம். ஆங்கிலம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் தங்கள் குழந்தைகளை ஆங்கிலவழி கற்பிக்கும் தனியார் பள்ளிகளில் சேர்ப்பதாகவும் காரணங்கள் கூறுகின்றனர். இவ்வாறு பல காரணங்களை முன்னிறுத்தி இத்திட்டத்தினை அமுல்படுத்துவதாக, தமிழக அரசு அறிவித்துள்ளது. இதை யாரும் கண்டிப்பாக ஒப்புக் கொள்ள முடியாத ஒரு விசயமாகும்.



தனியார் பள்ளிகள் அனைத்தும் அனைத்து வசதிகளுடன் உள்ள பொழுது அரசு பள்ளிகள் ஏன் அவ்வாறு இல்லை.

ஆங்கிலம் கற்றுக் கொள்வது தான் பிரச்சனை என்றால் அரசுப்பள்ளிகளில் ஆங்கிலம் கற்றுக்கொடுக்க ஒரு ஆசிரியரை நியமித்தால் போதுமே?

அரசு பள்ளிகள் ஒழுங்காக இல்லை என்பது தமிழக அரசின் கையாலாகாத தனமே தவிர பொதுமக்களின் மீது குறை சொல்வதை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அரசினர் தமிழ்வழிப் பள்ளிகளை ஆங்கில வழி பள்ளிகளாக மாற்றியதன் மூலம் நமது சந்ததியினர் நிச்சயம் மிகப் பெரிய கல்விச்சறுக்கலை, சந்திக்க உள்ளனர். தமிழை பள்ளிகளில் இருந்து ஒழித்துவிட்டால் தமிழ் மக்களின் அறிவை ஒழித்துவிடலாம் என்ற எண்ணத்தில் திட்டமிட்டு இதை செய்திருக்கின்றனர்.



"'மக்களுக்காக நான் மக்களால் நான்'' என்று வாய்கிழியப் பேசிவிட்டு மக்களுக்கு துரோகம் செய்கின்றனர்.

"'நான் சொன்னதைத் தான் செய்வேன்; செய்வதைத் தான் சொல்வேன்'' என்று வாய்கிழியப் பேசியவர்கள் தமிழுக்கும், தமிழ்வழிக் கல்விக்கும் துரோகம் செய்கின்றனர்.

"'எங்கள் மண், எங்கள் தேசம்'' என்று மேடையில் மட்டும் கொந்தளித்துப் பேசும் சில வீர, தீர அரசியல்வாதிகள் இதை மட்டும் ஏன் கண்டுகொள்வதில்லை.

இப்பொழுதுள்ள அரசியல்வாதிகள் அனைவரும் தங்களுக்கு ஓட்டுப்போடச் சொல்லி வாக்கு சேகரிக்கிறார்களே, அப்பொழுது தமிழில் கேட்கிறார்களா? அல்லது ஆங்கிலத்தில் கேட்கிறார்களா? அரசின் தமிழ்வழிப் பள்ளிகளை, ஆங்கிலவழிப் பள்ளிகளாக மாற்றிய இந்தகல்வித்துறை அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இன்றுமுதல் இனி ஆங்கிலத்தில் தான்பேசவும் வேண்டும், எழுதவும் வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும். சத்தியமாக அவர்களால் இனிமேல் அரசியலும் செய்ய முடியாது. அதேபோல தங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் இதே போல நடந்து கொண்டால் அவர்களின் தாய், தந்தையர், தாத்தா, பாட்டியினர் என குடும்பத்தில் எவருக்கும் புரியாது. எந்த வேலையையும் முழுமையாக, ஒழுங்காக செய்ய முடியாது. இதை அவர்கள் உணர வேண்டும்.

எனவே நமது தாய்மொழியான தமிழ்மொழியை பாதுகாப்பதன் மூலம்

மட்டும் தான் கல்வி வளர்ச்சி பெற முடியும் எனபதை அனைவரும் இந்த தருணத்தில் உணரவேண்டும்.

**அரசுப்பள்ளிகளை ஒழுங்குபடுத்த சில யோசனைகள்**

1. ஒவ்வொரு அரசுப்பள்ளியிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதற்காக ஆங்கிலத்தில் புலமை பெற்ற ஆசிரியர் ஒருவரை நியமிக்கலாம். ஆனால் அப்படி ஒரு ஆசிரியரை இதுவரை எந்தப்பள்ளியிலும் நியமிக்கப்படவில்லை என்பதே உண்மை.

2. மக்கள் தொகை கணக்கெடுப்பு, குடும்ப அட்டை கணக்கெடுப்பு என்று ஆசிரியர்களுக்கு தேவையின்றி எந்த வேலையையும் கொடுக்காமல் இருந்தாலே அவர்கள் கற்பித்தலில் புதியபுதிய விசயங்களைக் கற்றுக்கொண்டு மாணவர்களுக்கு நிச்சயம் நல்லபடியாக கற்றுக் கொடுப்பார்கள். ஆசிரியர்களுக்கு தேவையற்ற வேலைப்பளுவை சுமத்தாமல் இருந்தால் மட்டுமே குழந்தைகளுக்கு அவர்களால் நிம்மதியாக கற்றுக் கொடுக்க முடியும்.

3. அரசுப் பள்ளிகளில் ஈராசிரியர் முறையை நிறுத்தி ஓராசிரியர் முறையை ஆரம்பிக்க வேண்டும். இப்பொழுதுள்ள அரசுப்பள்ளிகளில் ஒரே ஆசிரியரே அனைத்துப் பாடங்களையும் பல வகுப்புகளுக்கு எடுத்து வருகின்றனர். எனவே இதை மாற்றி ஒரு பாடத்திற்கு ஒரு ஆசிரியர் என்று மாற்ற வேண்டும்.

4. ஆசிரியர்களுக்கு வீட்டுப்பாடங்கள் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஆம் நண்பர்களே! பள்ளிக் குழந்தைகளைவிட ஆசிரியர்களே “ஹோம் ஒர்க்” என்ற வீட்டுப் பாடத்தினை செய்து கொண்டிருக்கின்றனர். பேப்பர் ஒர்க் என்ற பெயரில் தேவையின்றி ஆசிரியர்களுக்கு பல தரப்பட்ட வேலைப் பளுவினை கல்வித்துறை அளிக்கிறது. இதனால் ஆசிரியர்களுக்கு இதை செய்வதற்கே நேரம் சரியாக இருக்கிறது. அவர்களுக்கு புதிய விசயத்தினைப் கற்றுக் கொள்ளவும், மாணவர்களுக்கு பாடம் நடத்தவும் நேரமில்லை.



5. ஆசிரியர்களுக்கு, “ட்ரெய்னிங்” என்ற பெயரிலும் “மீட்டிங்” என்ற பெயரிலும் பல நாட்கள் தேவையில்லாமல் பல விசயங்களை பேசி நேரத்தை வீணடிக்காமல் நல்ல விசயங்கள் மட்டுமே கற்றுக் கொடுப்பதற்கான பயிற்சி வகுப்புகளாக அவற்றை நடத்தினால் நிச்சயம் அரசுப் பள்ளிகள் சிறந்த பள்ளிகளாக விளங்கும்.

**கல்வி தொடர்பாக நாம் சிந்திப்பதற்கு சில விசயங்கள்**

1. தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகளில் செலவை குறைப்பதற்காக குறைந்த சம்பளத்தில் தகுதியில்லாத ஆசிரியர்களையும், வேறுபல இடங்களில் வேலை கிடைக்காத ஆசிரியர்களையும் பணியில் நியமிக்கின்றனர். இதனால் கல்வியின் தரம் குறைகிறது. எனவே தனியார் பள்ளி மற்றும் கல்லூரி நிர்வாகிகள் குறைந்த சம்பளத்தில் ஆசிரியர்கள் வேலைக்கு கிடைக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களை வேலைக்கு சேர்த்துக் கொள்ளாமல் தகுதியுடைய ஆசிரியர்களை பணியில் அமர்த்துவதன் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தலாம்.

2. ஆசிரியர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் நன்றாகத் தெரியுமா ? என்று சோதித்து அறியவேண்டும். பல

ஆசிரியர்களின் நிலை என்னவெனில் அவர்களுக்கே தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகள் ஒழுங்காகத் தெரியாததால் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க முடிவதில்லை.

3. கல்வி எப்பொழுதும் தாய்மொழி வழியில் கல்வி கற்பிக்கப்படுவதாக மட்டுமே இருக்க வேண்டும். உதாரணமாக ஒரு குழந்தையிடம் "சூரியன்" என்றால் என்ன? என்று கேட்கும் பொழுது அந்தக் குழந்தை தெரியாமல் விழிக்கிறது. தமிழை தாய்மொழியாக கொண்ட பெற்றோர்கள் "சன்" என்று சொல்கிறோமே. அதுதான் "சூரியன்" என்று குழந்தைகளுக்கு கூறினால் அந்தக் குழந்தை ஆங்கிலத்தை மையமாக வைத்து தமிழ் கற்றுக் கொள்கிறது இது சரியான கல்விமுறை அல்ல.

சன் என்றால் என்ன? என்ற கேள்விக்கு "சூரியன்" என்று சொல்வது தான் "சன்" என்று குழந்தைகளுக்கு கொடுப்பது தான் சிறந்த கல்வி. எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் "அஸ்திவாரம்" என்னும் ஃபவுண்டேஷன் தாய்மொழியாகத் தான் இருக்கவேண்டும்.

4. ஏ ஃபார் ஆப்பிள் (A For Apple) என்று கற்றுக் கொடுப்பது சரியல்ல, இது தான் ஆப்பிள். இது தான் பந்து என்று அந்தப் பொருளை சுட்டிக் காட்டி கற்றுக் கொடுக்கும் முறையே சிறந்தது.

5. வெளிநாட்டில் வசிப்பவர்கள் நம் நாட்டிற்கு சுற்றுலா வந்து ஊரைச் சுற்றும் பொழுது அரைக்கால் சட்டையும், (பெர்முடாஸ்) டிசர்ட்டும் அணிந்து கொண்டு வருகின்றனர். நம் பகுதியில் வெப்பநிலைக்கு ஏற்றதாய் உடையணிந்து சௌகரியமாக, உடலை இறுக்கமாக பிடித்துக் கொள்ளாதவாறு பார்த்துக் கொள்கின்றனர். ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை நாம் இப்படித்தான் பார்க்கிறோம். ஆனால் பள்ளிக்கு செல்லும் நமது குழந்தைகளுக்கு இறுக்கமான சீருடைகளை அணிவித்து, பெல்ட், டை, ஷீ என்று பலவற்றையும் நாம் அணியச் செய்து நமது பகுதியின் தட்பவெப்ப நிலைக்கும் உடலுக்கும் பொருந்தாதவற்றை குழந்தைகள் மீது திணிப்பது சரியா? இது முறையா? இது தகுமா? சிந்தியுங்கள்.

6. பாடங்களை மனப்பாடம் செய்யும் கல்விமுறை சிறந்தது அல்ல. புரிந்து கொண்டு படிக்கும் கல்விமுறையே சிறந்தது. உங்கள் குழந்தை மனப்பாடம் செய்கிறதா? அல்லது புரிந்து கொண்டு படிக்கிறதா என்பதை ஆராய்ச்சி செய்யுங்கள்.



**கல்வி ஆராய்ச்சியின் நிலை**

பல வருடங்களாக இந்தியாவில் கல்வி சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு முறையும் அதற்கான குழுக்களை அமைத்து அதில் பல அறிஞர்களின் கூட்டு முயற்சியுடன் நமது நாட்டின் கல்வி முறையை மேம்படுத்துவதற்கான ஒழுங்குப்படுத்துவதற்கான செயல் திட்டங்களை வகுக்க அமைக்கின்றனர். இந்த குழுக்கள் பல வருட ஆராய்ச்சிகளுக்குப் பின் அந்த ஆராய்ச்சியின் முடிவை ஒரு புத்தகமாக, அறிக்கையாக தயார்செய்து அதை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுகின்றனர்.

இதுவரை பல்வேறு குழுக்கள் நமது கல்விமுறையை ஆராய்ச்சி செய்து அறிக்கைகளை அரசிடம் சமர்ப்பித்து இருக்கின்றன. அக்குழுக்கள் அனைத்துமே

தாய்மொழிக்கல்வியே சிறந்தது என்பதை வலியுறுத்துகின்றன. இப்பொழுது இருக்கும் கல்விமுறை சிறந்தது அல்ல என்றும் இக்கல்விமுறையில் படிக்கும் மாணவர்கள் நிச்சயம் தலைசிறந்த, பண்புள்ள, திறமையான மாணவர்களாக இருக்க மாட்டார்கள். எனவே உடனடியாக போர்க்கால அடிப்படையில் இந்த கல்விமுறையை மாற்றி தாய்மொழிக் கல்வியை கொண்டு வரவேண்டும் என்று அறிக்கைகள் சமர்ப்பித்து உள்ளனர். ஆனால் இந்த விசயத்தை அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், இலுமினாட்டிகளும் மறைத்து அந்த அறிக்கை தொடர்பான ஆவணங்களை குப்பையில் போட்டிருக்கின்றனர்.

இதுவரை கல்வியை ஆராய்ச்சி செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுக்களின் பெயரும், ஆண்டும் உங்கள் பார்வைக்காக கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒன்பது குழுக்களின் அறிக்கையும் தாய்மொழிக்கல்வியே சிறந்தது என்று குறிப்பிடுவதை ஆதாரப்பூர்வமாக சோதித்து அறிந்து கொள்ளலாம்.

| ஆண்டு | குழுக்களின் பெயர்கள் |
|---|---|
| 1947 | தாராசந்த் குழு |
| 1948 | டாக்டர்.ராதாகிருஷ்ணன் குழு |
| 1952 | ஏ.எல். முதலியார் குழு |
| 1964 | டி.எஸ். கோத்தாரி குழு |
| 1968 | முதல் கல்வி கொள்கை |
| 1986 | புதிய கல்வி கொள்கை - ராமமூர்த்தி குழு |
| 1993 | எஸ்பால் சுமையில்லா கல்வி |
| 2005 | தேசிய கல்வி திட்டம் |
| 2009 | கல்வி உரிமை சட்டம் |

நண்பர்களே ! இந்த ஒன்பது குழுக்களும் பல வருடங்களாக ஆராய்ச்சி செய்து உருவாக்கி கொடுத்த ஆவணங்களை குப்பையில் எறிந்துவிட்டு இப்பொழுது இருக்கும் அரசு தமிழ் பள்ளிகளை தமிழ்மொழியில் இருந்து ஆங்கில மொழி வழி கல்விக்கு மாற்றம் செய்கிறார்கள் எனில் இதன் பின்னணி என்ன என்பதை சற்று யோசியுங்கள்.



நமது முன்னோர்கள், ஞானிகள், அறிஞர் பெருமக்கள் பல வருடங்கள் கல்விக்காக ஆராய்ச்சி செய்து உருவாக்கினார்களே, அந்த ஆராய்ச்சியின் பலன் என்ன? இவை எதுவும் நடைமுறைப்படுத்தப்பட வில்லையெனில் பிறகு எதற்கு ஆராய்ச்சி செய்யவேண்டும்?

இவ்வாறு பலவருடங்களாக பல குழுக்களின் உழைப்பில் தயாரிக்கப்பட்ட எந்த ஒரு விசயத்தையும் அரசு அமல்படுத்துவதில்லை. எனவே உடனடியாக போர்க்கால அடிப்படையில் நாம் கல்விமுறையில் மாற்றம் கொண்டுவர வேண்டிய சூழ்நிலையில் இன்று உள்ளோம். எனவே கல்வி சம்பந்தப்பட்ட சிந்தனையாளர்கள் ஒன்று சேர்வோமாக !

**நாம் ஏன் ஆங்கிலம் கற்கவேண்டும்?**

மொழி என்பது புரிந்து கொள்வதற்கும் அறிந்துகொள்வதற்கும், தெரிந்து கொள்வதற்கும், நமது அனுபவத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதற்கும் மற்றவர்கள் தங்கள் அனுபவத்தை நம்மிடம் பகிர்ந்து கொள்வதற்கும் உள்ள ஒரு ஊடகம் மட்டுமே ஆகும். ஆங்கிலம் தெரிந்தவன் தான் புத்திசாலி என்று பொதுவாக நாம் நினைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் நிச்சயமாக அப்படி ஒன்றும் இல்லை.

புரிந்து கொண்டவர் புத்திசாலி, நாம் எந்த மொழியில் புரிந்துகொண்டோம் என்பது முக்கியமில்லை. புரிந்து கொண்டோமா? இல்லையா? என்பதே முக்கியம்.

ஆங்கிலம் பேசுபவன் புத்திசாலி என்பது "வெள்ளையா இருக்கிறவன் பொய் சொல்ல மாட்டான்" என்ற காமெடியை போன்றது.

கல்லணை, தஞ்சை பெரியகோவில், இந்தோனேஷியாவில் உள்ள அங்கோர்வாட் கோவில், சீனப் பெருஞ்சுவர் போன்றவற்றை யெல்லாம் உருவாக்கிய யாருக்கும் ஆங்கிலம் தெரியாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நமது முன்னோர்கள் உருவாக்கிய ஜோதிடம், ஜாதகம், கோள்களின் அனுபவ உண்மைகள், வாஸ்த்து பார்ப்பது போன்ற பல்வேறு விசயங்களை நுட்பமாக நுணுக்கமாக உருவாக்குவதற்கு அவர்களுக்கு நிச்சயமாக ஆங்கிலம் தேவைப்பட வில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். எனவே ஆங்கில வழிக் கல்வி தான் சிறந்தது என்று நம்பிக் கொண்டிருக்கும் பெற்றோர்களும், குழந்தைகளும், கல்வித்துறையை சார்ந்தவர்களும் இப்பொழுதே தாய் மொழி கல்விக்கு மாறுங்கள். வருங்காலத்தில் நன்றாக வளர்ச்சியடைய முடியும்.

ரஷ்யாவில் ஜார்ஜிய மாணவனுக்காக லெனின் அவர்கள் மருத்துவ புத்தகங்கள் அனைத்தையும் ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து கற்றுக் கொடுத்திருக்கிறார். எனவே வேறுமொழியில் உள்ள ஒரு புத்தகத்தை நமது தாய்மொழியில் மாற்றுவது மிகவும் சுலபம். தாய்மொழியில் கற்று புரிந்து கொள்வதுதான் சிறந்த எளிதான வேலை.

பொதுவாக பலரும் கேட்கும் கேள்வி இதுதான். அனைத்து புத்தகங்களும் ஆங்கிலத்தில் இருப்பதால் நாம் எப்படி அதைத் தாய்மொழியில் படிக்க முடியும்?

நாம் நினைத்தால் எதுவும் முடியும்.

கிபி 1850ல் இலங்கையில் உள்ள யாழ்பாணத்தில் ஃபிஷ்கிரீம் (Fishcream) என்பவர் மருத்துவ நூல்களை தமிழில் மொழிபெயர்த்து மாணவர்களுக்கு பாடம் நடத்தியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ் வளர்ச்சிகழகம் போன்ற பல்வேறு கழகங்களும் உலகில் உள்ள வேறு மொழியில் உள்ள பல புத்தகங்களை தமிழ்மொழிக்கு மாற்றம் செய்து பாதுகாத்து வருகின்றன. பொது மக்களாகிய நாம் இதுபோன்ற கழகங்களை ஆதரித்து அவர்களுக்கு பொருளுதவியும், அங்கீகாரமும் கொடுத்து அவர்களை ஊக்கப் படுத்த வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

உலகில் அதிகம் பேசப்படும் மொழி ஆங்கிலம் என்று பலரும் பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றனர். உண்மையில் உலகிலேயே அதிகமாகப் பேசப்படும் மொழி சீனர்கள் பேசும் சீன மொழிதான்.

சீனமொழியே அதிகமக்கள் பேசுகின்றனர். உலகில் அதிகம் பேசும் மொழியில் இரண்டாமிடம் வசிப்பது ஸ்பானிஸ் மொழி.

ஒருகாலத்தில் இங்கிலாந்து நாட்டில் பைபிளை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து அந்த புத்தகங்களை விநியோகம் செய்ததற்காகவும், படித்ததற்காகவும், சம்பந்தப்பட்டவர்களை கட்டிவைத்து பொது இடத்தில் அடித்துள்ளனர் என்பதை இந்த

இடத்தில் நாம் நினைவுபடுத்துகிறோம். பைபிள் முதலில் ஆங்கிலத்தில் எழுதப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

1978ஆம் ஆண்டு தமிழகத்தில் மொத்தம் 34 ஆங்கில வழிபள்ளிகள் மட்டுமே இருந்தது. ஆனால் இப்பொழுதோ ஆயிரக்கணக்கான ஆங்கில வழிப்பள்ளிகள் இருப்பதை எண்ணிப் பாருங்கள்.

**உலகமயமாக்கல் என்றால் என்ன?**

டிவி, பத்திரிக்கை, இணையம் போன்ற ஊடகங்களில் உலகமயமாக்கல் (Globalization) என்ற வார்த்தை அடிக்கடி கேட்கிறோம். ஆனால் இது நிச்சயமாக நமக்கு நன்மை செய்யக் கூடியவிசயம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இந்த உலகமயமாக்கலுக்கு காட் (ஹூழிமிமி) ஒப்பந்தம் என்று பெயர்.

1990களில் காட் ஒப்பந்தம் எனப்படும் இந்த ஜெனரல் அக்ரிமெண்ட் ஆன் டிரெட் அண்ட் டாரிஃப் (The General Agreement on Trade and Tariff) உருவாக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தைப் பற்றித் தெரிந்தவர்கள், நல்லவர்கள் உலகமயமாக்கலை வரவேற்கமாட்டார்கள். இந்திய மக்களின் கல்வி, உணவு, நீர் மற்றும் ஆரோக்கியம் ஆகியன இந்த ஒப்பந்தத்தின் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது மருத்துவத் துறை, கல்வித்துறை, விவசாயத்துறை ஆகிய மூன்று துறைகளையும் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 13 யூதக் குடும்பத்தினரான இலுமினாட்டிகளுக்கு விற்கும் ஒரு மோசமான ஒப்பந்தம்தான் இந்த காட் ஒப்பந்தம். எனவே காட் ஒப்பந்தத்தை எந்தவித நிபந்தனையும் இன்றி அதை ரத்து செய்து கிழித்து எறிந்துவிட்டு நாம் சுயமாக கல்வித்துறை, மருத்துவத்துறை, விவசாயத்துறை ஆகியவற்றை சீரமைத்துக் கொண்டால் தான் நாமும் நமது வருங்கால சந்ததியினரும் நிம்மதியாக வாழ முடியும்.

**பிபிபி (PPP) என்றால் என்ன?**

பிபிபி என்பது பப்ளிக் பிரைவேட் பார்ட்னர் என்பதாகும். அதாவது அரசாங்கம் தனியார் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டி கொடுத்து தனியார் கல்வி மையங்களை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டம்.

ஏற்கனவே இருக்கும் அரசுப்பள்ளிகளை சீரமைக்க பணம் இல்லையென்று பொய் கூறிவிட்டு தனியார் பள்ளி நிறுவனங்களுக்கு கட்டிடம் கட்டி கொடுப்பது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இதைத் தெரிந்து கொண்டு அதைப் பொதுமக்களுக்கு உண்மையை கூறாமல் இதை நல்லதிட்டம் என்று மக்களிடம் கூறிவருகின்றனர்.

அரசின் திட்டங்கள் பொதுமக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கவேண்டுமே தவிர தனியார் நிறுவனங்களின் சுயலாபத்திற்கு துணை போவதாக இருக்கக் கூடாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

**கல்வி வரி என்றால் என்ன?**

கல்வி வரி என்ற பெயரில் (Education Cess) ஒரு ரூபாய்க்கு மூன்று பைசா வீதம் அரசாங்கம் பொதுமக்களிடம் பிடுங்கி வருகிறது. ஆனால் கல்விக்கு என எந்த செலவும் அரசு செய்வதில்லை.

நீங்கள் செலுத்தும் எந்த வரியிலும் சேல்ஸ் டேக்ஸ் (Sales Tax), சொத்துவரி (Asset Tax) , குடிநீர் வரி (Water Tax),

தொலைபேசி கட்டணம் (Mobile Bill), சாலை வரி (Road Tax) போன்ற பலவற்றிலும் கல்வி வரி என்று நம்மிடம் வசூலிப்பதை நம்மில் பலரும் கவனிக்கத் தவறவிடுகிறோம். இந்த வரிகளின் மூலம் கல்விக்கு பெறப்படும் தொகையை கல்விக்கு செலவு செய்யாமல் வேறு என்ன செய்கிறார்கள் என்று சற்று யோசியுங்கள்.

இந்த கட்டுரையின் மூலம் நாம் புரிந்து கொள்வது என்னவென்றால் அரசாங்கம் என்பது எப்பொழுதும் வியபாரிகளுக்கு மட்டுமே துணைபோகிறது என்பது நன்கு புரிகிறது. அரசாங்கம் கொண்டுவரும் எந்த ஒரு திட்டமும் பொதுமக்களுக்கு நன்மை பயக்காது என்பதை இனிமேலாவது புரிந்துகொண்டு இதிலிருந்து நம்மை நாம் எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்று யோசியுங்கள்.

எனவே மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறையில் உள்ளவர்கள் போன்றோர்கள் உடனடியாக தாய்மொழிகல்வியை அமல்படுத்துவதற்கு எந்தெந்த வழிமுறைகளைப் பயன்படுத்த முடியுமோ அவை அனைத்தையும் பயன்படுத்தி போர்கால அடிப்படையில் கல்வியை சீரமைக்க, ஒழுங்குபடுத்த நாம் அனைவரும் ஒன்றிணைவோமாக!

இப்பொழுது இந்த கட்டுரையில் நாம் குறிப்பிட்டிருக்கும் அனைத்து விசயங்களும் “கல்வியை அழிக்கும் ஆங்கில மாயை” என்ற தலைப்பில் மக்கள் திரையால் தயாரிக்கப்பட்டு திரு.வே.பி.வினோத்குமார் என்பவர் உருவாக்கிய ஆவணப்படத்தின் மூலம் கல்வி சம்பந்தமாக நான் கற்றுக் கொண்டவை ஆகும்.

இந்த ஆவணப்படத்தின் மூலமாக பல்வேறு நல்ல விசயங்களை பொதுமக்களுக்கு சிறப்பாக உணர்த்தியுள்ளார். எனவே உடனடியாக இவரது “கல்வியை அழிக்கும் ஆங்கில மாயை” ஆவணப்படத்தை அனைவரும் பார்த்து பயன்பெறுங்கள். இந்த ஆவணப்படத்தின் டிவிடியை கீழ்க்கண்ட எண்ணில் தொடர்பு கொண்டு கூரியர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு இந்தியா +91 98424 52508, 9944221007

மேலும் இந்த ஆவணப்படத்தின் இயக்குனர் தோழர் வே.பி. வினோத்குமார் அவர்களை தொடர்புகொண்டு நேரடியாக பேசுவதற்கு கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

நமது வாடிக்கையாளர் சேவைமைய இந்தியா +91 9500378441, 9500378449 கல்விதுறையில் தாய்மொழி வளர்ச்சிக்கென பாடுபடும் இந்த தோழர் வே.பி. வினோத்குமார் அவர்களுக்கு பொருளாதார உதவிகளையும், சமூக நலன் பற்றிய மேலும் பல நல்ல விசயங்களை இதுபோன்று நிறைய ஆவணப்படங்களை எடுப்பதற்கான அறிவுப்பூர்வமான உதவிகளையும் கொடுத்து அவரை நன்கு ஊக்கப்படுத்துங்கள்.

“கல்வியை அழிக்கும் ஆங்கில மாயை” என்ற இந்த ஆவணப்படத்தை எடுப்பதற்கு பல ஆண்டுகள் தன்குழுவினருடன், பல இடங்களுக்கு சென்றுபல்வேறு தரப்பில் உள்ள மக்களையும், அறிஞர்களையும், அவர்கள் கருத்துகளையும், ஆவணப் படங்களையும் சேகரித்து பதிவு செய்திருப்பது எவ்வளவு கடினமான பணி என்று இந்த ஆவணப்படத்தை பார்த்தாலே புரியும்.

எனவே நல்ல காரியம் செய்யும் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த உலகத்தினை அமைதியாக, நிம்மதியாக, ஆரோக்கியமாக, சமாதானமாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொரு நாளும், நாம் நம்மால் முடிந்த காரியங்களை செய்வோம்.

கம்ப்யூட்டர் மென்பொருள் கலையை (Software) தமிழில் கற்றுக்கொள்ள கலெக்டிவா அகாடமி திரு.தட்சிணாமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளுங்கள். +91 9443224279.

தாய்மொழியில் கல்வி கற்போம் !
தலைநிமிர்ந்து வாழ்வோம் !!

செழிக்கட்டும் விவசாயம்
சீர்படட்டும் நிர்வாகம் !
உலக மக்கள் அனைவரின் முகத்திலும்
நிலவட்டும் புன்சிரிப்பு
வளர்க ஆன்மீகம் வாழ்க வாழ்வாங்கு
-சந்தோசம்-




ஹீலர் பாஸ்கரின்
காதல் முக்தி

ஆண், பெண் இருவருக்குள்ளும்
ஆழ்ந்த புரிதலை ஏற்படுத்தி இல்லறம்
சிறக்கச் செய்யும் ஒரு கலை.

ஆண், பெண் குணாதிசயங்கள்
அறிய, அன்பு மொழி பேச கற்றுத்தரும் கலை.

Rs.120/- only

Place : **Giriiyya Publications,** Kovaipudur, Coimbatore.
✦ Contact : **+91 96290 32767** ✦ **www.giriiyyapublications.com**

ACEBOOK & TWITTEI

கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ்–ன்
புதிய வெளியீடுகளைப் பற்றி தெரிந்துகொள்ள
எங்களுடைய வலைதளமான
FACEBOOK மற்றும் TWITTER – ல்
இணைந்திடுங்கள்...

TWITTER

FACEBOOK



# சாகம்பரி மழலையர் பள்ளி

1 வயது முதல் 5 வயது வரை பாடத்திட்டம்

திண்டுக்கல் அருகே உள்ள நம்ம வீட்டு மழலையர் பள்ளி (சாகம்பரி மழலையர் பள்ளி) பற்றி இந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிறோம். இந்தக் கட்டுரையை முழுவதும் படித்துவிட்டு அப்பள்ளிக்கு நேரில் நீங்கள் சென்று பார்வையிட்டு வருவதன் மூலம் 1 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளின் கல்விமுறை எப்படி இருக்கவேண்டும் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

குழந்தைகளுக்கு கதைகளும், பாடலும், கற்பனை செய்வதும், கை, கால்களை ஆட்டி விளையாடுவதும், இல்லாத ஒன்றை புதுமையாக உருவாக்குவதும் தான் மிகவும் பிடித்தமான ஒன்று. நமது கல்வியும் இந்த முறையில் தான் அமைந்திருக்க வேண்டும்.

ஒன்று முதல் ஐந்து வயது வரை உள்ள ஒரு குழந்தைக்கு எப்படி பாடம் நடத்தவேண்டும். என்பதை இந்த சாகம்பரி மழலையர் பள்ளி பாடத்திட்டம் உங்களுக்கு விரிவாக புரிய வைக்கும் என நாம் நம்புகிறோம். சமீபத்தில் ஒரு பள்ளிக்குச் சென்றிருந்தேன். அந்த பள்ளி திண்டுக்கல்லிற்கும், மணப்பாறைக்கும் இடையே செந்துறை என்ற ஊரில் உள்ளது. நம்ம வீட்டு மழலையர் பள்ளி என்பது தான். அப்பள்ளியின் பெயர். அப்பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வயது வரையான குழந்தைக்குகளுக்கு பாடம் நடத்துகிறார்கள். முதலாவதாக நாம் அப்பள்ளியில் குழந்தைகளுக்கு எப்படி பாடம் நடத்துகிறார் என்பதை விரிவாக பார்க்கலாம்.

அதன் பின்னர் இந்த முறையில் குழந்தைக்கு பாடம் நடத்துவதால் ஏற்படும் நன்மைகளையும், இந்த பள்ளியை உருவாக்கியவர்கள் மற்றும் நடத்துபவர்கள் பற்றியும் இந்த கட்டுரையின் இறுதியில் நாம் பார்க்க இருக்கிறோம்.

**1. பிரார்த்தனை**

காலை சரியாக 9.00 மணிக்கு இப்பள்ளியில் வகுப்பு தொடங்குகிறது. குழந்தைகள் அனைவரும் வட்டமாக அமர்ந்து கொள்கின்றனர். அதனிடையில் பள்ளியின் ஆசிரியர்களும் உடன் அமர்ந்து கொண்டு வகுப்பை முதலில் பிரார்த்தனையில் ஆரம்பிக்கின்றனர்.

இந்து முறைப்படி ஒரு பிரார்த்தனையும், முஸ்லீம் முறைப்படி ஒரு பிரார்த்தனையும், கிறிஸ்துவமுறைப்படி மூன்றாவது பிரார்த்தனையும், தாய்மொழி தமிழில் நான்காவது பிரார்த்தனையும் ஐந்தாவதாக ஆங்கிலத்தில் பிரார்த்தனையுமாக ஐந்து விதமான பிரார்த்தனைகள் செய்கின்றனர். ஏனெனில் அனைத்து ஜாதி, மதத்தைச் சேர்ந்த குழந்தைகளும் அங்கு இருக்கிறார்கள் என்பது தான், மேலும் பிரார்த்தனை செய்வதின் முறைகளையும் முக்கியத்துவத்தையும், அதன் நன்மைகளையும் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கின்றனர். இதுவே இங்கு முதலாவது பாடம்.

**2. கரன்யாச சக்தி**

கரன்யாச பயிற்சி உள்ளங்கையில் உள்ள விரல்கள் ஒன்றோடு ஒன்று மாறி மாறி தடவிக் கொள்ளும் பயிற்சி ஆகும். இந்த பயிற்சியினால் உடல் ஆரோக்கியம், புத்தி கூர்மை ஆகியன ஏற்படும் என்பதை உணர்ந்து நமது முன்னோர்கள் உருவாக்கிய பயிற்சியாகும். இந்த பயிற்சியை அங்கு குழந்தைகளும், ஆசிரியர்களும் தினமும் செய்கின்றனர்.

**கரன்யாச பயிற்சியை செய்யும் முறை**

நமது இரண்டு கைகளையும், முன்னால் நீட்டி உள்ளங்கை வானத்தைப் பார்த்தவாறு வைத்துக் கொள்ளவேண்டும். முதலில் ஆட்காட்டி விரலினைக் கொண்டு கட்டைவிரலில் உட்பக்கத்தை மேலும், கீழுமாக தடவிக் கொடுக்கவேண்டும். இரண்டாவதாக கட்டை விரலின் உட்பக்கத்தைக் கொண்டு ஆட்காட்டி விரலின் உட்பாகத்தை மேலும், கீழும் தடவிக் கொடுக்க வேண்டும். மூன்றவதாக கட்டை விரலின் உட்பக்கத்தினால் நீளமான நடுவிரலை மேலும், கீழும் தடவிக் கொடுக்கவேண்டும். நான்காவதாக கட்டை விரலின் உட்பக்கத்தின் மூலமாக மோதிர விரலின் உட்பக்கத்தை மேலும் கீழுமாக தடவிக் கொடுக்க சுண்டு விரலின் உட்பக்கத்தை லேசாக மேலும், கீழும் தடவிக் கொடுக்க வேண்டும். ஆறாவதாக இரு உள்ளங்கைகளையும் இலேசாக உரசி தடவிக் கொடுக்க வேண்டும். ஏழவதாக இரு உள்ளங்கைகளையும் மாற்றி மாற்றி அழுத்திக் கொடுக்கவேண்டும். அதாவது வலது கையின் கட்டை விரலால் இடது உள்ளங்கையின் உட்புற பகுதிகளில் அழுத்தம் கொடுப்பதற்கு வசதியாக வலது கையின் மற்ற நான்கு விரல்களையும் இடது உள்ளங்கையின் அடிப்புறமாக பற்றி பிடித்துக் கொள்ளவேண்டும். பின்னர் இடது உள்ளங்கையின் எல்லா பகுதிகளையும் அழுத்தம் கொடுக்கவேண்டும். அதே போல இடது கையைப் பயன்படுத்தி வலது உள்ளங்கைக்கு அழுத்தம் தரவேண்டும். இவ்வாறு செய்வதனால் உடல் ஆரேக்கியமும், புத்தியில் தெளிவும், ஞாபக சக்தியும் அதிகரிக்கின்றன.

இவ்வாறு உள்ளங்கையில் உள்ள சில அக்குபிரசர் புள்ளிகளை அழுத்தி நோய்களை குணப்படுத்தும் முறைக்கு “சூஜோக் முறை” என்று அழைப்பார்கள். கரன்யாசப் பயிற்சி தான் வெளிநாட்டிற்கு சூஜோக் முறையாக திரும்பி வந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

**3. மூச்சுப் பயிற்சி**

தினமும் ஏதாவது ஒரு மூச்சுப் பயிற்சியினை அனைத்து குழந்தைகளுக்கும் கற்றுத் தருகின்றனர். உதாரணமாக நாடிசுத்தி, பிரணாயாமம், அனுலோமா, மினுலோமா, பஸ்த்திரிகா, கபாலபதி, அக்னிசார், சுதர்சனக்ரியா போன்ற பயிற்சிகளை குழந்தைகளுக்கு எளிமையாக உள்ளபடி தினமும் அவற்றில் ஏதேனும்



ஒன்றை கற்றுக் கொடுக்கின்றனர்.

**4. வணங்கும் பயிற்சி**

வணக்கம், குட்மார்னிங், நமஸ்தே, நமோஸ்கார், போஜீர், குட்டான்கள் போன்ற பல்வேறு மொழிகளில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது கூறுகின்ற வணங்கும் போது கூறுகின்ற வணக்கத்தினை கற்றுத்தருகின்றனர். பொள்ளாச்சி அருகே ஆனைமலையில் உள்ள மகாத்மா காந்தி ஆசிரமத்தினை நடத்திவரும் திரு. ரங்கநாதன் ஐயா அவர்களை அந்த ஊரில் எவர் பார்த்தாலும் அவரை வணங்கிவிட்டு தான் செல்கின்றனர். ஏனென்றால் அவர் யாரைப் பார்த்தாலும் வணங்கிவிடுவார். இவர் முன்னால் ஒருவர் மாட்டுவண்டியில் வந்தாலும், பிச்சைக்காரன் வந்தாலும் சாலையை சுத்தம் செய்யும் பணியாளர் வந்தாலும் இவர் முதலில் ஐயா வணக்கம்



என்று கூறிவிடுவார். பின்னர் வேறு வழியின்றி அவர்களும் இவரை வணங்கிவிடுவர்.

ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுதோ, எதிரில் பார்க்கும் பொழுதோ, இன்முகத்துடன், சிரித்த முகத்துடன் ஒரு நல்வார்த்தை கூறுவது ஒரு சிறந்த பண்பாகும். இதை அந்த பள்ளியில் குழந்தைக்கு கற்றுத் தருகின்றனர்.

**5. பைபிள் வசனம்**

தினமும் பைபிளில் இருந்து ஏதாவது ஒரு வசனத்தை தினமும் வாசித்து அதற்கான அர்த்தம் கூறப்படுகிறது.

**6. குரான் வசனம்**

தினமும் குர்ஆன்னில் ஏதாவது ஒரு வசனத்தை வாசித்து அதற்கான பொருள் கூறுகின்றனர்.

**7. திருக்குறள்**

திருக்குறளில் ஏதேனும் ஒரு குறளை தினமும் தேர்ந்தெடுத்து அந்த குறளை வாசித்து அதற்கு விளக்கம் கூறுகின்றனர்.

**8. பஞ்சாங்கம் பார்ப்பது**

தினசரி காலண்டர் எனப்படும் நாள் காட்டியை எடுத்து வந்து அன்றைய கிழமை என்ன? அந்த கிழமைக்கும், எந்த கிரகத்திற்கும் சம்பந்தம் உள்ளது? போன்றவற்றை விளக்க அந்த கிரகத்தின் படத்தை குழந்தைகளுக்கு காண்பித்து கற்று தருகின்றனர்.

திதி பார்ப்பதை கற்றுக் கொடுத்து குழந்தைகள் தினமும் அதை பார்க்க செய்கின்றனர். தற்பொழுது எந்த ஆங்கில, தமிழ் மாதம் என்பதை அனைவரும் அறிந்திருக்கின்றனர். ஓரை பார்ப்பது, ராசி பார்ப்பது நட்சத்திரம் பார்ப்பது. நல்ல நேரம், கெட்ட நேரம், ராகு, எம கண்ட்ம் ஆகிய நேரங்களை பார்க்க கற்றுக்கொடுத்து குழந்தைகள் தினமும் அதை பார்க்கச் செய்கின்றனர். இதில் முக்கியமாக விசயம் என்ன வெனில் தற்பொழுது நடைமுறையில் உள்ள வியாபார கல்வி திட்டத்திற்கும்,

இப்பொழுது நாம் பார்த்துக் கொண்டிருக்கும் சாகம்பரி கல்வி திட்டத்திற்கும் என்ன வித்தியாசம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

வியாபார கல்விதிட்டத்தில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதை மாணவர்கள் கேட்க வேண்டும். குறுக்கே பேசுவதற்கோ, சந்தேகம் கேட்பதற்கோ பொதுவாக அவகாசம் கொடுக்கப்படுவது இல்லை.

குரூப் டிஸ்கஸன் எனப்படும் குழுவினர்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் அனுமதி கொடுக்கப்படுவது இல்லை. இந்த பள்ளியில் ஒவ்வொரு விசயத்தினையும்க் கற்றுக் கொடுக்கும் பொழுது அந்த குழந்தைகளுக்கு யோசிப்பதற்கும், கற்பனை செய்வதற்கும் அவகாசம் தரப்படுகிறது.

உதாரணமாக நல்ல நேரம் இன்று காலை 7.30 மணி முதல் 8.30 வரை என்று கூறியவுடன் அந்த குழந்தைகளிடம் கேள்வி கேட்கிறார்கள். “எதற்கு நல்ல நேரம் பார்க்க வேண்டும்?” என்று. அப்பொழுது ஒவ்வொரு குழந்தையும் தப்புத்தப்பாக கண்டதையெல்லாம் உளரும். அதைப் பார்த்து சிரிக்காமல் “அது அப்படியல்ல, நல்ல நேரம் பார்ப்பதற்கான காரணம் இதுதான்” என்று அந்த ஆசிரியர்கள் பொறுமையாக குழந்தைகளுக்கு புரியும் பாஷையில் சொல்லிக் கொடுக்கின்றனர். இது போன்ற கல்வித்திட்டத்தின் மூலமாக குழந்தைகளின் யோசிக்கும் தன்மையும் கற்பனை வளத்தையும் நாம் கொடுக்கமுடியும். கல்வி என்பது நாம் படித்து பாஸ்மார்க் வாங்குவது கிடையாது. புரிந்து கொள்வதும், வித்தியாசமான கோணத்தில் யோசிப்பதும், கற்பனை வளத்தை அதிகரிப்பதும், புதுப்புது விசயங்களை ஆராய்ச்சி செய்வதும் தான் சரியான கல்விமுறை.

**9. குணங்களின் தன்மை வகுப்பு (ROLL PLAY CLASS)**

ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு குணத்தின் தன்மையினை பற்றி குழந்தைகளுக்கு புரிய வைக்கிறார்கள். உதாரணமாக ஒழுக்கம்,, வீரம், அமைதி, நிம்மதி,சந்தோசம், தன்மானம், புகழ் போன்ற வார்த்தைகளுக்கு இப்பொழுதுள்ள குழந்தைகளுக்கு அர்த்தமே தெரிவதில்லை. அர்த்தமே தெரியாமல் இவற்றை எப்படி வாழ்வில் நடைமுறைப்படுத்துவது? என்று கற்றுத்தருகிறார்கள்.

நான் சென்றிருந்த அந்த சமயத்தில் ஒழுக்கம் என்ற தலைப்பில் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் வீட்டிற்குச் செல்லும் பொழுது அவர்களுடைய அனுமதியில்லாமல் எந்த ஒரு பொருளையும் எடுப்பது சரியல்ல. எனவே குழந்தைகளே நீங்கள் மற்றவர்கள் வீட்டிற்குச் செல்லும் பொழுது ஒரு பொருளை எடுக்க வேண்டும், தொட்டுப் பார்க்கவேண்டும். என்றால் அவர்களிடம் அனுமதி பெறவேண்டும். “அம்மா நான் இந்த பொருளை தொட்டுப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அனுமதி கொடுப்பீர்களா?” என்று கேட்க வேண்டும். அவர்கள் சரி என்று சொன்னால் மட்டுமே தொடவேண்டும் என்று ஒழுக்கங்கள் பற்றி கற்றுக் கொடுத்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விசயத்தைப் பற்றி கற்றுக் கொடுக்கின்றனர். அருமையான பாடத்திட்டம் !

**10. உண்மையான பொருள் (REAL OBJECT)**

ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பொருளை குழந்தைகளுக்கு காண்பித்து அந்த பொருளின் தன்மை, அதை எப்படி பயன்படுத்தவேண்டும். அந்த பொருளின்

நன்மை, தீமை ஆகியன பற்றி விளக்கமாக கற்றுக் கொடுக்கின்றனர்.

உதாரணமாக கல்கண்டு, இஞ்சி, பூண்டு, காய்கறிகள், உணவு, பழங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், பஸ், லாரி போன்ற பொருட்களை காண்பித்து அதை பற்றி விளக்குகின்றனர். பஸ், லாரி போன்றவற்றை உடனே அந்த இடத்தில் காண்பித்து விளக்கமுடியாது எனும் காரணத்தினால் காண்பிக்க முடியாத பொருட்களின் பொம்மைகளை கையில் வைத்து காண்பித்து பாடம் நடத்து கின்றனர். இதன் மூலமாக அக்குழந்தை களுக்கு பாடம் நன்றாக புரிகிறது.

நான் சென்றிருந்த சமயத்தில் இஞ்சியை வைத்து பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். இஞ்சியை எடுத்து இதுதான் இஞ்சி என்று கூறி அதன் தோல் எப்படி இருக்கிறது. அதன் நிறம் எப்படி இருக்கிறது? அதன் வாசனை எப்படி இருக்கிறது? என்று அந்த ஆசிரியர் கற்றுக் கொடுத்துக் கொண்டி ருந்தார். இஞ்சியை கையில் கொடுத்த பொழுது எல்லா குழந்தைகளும் அதை தொட்டுப் பார்த்தனர். முகர்ந்து பார்ந்தனர். ஒவ்வொரு குழந்தையும் இஞ்சியை தொட்டு முகர்ந்து பார்த்து அதைப் பற்றி சொன்ன போது ஒவ்வொரு குழந்தையின் வாயிலிருந்தும் வேறுவேறு வார்த்தைகள் வந்தன.

ஒரு குழந்தை “காரமாக இருக்கிறது” என்றது. மற்றொரு குழந்தை இது இனிப்பாக இருக்கிறது என்றது. ஏனென்றால் இனிப்பிற்கும், காரத்திற்கும் அக்குழந்தைக்கு வித்தியாசம் தெரியவில்லை பாவம். இரண்டு வயது அக்குழந்தைக்கு அப்பொழுது அந்த ஆசிரியர், இது இனிப்பில்லை நேற்று நீ ஜிலேபி பார்த்தாய் அல்லவா? அது தான் இனிப்பு, இது காரம் என்று புரியவைக்கிறார்.

இவ்வாறு ஒவ்வொரு குழந்தைகளையும் உணரவைத்து ஒவ்வொரு பொருளைப் பற்றியும் உண்மையான தன்மைகளை அதற்கு விளக்குகின்றனர்.

“இந்த இஞ்சி எங்கிருந்து வந்தது?” என்று குழந்தைகளிடம் கேள்வியை கேட்கின்றனர்.

குழந்தை சொல்கிறது, “வீட்டில் அடுப்பங்கரையில் இருந்தது”.

“அடுப்பங்கரைக்கு எப்படி வந்தது?” ஆசிரியர்.

“அப்பா எங்கிருந்து வாங்கிவிட்டு வந்தார்?” ஆசிரியர்.

“கடையிலிருந்து வாங்கிவிட்டு வந்தார்”. குழந்தை.

“கடைக்காரர்களுக்கு இஞ்சி எப்படி கிடைத்தது?” ஆசிரியர்.

“விவசாயிகளிடமிருந்து கிடைத்தது” குழந்தை.

“விவசாயிக்கு எப்படி கிடைத்தது?” ஆசிரியர்.

“செடியிலிருந்து, மரத்திலிருந்து கிடைத்தது” குழந்தை.

“அந்த செடியும், மரமும் எங்கிருந்து வந்தது?” ஆசிரியர்.

“‘ மண்ணிலிருந்து” குழந்தை.

இவ்வாறு ஒவ்வொரு பொருளைச் காண்பிக்கும் பொழுதும் அதன் ஆதி, அந்தம் ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு புரியவைக்கிறார்கள். மேலும் அதன் பயன்கள் பற்றியும் அதை எங்கெங்கெல்லாம் பயன்படுத்தலாம்? அதன் மருத்துவகுணங்கள்

என்ன? அதை எப்படியெல்லாம் பயன்படுத்த கூடாது? அது மனிதனுக்கு நல்லதா? கெட்டதா? விமா? என்பதையெல்லாம் தெளிவாகப் புரியவைக்கிறார்கள். இவ்வாறு தெளிவாக புரியவைக்கும் பொழுது ஒவ்வொரு குழந்தையும் சிறுவயதிலேயே உலகில் உள்ள எல்லா பொருள்களைப் பற்றியும் புரிந்து கொள்வதுடன் சொந்தமாக அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் திறனுடன் வளர்கிறது.

**11. பொருள் வகுப்பு (MATERIEL CLASS )**

இந்த வகுப்பில் ஒரு பொருள் அல்லது கருவி அல்லது உபகரணத்தை உண்மையாகவோ, பொம்மை வடிவிலோ, காண்பித்து ஒவ்வொரு குழந்தைகளின் கையில் கொடுத்து அந்த பொருளைப் பற்றி விளக்குகின்றனர். அந்த பொருளை எப்படி பயன்படுத்தவேண்டும்? அந்த பொருளை உடைக்காமல் எப்படி பாதுகாக்கவேண்டும் அதன் நன்மைகள், பயன்பாடுகள் ஆகியன பற்றி தெளிவாக கற்றுக் கொடுக்கின்றனர். ஆனால் சாதாரண வியாபார கல்விக் கூடங்களில் புத்தகத்தில் உள்ள ஒரு பத்துவரிகளை படித்துவிட்டு அதை அப்படியே எழுதினால் மட்டுமே புத்திசாலி என்று கூறுகிறார்கள். இதை நான் வன்மையாக கண்டிக்கிறேன். உடனடியாக மாற்றம் ஏற்படுத்த வேண்டியது பொதுமக்களாகிய நமது கையில் உள்ளது.

இவ்வாறு கல்வி கற்கும் குழந்தைகள் கண்டிப்பாக புத்திசாலிகளாக இருக்கவே மாட்டார்கள். பத்து வார்த்தைகளை வரிகளை படித்துவிட்டு சொந்தமாக தனது எண்ணத்தில் தோன்றும் கருத்துக்களை எழுதும் குழந்தைதான் உலகத்தில் புத்திசாலி.

நான் ஒரு அக்குபங்சர் வகுப்பில் பல ஆண்டுகளுக்கு முன்பு சேர்ந்தேன். அது ஈரோட்டை மையமாக கொண்டு இயங்கும் ஒரு டுபாக்கூர் கல்வி மையம். நான் தெளிவாகப் படித்து புரிந்துகொண்டு தேர்வு சமயத்தில் சுயமாக எழுதினேன். ஆனால் அந்த கல்வி நிறுவனம் பரீட்சையில் அனைவரையும் புத்தகத்தைப் பார்த்து எழுதுங்கள் என்று கூறியது. அந்த பரீட்சை எழுதிய ஆயிரம் பேரில் நான் மட்டும் சொந்தமாக புரிந்து கொண்டவற்றை எழுதினேன். எனக்கு மிகவும் குறைந்த மதிப்பெண் மட்டுமே கிடைத்தது. இதுதான் இன்றைய கல்வியின் நிலை.

ஒரு ஆசிரியர், புத்தகத்தில் உள்ளது உள்ளவாறு கேள்விக்கு பதில் எழுதினால் மட்டும் பத்துக்கு பத்து மதிப்பெண் தருகிறார். சொந்தமாக எழுதும் குழந்தைகளை அவர்களது கருத்துக்களை படித்துவிட்டு பூஜ்ஜியம் அல்லது இரண்டோ, மூன்றோ மதிப்பெண்களைத் தான் அவர்களுக்குப் போடுகிறார்.

ஒரு பொருளை குழந்தைகளுக்கு காண்பித்து அதைப்பற்றிய கருத்துக்களை பற்றி குழந்தைகளிடம் பேச வைக்கும் பொழுது அவர்கள் சுயமாக யோசிக்கும் தன்மை அதிகரிக்கிறது. மேலும் எந்த பொருளை எங்கிருந்து எடுத்தாலும் திரும்ப அதே இடத்தில் வைக்கவேண்டும் என்பதையும் அப்பள்ளியில் கற்றுக் கொடுக்கின்றனர். எந்த ஒரு பொருளை எடுத்தாலும் அதை ஒரு விரிப்பின் மீதுதான் வைக்கவேண்டும் என்ற ஒழுக்க நெறிமுறையினையும் கற்றுக் கொடுக்கின்றனர்.




**12. பிறந்த நாள் கொண்டாட்டம் (BIRTHDAY CELEBRATION)**

அன்றைய தினம், எந்த குழந்தைக்கு

பிறந்தநாள் வருகிறதோ. அன்று அக்குழந்தைக்கு பிறந்த தினம் கொண்டாடுகின்றனர். அத்துடன் பிறந்தநாள் கொண்டாடும் வழிமுறைகளையும், அவரவர் தகுதிக்கேற்ற வகையில் பிறந்ததினம் கொண்டாடுவது அமையவேண்டும் என்பதையும் கற்றுக் தருகின்றனர்.

பக்கத்து வீட்டில் ஆடம்பரமாக பிறந்ததினம் கொண்டாடுகின்றனர் என்பதற்காக நமது வீட்டில் அதே போல் கொண்டாடக்கூடாது. நமது தகுதி, பொருளாதார வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப பிறந்த நாள் கொண்டாடவேண்டும் என்பதை புரியவைக்கின்றனர்.

உலகத்தில் வாழும் ஒவ்வொரு வினாடியும் கொண்டாட வேண்டிய தருணங்களே. எனவே கொண்டாட வேண்டியதன் முக்கியத்துவத்தை விரிவாக கற்றுத்தருகின்றனர். உயிர் உள்ளவரை கொண்டாடிக் கொண்டே இருக்கவேண்டும். கொண்டாடுவதற்கு காரணம் தேவையில்லை.

இவ்வாறு ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி நாம் தினமும் கொண்டாடிக் கொண்டு இருந்தாலே வாழ்க்கையே கொண்டாட்டம் தான். எனவே கொண்டாடுவதற்கு அக்குழந்தைக்கு கற்றுக் தருகிறார்கள்.

**13. வானிலை பதிவு (WEATHER RECORD)**

தினசரி அன்றைய வானிலையைப் பற்றி குழந்தைகள் விவாதம் செய்கின்றனர். அனைத்துக் குழந்தைகளையும் வெளியே அழைத்துச் சென்று வானத்தைப் பார்த்து இப்பொழுது வானம் எப்படி இருக்கிறது? மேகங்கள் எப்படி இருக்கிறது? என ஒவ்வொரு நாளும் வானிலை சம்பந்தமாக அன்றைய தினம் வானிலை எப்படி இருக்கிறது என்பதை குழந்தைகளுக்கு புரிய வைக்கின்றனர்.



**14. மூளைப்பயிற்சி (BRAIN YOGA)**

வலது கையில் இடது காதின் மடலையும், இடது கையில் வலது காதின் மடலையும் பிடித்துக் கொண்டு கீழே உட்கார்ந்து மேலே எழுந்திருக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து செய்யவேண்டும். கீழே உட்காரும் பொழுது மூச்சுக் காற்றினை வெளியே விடவேண்டும். எழுந்திருக்கும் பொழுது மூச்சுக் காற்றினை உள்ளிழுக்க வேண்டும். இவ்வாறு பதினொரு முறை செய்கிறார்கள். பிள்ளையார் கோவிலில் தோப்புக்காரணம் போடுவதைப் போல.

இவ்வாறு செய்வதால் குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சி அதிகரிக்கும். சுறுசுறுப்பு வரும். உடல் ஆரோக்கியமும் இருக்கும்.

அன்பர்களே இந்த இடத்தில் ஒரு விசயத்தினைப் புரிந்து கொள்ளுங்கள். நம்மிடையே உள்ள பாரம்பரிய பழக்கங்களை "முட்டாள் தனம்" என்று கூறிவிட்டு அதே பழக்கத்தினை புதுமையான ஒரு பெயரை வைத்து வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வது நகைச்சுவையாக இருக்கிறது.

பிள்ளையார் கோவிலில் காது மடல்களைப் பிடித்து குனிந்து தோப்புக்கரணம் போடும் பொழுது மூடத்தனம் என்று பலரும் கூறினார்கள். இப்பொழுது அதையே சூப்பர் ப்ரெய்ன் யோகா என்ற பெயரில் வெளிநாடுகளில் பிரபலமாகி வருகிறது. ஒரே தமாசு.

**15. உடற்பயிற்சி (EXERCISE)**

குழந்தைகளுக்கு தினமும் ஏதாவது ஒரு உடற்பயிற்சி கற்றுக் கொடுக்கப்படுகிறது.

**16. ஓய்வு (INTERVAL)**

அனைத்து குழந்தைகளுக்கும் மலம், சிறுநீர் கழிப்பதற்காக சிறிது நேரம் ஓய்வு கொடுக்கிறார்கள்.

**17. வாழ்க்கைக்கு தேவையான பயிற்சி**
**(EPL - Essential Practice for Life)**

வாழ்க்கையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும், தேவைப்படும் விசயங்களைக் கற்றுக் கொள்வதே இப்பயிற்சி.

இதுவரை குழுவாக இருந்த இக்குழந்தைகள் இனி தனித்தனியாக பாடம் கற்றுக் கொள்ளப்போகிறார்கள்.

அப்பள்ளியில் பல்வேறு அறைகளில் பல்வேறு அடுக்குகளாக செல்ஃப்களில் பலவகையான விளையாட்டுப் பொருட்களும், கருவிகளும், இயந்திரங்களும், வாகனங்களும், பொம்மை வடிவிலும், உண்மையான வடிவிலும் வைத்திருக்கின்றனர். அவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை குழந்தைகளுக்கு முன்பே கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இந்த பயிற்சி வகுப்பானது அரைமணிநேரம் முதல் 45 நிமிடங்கள் அல்லது ஒரு மணிநேரம் வரை தொடர்கிறது. இது மிகவும் முக்கியமானதொரு வகுப்பு.

இந்த வகுப்பில் ஒவ்வொரு குழந்தையும், அந்த பள்ளியில் உள்ள ஏதாவது ஒரு பொருளை எடுத்து வந்து தரையில் ஒரு விரிப்பினை விரித்து அதன் மீது வைத்து விளையாடும் பொழுதே அது சம்பந்தப்பட்ட கல்வி அக்குழந்தைக்கு கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு ஒரு மணிநேரம் அப்பள்ளியில் எல்லா குழந்தைகளும் விளையாட்டில் ஈடுபடுகின்றனர். அப்பொழுது ஆசிரியர்கள், ஒவ்வொரு குழந்தையின் அருகே சென்று அக்குழந்தை விளையாடும் பொருள் என்ன? அந்த பொருளை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? என்பதை கற்றுக் கொடுக்கிறார். எந்தக் குழந்தை எந்தப் பொருளை எடுக்கிறதோ அக்குழந்தைக்கு அது தொடர்பான கல்வி வழங்கப்படுகிறது.

இந்த இடத்தில் ஒரு விசயத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்கள் புகை வண்டியைப் பற்றிக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு குழந்தைக்கு ஹெலிகாப்டர் பற்றி கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசையாக இருக்கும். ஒரு குழந்தை எதைக் கற்றுக் கொள்ள நினைக்கிறதோ, அதை விட்டுவிட்டு வேறு ஒரு விசயத்தைக் கற்றுக் கொடுப்பதனால் அக்குழந்தைக்கு பிடிக்காத காரணத்தினால் அதைப்பற்றி அக்குழந்தை நினைவில் வைத்துக் கொள்வதில்லை.

எந்தக் குழந்தைக்கு எந்த நேரத்தில் எது பிடிக்கும் என்று அக்குழந்தைக்கே தெரியாது. எனவே இந்த வகுப்பில் ஒரு குழந்தை எந்த பொருளை கையில் எடுத்து விளையாடுகிறதோ, அந்த பொருள் சம்பந்தப்பட்ட விசயங்களைப் கூறும்பொழுது அக்குழந்தைக்கு புரியும்.

இவ்வாறு அக்குழந்தை விளையாடும் பொழுது அது ஒரு கல்விக் கூடம் போல அல்லாமல் ஒரு விளையாட்டுக் கூடம் போல் இருந்தது. எனவே அக்குழந்தைகளும் ஆர்வமாக கற்றுக் கொண்டனர்.

எப்பொழுதும் ஒரு பொருளை அதை எடுத்த இடத்தில் கொண்டு போய் வைத்துவிட்டு தனக்கு பிடித்த வேறு ஒரு பொருளைத் தேடி எடுத்து அது விளையாடுகிறது. அப்பொழுது ஆசிரியர்கள் அதைப்பற்றி விளக்கமாக கூறுகின்றனர்.

**18. தொலைக்காட்சி (TV PRACTICE)**

இந்த வகுப்பில் தொலைக் காட்சியின் வாயிலாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விசயத்தினைக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி, மயிலாட்டம், ஒயிலாட்டம் என நமது பாரம்பரிய கலைகளை, நம் நாட்டை, பிறநாட்டைச் சேர்ந்த கலைகளை டிவிடியின் மூலமாக காண்பிக்கிறார்கள். ஏனென்றால் சில விசயங்களை விளையாட்டின் மூலம் கற்றுக் கொடுக்க முடியும். சில விசயங்களை படங்கள் மூலமாக கற்றுக் கொடுக்க முடியும். சில விசயங்களை வீடியோ மூலமாக கற்றுக் கொடுக்க முடியும். சில விசயங்களை மட்டுமே பேசிப் புரிய வைக்கலாம் என்பதை இப்பள்ளியினர் மிகவும் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கின்றனர்.

நான் சென்றிருந்த சமயத்தில் பரதநாட்டிய வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அதாவது தொலைக்காட்சியில் பரதநாட்டிய வகுப்பு ஒளிபரப்பாகிக் கொண்டு இருந்தது. சில குழந்தைகள் அதைப்பார்த்து நாட்டியம் ஆட முயற்சி செய்தார்கள். சில குழந்தைகள் அதை அமைதியாக நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர். அப்பொழுது நான் அங்கிருந்து ஆசிரியர்களிடம் “சில குழந்தைகள் நாட்டியம் ஆடாமல் இருக்கிறார்களே அவர்களையும் ஆட சொல்லுங்கள்” என்று கேட்டேன். அதற்கு அந்த ஆசிரியர்கள் “நாங்கள் எதுவும் கூறமாட்டோம். ஏனென்றால் அக்குழந்தைக்கு எப்பொழுது ஆடலாம்” என்று தோன்றுகிறதோ அப்பொழுது அக்குழந்தை ஆடும். தொலைக்காட்சியில் நிகழ்ச்சியை காண்பிப்பது மட்டுமே எங்களது வேலை என்று கூறினார்கள்.

மற்ற குழந்தைகளைப் பார்த்து தானும் ஆடவேண்டும் என்று இந்த குழந்தையும் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக பார்த்து முயற்சி செய்து கூடிய விரைவில் சரியாக நடனம் ஆட கற்றுக்கொள்ளும் என்று அவர்கள் கூறினார்கள்.

சிறந்த முறை இது, இதுதான் சரியான பாடத்திட்டம்.

**19. அமைதி (SILENT)**

அனைத்து குழந்தைகளும் ஐந்து முதல் பத்துநிமிடங்களுக்கு எதுவும் பேசாமல் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும் என்பதே இந்த வகுப்பின் நோக்கம்.

பத்து நிமிடங்கள் பேசாமல் இருந்தாலே, அமைதியாக அமர்ந்துவிட்டாலே நாம் ஞானி தான் இதை குழந்தைகள் மட்டுமல்ல வளர்ந்த பெரியவர்கள் கூட செய்வதற்கு முடியாத ஒரு காரியமாக இருக்கிறது. இந்த சிறுவயதிலேயே அமைதியாக, சும்மா இருக்க கற்றுக் கொடுத்துவிட்டால் அந்த குழந்தைகள் வாழ்நாள் முழுவதும் ஞானியாக மட்டுமே இருக்கும். அமைதி வகுப்பு, அருமையான வகுப்பு .

**20. பாடல் வகுப்பு (SONG EDUCATION)**

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விசயத்தை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதற்காக ஆசிரியர்கள், பாடல்கள் வழியாக அதை புரிந்து கொள்ளவைக்க முயற்சி செய்கிறார்கள். அந்த பாடல்களை அவர்கள் பாடும் பொழுது குழந்தைகளையும்

சேர்ந்து பாடச் சொல்கிறார்கள். அதற்கு தகுந்தாற் போல உடலை, கை, கால்களை அசைத்து வாயால் பாடிக் கொண்டிருக்கும் விசயங்கள் நடைபெறுகிறது.

அதாவது உடல் ஆடிக் கொண்டிருக்கும் பொழுது வாய் பாடிக் கொண்டிருக்கிறது. மூளை புரிந்து கொண்டிருக்கிறது. அருமையான திட்டம்

**21. கருத்து படிமம் வகுப்பு (CONCEPT CLASS)**

ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு விசயத்தினைப் புரியவைப்பதற்காக வெறும் வாயில் மட்டும் பேசாமல் சில பொருட்களை குழந்தைகளின் கண்களுக்கு வேலை கொடுத்து அதை புரிய வைக்கிறார்கள்.

நான் சென்றிருந்த சமயத்தில் காற்றைப் புரிய வைத்து வகுப்பு நடந்து கொண்டு இருந்தது.

இதற்கென ஒரு தட்டில் பொரி வைக்கப்பட்டு இருந்தது. அதன் பக்கத்தில் N2 என்று எழுதப்பட்டிருந்த ஒரு காகிதம் இருந்தது. மற்றொரு தட்டில் மிக்சர் இருந்தது. அதன் அருகே O2 என்று எழுதப்பட்ட காகிதம் இருந்தது. மற்றொரு தட்டில் அவலும் அதன் அருகே ஏ. ஆர். (AR) என்ற எழுதப்பட்ட காகிதமும் இருந்தது. அடுத்த தட்டில் பொட்டுக்கடலையும் அதன் அருகே $CO_2$ என்று எழுதப்பட்ட காகிதமும் இருந்தது.

இவ்வாறு உணவுப் பொருட்களை தட்டில் வைத்து குழந்தைகளை அதைச் சுற்றி வட்டமாக அமரச் செய்து இருந்தனர்.

பொரி நிறைய இருக்கிறது. மிக்சர் அதைவிட குறைவாக இருக்கிறது. அவல் அதைவிட குறைவாக இருக்கிறது. பொட்டுக்கடலை அதை விடக் குறைவாக இருக்கிறது. பாருங்கள் என்று கூறிவிட்டு இதில் பொரிதான் நைட்ரஜன் ஹி$_2$, மிக்சர் தான் ஆக்ஸிஜன் $O_2$, அவல் தான் ஆர்கன் (Ar) பொட்டுக்கடலை தான் கார்பன் டை ஆக்ஸைடு ($CO_2$) என்று இது தொடர்பான பல விசயங்களை கற்றுக் கொடுத்து விட்டு இது அனைத்தையும் ஒன்றாக கலந்தது தான் காற்று என்று விளக்கமளித்தனர். காற்றில் ஹைட்ரஜன், நைட்ரஜன், ஆக்ஸிஜன், ஆர்கன்,கார்பன் டை ஆக்ஸைடு என்று பல்வேறு பொருட்கள் இருக்கிறது என்பதை புரிய வைத்துவிட்டு இந்த பொரிகடலை மிக்சரை பின்னர் உங்களுக்கு கொடுக்கிறேன் என்று ஓரமாக எடுத்து வைத்தனர். இன்றைக்கு காற்று வகுப்பு நிறைவடைந்து.

**22. சக்தி கருத்துப்படிமம் (ENERGY CONCEPT CLASS)**

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருளிலும் சக்தி எவ்வாறு மாற்ற மடைகிறது என்பதை கற்றுக் கொடுக்கின்றனர்.

நான் சென்றிருந்த சமயத்தில் ஒரு சாதரண துணியை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டிருந்தனர்.

இந்த துணி எனும் சக்தி இதற்கு முன்னர் வெள்ளை நிற காடா துணியாக இருந்தது. என்று அதை காண்பித்தனர். அனைத்துக் குழந்தைகளும் அதை தொட்டுப் பார்த்தனர். அந்த துணி நெய்யப்படுவதற்கு முன்னர் அந்த சக்தி மெல்லிய நூலிழையாக இருந்தது. அதற்கு முன்னர் சக்தி கெட்டியான நூலாக இருந்தது. அதற்கு முன்னர் பஞ்சாக இருந்தது. அதற்கு முன்னர் இது பருத்திச் செடியில் இருந்து வந்தது. அந்த பருத்திச் செடி மண்ணிலிருந்து விளைந்தது என்று கூறி புரிய வைத்தார்கள்.

இவ்வாறு புரிய வைக்கும் பொழுது அவர்கள் எடுத்துக் காட்டும் அனைத்து உதாரணப் பொருட்களும் பொம்மையாகவோ, உண்மையாகவோ காண்பித்தார்கள். அனைத்துக் குழந்தைகளும் அதை தொட்டுப் பார்த்தனர். அதைப்பற்றி தங்களது கருத்துக்களைப் பேசினார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் சக்தி எவ்வாறு மாறிக்கொண்டு இருக்கிறது என்பதை புரிய வைக்கிறார்கள்.

**உதாரணம் 2**

பழங்கள் - .................... வீடு
அம்மா ................... அப்பா
விவசாயி ................... கடை
தோட்டம் ...................மண்

**உதாரணம் 3**

மிட்டாய் ...........காசு .........கடை

**உதாரணம் 4**

கருவாடு .......... மீன்............. கடல் ........... மீனவர்கள்

**உதாரணம் 5**

கார் ............ பெட்ரோல் ............. சுத்திகரிக்கபடாத எண்ணெய்............... பூமிக்கு அடியில்

**உதாரணம் 6**

எண்ணெய்......... ஆலை (மில்) .............. கொப்பரை தேங்காய் ............தென்னைமரம் ..............மண்

இவ்வாறு ஒவ்வொரு நாளும் சக்திகள் எப்படி மாறிக்கொண்டே இருக்கிறது என்பதைப் புரிய வைக்கிறார்கள்.

**23. சைனா பாப்பா கதை**

பள்ளியில் ஒரு ஆசிரியர் சைனா பாப்பா என ஒரு பொம்மையைக் கையில் வைத்துக் கொண்டு "சைனா பாப்பா வர்றாங்க. கதை சொல்லப் போறாங்க. சைனா பாப்பா வர்றாங்க. கதை சொல்லப் போறாங்க எல்லாரும் கேளுங்கள் என்று ஒரு பாடலை பாடி அந்த பொம்மையை ஆட்டுகிறார்.

சாதாரணமாக வாயில் சொல்லும் பொழுது கேட்காத குழந்தை அந்த சைனா பொம்மையை ஆட்டிக் கொண்டே பேசும் பொழுது அந்த பொம்மையை பார்த்து புரிந்து கொள்கிறது.

தினமும் ஏதாவது ஒரு கதையின் மூலமாக குழந்தைகளுக்கு பல விசயங்கள் புரிய வைக்கப்படுகிறது.

நான் சென்றிருந்த அன்று தரையில் ஒரு விரிப்பு விரிக்கப்பட்டு ஒரு மரப் பொம்மை நான்கு மாடுகளின் பொம்மை ஒரு சிங்க பொம்மை ஆகியன வைத்திருந்தார்கள்.

"நான்கு மாடுகள் ஒன்றாக இருந்திச்சா, அப்போ சிங்கம் வந்திச்சா, அப்போ நாலு, மாடும் ஒன்று சேர்ந்து சிங்கத்தை துரத்திச்சா, சிங்கம் பயந்து ஓடிருச்சு..."

"நாலு மாடும் தனியா இருந்திச்சா சிங்கம் ஒரு மாட்டைக் கடிக்க வந்திச்சா. இதிலிருந்து என்ன புரிகிறது? ஒற்றுமையாக இருந்தால் நமது எதிரிகளிடம் இருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்" என்று புரிய வைத்தார்கள்.

**24. மதிய உணவு**

பகல் 12.30 முதல் 1 மணிவரை அனைத்து குழந்தைகளும் அவரவர் கொண்டு வந்திருந்த மதிய உணவினை அமைதியாக உட்கார்ந்து ஒழுங்கான முறையில் சாப்பிட்டார்கள்.

**25. தூக்கம்**

மதியம் ஒரு மணி முதல் 3.30 மணிவரை அனைத்து குழந்தைகளும் படுத்து நிம்மதியாக தூங்கினார்கள்.

**26. டாட்டா**

மாலை 3.30 மணிக்கு அனைத்துக் குழந்தைகளும் "வணக்கமும்" "டாட்டாவும்" கூறி விடை பெற்றார்கள். இவையெல்லாம் தான் நான் அப்பள்ளியில் பார்த்த நிகழ்ச்சி.

இனிமேல் இதைப்பற்றி விரிவாக சில விசயங்களையும், பள்ளியின் நிலைமையும் பற்றிப் பார்க்கலாம்.

இந்த பள்ளியைப்பற்றி இதுவரை நான் கூறியவற்றில் இருந்து இன்றைக்கு சாதாரணமாக தெருவுக்கு தெரு உள்ள பள்ளிகளான குழந்தைகள் "விளையாடும் மற்றும் பாதுகாக்கும் டேகேர்" பள்ளிகளைப் போன்றே உள்ளவே?

இதில் என்ன சிறப்பு என்று சிலர் நினைக்கலாம்.

நீங்கள் பார்க்கும் அனைத்து இடங்களும் பணம் வாங்கிக் கொண்டு பிழைப்பு நடத்துவதற்காக செயல்படும் குழந்தைகள் டேகேர் பள்ளிகளாக உள்ளவை. அந்த இடங்களில் பெற்றோர்கள் பணம் கொடுக்கிறார்கள் என்பதற்காக குழந்தைகளை பார்த்துக் கொள்வதை ஒரு வேலையாக செய்கிறார்கள். ஆனால் இந்த பள்ளி மற்ற டேகேர் பள்ளி போன்றது அல்ல.

பல வருடங்களாக குழந்தைகளின் மனநிலையை ஆராய்ச்சி செய்து எப்படி எல்லாம் கல்வியை கற்றுக் கொடுத்தால் புரியும் என்று யோசித்து உருவாக்கப்பட்ட திட்டம், இதில் குழந்தைகளின் மீது அன்பு உள்ளது. பாசம் உள்ளது. பொறுப்பு உள்ளது. மேலும் இப்பள்ளியில் நான் பார்த்து வியந்த மற்றொரு விசயம் பாடத்திட்டம்.

யாரோ வடிவமைத்த பாடத்திட்டத்தினை அப்படியே காப்பி அடிக்காமல் பல இடங்களில் கற்றுக் கொண்ட விசயங்களைக் கலந்து ஆராய்ச்சி செய்து பாடத்திட்டத்தினை உருவாக்கி இருக்கிறார்கள். அடுத்தவர் உருவாக்கிய பாடத்திட்டத்தினை காப்பிடியப்பது சுலபம். ஆனால் அவற்றில் நாம் பல மாற்றங்களை செய்து நாமே சொந்தமாக உருவாக்கி அதற்கான விளக்கங்களுடன் பாடத்தினை வடிவமைக்கும் பொழுதுதான் அது சிறப்படைக்கிறது.

ஆசிரியர்கள் குழந்தைகளாக மாறினால் குழந்தைகள் எளிதில் கற்றுக் கொள்ளும்.

இந்த பள்ளியில் எந்த குழந்தைகளும் ஆசிரியர்களை "டீச்சர்" என்றோ, வாத்தியார் என்றோ அழைப்பதில்லை. அத்தை, மாமா, அண்ணா, அப்பா என்று தான் அழைக்கிறார்கள். அருமை ! அருமை !

இங்கு கற்கும் குழந்தைகளுக்கு சுதந்திரம், யோசிக்கும் திறன், கற்பனை செய்யும் திறன், எதையும் கூர்ந்து கவனிக்கும் திறன் ஆகியன கற்றுக் கொடுக்கிறார்கள்.

இந்த பள்ளியில் விளையாட்டு பொருட்கள் நிறைய இருப்பதனால் குழந்தைகள் இங்கு வருவதற்கு மிகவும் விரும்புகிறார்கள்.

இங்கு தாய்மொழி வழியாகவே கல்வி கற்றுத் தருகிறார்கள். ஆங்கிலமும் பயன்படுத்துகிறார்கள். எனினும் ஒரு விசயத்தை முதலில் தாய்மொழியில் கற்றுக்

கொடுத்துவிட்டு பின்னர் அதே விசயத்தை ஆங்கிலத்தில் கற்றுக் கொடுக்கின்றனர். எனவே இங்குள்ள குழந்தைகள் தமிழை தமிழாகவும், ஆங்கிலத்தை ஆங்கிலமாகவும் இந்தியை இந்தியாகவும் பேசுவதற்கு தயார் செய்யப்படுகின்றனர்.

இந்த பள்ளிக்கு "யுனி-5 திட்டம்" என்று பெயர், இதை உருவாக்கியவர்களைப் பற்றி பின்னர் பார்க்காமல் .

யுனி - 5 என்றால் யூனியன் ஆஃப் ஃபைவ் (ஷீஐஷ்லிஜ லிƒ ய்ஷ்ஸஎ) ஐந்து விசயங்களை ஒன்று சேர்ப்பது அதாவது பஞ்ச பூதங்களை ஒன்று சேர்ப்பது. இந்த யூனி -5 பள்ளியினைப் போன்று பல நாடுகளில் பல இடங்களில் பல பள்ளிகள் செயல்படுவதை நெடுநாட்களாக நான் அறிவேன்.

ஆனால் இந்த பள்ளிகளில் கல்வி கற்பது அதிகம் செலவழிக்க வேண்டிய காஸ்ட்லியான கல்வியாக இருக்கிறது. அதிலும் பல பள்ளிகள் சரியாக இல்லை. இவ்வாறு பல பள்ளிகளை நான் கவனித்த பொழுது நான் பார்த்த பள்ளிகளிலேயே அவற்றில் சுலபமாக அணுகும் வகையில் அதிக அன்புடன் அதிக அக்கரையுடன் குறைந்த கட்டணத்தில் இயங்கும் இப்பள்ளிதான் என்னைக் கவர்ந்தது. எனவே இந்த பள்ளி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இந்த இடத்தில் பாராட்டவும் நன்றி கூறவும் கடமைப்பட்டு உள்ளேன்.

இந்த பள்ளியில் படிக்கும் கிருபா எனும் குழந்தை பள்ளி ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை அங்கு உதவியாளரக பணிபுரிபவரின் குழந்தை. மற்றவர்களுக்கெல்லாம் அதன் பின்னர் வேறுவேறு சமயங்களில் இப்பள்ளியில் சேர்ந்தவர்கள்.

கிருபா எனும் அக்குழந்தை முழுவதும் யுனி 5 எனும் திட்டத்தின் வழியே கல்வி கற்ற குழந்தை என்பதனால் நாம் அக்குழந்தையிடம் பழகும் பொழுது மற்ற குழந்தைகளிடமிருந்து மிகப்பெரிய வித்தியாசத்தை பார்க்க முடிகிறது.

இங்கு 1 வயது முதல் 4 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் 35 பேர் படிக்கின்றனர்.

திரு. சக்திவேல் ஐயா என்பவர் இப்பள்ளியை நடத்திவருகிறார். சாந்தி அத்தை, ஹேமாஅத்தை, சசிகலா அத்தை ஆகிய மூன்று அத்தைகள் இங்கு ஆசிரியைகளாக பணிபுரிந்து வருகின்றனர்.

மகேஸ்வரி அத்தை, கண்ணீஸ்வரி அத்தை, ஜோதி அத்தை, அமுதா அத்தை ஆகிய நான்கு அத்தைகள் இந்த ஆசிரிய அத்தைகளுக்கு உதவி செய்கின்றனர். இங்குள்ள அத்தைகள், குழந்தைகளுக்கு பாடம் நடத்தும் பொழுது அவர்களும் குழந்தைகளாக மாறிவிடுகின்றனர். அதைப் பார்த்த எனக்கு கண் கலங்கியது. நான் குழந்தையாக இல்லையே என்றும் இவர்களிடம் கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கவில்லையே என்றும் ஏக்கமாக இருந்தது. அவ்வளவு அன்பு, அவ்வளவு தெளிவு, அவ்வளவு அறிவு.

இவர்கள் அனைவரும் வாழ்க பல்லாண்டு இந்த பள்ளியில் ஒரு மாதத்திற்கு ரூ. 350 மட்டும் தான் குழந்தைக்கு கல்வி கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தையும் தனது வீட்டிலிருந்தே தான் மதிய உணவு கொண்டு வந்து சாப்பிட வேண்டும்.

இந்த பள்ளியின் ஆலோசகராக செயல்படும் சென்னையைச் சேர்ந்த டாக்டர் மாதேஸ்வரன் எனும் ஆசிரியரை நான்

சந்தித்துப் பேசியதில் பல விசயங்களை அவர் கற்றுக் கொடுத்தார்.

அதை இங்கு உங்களிடம் பகிர்கிறேன்.

“மொழி தான் ஒரு மனிதனுக்கு ஆணிவேர் அந்த மொழியை அழித்துவிட்டால் மனிதன் அழிந்து விடுவான். எனவே தாய்மொழி கல்வியே சிறந்தது” என்பதை இவர் ஆணித்தரமாக கூறுகிறார்.

அரசர்கள் காலத்தில் போர் எற்படும் சமயங்களில் நூலகங்ளைத்தான் முதன் முதலில் எரித்து விடுவார்களாம். நூலகங்களை எரித்து விட்டால் ஒரு இனத்தை அழித்ததற்கு சமம் என்று அந்தக் காலத்திலேயே இதை வந்திருக்கிறார்கள். எனவே தாய்மொழியை அனைவரும் கற்றுக் கொண்டு அதன் மூலமாக படிப்பதே சிறந்தது.

கபிலமுனி எனும் முனிவரின் சித்தாந்தத்தின் படி இவர் கல்வியை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறார்.

கருவிலிருந்து மூன்றரை வயது வரை ஒரு குழந்தைக்கு மனம் உருவாகிறது. இந்த வயதிற்குள் மனதை ஒழுங்கு செய்துவிட்டால் அதன் பிறகு அந்த குழந்தையை யாராலும் கெடுக்க முடியாது. அந்தக் குழந்தை நிம்மதியாக மட்டுமே வாழும் என்பதை இவர் நம்புகிறார். எனவே தான் நமது முன்னோர்கள் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்று பழமொழி மூலம் இக்கருத்தை நமக்கு உணர்த்தினார்கள். அதனால் ஒரு குழந்தையை ஐந்து வயதிற்குள் தயார் செய்து விட்டால் போதும். அக்குழந்தை இந்த உலகத்தில் நிம்மதியாக வாழும்.

குழந்தைகள் மூலமாக பெற்றோர்களைத் திருத்த முடியும் என்று இவர் நம்புகிறார். இங்கு படிக்கும் குழந்தை தங்கள் பெற்றோர்களுக்கும் நல்ல விசயங்களை புரிய வைக்கிறார்கள். திருத்துகிறார்கள். உதாரணமாக ஒரு வீட்டில் அம்மா கோபப்படும் பொழுது குழந்தை அந்த அம்மாவிடம் “கோபப்படாதே? கோபப்பட்டால் உடம்பிற்கு நல்லதல்ல” என்று தனக்கு வகுப்பில் சொல்லிக் கொடுத்த விசயங்களை அம்மாவிற்கு கற்றுத் தருகிறது. அப்பா மது அருத்துபவராக இருந்தால் “சாராயம் குடிப்பது உடலுக்கு கெடுதல்” என்று கற்றுத் தருகிறார்கள். அதை கற்றுக் கொண்டு வரும் குழந்தை வீட்டில் உள்ள பெற்றோர்களைத் திருத்துகிறது.

தாத்தா பீடி, சிகரெட் குடிப்பவர்கள் ஆக இருந்தால் இப்பள்ளி குழந்தைகளில் பலர் அப்பழக்கத்திலிருந்து தாத்தாக்களை விடுவித்திருக்கின்றனர்.

“விதைத்தால் மட்டும் போதும், எடுத்துப் பார்க்க வேண்டாம்” என்கிறார் இந்த ஆலோசகர்.

குழந்தைகளுக்கு ஒரே ஒருமுறை சொல்லிவிட்டு சென்று விடுங்கள். சோதனை செய்யவேண்டாம். திரும்ப திரும்ப சொல்லிக் கொடுக்கவேண்டாம். பரீட்சை வேண்டாம், மார்க் வேண்டாம். ஒரு குழந்தைக்கு ஒருமுறை சொன்னால் போதும். புரிய வைப்பது எப்படி என்று ஆசிரியர் மட்டும் யோசித்தால் போதும் என்கிறார். அதாவது கை ஆட்டிக் கொண்டு கைகளுக்கு வேலை கொடுக்கும் முறையில் ஞாபகசக்தி அதிகமாகிறது என்று கூறுகிறார். எனவே கற்றுத்தரும் பொழுது குழந்தைகளுக்கு வாயால் சொல்லிக் கொடுப்பதை விட குழந்தைகளின் கைகளை ஆட்டிடச் செய்து

கற்றுக் கொடுக்கும் பொழுது ஒருமுறை கூறினாலே பதிவாகிவிடும் என்று கூறுகிறார்.

ஐந்து வயது வரை குழந்தைகள் கற்பனை செய்தலும், யோசித்தலும் தான் அவர்களது வேலை என்று கூறுகிறார். அதை மட்டுமே ஒழுங்குபடுத்தினால் போதும் என்று கூறுகிறார்.

உதாரணமாக யானைக்கு மட்டும் ஏன் தந்தம் இருக்கிறது? முயலுக்கு ஏன் இல்லை?

வானம் ஏன் நீலமாக இருக்கிறது? நமக்கு ஏன் சிறகுகள் இல்லை? பறவைகளுக்கு மட்டும் சிறகுகள் இருக்கின்றன ஏன்? இவ்வாறு பல கேள்விகளை இக்குழந்தைகள் கேட்கிறார்கள்.

இந்த வயதில் ஒரு குழந்தைக்கு கற்பனை சக்தியும், யோசிக்கும் சக்தியும் அதிகமாக இருக்கும், அதை பயன்படுத்தித் தான் புரிய வைக்க வேண்டும். அதாவது விசயத்தை புரிய வைக்க உதாரணத்துடன் கற்பனை வளம் சேர்த்து கற்பிக்கவேண்டும்.

உதாரணமாக "ஒரு ஆமை இருந்ததாம், அதற்கு இறக்கை இருந்ததாம் அது பறந்து சென்றதாம்" என ஒரு விசயத்தை ஆரம்பித்து சொன்னால் அக்குழந்தை கேட்கும்.

இவ்வாறு மிருகங்களையும், காய்கறிகளையும் கற்பனை சக்தியையும் பயன்படுத்தித்தான் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும்.

நண்பர்களே ! ஒரு விசயத்தை நன்கு புரிந்து கொள்ளுங்கள். குழந்தைகள் ஏன் கார்ட்டூன் சேனலை மட்டுமே விரும்பிப் பார்க்கிறது என்றால் குழந்தைகளுக்கு கதைகளும், பாடலும், கற்பனை செய்வதும், கை, கால்களை ஆட்டி விளையாடுவதும், இல்லாத ஒன்றை புதுமையாக உருவாக்குவதும் தான் மிகவும் பிடித்தமான ஒன்று. நமது கல்வியும் இந்த முறையில் தான் அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் இந்த விசயத்தை நன்கு புரிந்து கொண்ட கார்ட்டூன் சேனல் முதலாளிகள் தங்களது வியாபாரத்தைப் பெருக்குவதற்கும், பல்வேறு பொருட்களை நமது குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் தலையில் கட்டி வருவதை சிறப்பாக செய்து வருகின்றனர். இந்த முறையைப் பயன்படுத்தி மேன்மையான கல்வியை குழந்தைகளுக்கு நாம் ஏன் தரக்கூடாது ? என்று ஆசிரியர்களும், பெற்றோர்களும், கல்வித்துறையினரும் யோசித்து செயல்பட்டால் கண்டிப்பாக கார்ட்டூன்களை விட குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லவே விரும்புவார்கள்.

இந்த பள்ளியின் இலட்சியம் என்ன தெரியுமா? பாரத மண்ணில் உள்ள அனைத்துக் கலைகளையும் ஒருங்கிணைத்து மதச்சார்பில்லாமல் வாழ்வதே இலட்சியம் என்று இவர்கள் கூறும்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இந்த யுனி 5 பள்ளியில் பஞ்சபூதங்களில் மண்ணிற்கே அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. மண்ணைப் பற்றிப் புரிந்து கொண்டால் மற்ற எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியும் என்று இவர்கள் கூறுகின்றனர். எனவே இந்த பள்ளிக்கு பலபெயர்கள் உள்ளன. சாகம்பரி கல்விமுறை, மண்ணிற்கு சக்தி அளிக்கும் அந்த சக்திக்குப் பெயர் சாகம்பரி.

எனவே இந்த பள்ளியை சாகம்பரி கல்விமுறை என்று அழைக்கலாம். நம்ம

வீட்டு மழலையர் பள்ளி என்று அழைக்கலாம் யுனி 5 பள்ளி என்று அழைக்கலாம்.

நாட்டில் உள்ள பல்வேறு தலைவர்களைப் பற்றியும் அவர்கள் ஆற்றிய நன்மைகள், அவர்களது கொள்கைகள், பற்றியும் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர். எனவே இந்த பள்ளியை பெரியார், காமராஜர், இயேசு, வள்ளலார், ஔவையார் முகமது நபி போன்றோரை பற்றி மேலோட்டமாக மட்டும் கூறாமல் விரிவாக அவர்கள் சொன்ன தத்துவத்தையும் புரிய வைக்கிறார்கள்.

குழந்தைகள் குழந்தைகளாகவே வாழ்வதற்கான ஒரு இடமே கல்விக்கூடம் என இந்த ஆலோசகர் கூறுகிறார். இந்த இரண்டு வரிகளையும், மீண்டும், மீண்டும் படியுங்கள்,. மிகப்பெரிய தத்துவம் இதில் அடங்கியுள்ளது. குழந்தைகளுக்கு சரி எது? தவறு எது? என்பதை தெளிவாகக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்கிறார். உதாரணமாக ஒரு குழந்தை மற்றொரு குழந்தையை கடித்துவிட்டது என்றால் நீ அந்த குழந்தையை கடித்தது தவறு, என்று கூறி புரியவைக்க வேண்டும் என்கிறார்.

ஒரு சிறு குழந்தைஅதிக வயதுடைய மற்றொரு குழந்தையை வாடா, போடா என்று அழைக்கும் பொழுது அச்சிறு வயது குழந்தையிடம் நீ வயதில் உன்னைவிட பெரிய குழந்தையான அவரை வாடா, போடா என்று அழைப்பது தவறு என்பதை சுட்டிக் காட்டவேண்டும் என்கிறார். இவ்வாறு குழந்தைகளுக்கு சரி, தவறு எது என்பதை தெளிவாகக் கூறி புரியவைக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

ஒருமுறை ஒரு குழந்தை செய்த தவறுக்காக அக்குழந்தையை மன்னிப்பு கேட்கக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அக்குழந்தையோ மூன்று நாட்கள் மன்னிப்பு கேட்காமலேயே இருந்துவிட்டு பின்னர் நான்காவது நாள் புரிந்து கொண்டு தானே வந்து மன்னிப்பு கேட்டதாம். அக்குழந்தைக்கு வயது மூன்று இவ்வாறு மன்னிப்பு கேட்பதற்கு பழக்கப் படுத்துகிறார்கள்.

மேலும் சுதந்திரம் என்றால் என்ன என்பதை கற்றுக் கொடுக்கிறார்கள் சுதந்திரம் என்பது நமது மூக்கின் நுனி வரை மட்டுமே உள்ளது. நமது வார்த்தைகள் , நமது செயல்கள் பிறரை துன்புறுத்தாமல் இருப்பதே சுதந்திரம் . எனவே நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், பேச்சும், நமது குடும்பத்தில் உள்ளவர்களையும், பிறரையும் காயப்படுத்தாமல், துன்புறுத்தாமல் எப்படி வாழ்வது என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொண்டு கடைப்பிடிப்பதே தனி மனித சுதந்திரம் என்று தெளிவாக கற்றுக் கொடுக்கவேண்டும் என்கிறார்.

ஒவ்வொரு குழந்தையையும், சொந்தமாக பாட்டெழுதி வரச்சொன்னால் நிச்சயமாக நாம் எதிர்பார்க்காத அளவிற்கு கோமாளித்தனமாக, வேடிக்கையாக,வினோதமாக,அற்புதமாக, அறிவுப்பூர்வமாக பாட்டுகளை எழுதி வருவார்கள் என்கிறார் இவர்.

ஒரு ஆசிரியரின் தகுதியே, குழந்தையின் தகுதி என்பதை ஆணித்தரமாக கூறுகிறார். ஆசிரியர்கள் தெளிவாக இருந்தால் மட்டுமே குழந்தைகள் தெளிவாக இருப்பார்கள் என்பதை இவர் நம்புகிறார். இந்த பள்ளியிலும் தேர்வுகள் உண்டு. ஆனால் இந்த தேர்வு எப்படி நடக்கிறது தெரியுமா?

**பெற்றோர்களுக்கான பரீட்சை**

ஒவ்வொரு குழந்தையின்

பெற்றோர்களையும் வரச் செய்து அமர வைக்கிறார்கள். அவர்களிடம் ஆசிரியர்கள் கேள்வி கேட்கிறார்கள். உங்கள் குழந்தை எடுத்த பொருளை எடுத்த இடத்தில் வைக்கிறதா?

ஆமாம் அல்லது இல்லை என்ற இரண்டே பதில்கள் தான். ஆமாம் என்று சொன்னால் சரி. இல்லையென்று அவர்கள் பதில் கூறினால் ஆசிரியர்கள் தாங்கள் கற்றுக் கொடுத்தது சரியில்லை என்று தன்னை, தன் கற்பிக்கும் ஆற்றலை மேம்படுத்திக் கொள்கிறார்கள். குழந்தைகள் மேல் கோபம் கொள்வதில்லை. அந்த குழந்தைக்கு புரியும்படி சொல்லித்தர முடியவில்லை என்று இவர்கள் தாம் அதை கூறி சரி செய்ய கற்றுக் கொள்கிறார்களே தவிர குழந்தைகள் மீது கோபம் கொள்வதில்லை.

இந்தக் குழந்தை பக்கத்தில் உள்ள குழந்தையை கடிக்கிறதா? என்று ஆசிரியர்கள் கேள்வி கேட்கிறார்கள். ஆமாம் என்று பதில் வருமானால் தாங்கள் கற்றுக் கொடுத்தது சரியில்லை என்று மீண்டும் அக்குகுழந்தைக்கு வேறு விதமாக புரியம்படி சொல்லிக் கொடுக்கின்றனர்.

ஒவ்வொரு பள்ளியிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் அந்தந்த ஊரைச் சேர்ந்தவர்களாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று இவர் கூறுகிறார். உதாரணமாக சென்னையைச் சேர்ந்த ஒரு ஆசிரியர், மதுரையில் உள்ள ஒரு பள்ளியில் வந்து பாடம் நடத்தும் பொழுது மதுரை பாஷை புரியவில்லை என்பதனால் சொல்ல வேண்டிய விசயத்தை முழுவதுமாக சொல்லிப் புரிய வைக்க முடிவதில்லை.

கோவையைச் சேர்ந்த ஆசிரியர், வேலூர் பள்ளியில் பாடம் நடத்தும் பொழுது அவர் தனது கோவை பாஷையில் பேசுவது பலருக்கும் புரிவதில்லை. எனவே அந்தந்த ஊரில் உள்ள ஆசிரியர்கள், அந்தந்த ஊரிலேயே வளர்ந்த பாஷை தெரிந்த ஆசிரியர்கள் பாடம் நடத்தும் பொழுது குழந்தைகள் தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள் என்று ஒரு கருத்தை நமக்கு புரிய வைக்கிறார்.

தமிழக அரசு ஒரு உருப்படாத விதிமுறைகளை வைத்திருக்கிறது. பகல் 12.30 மணிக்குமேல் குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஒரு விதிமுறை. எனவே இவர்கள் பெற்றோர் எங்களின் அமைதியுடன் தான் பிற்பகல் 2.30 மணிவரை பள்ளிக்கூடத்தில் குழந்தைகளை வைத்திருக்க கூறுகிறோம் என்று ஒரு அனுமதி கடிதம் பெற்றுக் கொண்டு மாலை 3.30 மணி வரை குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

“நேச்சுரல் வாக்” எனப்படும் இயற்கையை ரசிக்கும் பயணத்தை அடிக்கடி இப்பள்ளியில் மேற்கொள்கிறார்கள். தோட்டம், வயல், மலை, அருவி, ஆறு போன்ற இடங்களுக்கு குழந்தைகளை



நேரடியாக கூட்டிச் சென்று அங்குள்ள விசயங்களைப் பார்க்கும் பொழுது குழந்தைகளுக்கு தோன்றும் எண்ணங்கள் மூலமாக அவர்களுக்கு பாடம் நடத்துகின்றனர். இத்துடன் பொம்மலாட்டம், கதகளி, ஒயிலாட்டம் போன்ற நமது பாரம்பரிய கலைகளையும் கற்றுக் கொடுக்கின்றனர்.

குழந்தைகள் எப்பொழுதுமே பொய் சொல்வதில்லை. குழந்தைகள் கற்பனை உலகில் வாழ்கின்றனர் என்று இவர் கூறுகிறார். திடீரென ஒரு குழந்தை வந்து ரோட்டில் ஐந்து யானைகளை பார்த்தேன் என்று பொய் சொல்லும். உடனே அக்குழந்தைகளைப் பார்த்து பொய், பொய், டுப்பு, டுப்பு, பொய்யன் ஏமாற்றுகிறார் என்று கூறவேண்டாம். அதற்கு பதிலாக அக்குழந்தையின் கற்பனை சக்தியை பாராட்டுங்கள் என்று கூறுகிறார். இவ்வாறு பாராட்டி அவர்களது கற்பனை சக்தி ஊக்குவிக்கப்படும் பொழுது தான் அந்தக் குழந்தை பெரியவர்களாக வளரும் பொழுது “கிரியேட்டிவ் மைண்ட்” எனப்படும் பல்வேறு புதிய யுக்திகளை கண்டுபிடிக்க உதவியாக இருக்கும். எனவே அதை பொய் என்று குழந்தைகளிடம் கூறவேண்டாம் என்று கூறுகிறார்.

மிக முக்கியமாக குறிப்பிடவேண்டிய விசயங்களில் ஒன்று. குழந்தைகள் தங்களது சொந்த வேலையை செய்ய கற்றுத் தருவது இது ஒரு மிகப்பெரிய விசயமாகும். இப்பொழுதெல்லாம் பெரிய பெரிய படிப்பு, பதவி என்றிருப்பவர்களுக்கு சமையல் செய்வதற்கு கூட தெரியவில்லை, துணி துவைக்கத் தெரிவதில்லை, தேய்க்க தெரிவதில்லை, எதுவுமே தெரிவதில்லை, எல்லாவற்றிலும் பிறரை நம்பி வாழவேண்டி இருக்கிறது. எனவே இந்த பள்ளியில் துணி துவைப்பது வீட்டை சுத்தம் செய்வது, பாத்ரூம், கழுவுவது, கழிப்பறையை கழுவுவது, சமையல், எம்பிராய்டரி, ஷீ பாலீஸ் என அனைத்து விசயங்களையும் கற்றுக் கொடுக்கின்றனர்.

ஆனால் ஒரு கொடுமை என்னவென்றால். இது போன்று எந்த பள்ளியிலாவது குழந்தைகள் பெருக்குவதையோ, துவைப்பதையோ யாரேனும் புகைப்படம் எடுத்து அனுப்பிவிட்டால் உடனே வேலை, வெட்டி இல்லாத கல்வித்துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் நேரில் வந்து அப்பள்ளியை சோதனை செய்து கடுமையாக தண்டிக்கிறார்கள்.

பள்ளி என்பது வீட்டுவேலையை செய்யக் கற்றுக் கொடுப்பதா? அல்லது கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு தனக்கு ஒன்றும் தெரியாமல் மற்றவர்களிடம் வேலை வாங்குவதற்கா? என்பதை கல்வித்துறை அதிகாரிகளும், அரசாங்கமும் யோசிக்கட்டும்.

**உங்களுக்கு தெரியுமா?**

சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரிய பெரிய படிப்பு படித்தவர்கள் யாரும் சிறுசிறுவேலையைக் கூட செய்வதில்லை. அவர்களுக்கு வேலை வாங்குவதற்கு மட்டுமே தெரிகிறது. அத்தியாவசியமான வேலைகள் செய்வதற்கு பள்ளிகளில், கல்லூரிகளில் கற்றுக் கொடுப்பதே இல்லை. எனவே நாம் குழந்தைகளுக்கு வீட்டில் உள்ள வேலைகளில் இறங்கி செய்வதற்கு கற்றுத்தரவேண்டும். இந்த பள்ளி இதை சிறப்பாக கற்றுத் தருகிறது.
பிரமாதம் !

இந்த யுனி 5 கல்வித்திட்டத்தை உருவாக்கியவர் திரு. பிரதீப் அவர்கள் இவர் தற்பொழுது அமெரிக்காவில் வசித்து வருகிறார். இந்தியாவில் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த இவர் கல்வி சம்பந்தமாக, உடல் ஆரோக்கியம் சம்பந்தமாக பல்வேறு ஆராய்ச்சிகளை செய்து பொதுமக்களுக்கு பல வருடமாக புரியவைத்து வருகிறார். அவருக்கு நன்றி!

இந்த பள்ளியின் இணை நிறுவனரான டாக்டர் கணி அவர்களுக்கு நன்றி ! பள்ளியின் ஆலோசகராக செயல்படும் டாக்டர் மாதேஸ்வரன் அவர்களுக்கு நன்றி !

நண்பர்களே !

நான் இந்த பள்ளியின் ஆலோசகரான டாக்டர் மாதேஸ்வரன் அவர்களை நேரில் சென்று பார்த்ததை உங்களிடம் இங்கு பகிர்ந்து கொண்டேன். நீங்களும் அவரை நேரில் சென்று பாருங்கள். ஒரு வயது முதல் ஐந்து வயது வரை ஒரு குழந்தையை எப்படி வளர்க்கவேண்டும் என்பதைப் பற்றி இவர் தெளிவாக ஆராய்ச்சி செய்து அதிலேயே ஊறி இருப்பவராவார். உங்களுக்கு பயனுள்ள பல ஆலோசனைகளை வழங்குவார். இவரது புத்தியில் இரத்தத்தில் அது நிறைய கலந்திருக்கிறது. இவரைத் தொடர்பு கொண்டால் நிச்சயம் பல கல்விக் கூடங்களின் நிலை மாறும்.

இந்த பள்ளியின் நிர்வாக அறங்காவலர் திரு. மாரப்பன் கணேஷ் அவர்களுக்கு நன்றி ! ப்ராஜெக்ட் மேனேஜர் திரு. சுரேஷ்குமார் அவர்களுக்கு நன்றி !

ஹியூமன் ரிசோர்ஸ் திரு. ஜெயராமன் அவர்களுக்கு நன்றி!.

இவ்வாறு பல்வேறு நல் உள்ளங்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் இப்பள்ளி சிறப்பாக இருக்கிறது. எனவே இப்பள்ளியைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைத்து ஆசிரியர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றி !

இந்த பள்ளியைப் போன்று நீங்களும் பள்ளிகளை ஒவ்வொரு தெருவிலும் துவங்கி நடத்தலாம். ஆரம்பத்தில் பெரிய முதலீடு எதுவும் இல்லாமல் உங்கள் வீட்டிலேயே இரண்டு படுக்கை அறை வசதிகொண்ட அளவு அறை இருந்தால் போதும். இப்பள்ளியை ஆரம்பித்து விடலாம்.

தீயணைப்புத் துறையிடம் இருந்து ஒரு சான்றிதழும் , மின்வாரியத்திடம் இருந்து ஒரு சான்றிதழும், கெஜட் அலுவலர் மூலமாக கட்டிடத்திற்கு ஒரு அனுமதியும், சுகாதாரத் துறையிடம் ஒரு அனுமதியும், பள்ளியின் அருகே போதைப் பொருள் சம்பந்தப்பட்ட எந்த ஒருவிசயமும் இல்லை என்று ஒரு சான்றும் வாங்கினால் போதும். நீங்களும் பள்ளியை நடத்தலாம்.

இவ்வாறு ஒவ்வொரு தெருவிலும் இது போன்று ஒரு பள்ளி வந்துவிட்டால் இனி குழந்தைகள் ஐந்து வயதிலேயே அற்புதமான ஞானக் குழந்தைகளாக மாறுவார்கள்.

இந்த யுனி 5 பள்ளியானது திண்டுக்கல்லுக்கும், மணப்பாறைக்கும் இடையே செந்துறை என்ற ஒரு ஊரில் அமைந்துள்ளது. விருப்பம் உள்ளவர்கள் ஒருமுறை உங்கள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு குடும்பத்துடன் நேரில் சென்று இப்பள்ளியினை பார்வையிட்டு வரலாம். காலை எட்டுமணி முதல் மாலை நான்கு மணிவரை இப்பள்ளியில் நடப்பதை வேடிக்கை பார்த்து வந்தால் உங்களுக்கு எல்லாமே புரிந்து விடும்.

நான் சொல்வதை கேட்டு அறிந்து கொள்வதை விடநேரில் பார்த்து வருவதே சிறப்பு.

நீங்கள் கால தாமதமாக பத்துமணிக்கோ, பதினொரு மணிக்கோ சென்றால் நீங்கள் பல விசயங்களை இழக்க நேரிடும். எனவே இந்த பள்ளிக்கு செல்வதென்றால் முதலிலேயே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அங்கு செல்வதற்கான வழித்தடத்தினை அறிந்து வைத்துக் கொண்டு காலை எட்டுமணிக்குள் அங்கு இருப்பதற்கு ஏதுவாக தயாராகி செல்லுங்கள்.

இந்த பள்ளி ஒரு கிராமத்தில் அமைந்திருக்கிறது. எனவே நீங்கள் காரிலோ, பஸ்ஸிலோ செல்வதென்றால் நினைத்த நேரத்திற்கு செல்ல முடியாது. எனவே முதலிலேயே இதை கவனித்து திட்டமிட்டு தயாராகிக் கொள்ளுங்கள்.

இந்த “நம்மவீட்டு மழலையர் பள்ளியின்” தொலைபேசி எண் வேண்டுவோர் கீழ்காணும் நமது அலுவலக சேவை மைய எண்களில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

செந்துறை நம்ம வீட்டு மழலையர் பள்ளியின் தொலைபேசி எண்கள் வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொண்டு, அங்கு நேரில் சென்று பார்த்து புரிந்துக் கொண்டு நாம் நமது குழந்தைகளை ஐந்திலேயே வளைய வைப்போம்.

இந்திய +91 9500378441 மற்றும் 95003 78449.

இந்த கட்டுரையை எழுத தூண்டிய, உதவி செய்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் நன்றி . ஐந்தில் வளைந்தால் முன்னூற்று அறுபதிலும் வளையும்.


கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ்

வெளியீடு

அனாடமிக் தெரபி

செவிவழிதொடு சிகிச்சை

எந்த ஒரு மருந்து, மாத்திரை இல்லாமல்
நமது நோய்களை நாமே குணப்படுத்திக் கொள்ளும் முறை.



ஹீலர் பாஸ்கர் அவர்களின் அனாடமிக் தெரபி புத்தகம் தமிழ்,
ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகிவிட்டது.
வாங்கி படியுங்கள் பயன் பெறுங்கள்...

Place : **Giriiyya Publications,** Kovaipudur, Coimbatore.
✦ Contact : **+91 96290 32767** ✦ **www.giriiyyapublications.com**

பாகம் 10



# புவிதம் பள்ளி

## 5 வயது முதல் 12 வயது வரை பாடத்திட்டம்

தர்மபுரி அருகே உள்ள புவிதம் பள்ளியானது 5 வயது முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வியை எந்த மாதிரி கொடுக்கவேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்கிறது. புவிதம் பள்ளி எனும் தலைப்பில் இப்புத்தகத்தில் நாம் கொடுத்துள்ள கட்டுரையை படித்து முடித்த பின்னர் நேரில் ஒருமுறை சென்று பார்த்து வாருங்கள்.

நான் கடந்த ஆண்டில் (பிப்ரவரி 2016) புவிதம் என்ற ஒரு பள்ளிக்குச் சென்றிருந்தேன். இந்த பள்ளி தருமபுரிமாவட்டம் நல்லாம்பள்ளி என்னும் ஊரின் அருகில் நாகர்கூடல் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இந்தப் பள்ளியை திருமதி. மீனாட்சி அம்மாள் என்பவர் நடத்தி வருகிறார்.

இந்தப் பள்ளியில் பயிலும் ஒவ்வொரு குழந்தைகளும் சொந்தமாக விவசாயம் செய்கிறார்கள், இங்கு பயிலும் அனைத்துக் குழந்தைகளுமே சொந்தமாக சமைக்கிறார்கள், தன் துணியை தானே துவைத்துக் கொள்கிறார்கள், தாங்களே சொந்தமாக கறவைமாடுகளிலிருந்து பால் கறக்கிறார்கள்,சோப்புக்கட்டிகளை அவர்களே சொந்தமாக தயாரிக்கிறார்கள், செங்கல் உற்பத்தியையும் இவர்களே சொந்தமாக செய்கிறார்கள், தாங்களே சொந்தமாக நெசவும் நெய்கிறார்கள், இங்கே பாடம் நடத்தப்படுவது இல்லை. கதை சொல்லல் முறையில் மட்டுமே குழந்தைகளுக்கான கல்வியை புரிய வைக்கிறார்கள். இந்தப் பள்ளியில் தேர்வு நடத்துவது இல்லை. என்னுடைய பல வருடக் கனவுப் பள்ளியை இந்தப் புவிதம் பள்ளியில் பார்த்தபொழுது மிகவும் சந்தோசமாக இருந்தது.

புவிதம் பள்ளியை நடத்திவரும் திருமதி. மீனாட்சி அம்மாள் என்பவர் மும்பையில் ஒரு சாதாரணப்பள்ளியில் படித்து வந்தவர். ஆனால் அந்தப் பள்ளியில் பாடம் நடத்தும் முறையும், குழந்தைகளை அவர்கள் அணுகும் முறையும் இவருக்குப் பிடிக்கவில்லை. சிறுவயது முதலே அனைத்து விசயங்களையும் ஆராய்ச்சி செய்யும் மனம் கொண்ட இவருக்கு பள்ளி சென்று படிப்பதற்கு மனம் இல்லை.



எல்லா விசயங்களையும் ஏன்? எதற்கு என்று கேள்வி கேட்கும் குணம் கொண்டவராக இருந்திருக்கிறார். எனவே பலவருடங்களாக பள்ளிக்குச் செல்வது பிடிக்காமலேயே சென்று வந்திருக்கிறார்.

ஒருமுறை 'எனது பள்ளி' என்ற தலைப்பில் அனைத்துக் குழந்தைகளையும் கட்டுரை எழுதும்படி ஆசிரியர் கூறியிருக்கிறார். இவரும் உடனே இவருக்குப் பிடித்தமான பள்ளி எப்படி இருக்கும் என கற்பனை செய்து அதை கட்டுரையாக எழுதி இருக்கிறார். அதாவது "எனது பள்ளியில் ஆசிரியர் இருக்கவே கூடாது. பரீட்சை வைக்கக்கூடாது. "டெஸ்டு எக்ஸாம்" போன்றவை இருக்கவே கூடாது. பள்ளி அறை மிகவும் பெரிதாக இருக்க வேண்டும். ஓடி, ஆடி விளையாடுவதற்கு ஏதுவான மைதானம் இருக்கவேண்டும். எப்பொழுதும் விளையாடிக் கொண்டே இருக்கவேண்டும். மனதிற்குப் பிடித்த மாதிரி வாழவேண்டும்" என்று தனது கற்பனையில் பள்ளி என்றால் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பதைப் பற்றி எழுதிக் கொடுத்து இருக்கிறார். ஆனால் இந்தக் கட்டுரையை அவர் எழுதிக் கொடுத்த போது அவரது ஆசிரியர் அதைப்படித்து கிழித்துக் குப்பை தொட்டியில் போட்டு விட்டதுடன் அவருக்கு தண்டனையும் கொடுத்திருக்கிறார்கள்.

ஏனென்றால், அந்தப் பள்ளி ஆசிரியர்கள் விரும்புவது என்னவென்றால் "என்பள்ளி மிகவும் சிறப்பாக இருக்கிறது. என்னுடைய ஆசிரியர்கள் மிகவும் சிறப்பாகக் கற்றுக் கொடுக்கிறார்கள் என்பது போன்று அப்பள்ளியைப் பற்றி மிகவும் பெருமையாக எழுதவேண்டும் என்று அவர்கள் நினைத்திருக்கிறார்கள். "இப்படி ஒரு மாபெரும் பொய்யை நான் ஏன் எழுத வேண்டும்?" என்று உண்மையை எழுதி இருக்கிறார். அதற்கு இவருக்குக் கிடைத்தது தண்டனை மட்டுமே.

எனவே எட்டாம் வகுப்பு படிக்கும் பொழுதே இவருக்குப் பிடிக்காததால் பள்ளியில் இருந்து வெளியேற்றப்பட்டார். இவரது தந்தையார் இவருக்குப் பெரும் துணையாக இருந்திருக்கிறார். "பள்ளிக்குச் சென்று படிக்கவிருப்பம் இல்லையென்றால் நீ போக வேண்டாம்" என்று வீட்டிலேயே படிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இதுபோன்ற அப்பாக்கள் கிடைப்பது அபூர்வம்.

அவரது அப்பா அன்றே ஒருவேளை தன்னை அடித்துப் பள்ளிக்குச் செல்ல வற்புறுத்தி இருந்தால், தன்னால் இன்று நிம்மதியாக வாழ்ந்திருக்க முடியாது என்று கூறுகிறார்.

விருந்தினர்கள் தங்கள் வீட்டிற்கு வரும்பொழுது அவர்களிடம் "பள்ளியில் எனது மகள் முதலாவதாக வருவாள்" என்று அவரது அப்பா கூறுவாராம். சிறிது இடைவெளிக்கு பிறகு "கடைசியிலிருந்து முதலாவதாக வருவாள்" என்பாராம்.

பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லப் பிடிக்காத, பரீட்சையை சரியாக எழுதாத, மதிப்பெண்கள் அதிகம் வாங்காத தன் குழந்தையை இதுவரை அவர் திட்டியதே இல்லை. "உனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்" என்று அவர் கூறியது இவர் வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தி இருக்கிறது.

அதன் பின்னர் பள்ளிக்குச் செல்லாமலேயே ஆர்வமுடன் தன்னுடைய சொந்த முயற்சியில் பல்வேறு கலைகளை அவர் கற்றுத் தேர்ந்திருக்கிறார்.



தபால் வழியில் கல்வி பயின்று பட்டங்கள் பெற்றிருக்கிறார். பி.ஈ ஆர்க் (B.E. Arch) என்ற மிகப்பெரிய படிப்பினையும் தபால் மூலமே படித்திருக்கிறார்.

இவருக்கு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராத்தி என ஐந்து மொழிகள் தெரியும், மும்பையில் தெருவோரங்களில் வசிக்கும் சிறுவர்களுக்குக் கூட ஐந்து மொழிகள் தெரியும் என்று இவர் கூறுகிறார்.

இவரது கணவரும், இவரும் பல வருடங்களுக்கு முன்பே தருமபுரிக்கு குடிபெயர்ந்து வந்து விட்டனர். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்களை பள்ளிக்கு அனுப்பி வைத்து கல்வி கற்க வேண்டிய வயது வரும் பொழுதுதான் யோசித்திருக்கிறார்.

பள்ளிக் கூடத்திற்கே செல்லவேண்டாம் என்று நாம் பாதியிலேயே அதைவிட்டு வெளியே வந்துவிட்டோம். எனவே நமது குழந்தைகளுக்கு இனி எந்த மாதிரி ஒரு பள்ளியை கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறோமோ அதை நாமே கொடுப்போம் என்று முடிவு செய்திருக்கிறார். எனவே இவரது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டிலேயே சொந்தமாக கல்வியைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்.

இவருடைய சிறப்பு என்னவென்றால் எந்த ஒரு பாடத்தினையும் நேரடியாக பாடமாக சொல்லிக் கொடுக்காமல் அந்தப் பாடத்திற்கு உகந்த ஒரு கதையைத் தேடிக் கண்டு பிடித்து, அந்தக் கதையைச் சொல்லி அதன் மூலம் அந்தப்பாடத்தினைப் புரிய வைத்துவிடுவார்.

குழந்தைகளுக்கு கதைகள் மூலமாக சொல்லித் தரப்படும் பாடங்கள் மட்டுமே அழகாகப் புரியும் என்று கூறுகின்றார்.

பொதுவாக பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு இருபது வயது ஆன பின்பும் அவன் சின்னப் பையன் அவனுக்கு ஒன்றும் தெரியாது என்று கூறுகின்றார்கள். "அவர்களுக்கு சொன்னால் புரியாது" என்றே பெற்றோர்கள் முடிவு செய்து விடுகின்றனர்.

இந்த உலகில் மக்களை முட்டாள்களாக்கி வியாபாரம் செய்து கொண்டிருக்கும் இலுமினாட்டிகள் எனப்படும் "சீக்ரெட் சொசைட்டி"யைச் சேர்ந்தவர்கள் தான் இந்த உலகை ஆண்டு கொண்டு இருக்கின்றனர். அவர்கள் தான் கார்ட்டூன்கள் மூலமாக, கதைகள் மூலமாக ஊடகங்களின் வழியாக நமது குழந்தைகளின் மனதில் தப்பான விசயங்களை பதிந்துவிடும்படி விதை விதைத்து வருகின்றனர். அவர்கள் நம்புகிறார்கள், இந்த குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே எல்லாவற்றையும் புரியவைத்துவிட முடியும் என்று.



**நாம் ஏன் நம்பக் கூடாது?**

ஒரு நாள் சிங்கம் மற்றும் பூனையின் கதையை திருமதி. மீனாட்சி அம்மாள் தனது குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருந்திருக்கிறார். அந்த சமயத்தில் அங்கே வந்த ஆடு மேய்க்கும் சிறுவர்களும் இவர் கூறும்

கதையை கேட்டுக் கொண்டு இருந்திருக்கின்றனர். கதையை சொல்லி முடித்த பின்னர் ஆடு மேய்க்கும் சிறுவர்கள் இந்த அம்மாவிடம் வந்து "இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்று கேட்டிருக்கின்றனர். அதற்கு "நான் இந்தக் குழந்தைகளுக்கு பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்" என அவர் பதில் கூறி இருக்கிறார்.

உடனே அந்த சிறுவர்களும் தங்கள் வீட்டிற்குச் சென்று "இனிமேல் ஆடு, மாடு மேய்க்கப் போகவில்லை. நான் அந்த அக்காவிடம் பாடம் படிக்கச் செல்கிறேன்" என்று தங்கள் பெற்றோர்களிடம் ஆர்வமுடன் கூறி இருக்கின்றனர்.

இவ்வாறு பள்ளிக்கூடம் சென்று படிப்பதற்கு வசதி இல்லாதவர்களும், பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டவர்களும், முட்டாள் என்று பட்டம் சூட்டப்பட்ட மாணவர்களும், அந்த ஊரிலும் அதைச் சுற்றியிருக்கும் பகுதிகளிலும் தினமும் அவர் வீட்டிற்கு வருவதை வழக்கமாக வைத்திருந்தனர். தன்னார்வத்துடன் இவரிடம் குழந்தைகள் எல்லோரும் கல்வி கற்க வந்தது அவருக்கு மிகுந்த சந்தோசத்தை அளித்திருக்கிறது.

தனது இரு குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கும், அதே நேரத்தில் பத்து, பதினைந்து குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கும் பெரிய வித்தியாசமில்லை என்ற எண்ணத்தோடு அவரது வீட்டிற்கு வரும் எல்லா குழந்தைகளுக்கும் அன்புடன் கதைகள் மூலமாக பாடங்களைப் புகட்டியிருக்கிறார்.

குழந்தைகள் ஆர்வமாக இருக்கும் சமயத்தில் மட்டும் தான் பாடங்களை நாம் சொல்லிக் கொடுக்க முடியும் என்று இவர் தெளிவாகக் கூறுகிறார். இவரது கல்விமுறையில் பாடத்திட்டங்களே கிடையாது. கதைகள் மட்டுமே பாடங்களாக கற்பிக்கப்படுகிறது. இதுவே இவரது தனித்துவம்.

பள்ளிக் கூடத்திற்கு சென்று பாடங்களை ஒழுங்காக படிக்காமல், எழுதாமல் இருக்கும் எல்லா மாணவர்களையும் முட்டாள்கள் என்று தற்போதிருக்கும் கல்விமுறையும், ஆசிரியர்களும் ஏன் பெற்றோர்கள் கூடக் கூறிக் கொண்டு வருகின்றனர். ஆனால் உண்மையிலேயே இப்போதிருக்கும் கல்விமுறையில் எந்த மாணவன் படிக்கமாட்டேன் என்று கூறுகிறானோ அவனே 'புத்திசாலி'.

ஒரு புத்திசாலிக் குழந்தையை இப்போதிருக்கும் கல்விமுறையில் படிக்கச் சொன்னால் கண்டிப்பாக அவருக்கு அது ஒத்துவராது. அவரால் மதிப்பெண்கள் எடுக்க முடியாது. எனவே கல்விக்கூடத்தில் முட்டாள் என்று ஒதுக்கப்பட்ட அனைவரும் புத்திசாலிகள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பாடம் படிக்க முடியாத மாணவனை "நீ ஆடு, மாடு மேய்ப்பதற்குத்தான் லாயக்கு" என்று கூறுகிறார்கள். ஆனால் ஒரு புத்திசாலிக் குழந்தையால் மட்டுமே ஆடு, மாடுகளை மேய்க்கமுடியும் என்பதே உண்மை. ஒரு ஞானக் குழந்தையால் மட்டுமே ஆடு, மாடுகளை மேய்க்க முடியும். ஆடு, மாடு மேய்ப்பது என்பது ஒன்றும் அவ்வளவு சாதாரண விசயமே அல்ல.

ஆடு, மாடு மேய்பவர்களுக்கு சொந்தமாக யோசிப்பதற்கு நிறைய நேரம் கிடைப்பதால், அவர்கள் உலகத்தை முழுவதும் ஆராய்ச்சி செய்து தனக்குத்

தானே ஒரு மிகப்பெரிய அனுபவத்தைப் பெற்றவர்களாகின்றனர். படித்த குழந்தைகளைவிடவும் அதிக அறிவுள்ள, புத்திசாலியான குழந்தைகளாக இருக்கின்றனர் என்பது மட்டுமே உண்மை.

இப்போதுள்ள கல்வியில் மூன்று விசயங்கள் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

1.அடிமைத்தனம்
2. பிறரைச் சார்ந்து வாழ்வது
3. பயம்

ஒரு சிறந்த கல்விமுறை என்பது மூன்று விசயங்களை கற்றுக் கொடுக்கவேண்டும்.

1. சொந்தமாக யோசிப்பது
2. தனியாக வாழ்வது
3. சுதந்திரமாக வாழ்வது

மேலே குறிப்பிட்டுள்ள ஆறு விசயங்களையும் நன்றாக யோசியுங்கள். இப்பொழுது சாதாரண கல்விமுறையில் பயின்றுவரும் உங்கள் குழந்தைகள் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கே புரியும்.

பரீட்சை, டெஸ்ட், மதிப்பெண்கள் என்பதும்; முதல் இடம் இரண்டாம் இடம் என்பதும்; பல்வேறு போட்டிகளை நடத்தி அதில் ஜெயிப்பவர்களுக்கு விருதுகள்; கொடுப்பதும்; பட்டங்களைக் கொடுப்பதும் போட்டி மனப்பான்மையை மட்டுமே உண்டாக்குகிறதே தவிர குழந்தைகளுக்கு அன்பு, சகோதரத்துவம், சமாதானம் ஆகியன ஏற்படுவதற்கு அவை எள்ளளவும் உதவுவதில்லை என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியமான விசயம்.

புவிதம் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய மாணவர்கள் இருக்கின்றனர்.

அமெரிக்காவில் மட்டும் ஆண்டு ஒன்றிற்கு 80000 மூளை அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் உருவாகிக்கொண்டு இருக்கின்றனர்.

**ஏன் என்று யோசியுங்கள்?**

இவ்வாறு வருடத்திற்கு 80000 வீதம் உருவாகும் மருத்துவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக பல்வேறு வழிகளில் புதுப்புது வியாதிகளை இந்த மருந்து மாத்திரை கம்பெனிகள் உருவாக்குகின்றனர். உதாரணமாக ஹைப்பர் ஆக்டிவிட்டி, (Hipper Activity), லோயர் ஆக்டிவிட்டி ஏ.டி.எச்.டி, கலிபோர்னியா கால்சிபோர்னியா, கம்போடியா என இவ்வாறு புதுப்பது பெயர்களை வைத்து புதிய புதிய வியாதிகளை உருவாக்கி, அவற்றைப் பற்றி சினிமாக்களின் மூலமாக பொதுமக்களிடம் இந்த விசயத்தை பரவச் செய்து வியாபாரம் செய்கிறார்கள். மருந்து, மாத்திரை கம்பெனிகளால் இவ்வாறு விளம்பரப்படுத்தப் படும் வியாதிகள் அப்பாவி மக்களை அப்படியே நம்ப வைத்துவிடுகிறது.

மனநலம் மற்றும் மூளை சம்பந்தப் பட்ட பற்பல வியாதிகளை உருவாக்கி வரும் மருந்து, மாத்திரை கம்பெனிகளால் பெரிதும் பாதிக்கப்படு பவர்கள் குழந்தைகளும், மாணவர்களும் தான்.

குழந்தைகளும், மாணவர்களும் ஒரு விசயத்தை பார்த்து அப்படியே அதேபோல செய்பவர்கள்.

குழந்தைகள் எப்பொழுதுமே மற்றவர்களைப் பார்த்து தாங்களும் அதுபோல செய்யவேண்டும் என்று அப்படியே நடந்து கொள்கின்றனர். அதாவது குழந்தைகள் எப்பொழுதுமே மற்றவர்கள் செய்யும் விசயங்களைப் பார்த்து தாங்களும் அப்படியே செய்வார்கள்.

பொதுவாக குழந்தைகள், சமுதாயத்தில் நடக்கக் கூடிய விசயங்களைப் பார்த்து அப்படியே செய்கிறார்கள் என்று கூறுவார்கள். ஆனால் உண்மையில் குழந்தைகள் முதன் முதலில் காப்பியடிப்பது அப்பா மற்றும் அம்மாவைத் தான். இரண்டாவதாக ஆசிரியரைப் பார்த்து காப்பியடிக்கின்றனர். மூன்றாவதாகத்தான் சமுதாயத்தைப் பார்த்துக் காப்பியடிக்கின்றனர். எனவே ஒரு குழந்தை ஒழுங்காக இல்லையென்றால் அதற்கு முதற்காரணம் பெற்றோர்களும் அவரது குடும்பத்தினரும். இரண்டாவது காரணம் ஆசிரியர்கள், மூன்றாவது காரணம் மட்டுமே இந்த சமுதாயம் என்று கூற முடியும்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒழுங்காக இருக்கும் பட்சத்தில் எப்படிப்பட்ட மோசமான சமுதாயத்தின் தாக்கமும் குழந்தைகளைப் பாதிக்காது என்பதுதான் உண்மை. எனவே குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் பெற்றோர்களும், ஆசிரியர்களும் பல விசயங்களை கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

மழை வரும்பொழுது ஒரு குழந்தை அந்த மழைக்குப் பயந்து ஓடிஒளிந்து கொள்கிறது எனில் அது சரியான குழந்தை அல்ல. மழை வரும்பொழுது ஓடிப்போய் நனைந்து அதில் ஆட்டம்போடும் குழந்தையே நல்ல குழந்தை. ஆனால் நாமோ, மழையில் நனைந்தால் சளிப்பிடிக்கும், காய்ச்சல் வரும் என்றொரு தப்பான கருத்துக்களைக் கூறி அந்தக் குழந்தையை சாதாரணமாக இயற்கையில் பெய்யும் மழையைப் பார்த்தே பயப்படும் படியான குழந்தையாக நாம் வளர்த்து வைத்திருக்கிறோம்.

இயல்பாக, இயற்கையாக இருக்கும் குழந்தைகளே ஆரோக்கியமான, அமைதியான குழந்தைகள் ஆகும். ஆனால் பெற்றோர்களும், ஆசிரியர்களும் தப்பான விசயங்களைக் கற்றுக் கொடுத்து ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் குழந்தைகளை கொண்டு வந்திருக்கிறோம்.

இதை நாம் யோசிக்க வேண்டும்.

புவிதம் பள்ளியை கடந்த பதினைந்து ஆண்டுகளாக திருமதி. மீனாட்சி அம்மாள் அவர்கள் நடத்தி வருகிறார். இவர் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருக்கிறார். அதற்கு மேல் பள்ளிக்குச் செல்லப் பிடிக்காததால் வீட்டிலேயே சொந்தமாக கல்வி கற்றிருக்கிறார். இவ்வாறு வீட்டிலேயே இருந்து சொந்தமாக கல்வி கற்கும் பொழுது அவர் கல்வித்துறையை ஆராய்ச்சி செய்து பார்க்கும் பொழுது அவருக்கு இரண்டு விசயங்களில் ஈர்ப்பு வந்திருக்கிறது.

1. பிளேட்டோ
2. இரவீந்தரநாத் தாகூர்

**1. பிளேட்டோ**

யார் இந்த பிளேட்டோ ?

பிளேட்டோ என்பவர் கிரீஸ் நாட்டைச் சேர்ந்த ஏதென்ஸ் நகரத்தில் வாழ்ந்தவர். இவர் தான் ஃபவுண்டர் ஆஃப் அகாடமி இன் ஏதென்ஸ் (Founder of Academy in Athens) என்று அழைக்கப்படுவர்.

உலகிலேயே மிகச்சிறந்த கல்விமுறை மற்றும் மிகச் சிறந்த சமுதாயம் என்று அழைக்கப்படுகிற யுட்டோபியா (Utopia) என்ற முறையை அறிமுகப்படுத்தினார். யுட்டோபியா என்பது ஒரு கல்விமுறை



மட்டுமல்ல. இந்த சமுதாயம் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான அருமையான திட்டம்.

பிளேட்டோ தான் யுட்டோபியா எனும் மிகப்பெரிய பொக்கித்தை இலத்தின் மொழியில் உலக மக்களுக்குக் கொடுத்திருக்கிறார். இதுவே தற்போது பல்வேறு நாடுகளில் சிறப்பான சமுதாயம் கல்வி, ஆட்சி முறைகளுக்கு ஒரு முன்னோடி, எனவே யுட்டோபியா என்ற முறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து கற்றுக் கொள்ளுங்கள். யுட்டோபியா பிளேட்டோவால் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது. அதன் பிறகு பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது.

இந்த இடத்தில் நான் ஒரு விசயத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். பல்வேறு நாடுகளில் தாய்மொழியில் எழுதப்பட்ட பல்வேறு நல்ல விசயங்களை ஆங்கிலத்திற்கு மொழிமாற்றம் செய்யும்பொழுது அந்த நல்ல விசயங்களும் சேர்ந்தே கெட்ட விசயங்களாக மாற்றப்பட்டுவிடுகின்றன. காரணம் என்னவெனில் இஸ்ரேல் நாட்டில் உள்ள பதின்மூன்று குடும்பத்தைச் சேர்ந்த சமூகவிரோதிகள் எப்பொழுதும் அவர்களுக்குத் தகுந்தாற்போல அந்த புத்தகத்தை மாற்றிவிடுகின்றனர். இவ்வாறு மாற்றப்பட்ட விசயங்களைக் கொண்ட அனைத்தையும் இணையதளம் மற்றும் அனைத்து ஊடகங்களிலும் அவற்றை அறிமுகம் செய்து விடுவார்கள். எனவே நாம் எந்த புத்தகத்தைப் படித்தாலும், எந்த விசயங்களைக் கேட்டாலும் அதில் உள்ள உண்மையைப் புரிந்து கொள்வதற்கு, உண்மையைக் காட்டும் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்க்கவும், கேட்கவும் வேண்டிய சூழலில் தான் நாம் இன்று உள்ளோம்.

எனவே யுட்டோபியா என்னும் சிறந்த வழிமுறைகளை உள்ளடக்கிய புத்தகமானது இலத்தீன் மொழியில் மட்டுமே அதன் உண்மை தன்மை கொண்டதாக ஒரிஜினலாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஒருவேளை ஆங்கிலத்தில் இதைப் படிக்கும் சூழலில் நன்றாக ஆய்வு செய்யும் மனப்பான்மையுடன் அதைப் படித்து உண்மையை புரிந்து கொள்ளுங்கள்.



**2. இரவீந்தரநாத் தாகூர்**

சாந்திநிகேதன் என்னும் கல்வி முறையை நிறுவிய வங்காளக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர்.

யுட்டோபியா மற்றும் சாந்திநிகேதன் ஆகிய இரு கல்விமுறைகளாலும் ஈர்க்கப்பட்ட திருமதி. மீனாட்சிஅம்மாள் பல ஆராய்ச்சிகள் செய்து இறுதியாக கல்வியை எப்படிக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்தார். அதன்படி தனது குழந்தைகளுக்கும், மற்ற குழந்தைகளுக்கும் இதே கல்விமுறையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக சிறப்பாக கற்றுக் கொடுத்து வருகிறார்.

ஆடம்பரத் திருமணத்தில் விருப்பம் இல்லாத இவர் தங்களுடைய திருமணத்தை எளிமையாக நடத்தியிருக்கிறார். பதிவு அலுவலகத்தில் இந்த தம்பதியினர் திருமணம் செய்துகொண்டு 50பைசா சாக்லேட்டுகளை அனைவருக்கும் வாங்கிக் கொடுத்து இருக்கின்றனர்.

சிறுவயது முதலே எல்லா விசயங்களிலும் கேள்வி கேட்டுக் கொண்டு இருப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார். இவ்வாறு கேள்வி கேட்பதால் தான் எதையும்

ஆய்வு செய்து அறிந்து கொள்ளும் எண்ணம் வளர்ந்தது என்று கூறுகிறார்.

தகவல் (Information) என்பதும், அறிவு (Knowledge) என்பதும் வேறு வேறு என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். “இப்போது உள்ள கல்வி, தகவலை மட்டுமே கொடுத்துக் கொண்டு இருக்கிறது. தகவல்களை நிறையத் தெரிந்துகொண்டிருப்பதனால் ஒரு குழந்தை ஆரோக்கியமாக, நிம்மதியாக வாழமுடியாது. அறிவு இருந்தால் மட்டுமே ஆரோக்கியமாக, நிம்மதியாக அமைதியாக வாழமுடியும்” என்று கூறுகிறார்.

எந்த ஒரு குழந்தைக்கும் யாரும் கற்றுக் கொடுக்க முடியாது. ஆனால் கற்றுக் கொள்வதற்கு நாம் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அதாவது அதற்கான இடவசதியை நாம் ஏற்படுத்திக் கொடுத்தால் போதும் என்று கூறுகிறார். இதைத்தான் ஆங்கிலத்தில் (Do not teach, give space to learn) என்று கூறுகின்றனர்.

குழந்தைகளை மனிதனாக பார்க்கும் பொழுது அந்தக் குழந்தைகள் மனிதனாக வளர்கிறார்கள்.

குழந்தைகளைப் பொருளாகப் பார்க்கும் பொழுது அந்தக் குழந்தை மற்றவர்களையும் பொருளாகப் பார்க்கிறது என்று கூறுகிறார்.

இப்பொழுது உள்ள கல்வித்திட்டத்தில் குழந்தைகளைப் பொருளாகப் பார்க்கிறார்கள். எனவே அந்தக் குழந்தை வளர்ந்து எல்லா மனிதர்களையும் பொருளாகப் பார்ப்பதால் தான் மனிதாபிமானமே இல்லாமல் நடந்து கொள்கிறது என்று கூறுகிறார்.

நாம் நமது குழந்தைகளை மனிதனாக மதித்து அதன் உணர்வுகளுக்கு மரியாதை கொடுத்து அதன் விருப்பு, வெறுப்புகளைப் புரிந்து நடந்து கொள்வதன் மூலமாக அந்தக் குழந்தையும் பிற்காலத்தில் வளர்ந்து சக மனிதர்களுடன் அன்போடு நேசத்தோடு வாழும் என்று இவர் கூறுகிறார்.

அடுத்தவர்களைக் கட்டுப்படுத்துவதை விட நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்வது தான் சிறந்த முறை என்று இவர் கூறுகிறார். அதாவது நாம் எப்பொழுது பார்த்தாலும் மற்றவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதையே மீண்டும் மீண்டும் குறை கூறிக் கொண்டிருக்கிறோமே தவிர நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி யோசிப்பதில்லை. எனவே குழந்தைகளுக்கு மற்றவர்களைக் குறை கூறும் பழக்கத்தை விட்டு விட்டு அவர்களைப் பற்றி அவர்களே யோசித்து செயல்படும் செல்ஃப் ஆக்டிவிட்டி (Self Activity) என்ற சுய செயல்பாடுகளையும், சுய கட்டுப் பாடுகளையும் பற்றி குழந்தைகளுக்கு புரிய வைக்கவேண்டும் என்று கூறுகிறார்.

இங்கு கல்வி பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் சந்தோசமாக வாழ்வதற்குக் கற்றுத் தரப்படுகிறது. ஆனால் ஒரு நிபந்தனை; நாம் சந்தோசமாக இருப்பதற்காக மற்றவர்களைத் துன்பப்படுத்தக் கூடாது என்பதும் போதிக்கப்படுகிறது. எனவே இங்கே உள்ள அனைத்துக் குழந்தைகளும் தானும் சந்தோசமாக இருக்கிறது. மற்றவர்களுக்கும் துன்பத்தைக் கொடுக்காமல் அவர்களும் சந்தோசமாக இருக்க உதவுகின்றனர்.

இப்பொழுது உள்ள கல்வித் திட்டத்தில் புத்திசாலித்தனமான அணுகுமுறைகள் கற்றுத்தரப்படுகிறது. ஆனால் உணர்வுப் பூர்வமான

அணுகுமுறைகள் கற்றுத் தரப்படுவதில்லை. ஒரு குழந்தை உணர்வுப் பூர்வமான அணுகுமுறைகளை மட்டும் தான் இன்று கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்பொழுது உள்ள பாடத்திட்டத்தில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு உணர்வுகளைப் பற்றி ஒன்றும் தெரிவதில்லை என்று கூறுகிறார். ஆனால் எமோஷனல் இன்டலிஜென்ஸ் (Emotional Intelligence) அணுகுமுறை அவசியம் என்பதை இவரது கல்விமுறையில் கடைபிடித்து வருகிறார்.

எமோஷனல் இன்டலிஜென்ஸ் (Emotional Intelligence) என்றால் என்னவெனில் ஒரு காரியத்தை நாம் செய்யும் பொழுது அதன் மூலமாக நமக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் உணர்வு நிலை மாற்றங்களைப் பற்றி முதலிலேயே தெரிந்து கொண்டு அதன் மூலம் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத ஒரு காரியத்தை செய்வதற்குப் பெயர்தான் எமோனல் இன்டலிஜென்ஸ் ஆகும்.

உதாரணமாக “நாலு போலீசும் நல்லா இருந்த ஊரும்” என்ற படத்தினை ஒருமுறை பாருங்கள். நாம் எடுக்கும் ஒரு சிறு முடிவும் உலகத்தில் மிகப்பெரிய தவறான விசயம் நடப்பதற்கு துணையாக இருக்கிறது. எனவே நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும், செயலும், சொல்லும் எங்கே சென்று முடியும் என்று முதலிலேயே புரிந்துகொண்டு செய்வதற்கு இங்கே கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இந்தப் பள்ளியில் ஞானத்தையும், சுதந்திரத்தையும் கற்றுத் தருகிறார்கள்.

ஆரம்ப காலங்களில் இந்தப் பள்ளியில் பரீட்சை என்றோ, எக்ஸாம், டெஸ்ட் என்றோ எதுவும் இல்லாமல் குழந்தைகள் நிம்மதியாக கற்றுக்கொண்டு இருந்தனர். ஆனால் அரசாங்கத்தின் கெடுபிடிகள் காரணமாக வேறு வழியில்லாமல் இப்பொழுது குழந்தை களுக்குப் பரீட்சை வைக்கப்படுகிறது. ஆரம்பத்தில் குழந்தைகள் தேர்வு எழுதிய தாள்களை இவர்களே திருத்தி வந்திருக்கின்றனர். ஆனால் இப்பொழுது உள்ள அரசின் அணுகுமுறையினால் ஒரு பள்ளியில் குழந்தைகள் எழுதிய விடைத்தாள்களை மற்ற பள்ளிக்கு அனுப்பி வைத்து அவர்கள் தான் திருத்தவேண்டும் என்ற சட்டத்தினால் வேறுவழியின்றி அவ்வாறே செய்து வருகின்றனர்.

குழந்தைகளை இவர்களது பள்ளியில் தேர்வு எழுதச் செய்து பின்னர் அந்த விடைத்தாள்களை அரசுப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார்கள். பலவருடங்களாக பரீட்சை எதுவும் நடத்தாமல் செயல்பட்டு வந்த இந்தப் பள்ளி வேறுவழியில்லாமல் அரசின் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி திருமதி. மீனாட்சி அம்மா அவர்கள் கூறும்பொழுது “எங்கள் குழந்தைகளுக்கு அரசாங்கம் நடத்தும் பரீட்சை முறையில் பங்கேற்பது மிகவும் சுலபம். ஏனென்றால் அரசின் கல்வித் திட்டத்தை எங்களது குழந்தைகள் பத்தே நாளில் படித்து முடித்து விடுவார்கள். அதனால் அரசின் விதிமுறைகளுக்காகப் பத்துநாள் போதும் தங்களுக்காக மற்றநாட்கள் என்று கூறுகிறார். மேலும் “இந்த சுதந்திரமான கல்விமுறையில் படித்தால் எதுவும் படிக்கலாம்” என்ற வார்த்தையை அவர் அடிக்கடி உபயோகிக்கிறார். அதாவது “உடல், மனம், நிம்மதி, சந்தோசம், சமாதானம், மனிதநேயம், சுதந்திரம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளும்போது அந்தக் குழந்தையால் எதையுமே படிக்க முடியும்” என்று கூறுகிறார்.

இந்தப் பள்ளியில் இப்பொழுது கணிசமான எண்ணிக்கையில் குழந்தைகள் படித்துக் கொண்டு வருகின்றனர். இந்தக் குழந்தைகள் அனைவருமே அந்த ஊர் மற்றும் அந்த ஊரைச் சுற்றியுள்ள ஊர்களைச் சேர்ந்தவர்கள். இந்தப் பள்ளியில் குழந்தைகளுக்கு கல்விக் கட்டணமாக அந்தக் குழந்தையின் பெற்றோர்களது ஒருநாள் வருமானத்தை மட்டும் மாதக் கட்டணமாக பெற்று கொள்கிறார்கள்.

உதாரணமாக ஒரு குழந்தையின் பெற்றோர் தினமும் ஐந்நூறு ரூபாய் வீதம் சம்பாதிக்கிறார்கள் என்றால் இந்தப் பள்ளியில் மாதம் ஐநூறு ரூபாய் கட்ட வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்னால் ஒரு பெண்மணி இந்தப் பள்ளியில் தன் குழந்தையை சேர்த்திருக்கிறார். நான்கு மாதங்களுக்குப் பின்னர் அந்தப் பெண்மணி ஒருநாள் திருமதி. மீனாட்சி அம்மாவிடம் வந்து சண்டை போட்டிருக்கிறார். நான்கு மாதங்களாக என் குழந்தை உங்கள் பள்ளிக்கு வருகிறது. ஆனால் இன்னும் புயளீம் கூட  கற்றுக்கொள்ளவில்லை. இது எல்லாம் ஒரு ஸ்கூலா? என்ன நடத்து கிறீர்கள்?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு இவர் "உங்கள் குழந்தையை எத்தனை மாதத்தில் பெற்றெடுத்தீர்கள்" என்று கேட்டு இருக்கிறார். அந்த பெண்மணி பத்து மாதம் என்று கூறியிருக்கிறார். அடுத்ததாக அந்தப் பெண்மணியிடம் "நான்கு மாதத்தில் அடுத்த குழந்தையைப் பெற்றெடுத்து வாருங்கள். நான் கற்றுக் கொடுக்கிறேன் என்று இவர் கூறியிருக்கிறார். அதாவது பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் அவசர அவசரமாக நிறைய கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இதுவே குழந்தைகள் சரியாக வளராததற்கு காரணமாக அமைகிறது.

இந்தப் பள்ளியில் மாடுகள் வளர்க்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குழந்தையும் மாட்டிலிருந்து பால் கறக்கவேண்டும். அதற்குக் கற்றுத் தரப்படுகிறது. நாய், பூனை ஆகிய செல்லப்பிராணிகளும் இங்கு வளர்க்கப்படுகிறது. அவற்றோடு இந்தக் குழந்தைகள் வளரும்பொழுது பல்வேறு விசயங்களைக் கற்றுக்கொள்கிறது.

இந்தப் பள்ளியில் அனைத்து குழந்தைகளும் சொந்தமாக செங்கல் தயாரிக்கிறார்கள்.  இந்த செங்கல்லைத் தயார் செய்வதற்கு அவர்களுக்கு கற்றுத் தரப்படுவதில்லை. அவர்களாகவே சொந்தமாக யோசித்து விதவிதமான செங்கற்களை தயார் செய்கிறார்கள். அதில் எந்த செங்கல் வலிமையாக, உறுதியாக இருக்கிறது என்று சோதித்து அறிந்துகொண்டு அதன் பிறகு நல்ல செங்கல் தயாரிக்கும் முறையை மாணவர்களே கற்றுக் கொள்கிறார்கள்.

இந்தப் பள்ளியில் ஏற்கனவே இருக்ககூடிய விசயங்களைப் பற்றி நேரடியாக சொல்லிக் கொடுக்காமல் அவர்களை முதலில் ஆராய்ச்சி செய்ய வைக்கிறார்கள். அதன் பின்னர் கடைசியாகத் திருத்துகிறார்கள். இந்த முறையில் கல்வி கற்கும்பொழுது ஒவ்வொரு குழந்தையும் மற்றவர்கள் சொல்லும் விசயத்தை அப்படியே ஏற்காமல் சொந்தமாக யோசிக்கும் தன்மையை பெற்று விடுகிறார்கள்.

அனைவரும் ஷீக்கள் அணியவேண்டும் என்று அவசியமில்லை இந்த பள்ளியில். ஏனென்றால் குளிர் பிரதேசங்களில் மட்டுமே ஷீக்கள் அணிந்து குழந்தைகள் செல்லவேண்டும். மற்ற நாடுகளில் ஷீ அணிந்து குழந்தைகள் செல்லும் பொழுது அது அந்தக்

குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தையும், மன நிம்மதியையும் கெடுக்கும் ஒரு விசயமாக மாறும் என்று கூறுகிறார்.



சிறுவயதில் தன்னுடைய வீட்டில் டிவி பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஒவ்வொரு நாளும், இவரது அப்பா இவரிடம் ஒரு கேள்வி கேட்பாராம். "கடந்த மூன்று மணிநேரமாக டிவி பார்த்துக் கொண்டிருந்தாயே, அதிலிருந்து நீ என்ன கற்றுக்கொண்டாய்?" என்று கேட்பாராம். "அதில் ஒன்றும் கற்றுக்கொள்ளவில்லை" என்று இவர் பதில் கூறுவாராம்.

பல நாள் இவ்வாறு அவர் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்த கேள்வி ஒருநாள் இவரை யோசிக்கத் தூண்டியிருக்கிறது. எதையுமே புதிதாக கற்றுத் தராத ஒரு விசயத்தை நாம் ஏன் பலமணிநேரம் செலவு செய்து பார்க்கவேண்டும் என்று தோன்றியவுடன் அன்று முதல் அவர் டிவி பார்ப்பதை நிறுத்திவிட்டாராம்.

எனவே இதே முறையை பெற்றோர்கள் தங்களது வீட்டில் அமல்படுத்தலாம். ஒரு குழந்தை ஒரு காரியத்தை செய்துவிட்டு வந்தவுடன் "இதன் மூலம் நீ என்ன கற்றுக்கொண்டாய்?" என்று கேட்டுப்பாருங்கள். அந்தக் குழந்தை அந்த செயலை மீண்டும் செய்யவேண்டுமா? அல்லது நிறுத்தவேண்டுமா? என்று அந்தக் குழந்தையே முடிவெடுத்துவிடும்.

இவர் சிறுவயதில் பல ஊர்களுக்கு தனது பெற்றோருடன் பயணம் மேற்கொள்ளும் பொழுது இவரது உடைமைகளை இவரே சுமந்து வரவேண்டும் என்ற ஒரு விதிமுறையை இவரது அப்பா கூறியிருக்கிறார். எனவே சிறுவயது முதல் தனது உடைமைகளை துணிமணிகளை தானே சுமந்து செல்லும் பொழுது அதன் பாரம் பற்றி இவருக்குப் புரிந்திருக்கிறது. எனவே எவ்வளவு குறைவான பொருட்களைப் பயன்படுத்தி சிறப்பாக வாழவேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டிருக்கிறார்.

தானே தனது துணிகளைப் சொந்தமாக துவைத்துப் பயன்படுத்தியதால் துணிகளைப் பற்றிய அருமை தெரிந்து வைத்திருக்கிறார். ஆனால் இப்பொழுதுள்ள குழந்தைகளுக்கு வீட்டில் எந்த வேலையையும் கொடுக்காமல் பல பெற்றோர்கள் குழந்தைகளை வளர்த்து வருகின்றனர். சமீபத்தில் ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தேன். அந்த வீட்டில் இருந்த ஒரு பதினைந்து வயது பெண் குழந்தையைப் பார்த்து "உனக்கு சமைக்கத் தெரியுமா?" என்றுகேட்டேன். அந்தக் குழந்தை தெரியாது என்று பதில் கூறியது. அதற்கு அந்த தாயார் "பாவம் கல்யாணத்திற்குப் பிறகு வரும் பூராவும் சமைக்கத்தானே போறா? அதனால நான் வீட்டில் அவளிடம் எந்த வேலையையும் கொடுப்பதில்லை" என்று கூறினார். இந்த இடத்தில் ஒரு விசயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். சமையல் செய்வது, துணி துவைப்பது, வீட்டை சுத்தம் செய்வது, கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கி வருவது என பல்வேறு வீட்டு வேலைகளைக் குழந்தைகளுக்குக் கொடுங்கள். ஆனால் அந்த வேலைகளை தினமும் கொடுத்து அந்தக் குழந்தைகளைக் கஷ்டப்படுத்தாமல் எல்லா வேலைகளையும் கற்றுக்கொடுங்கள். அவர்கள் தினமும் செய்யவேண்டுமா? வேண்டாமா? என்பதை பின்னர் முடிவு செய்யுங்கள். ஆனால் எந்தவேலைகளையும் கற்றுக் கொடுக்காமலும், அவர்களுக்குத் தெரியாமலும் இருக்கக் கூடாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எனவே பெற்றோர்கள் தாங்கள் செய்யும் வீட்டுவேலைகள் அனைத்தையும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் கட்டாயப்படுத்தி அவர்களை வேலை வாங்கிக் கொள்ளக் கூடாது என்பதைப் புரிந்து கொள்வோம்.

புவிதம் பள்ளியில் தியான அறையே பள்ளி வகுப்பறையாக இருக்கிறது. 'டூம்' எனப்படும் அரைக்கோள வடிவில் கூரைப்போடப்பட்ட அறைதான் குழந்தைகள் படிக்கும் வகுப்பறையாக இருக்கிறது.

பல இடங்களில் அறிவிப்புப் பலகையில் (Notice Board) விதிமுறைகளை குறிப்பிட்டு வைத்துள்ளனர். இங்கு படிக்கும் குழந்தைகள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு துறைக்குத் தலைவராக நியமித்திருக்கிறார். உதாரணமாக ஒரு சிறுவன் தான் அங்கு இருக்கும் விவசாயத்துறை அமைச்சர். ஒரு சிறுமி சுகாதாரத்துறை அமைச்சர். ஆமாம். இங்குள்ள குழந்தைகளுக்கு படிக்கும் பொழுதே மந்திரி பதவி கொடுக்கப்படுகிறது. விவசாயத்துறை அமைச்சர். விவசாயம் முழுவதும் ஒழுங்காக நடக்கிறதா? என்று சோதனை செய்யவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மந்திரி பதவி கொடுத்திருப்பது மிகவும் ஆச்சர்யமாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது.

இந்த பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு இடையே வரும் சண்டைகளை ஆசிரியர்கள் தீர்ப்பது கிடையாது. சம்பந்தப்பட்ட இரண்டு குழந்தைகளும் ஒன்றாக அமர்ந்து எப்படி தங்களுக்குள் வந்த சண்டையை தீர்த்துக் கொள்வது என்பதை ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையின்படி இவர்கள் சொந்தமாக பஞ்சாயத்து செய்து கொள்கிறார்கள்.

இங்கு கல்வி பயிலும் எந்தக் குழந்தையையும் அடித்து தண்டிப்பது கிடையாது. சொல் பேச்சு கேட்காதவர்களுக்கு அனைத்து வழிகளையும் பயன்படுத்திப் பார்த்து அது பலனளிக்கவில்லை என்ற சூழ்நிலையில் வேறு வழியே இல்லை எனும்போதுதான் அந்த குழந்தைகளுக்கு அடியும் இருக்கிறது. ஆனால் இங்கு அடிவாங்கும் குழந்தைகள் மிகமிக குறைவு.

மீண்டும் நினைவுபடுத்துகிறேன். புவிதம் பள்ளியில் வகுப்புகள் நடத்தப்படுவதில்லை. கதைகள் மூலமாக மட்டுமே புரிய வைக்கிறார்கள். தமிழ் மற்றும் ஆங்கில மொழியினை சிறுவயது முதலே முழுவதும் கற்றுக் கொடுத்துவிடுகிறார்கள். எனவே இந்த இரு மொழிகளிலும் குழந்தைகள் சரளமாக புரிந்துகொள்ளவும், பேசவும் செய்கிறார்கள்.

இப்பொழுது நமக்கு ஏன் தனித்தனியாக பாடங்களை பிரித்து படிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று கேள்வி எழுப்புகிறார்? இது அவசியம் அற்றது என்று கூறுகிறார்.

உதாரணமாக இப்பொழுது உள்ள கல்வித்திட்டத்தில் கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல், தமிழ், ஆங்கிலம், சமூக அறிவியல் என்று பிரிவுகளை ஏற்படுத்தி பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். இந்த முறை சரியாக இல்லை என்று இவர் கூறுகிறார். இது போன்று ஆயிரம் பாடங்கள் இருக்கின்றன. ஒரு பாடத்திற்கும், இன்னொரு பாடத்திற்கும் நிறைய தொடர்புகள் இருக்கின்றன. எனவே ஒரே நேரத்தில் எல்லா பாடங்களையும் கலந்து கற்றுத்தரமுடியும் என்று கூறுகிறார்.

குழந்தைகள் பல்வேறு விசயங்களைக் கற்றுக் கொள்வதற்கு வசதிகளையும், அதற்கான இடங்களையும் ஏற்படுத்திக் கொடுப்பது மட்டுமே நமது வேலை. குழந்தைகள் தானாகவே கற்றுக் கொள்வார்கள் என்று கூறுகிறார்.

நூறு குழந்தைகளுக்கு மேல் ஒரு பள்ளியில் இருந்தால் அந்த பள்ளியில் சிறப்பாக கற்றுக்கொடுக்க முடியாது என்று கூறுகிறார். எனவே ஒரு பள்ளியில் அதிகபட்சம் நூறு குழந்தைகளுக்கு மேல் இருக்கவேண்டாம் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார். நூறு குழந்தைகளுக்குக் குறைவாக இருந்தால் மட்டுமே அதற்கு பெயர் குடும்பம் அதற்கு மேல் எண்ணிக்கை அதிகரித்தால் அதற்குப் பெயர் பள்ளி என்று குறிப்பிடுகிறார்.

எனவே குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாதீர்கள் குடும்பத்திற்கு அனுப்புங்கள் என்று கூறுகிறார். இங்கு உள்ள குழந்தைகள் ஒருவரைப் பற்றி மற்றவர்கள் அவர் இல்லாதபொழுது பேச மாட்டார்கள். ஒருவரைப் பற்றிய நல்ல, கெட்டவிசயங்கள் மனதில் தோன்றினால் நேரடியாக அவரிடமே கூறிவிடுவார்கள்.

இந்த பள்ளியில் ஒருநாள் "காக்கா முட்டை" என்ற திரைப்படத்தினை மாணவர்களுகக்குத் திரையிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த திரைப்படத்தினை பார்த்து முடித்த உடன் அனைத்து மாணவர்களிடமும் ஒரு வெள்ளைத் தாளைக் கொடுத்து "இந்த திரைப்படத்தின் மூலமாக நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்" என்பது பற்றி எழுதுங்கள் என்று அவர் கூறியிருக்கிறார்.

அனைத்து மாணவர்களும் அந்த திரைப்படத்தைப் பற்றிய விமர்சனமும், பிடித்தது, பிடிக்காதது பற்றியும் என்ன கற்றுக் கொண்டோம் என்பது பற்றியும் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள்.

அதையெல்லாம் படிக்கும் பொழுதுதான் ஒரு மிகப் பெரிய உண்மை புரிகிறது. நாம் எப்பொழுதுமே ஒரு விசயத்தை ஒரே மாதிரியான கண்ணோட்டத்திலேயே பார்த்து வந்திருக்கிறோம். ஆனால் ஒரு விசயத்தைக் குழந்தைகள் என்ன மாதிரியான கண்ணோட்டத்தில் பார்க்கிறது என்பது பற்றி பெற்றோர்களும், ஆசிரியர்களும் இதுவரை யோசித்ததே இல்லை.

உதாரணமாக அதில் ஒரு குழந்தை "காக்கா முட்டையை இனிமேல் நான் எடுத்துக் குடிப்பேன்" என்று எழுதியிருந்தது. இன்னொரு குழந்தை "கையில் காசு இல்லை என்றால் திருடலாம்" என்று எழுதியிருக்கிறது.

ஒவ்வொரு குழந்தையும் தங்கள் கண்ணோட்டத்தில் பார்த்த விசயங்களைப் பற்றி பதிவு செய்திருந்தார்கள்.

இவ்வாறு சமுதாயத்தில் நடக்கும் விசயங்களையும் டிவி, நாடகங்களிலும், பத்திரிக்கையிலும், திரைப்படங்களிலும், வரும் விசயங்களையும் நாம் எப்பொழுதுமே நமது கண்ணோட்டத்தில் மட்டுமே பார்த்து வருகிறோம். இதை நமது குழந்தைகள் என்ன கண்ணோட்டத்தில் பார்க்கிறது என்று புரிந்து கொள்ளவேண்டும் என்றால் இதே போன்று அவர்கள் அந்த விசயங்களின் மூலம் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதை கேட்டு அறிந்துகொள்வதன் மூலம் தான் முடியும்.

ஒரு படத்தினை காண்பித்து அதில் அந்தக் குழந்தைகள் என்ன புரிந்து கொள்கிறார்கள் என்பதை எழுதி வாங்கிய பிறகு அதைப் படித்துப் பார்த்து அந்தக்

குழந்தைகளுக்கு எது நல்லது? எது கெட்டது? என்று கூறும்பொழுது குழந்தைகள் தனது பார்வையை மாற்றிக்கொண்டு சரியான பார்வையை பார்க்க ஆரம்பிப்பார்கள். இதுபோன்ற காரியங்களை நாம் நமது வீட்டிலும் செய்து வந்தால் மிகவும் சிறப்பான பலன் இருக்கும்.

சில நாட்களுக்கு முன்னர் சென்னையைச் சேர்ந்த பள்ளிக்கரனையில் வசித்து வரும் ஒரு தம்பதியினரைச் சந்தித்தேன். அவர்கள் திரு.செந்தில் மற்றும் திருமதி. லாவண்யா ஆகியோர் ஆவர். இதில் திரு.செந்தில் எச்.சி.எல் டெக்னலாஜி (HCL Technology) நிறுவனத்தில் சீனியர் ஆர்க்கிடெக்காகப் பணி புரிந்து வருகிறார். இந்த தம்பதியினர் இருவரும் நம்மிடம் இந்த கல்வி தொடர்பான பல்வேறு நல்ல விசயங்களை அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். இவர்கள் தான் நான் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் புவிதம் பள்ளியைப் பற்றி முதலில் எனக்கு கூறிய நபர்கள். எனவே நானும் எனது மனைவி (திருமதி. செல்வத்தரசி ஹீலர் பாஸ்கர்) மற்றும் திரு. செந்தில் ஐயா திருமதி லாவண்யா ஆகியோருடன் ஈரோடு அருகில் பள்ளிபாளையத்தை சேர்ந்த திருமதி. லஷ்மி மற்றும் திருமதி. கற்பகம் ஆகிய ஆறுபேரும் ஒன்றுசேர்ந்து புவிதம் பள்ளிக்குச் செல்ல புறப்பட்டோம்.

புவிதம் பள்ளி திருமதி. மீனாட்சி அம்மாவிடம் நேரடியான அந்த சந்திப்பின் மூலம் நாங்கள் பல்வேறு விசயங்களை கல்வி சம்பந்தமாக கற்றுக் கொண்டோம்.

புவிதம் பள்ளியை தொடர்பு கொள்வதற்கான முகவரி :
புவிதம் நர்சரி & பிரைமரி ஸ்கூல்,
நல்லாம்பள்ளி, பாப்பாரப்பட்டி ரோடு,
நாகர்கூடல், தமிழ்நாடு 636803.

புவிதம் ரூரல் டெவலப்மெண்ட் டிரஸ்ட் (Puvidham Rural Development Trust)
திருமதி. மீனாட்சி அம்மாள்
போன் : +91 9585759184, 9600491176.
Web : www.puvidham.in,
Email puvidham@gmail.com

இந்த புவிதம் பள்ளி தர்மபுரியிலிருந்து சேலம் செல்லும் சாலையில் 7வது கிலோமீட்டரில் நல்லாம் பள்ளி என்ற ஊர் உள்ளது. அதிலிருந்து பாப்புரப்பட்டி செல்லும் சாலையில் எட்டாவது கிலோமீட்டரில் நாகர்கூடல் எனும் ஊரில் அமைந்திருக்கிறது.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள திருமதி. மீனாட்சி அம்மா அவர்களின் தொலைபேசி எண்களைப் பார்த்ததும் தொலைபேசி எண் தான் கிடைத்து விட்டதே என்று பல கேள்விகளையும் கேட்டு அவரது நேரத்தை வீணடிக்காமல், முக்கியமான விசயத்திற்கு மட்டுமே அவரை அழைத்துப் பேசுங்கள் என்று பொதுமக்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே இந்தக் கட்டுரையை முதலில் திரும்ப திரும்ப படியுங்கள். அவரது இணையதளத்திற்கு ஈமெயில் மூலம் உங்கள் கேள்விகளைக் கேட்டு அதற்கு பதில் பெற்றுக் கொள்ளலாம். மிகவும் முக்கியமான விசயங்கள் என்றால் மட்டுமே தொலை பேசியில் தொடர்புகொண்டு கேளுங்கள்.

உங்கள் குழந்தைகள் உங்களது நண்பர்கள் மற்றும் அவரது குழந்தைகளை எல்லாம் அழைத்துக்கொண்டு ஒரு பஸ் அல்லது வேன் என ஏதோ ஒன்றை ஏற்பாடு செய்துகொண்டு ஒரு நாள் புவிதம் பள்ளிக்குச் சென்று பாருங்கள். முடிந்தால் அங்கேயே இரண்டு, மூன்று நாட்களுக்கு தங்கியிருந்து வாருங்கள்.

புவிதம் பள்ளியைப் பார்வையிடச் செல்வோரும் அங்கு தங்கியிருந்து பார்த்து வர விரும்புவோரும் அங்குள்ள குழந்தைகளுக்கு தொந்தரவு கொடுக்காமல் அமைதியாக இருந்து பார்த்து வாருங்கள். மேலும் இவ்வாறு பார்வையாளர்களாக வரும் அனைத்து பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் தங்குமிடம் உணவு ஆகியவற்றை இலவசமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனவே அங்கு சென்று உணவு உண்பவர்களும், தங்குவோர்களும் இலவசமாக கிடைக்கிறதே என்று உபயோகித்து விட்டு வராமல் உங்களால் இயன்ற நன்கொடைகளையும் முடிந்த உதவிகளையும் அவருக்கு அளித்து வாருங்கள்.

நான் பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவியிருந்தால் அந்தப் பள்ளி இந்த புவிதம் போன்று தான் இருந்திருக்கும். நான் பலவருடமாக ஒரு கனவுப்பள்ளியை எனது கனவுகோட்டையில் கட்டி வருகிறேன். அதை இந்த பள்ளியில் நேரடியாகப் பார்க்கும் பொழுது மிகவும் சந்தோசமாக இருந்தது. எனவே தான் உங்களை அந்த பள்ளிக்கு சென்று வாருங்கள் என்று அன்புடன் கூறுகின்றேன்.

இந்தப் பள்ளிக்கு சென்று வரும் குழந்தைகளுக்கு மனதளவில் பெரிய மாற்றம் ஏற்படும். பெற்றோர்களும் தாங்கள் என்னசெய்யவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஆசிரியர்களும் இந்த பள்ளிக்குச் சென்று பார்வையிட்டு வரும்பொழுது எவ்வளவு தூரம் தங்களது பாடத்திட்டத்தின் மூலம் குழந்தைகளை கஷ்டப்படுத்துகிறோம் என்பது புரியும். எனவே குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நடத்தி வரும் முதலாளிகள் ஆகியோர் தயவுசெய்து ஒருமுறையாவது இந்த பள்ளியை நேரடியாகச் சென்று பார்த்து வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனுடன் திருமதி. மீனாட்சி அம்மா அவர்களிடம் அங்கு நடத்தப்படும் சிறந்த கல்விமுறைபற்றி எப்படி நடத்தவேண்டும் என நேரடியாக பல விசயங்களையும் கேட்டு அறிந்து கொண்டு வந்து இனிமேல் நமது குழந்தைகளை சிறப்பாக வளர்ப்போமாக!

நம் குழந்தைகளுக்கும் அதே கல்விமுறையில் கற்றுக்கொடுப்போமாக!

இதே போன்றுஎல்லா ஊர்களிலும் நூற்றுக் கணக்கான பள்ளிகளை ஆரம்பித்து அரசின் தவறான கல்வி முறைத் திட்டத்திலிருந்து வெளியே வந்து குழந்தைகளுக்கு நாம் இனிமேல் சிறந்த கல்வியை அவர்களுக்கு அளிப்போமாக.

பதினைந்து வருடங்களாக புவிதம் பள்ளியை நடத்தி வரும் திருமதி. மீனாட்சி அம்மா அவர்களிடம் பொருளாதார வசதிக்காக, அதாவது பண தேவைக்காக என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன்.

பல நல்ல உள்ளங்கள் இவருக்கு நன்கொடைகள் கொடுத்து உதவுகிறார்கள் என்றும் அதன்மூலம் இப்பள்ளியை சிறப்பாக நடத்தி வருவதாக கூறினார். பல பெற்றோர்களுக்கும் இந்த பள்ளியைப் பிடித்திருப்பதால் அவர்களது குழந்தைகளையும் இப்பள்ளியில் சேர்க்க விரும்புகிறார்கள். ஆனால் இங்கு வருகின்ற எல்லா பெற்றோர்களும் ஏற்கனவே இங்கு பயிலும் மாணவர்களை, ஆடு, மாடு மேய்க்கும் கிராமத்து குழந்தைகள் இருக்கும் இடத்தில் தங்களது குழந்தையையும் எப்படி சேர்த்து படிக்க வைப்பது என யோசித்து திரும்பிச் சென்று விடுகிறார்களாம்.

வசதி படைத்த பல பெற்றோர்களும் இவரிடம் வந்து "மாதம் ஐந்து இலட்ச ரூபாய் கூட கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் எங்கள் குழந்தையை மட்டும் தனியாக தங்கிக் கொள்வதற்கு அறையை ஏற்பாடு செய்து தனியாக கற்றுத் தர ஏற்பாடு செய்யுங்கள்" என்று கேட்கிறார்களாம்.

குழந்தைகளிடையே கல்வி பயில்வதில் எந்தவித பிரிவினையும் இருக்கக் கூடாது எனவும் அவர்களிடையே சாந்தியும், சமாதானமும், ஒற்றுமையும் நிலவவேண்டும் என்பதற்காக தான் முதலில் நான் இந்த பள்ளியையே ஆரம்பித்தேன். என்னிடமே வந்து குழந்தைகளிடையே பிரிவினை செய்யச் சொல்வது முட்டாள் தனமானது என்று அவர்களை சாடுகிறார்.

"யார் வந்தாலும், எவ்வளவு நன்கொடைகளை அளித்தாலும் தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்ள முடியாது" என்பதில் உறுதியாக இருக்கிறார்.

பல்வேறு அறக்கட்டளைகளும் பெரியபெரிய கார்ப்பரேட் நிறுவனங்களும் இவரிடம் வந்து பல லட்ச ரூபாய்கள், பலகோடி ரூபாய்கள் கொடுக்கிறோம் என்றுகூறி இவரது கொள்கைகளையும், இவரது கல்விமுறையையும் மாற்றுவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். இவர் ஆரம்பத்திலிருந்தே தனது கொள்கைகளிலும் தனது கல்விமுறையிலும் மாற்றம் செய்வதற்கான எந்த ஒரு சக்திக்கும் நான் இடம் கொடுக்கமாட்டேன் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

எனவே இந்த இடத்தில் ஒரு விசயத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒழுங்காக நடந்து கொண்டிருக்கும் பல்வேறு நிறுவனங்களை வியாபாரம் செய்து கொண்டிருக்கும் பணத்தாசை பிடித்த சில வியாபாரிகள் அதை முடக்குவதற்கும் தங்கள் உடமையாக்கித் கொள்வதற்கும் வேலைகளைச் செய்கின்றனர். இதற்கு அரசு அதிகாரிகள், மூலமாகவும், காவல்துறையின் மூலமாகவும் அல்லது ரௌடிகளின் மூலமாகவும் பல்வேறு துன்பங்களைக் கொடுக்கின்றனர். பின்னர் நிறுவனங்களை அபகரித்து ஏற்கனவே இருக்கும் அந்த நிறுவனத்தின் நல்ல பெயரினை பயன்படுத்தி அதே பெயரில் இந்த வியாபாரிகள் அதை நடத்திக்கொண்டு வருவதுதான் இந்த உலகில் இதுவரை நடந்துகொண்டு இருக்கிறது.

எனவே எப்பொழுதும் தங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது. அதற்காக எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை எனும் நல்லஉள்ளங்களை நாம் ஆதரிப்போம்.

உதாரணமாக நான் செய்துவரும் நல்ல காரியத்தைப் பார்த்து திண்டுக்கல்லை சேர்ந்த ஒரு நபர் பதினைந்து கோடி ரூபாய் மதிப்புள்ள இடத்தினையும், கட்டிடத்தினையும் எனக்கு கொடுத்த போதிலும் எனது கொள்கைகளையும், எனது செயல்பாடுகளையும் மாற்றச் சொல்லி அவர் கூறிய ஒரே ஒரு காரணத்தினால் அதை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டேன் என்பது உலகத்திற்கே தெரியும்.

அதே போல ஹால்டி ராம் (Haldiram) என்ற இந்திய கம்பெனி சிறப்பாக பல பொருட்களைத் தயாரித்து இந்திய மக்களுக்கு கொடுத்துக் கொண்டு இருந்தது. அந்த சமயத்தில் பணத்தாசை கொண்ட வியாபாரக் கம்பெனியைச் சேர்ந்த வியாபாரிகள் இந்த ஹால்டிராம் நிறுவனத்தை விலைக்குக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நிறுவனத்தின் முதலாளியோ அதற்கு

ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். ஆனால் அமெரிக்காவில் உள்ள (FDA) நிறுவனம் ஹால்டிராம் நிறுவனத்தின் மீது தேவையில்லாமல் ஒரு அவதூறு வழக்கு ஒன்றைத் தொடுத்துள்ளது. இதனால் அந்த நிறுவனத்தின் அனைத்து தயாரிப்பு பொருட்களும் வியாபாரம் செய்ய முடியாமல் முடக்கப்பட்டுவிட்டது.

இவ்வாறு பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தி அந்நிறுவன முதலாளிகளை பணிய வைத்துவிட்டனர். தற்சமயம் அந்த நிறுவனத்தை அந்த வியாபாரிகள் வாங்கிவிட்டனர்.

எனவே நல்ல கல்வியை குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் பள்ளியை நடத்திவரும் முதலாளிகள் தயவுசெய்து ஒரு விசயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். நன்கொடைகளை அளிக்கிறோம் என்ற பெயரில் பல நயவஞ்சகர்கள் ஊடுருவ வாய்ப்புகள் உள்ளது. எனவே ஆரம்பகாலத்தில் யாரெல்லாம் சேர்ந்து ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்கிறீர்களோ கடைசி வரை அதன் கொள்கைகளையும் அதன் உறுப்பினர்களையும் மாற்றாமல் இருக்கும் பொழுது நிச்சயமாக நல்லமுறையில் வாழ்க்கையில் உயரிய இலட்சியத்தை அடைய முடியும்.

எனவே அறக்கட்டளை (Trust) ஆரம்பிக்கும் பொழுதும், அக்ரிமெண்ட் போடும் பொழுதும், நன்கொடைகளை வாங்கும் பொழுதும் மிகவும் கவனமாக இருக்கவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நான் கடந்த சில வருடங்களாக பல பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று ஆராய்ச்சி செய்து பார்த்ததில் குறைந்த எண்ணிக்கையிலான பள்ளிகள் மட்டுமே சிறப்பாக இயங்குகின்றன. பல பள்ளிக்கூடங்கள் தவறான வழிமுறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை நான் சென்று பார்த்த பள்ளிகளில் இந்த புவிதம் பள்ளியே மிகவும் சிறப்பாக இருப்பதால் முதன் முதலில் அது சம்பந்தப்பட்ட கட்டுரையை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்.

காத்திருங்கள் ! விரைவில் இதுபோன்ற நல்ல கல்விக் கூடங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து உங்களிடம் சமர்ப்பிக்க நான் முயற்சி செய்கிறேன்.

இந்த புவிதம் பள்ளியைப் பார்வையிடச் சென்று நாங்கள் வீடு திரும்பிய அடுத்த நாள் எங்களுடன் வந்த பள்ளிபாளையத்தைச் சேர்ந்த திருமதி. கற்பகம் என்பவர் ஒரு கவிதையை எழுதினார்.

இதோ அக்கவிதை
நான் மாடக் கூடல் மதுரையின் ஆட்சிக்கு
மீனாட்சி !
நாகர் கூடலில் குழந்தைகள் தாங்களே
கற்றுக்கொள்வார்கள் என்பதற்கு சாட்சி
மீனாட்சி ! புவிதம் மீனாட்சி ! !
மனதில் தாக்கத்தையும்,
உயிருக்கு தாகத்தினையும் உணரச்செய்யும்
உண்மைக் கல்விக்கு உற்றதாய்,
ஏட்டுக்கல்விக்கு முற்றுப்புள்ளியாய் எட்டு
வைத்திருக்கும் இவரே
வீட்டுக் கல்வியின் பெற்ற தாய் !!

இப்பொழுது உள்ள அரசின் கல்வித்திட்டங்கள் எப்படி சரியில்லையோ அதேபோல அரசுகல்விக் கூடமான, பள்ளிக்கூடத்திற்கு வைத்திருக்கும் கொள்கை திட்டமும் சரியில்லை என்பதே உண்மை.

இதை நாம் உடனடியாக மாற்றியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

உதாரணமாக நல்ல கல்விக் கூடங்களை அரசு அதிகாரிகள் பல சட்டதிட்டங்களைக் கூறி அதாவது (Rules and Regulations) ஐ காரணம் காட்டி இழுத்து மூடி வருகிறார்கள் என்பதே உண்மை.

1. ஒரு பள்ளிக்கூடம் என்றால் அதில் 'ப' வடிவில் தான் கட்டிடங்கள் இருக்க வேண்டும் இல்லையென்றால் அனுமதி கொடுப்பதில்லை.

இது என்ன 'ப' வடிவம்.
இதை யார் கண்டுபிடித்தது?

2. மூன்று கட்டிடங்கள் இருந்தால் மட்டுமே அப்பள்ளிக்கு அனுமதி வாங்க முடியும். இல்லையென்றால் அதற்கென உள்ள மேலதிகாரிகளைத்தான் சென்று பார்க்கவேண்டும். அவர்கள் சென்னையில் இருப்பார்கள். அவர்களை சந்தித்து வரசென்னைக்கு அடிக்கடி போய் வருவது என்பது சிரமமான காரியம். அதனால் அனுமதி பெறுவதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது.

**இது என்ன மூன்று கட்டிடம்? நாலு கட்டிடம்?**

3. படிக்கட்டுகள் குறைந்தது மூன்று அடி இருக்கவேண்டும். அதற்கு குறைவாக இருந்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

4. ஒவ்வொரு பள்ளியிலும் ஒவ்வொரு வகுப்பறைகளுக்கும் தலா இரண்டு கதவுகள் இருக்கவேண்டும்.

5. செயல்பாட்டுக் கூட்டம் என்றபெயரில் பள்ளியின் தலைவரை பல நாட்கள் வரச்செய்து ஒன்றுக்கும் உதவாத தேவையில்லாத விசயங்களைப் பேசிக்கொண்டு மூன்று மணிநேரத்தை வீணாகக் கழிக்கின்றனர். இதற்கு கட்டணமாக நூறு ரூபாய் பெற்றுக் கொள்கின்றனர். இறுதியில் ஒரு டீயை சாப்பிடக் கொடுத்து அனுப்பி விடுகின்றனர். பயனற்ற இந்த செயல்பாட்டுக் கூட்டத்திற்கு வராத பள்ளிகளின் மீது நடவடிக்கை எடுக்கப் படுகிறது. எனவே அரசாங்கத்தின் மேல் நடவடிக்கைகளுக்குப் பயந்து கொண்டு பள்ளியின் தலைவர் அல்லது நிறுவனர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஒரு டீயைச் சாப்பிட்டு தனது புத்தகத்தில் வருகைப் பதிவிற்கான சீலைப் பெற்று வரவேண்டிய கட்டாயத்தில் ஒவ்வொரு பள்ளியினரும் உள்ளனர்.

6. "சமச்சீர் கல்வி" என்ற முறையைத் தேவையில்லாமல் உருவாக்கியதன் மூலம் ஒரு நல்ல கல்வியை குழி தோண்டிப் புதைத்து கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம்.

7. கண்டிப்பாக ஒவ்வொரு பள்ளிக்கும் குழந்தைகள் சீருடை அணிந்து வரவேண்டும் என்பது தேவையில்லாத ஒன்று.

8. பள்ளி மைதானத்தில் கொடிக் கம்பம் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்பதும் யோசிக்கவேண்டிய ஒன்று.

9. காலையில் தினமும் அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து காலைக்கூட்டம் நடத்த வேண்டும் என்பதும் யோசிக்கவேண்டிய ஒன்று.

10. டிடிடிசி ரூல்ஸ், ஏ.பி.சி.டி ரூல்ஸ் என்று பல்வேறு விதிமுறைகளை உருவாக்கி எந்த ஒரு பள்ளியையும் நிம்மதியாக செயல்படவிடாமல் அரசாங்கம் செய்து கொண்டிருப்பதால் நல்ல கல்வியைக் கொடுக்கும் பல நல்ல உள்ளங்கள் மன உளைச்சலில் இருக்கிறார்கள். இதை

உடனடியாக நாம் தட்டிக் கேட்டு சரிசெய்ய வேண்டும்.

ஒவ்வொரு வகுப்பிற்கும் எட்டுபேர் இருக்கவேண்டும் வருடத்திற்கு 25பேர் புதிதாக சேர்க்கப்படவேண்டும் என்று பல்வேறு விதிமுறைகள் போடப் பட்டுள்ளது. இதன் மூலமாக பல்வேறு நல்ல கல்விக் கூடங்கள் இழுத்து மூடும் அபாய நிலையில் உள்ளன. எனவே இதற்காக எல்லோரும் செய்வதைப் போல நான் போராடப் போவதில்லை. களத்தில் இறங்கி சரிசெய்யப் போகிறேன்.

எப்பொழுது போராடுவோம் என்று முடிவு செய்கிறோமோ அப்பொழுது தோற்றுப்போகிறோம் என்று அர்த்தம். இனிமேல் போராட்டங்கள் தேவையில்லை. அடுத்த வினாடி சரிசெய்ய வேண்டும். அதற்கு என்ன தேவையோ அதை நாம் செய்யவேண்டும். அதாவது அதை சரிசெய்வதற்கு என்ன தேவையோ அதை மட்டுமே நாம் செய்வோம்.

பல நல்ல கல்விக் கூடங்கள் நன்றாக செயல்பட்டு வரும் நிலையில் குழந்தைகள் தங்கள் வேலைகளை தாங்களே செய்து கொள்வதைப் பத்திரிக்கை துறையினர் போட்டோ பிடித்து அதைப் பற்றி வேறு மாதிரி எழுதுகின்றனர். அதாவது பள்ளியில் குழந்தைகளிடம் வேலை வாங்குகின்றனர் என்று கூறி பள்ளியை இழுத்து மூடி விடுகின்றனர். எனவே பத்திரிக்கை டிவி போன்ற ஊடகங்களும், அரசு அதிகாரிகளும், காவல்துறையும், நீதிதுறையும், உள்ளூர் ரௌடி கும்பலும் தயவுசெய்து கல்வித்துறையை விட்டு வைக்குமாறு கேட்டு கொள்ளப்படு கிறார்கள். இல்லையெனில் முள்ளை முள்ளால் எடுப்பது போல நீங்கள் எப்படி தொந்தரவு செய்கிறீர்களோ அதே முறையில் நீங்களும் ஒழித்துக் கட்டப் படுவீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எனவே புவிதம் பள்ளிக்கு ஒருமுறையாவது சென்று பெற்றோர்களும், குழந்தைகளும், ஆசிரியர்களும், கல்வி நிறுவனத்தை நடத்தி வருபவர்களும் சென்று திருமதி. மீனாட்சி அம்மாவிடம் பேசி பழகி நல்ல விசயங்களைக் கற்றுக் கொண்டு வந்து நமது குழந்தையை வளர்ப்போமாக.

இதுபோன்ற பல்வேறு விசயங்களை நாம் ஒவ்வொரு மாதமும் இனிமேல் பார்க்க இருக்கிறோம்.

புவிதம் எனற பெயருக்கான பொருள் இந்த பூமியை இதமாக மாற்றுவது. இந்த புவியை இதமாக மாற்றுவதற்கு புவிதம் என்று பொருள்.

நாம் சிறந்த கல்வியை நமது குழந்தைகளுக்குக் கொடுத்து பூமியை இதமாக மாற்றுவோம்.

புவிதம் கல்வி - புனித கல்வி
வாழ்க மீனாட்சி அம்மாள் !
வளர்க அவரது தொண்டு !!
செழிக்கட்டும் விவசாயம் !
சீர்படட்டும் நிர்வாகம் !!
உலக மக்கள் அனைவரின் முகத்திலும்
நிலவட்டும் புன்சிரிப்பு !!
வளர்க ஆன்மீகம் வாழ்க வாழ்வாங்கு !!
-சந்தோசம்-

பாகம் **11**



# 12 வயதிற்கு மேல் குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும்?

12 வயதிற்கு மேல் குழந்தைகளை வளர்ப்பது பற்றிய முறை, ஒவ்வொரு நாட்டை பொறுத்தும், பெற்றோர்களின் விருப்பம், மாணவர்களின் விருப்பம், வசதி வாய்ப்புகள் ஆகியவற்றைப் பொறுத்தும் மாறுபடும். கவுன்சிலிங் எனப்படும் கலந்தாய்வின் மூலமாக பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் 12 வயதிற்குப் பின்னர் கல்வியை எவ்வாறு திட்டமிடலாம் விவாதிக்கவேண்டும். இதற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்குவதற்கு இரண்டு நபர்களை நாம் அறிமுகம் செய்கிறோம்,

1. திருமதி. பிரதீபா 90032 89793
2. திரு. எரோனிமஸ் 94431 91787
3. திருமதி. மகேஸ்வரி 98944 49728

மேற்குறிப்பிட்டுள்ள இருவரையும் தொலைபேசியில் தொடர்புகொண்டு அல்லது நேரில் சந்தித்து 12 வயதிற்குபிறகான உங்களது குழந்தைகளின் கல்வி எப்படி இருக்கவேண்டும் என்பதைக் கலந்து ஆலோசனை செய்து முடிவு செய்யுங்கள்.


உங்கள் ஊரில் நீங்கள் நடத்தும் புத்தக கண்காட்சி அல்லது மக்களுக்கு பயன்படும் பொது நிகழ்ச்சிகளில் நீங்கள் அனுமதித்தால் **புத்தகம் மற்றும் டிவிடி** கண்காட்சி நடத்துவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.

**உங்கள் அழைப்பை எதிர்பார்க்கிறோம்.**

Further Details : **Giriiyya Publications,** Kovaipudur, Coimbatore.
✦ Contact : **+91 96290 32767** ✦ **www.giriiyyapublications.com**

பாகம் 12



# 2 வருடத்தில் 200 மொழிகளை கற்றும் கலை

சென்னையை சேர்ந்த ஒன்பது வயது சிறுவன் ஒருவனுக்கு தற்போது 200 மொழிகள் தெரியும். இது எப்படி சாத்தியம் என்பதை அறிந்துகொள்ள 2 வருடத்தில் 200 மொழிகள் கற்கும் கலை எனும் இந்தப் புத்தகத்தில் உள்ளவற்றை முழுவதுமாகப் படித்து அறிந்து கொள்ளுங்கள். அந்த சிறுவனின் தந்தையார் திரு. மொழிப்பிரியன் என்பவர் மொழிகளை ஆராய்ச்சி செய்து சுலபமாக மொழிகளை கற்றுக் கொள்ளும் வகுப்புகளை நடத்தி வருகிறார். எல்லா வயதினருக்கும் ஏற்ற வகையில் வகுப்புகளை அமைத்து நடத்தி வருவது இவரின் சிறப்பு. இவரைத் தொடர்பு கொண்டு உங்களது குழந்தைகளை பல மொழிகளைக் கற்க செய்யலாம்.

சென்னையில் வசிக்கும் ஒன்பது வயது சிறுவன் 2 வருடத்தில் 200 மொழிகளை கற்று இருக்கிறார்.

இவர் எப்படி இத்தனை மொழிகளைக் கற்றார்? இதே போல அனைத்துக் குழந்தைகளும் கற்றுக் கொள்ள முடியும். அது எப்படி? என்பதையெல்லாம் இந்தக் கட்டுரையில் விரிவாக,தெளிவாக பார்க்க இருக்கிறோம்.

இராமநாதபுரம் மாவட்டம் அபிராமம் கிராமத்தைச் சேர்ந்தவரும் தற்போது சென்னையில் வசித்து வருபவருமான திரு. மொழிப்பிரியன் என்பவர் 200 மொழிகளை கற்று அறிந்திருக்கிறார். துபாயில் பணியாற்றிய இவர் 26 நாடுகளுக்கும் பயணம் செய்து 200 மொழிகளை கற்றுக்கொண்டு அதை தனது மகனுக்கும் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

ஆரம்பத்தில் இவர் 13 மொழிகளை மட்டும் தான் கற்று இருந்திருக்கிறார். ஒருநாள் இவர் தனது மகனுக்கு ஒரு மொழியை கற்றுக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார். அவரது மகன் ஒரே நாளில் அந்த மொழியைக் கற்றுத் தேர்ந்திருக்கிறார். உடனே அவர் தனக்குத் தெரிந்த 13 மொழிகளையும் தனது மகனுக்கும் கற்றுக் கொடுத்துவிட்டார்.

மகனின் ஆர்வம் அதிகமாக இருந்ததால் இந்த திரு. மொழிப்பிரியன்

என்பவர் 200 மொழிகளை தானும் கற்றுக் கொண்டு தனது மகனுக்கும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.



தான் கற்றுக் கொண்டவற்றை கொடுப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார். ஆனால் பொருளாதார வசதி இல்லாததாலும், மக்களிடையே போதிய ஆதரவு இல்லாததாலும் இவர் அந்த முயற்சியை விட்டுவிட்டு துபாயில் பணியாற்றி வந்திருக்கிறார்.

இப்பொழுது தந்தையும், மகனும் 200 மொழிகளை எழுதவும் படிக்கவும், தட்டச்சு செய்யவும், மொழி பெயர்க்கவும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த மொழிகளை அவர்கள் பேசவோ அர்த்தம் அறிந்துகொள்ளவே தெரியாது. அடுத்த கட்ட நடவடிக்கையாக பேசுவதற்கும், அர்த்தம் தெரிந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மொழிப்பிரியன் என்பவர் துபாயில் பணியாற்றிக் கொண்டே ஓய்வு நேரங்களில் தனது மகனுக்கு ஸ்கைப் (Skype) மூலமாகவே இத்தனை மொழிகளைக் கற்றுக் கொடுத்திருக்கிறார் என்பது ஆச்சர்யமான விசயம்.

மொழிகளை எப்படி சுலபமாகக் கற்றுக் கொள்வது என்பதைப் பற்றி சொந்தமாக யோசித்து அதற்கான வழிமுறைகளைக் கண்டு பிடித்திருக்கிறார். இதை உலகமக்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்க விருப்பத்துடன் இருக்கிறார். அனைத்து வயதினரும் கற்றுக் கொள்வதற்கு ஏற்ற எளிய வழிமுறைகளை இவர் அறிந்து வைத்திருக்கிறார்.

வசதி குறைவான குடும்பத்தில் பிறந்த இவர் முன்பு துபாயில் வேலை செய்து கொண்டு அதன் மூலம் குடும்பத்தினைக் காப்பாற்றி வந்தார்.

200 மொழிகளை கற்றறிந்த இவர் இதை உலக மக்களுக்கு பல வழிகளில்

ஹீலர் பாஸ்கர் ஆகிய நான் “பானுவீட்டுக் கல்வி முறை” என்ற புதிய கல்வி முறையை சில மாதங்களுக்கு முன்னர் அறிமுகம் செய்திருந்தேன். அதைப் பார்த்த இவர் நானும் இதைப்போல பல மொழிகளை அறிந்து வைத்திருக்கிறேன் என்று கூறி தனது திறமைகளைப் பற்றி என்னிடம் தெரிவித்தார்.

நான் இவரது மகனை சென்னையில் நேரில் சென்று சந்தித்தேன். அவரின் திறமைகளைக் கண்டு வியந்தேன்.



ஹீலர் பாஸ்கர் என்ற எனது பெயரை 200 மொழிகளில் என் கண்முன்னாலேயே எழுதிக் காண்பித்தார். இதே போல உலக மக்களுக்கும், அனைத்துக் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று திரு. மொழிப்பிரியனிடம் நான் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் என்னால் முடியும். ஆனால் நான் என்னுடைய வேலையை விட்டுவிட்டு இந்தியாவிற்கு வந்துவிட்டால் என் குடும்பத்திற்கு தேவைப்படும் வருமானத்திற்கு என்ன செய்வது? என்று யோசித்தார். நான்

அவருக்குத் தைரியம் கொடுத்தேன். நீங்கள் வேலையை விட்டுவிட்டு சென்னைக்கு வந்து 200 மொழிகளை கற்றுக் கொடுக்க ஒரு சென்டரை ஆரம்பியுங்கள். பொதுமக்களை உங்களிடம் வந்து கற்கச் சொல்லுகிறேன். நீங்கள் கற்றுக் கொண்ட வித்தையினை பலருக்கும் சொல்லிக் கொடுங்கள். இதன் மூலமாக பலரும் அவரவர் ஊரில் உங்களைப் போன்றே பல மொழிகளைக் கற்றுக் கொடுத்தால் விரைவில் அனைத்துக் குழந்தைகளும் பல மொழிகள் கற்றுக்கொண்ட சாதனைக் குழந்தைகளாக மாறுவார்கள் என்று கூறினேன்.

அதற்கு சம்மதித்த அவர் "மூன்று மாதத்திற்குள் வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்னைக்கு வந்து நிரந்தரமாகத் தங்கிவிடப் போகிறேன்" என்று கூறியிருக்கிறார். எனவே இந்தக் கட்டுரையியை படிக்கும் நல்ல உள்ளங்கள் அவரைத் தொடர்பு கொண்டு அவருக்குத் தேவையான பொருளாதார உதவிகளைச் செய்து அவர் மூலமாக உலகின் பல பல மொழிகளைக் கற்றுக் கொள்ளும் வித்தையினை நாம் அறிமுகப்படுத்து வோமாக !

**ஒரு குழந்தை ஏன் 200 மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்?**

பானுவீட்டுக் கல்விமுறை என்ற தலைப்பில் யூ டியூப்பில் இதுவரை பனிரெண்று பாகங்களை வெளியிட்டுள்ளோம். இதைப் பார்த்தவர்களுக்கு இந்த சந்தேகம் வராது. அதாவது ஆங்கிலத்தில் இருக்கும் அனைத்து விசயங்களும் தவறாக உள்ளது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மராத்தி, பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற மொழிகளில் உள்ள அனைத்து விசயங்களும் ஒழுங்காக உள்ளது. இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த குழந்தைகள் அரபு மொழி, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுக் கொள்கிறார்கள். வருங்காலத்தில் இந்த மூன்று மொழியும் தெரியாத எவரும் உலகத்தில் பெரிய அளவிலான எந்த வேலையும் செய்ய முடியாது என்பது உண்மை.

உங்களுக்கு சந்தேகமிருந்தால் கூகுளில் ஒரு ஆங்கில வார்த்தையினை அடித்து அதற்கு வரும் அர்த்தத்தினை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அதே வார்த்தையை தமிழிலோ அல்லது அரபியிலோ அல்லது பிரெஞ்சு மொழியிலோ தேடி அந்த வார்த்தைக் கான அர்த்தத்தைஆங்கில அர்த்தத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும்.

எனவே இந்த கட்டுரையை முழுவதுமாக நீங்கள் படித்து முடிக்கும் பொழுது ஒரு குழந்தைக்கு 200மொழிகளை எப்படி கற்றுக் கொடுக்க முடியும்? என்பதைப் புரிந்து கொள்வீர்கள். குழந்தைகள் மட்டுமல்ல எந்த வயதினரைச் சேர்ந்தவராக இருந்தாலும் பல மொழிகளையும் சுலபமாக எப்படிக் கற்றுக் கொள்வது என்பதை இவர் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ளார். இவரை பயன்படுத்திக் கொண்டு பல மொழிகளைக் கற்போமாக!

வருகிற ஜீலை மாதம் முதல் இதற்கான வகுப்புகளைத் துவங்கி கற்றுக் கொடுக்க இருக்கிறார். இந்த கட்டுரையை தொடர்ந்து படிக்கும் பொழுது மேலும் பல விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

தமிழ்நாடு, இராமநாதபுர மாவட்டம், அபிராமம் கிராமத்தை பூர்விகமாக கொண்டவரும், தற்போது சென்னையில் வசித்து வரும் திரு. மொழிப்பிரியன் அவர்களின் மகன் அக்ரம். ஒன்பது வயதே ஆகியுள்ள இச்சிறுவன், சென்னையில் டாக்டர் ராதா கிருஷ்ணன்

மேல்நிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறான்.

பள்ளி படிப்பு மட்டுமன்றி, பல மொழிகளின் ஆற்றலையும் தனது 7 வயது முதல் கற்று வந்துள்ளான். இந்திய, வெளிநாட்டு மற்றும் பழங்கால கல்வெட்டு மொழிகளை கற்று, 200 க்கும் மேற்பட்ட மொழிகளில் படிப்பதற்கும், எழுதுவதற்கும், டைப் ரைட்டிங் செய்வதற்கும் பயிற்சி எடுத்துள்ளான். 200 மொழிகளில் வேகமாக டைப்பிங் செய்யும் அபாரத் திறமையின் மூலம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறான்.

இச்சிறுவனுக்கு இந்திய, வெளிநாட்டு மொழிகளான அரபிக், அச்செனிஸ், ஆப்ரிக்கன்ஸ், அல் பேனியன், அமசைக், அம்ஹரிக், ஆர்மீனியன், அஸென்தெ டிவி, அஸ்ஸாமிஸ், அஸெர்பைசைனி, பஹஸ பூஹிஸ், பஹஸ மதுர, பாலினிஸ், பலூச்சி, பவ்லே, பாஷ்கிர், பாஸ்கியூ, பஸ்ஸா, பத்தகீஸ், பெலருஷ்யன்,பெம்ப, பெங்காலி, பெத், பிக்கலோனா, பொஸ்னின், பிராகுய், பல்கேரியன், பர்மீஸ், கேஸ்டீலியன். கட்டலன், சிபூவானோ, சென்ட்ரல் குர்தீஷ், சத்தீஷ்கரி, சென், செரோக்கீ, சிச்சோவா, சைனீஷ் ஸிம்லிபைடு, சைனீஷ் ட்ரெடிஷனல், சியாவோ, சுவாஷ், கிரிலோ, குரோன், செக், டாக்பனி, டேனிஷ், தரி, திவிஹி, டோக்ரி, டசூன், டச், ஸோங்கா, ஈஸ்ட் இனிக்ட்யுட், எஜிப்ஸியன் ஹைரோகிளிப், இங்கிலீஷ், இஷ்பெரான்டோ, இஸ்தோனியன், ஈவ், ஃபேன்தே, ஃபிஜியன், ஃபிலிப்பினோ, ஃபினிஷ், ஃப்ரன்ச், ஃபுளா, கா, களிசியன், ஜோர்ஜன், ஜெர்மன், கஜரியா, ஜெக், கிரந்த, கிரீக், குஜராத்தி, ஜிப்ஜி, ஹேன் கிரியோ, ஹவ்ஸ, ஹீப்ரு, ஹிந்தி, மாங்க் டவ், ஹங்கேரியன். ஐஸ்லேனிக், ஈபோ, ஐலோகனோ, இந்தோனிசியன், இனிக்ட்யுட் ஆர்க்டிக், ஈரானுன், ஐரிஷ், இட்டாலியன், ஜப்பானிஷ். ஜாவானிஷ், ஜீலா, கபிலீ, கன்னட, கஷ்மிரீ, கட்டலன், கஸக், கென்யா லுவோ. கெமர், கிக்கம்பா, கிக்காங்கோ, கிக்கியூ, கின்யார்வன்டா, கிளிங்ஆன், கொரியன், கெப்பல், குர்தீஷ், கட்ச்சி, கிர்கீஷ், லம்பாடி, லவ், லத்தீன், லத்தீவன், லெப்ச, லிம்பூ, லிங்கள, லிஃ, லித்துனியன், லுகன்டா, மெஸிடோனியன், மலகஸி, மலாய், மலையாளம், மால்டீஸ், மன்ச்சூ, மந்தர், மந்தின்க, மணிப்பூரி, மரான்னவ், மராட்டி, மெந்தி, மங்கோலியன், நேபாலி, நாக்கோ, நோர்விஜியன். நிஜிமா, ஒக்சிடன். ஒரியா, உருமூ, ஒஸ்ஸன், பஷ்தோ, பெர்சியன். பொனிசியன், பொலிஷ், போர்ச்சுகீஷ், புலார், பஞ்சாபி, ரோஹிங்யலிஷ், ரொமானியன், ருஷ்யன், ஸாமோன், ஸான்ஸ்கிரிப்ட், ஸரைக்கீ, ஸ்கோட்ஸ், ஸெர்பியன். ஸெஸத்தோ, ட-னா. ஸிந்தி, ஸிங்கள, சுலோவக், சுலோவனியன். ஸோமாலி, ஸ்பானிஷ், சுன்டாநீஷ், சுராநன், ஸ்வாஹிலி, ஸ்விடீஷ், சிரியக், தகலோக், தஜிக், தமசைத், தமிழ், தமிழ் பிராமி, தத்தர், டி ரியோ மாயூரி, தெலுகு, டெம்னே, தாய், திபெத்தியன், டைக்ரின்யா, டோங்கன், டோஸ்க், துர்கிஷ், துர்க்மென், துவலு, உக்ரனியன். உருது, உய்குர், உஸ்பெக், வாய், வியட்னாமிஷ், வாலி, வெல்ஷ், வெஸ்ட் இனிக்ட்யூட், வெஸ்டன் பஞ்சாப், உல்ப், கோஸா, யாவோ, யிதிஷ், யிரோபா, ஸஜக்கி, ஜீலூ போன்ற மொழிகள் தெரியும்.

கடந்த வருடம் 2014, இந்தியாவின் Unique World Records"என்ற நிறுவனத்தினர் அக்ரமின் அபாரத் திறமையை அறிந்து, அவர்களுடைய வேர்ல்டு ரிக்கார்டு கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டு இருந்தது. அதன்படி அக்ரம் கலந்து கொண்டு, பல VIP க்கள் முன்னிலையில் தன் திறமையை வெளிகாட்டி, புதிய உலக சாதனை செய்து World Youngest Multilingual



Typist என்ற பட்டத்தை பெற்றார்.

இந்தியாவில் உள்ள பல மீடியாக்களும். வளைகுடா நாட்டில் உள்ள மீடியாக்களும் பாராட்டி உள்ளன. கடந்த வருடம் 2015, இந்தியாவின் India book of Record-TamilNadu book of Record-Asia book of Record என்ற குழுவின் நிறுவனத்தினர் சாதனை தமிழகம் 2015" என்ற நிகழ்ச்சியில் தன்னுடைய திறமையை வெளிகாட்டுமாறு அழைப்பு விடப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்டு In the Name of God, the Merciful, the compassionate என்ற வாக்கியத்தின் 200 மொழிகளின் மொழிப்பெயர்ப்பை 1 மணி நேரம் 30 நிமிடங்களில் டைப்பிங் செய்து புதிய உலக சாதனை செய்துள்ளான்.

அது போல முஸ்லிம்களின் வேத நூலான குர்ஆனின் முதல் அத்தியாயமான சூரா பாத்திஹாவை" கிட்டத்தட்ட 180 மொழிகளின் மொழிபெயர்ப்பில் 8 மணி நேரம் தொடர்ந்து டைப்பிங் செய்து சாதனை செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவனுடைய அறிவாற்றலை பற்றியும், இவனுக்கு எப்படி ஆர்வம் வந்தது என்பது பற்றியும், இவனுடைய தந்தை திரு.மொழிப்பிரியன் கூறும் பொழுது, நான் கிராபிக் டிசைனராக பணிபுரிகிறேன். கம்பெனியில் அதிக வேலை இருந்தால் அந்த வேலையை வீட்டில் இருந்து செய்து வருவேன். அப்படி ஒரு நாள் நான் ஆங்கிலத்தில் டைப்பிங் செய்து கொண்டு இருக்கும் பொழுது, என் பையன் அதை பார்த்து கொண்டு இருந்தான். அப்பொழுது அவனுக்கு வயது 7. எனக்கும் டைப்பிங் கற்றுக் கொடுக்குமாறு கேட்டான். சும்மா நச்சரிக்கிறானே என்று தான் கற்றுக் கொடுத்தேன். அன்றே கற்றுக் கொண்டு வேகமாக டைப்பிங் செய்ய ஆரம்பித்து விட்டான். நான் இங்கிலீஷ் டைப்பிங் கற்றுக் கொள்வதற்காக, டைப்பிங் சென்டர் போய் சரளமாக டைப்பிங் செய்வதற்கு கிட்டத்தட்ட 6 மாதம் ஆகிவிட்டது. இவன் ஒரு 6 மணி நேரத்தில் டைப்பிங் பழகி விட்டானே என்று எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. அடுத்த நாள் அவனை டெஸ்ட் செய்வதற்காக அரபிக் மொழியை கற்றுக் கொடுத்து, டைப்பிங் செய்ய வைத்தேன். என்ன ஆச்சரியம்! ஒரே நாளில் சரளமாக டைப்பிங் செய்ய ஆரம்பித்து விட்டான் என்று கூறினார்.

இறைவனின் அருள் என்றே சொல்லலாம். அன்று தான் முதன் முதலில், அவனுடைய மொழி ஆற்றலை உணர்ந்து கொண்டேன். படிப்படியாக ஹீப்ரு, மலையாளம், உருது, தெலுங்கு. ஹிந்தி என்று ஆரம்பித்தேன். அவனும் மிக ஆர்வமாக எல்லா மொழிகளை கற்றுக் கொண்டான். அது மட்டுமில்லாமல் வேகமாக டைப்பிங் செய்யவும் ஆரம்பித்தான். இதற்கிடையில் நான் வேலைக்காக வளைகுடா நாட்டிற்கு சென்று விட்டேன். அங்கு போனாலும் என்னை விடவில்லை. பிறகு அங்கிருந்து அவனுக்கு ஸ்கைப் வீடியோ மற்றும் இமெயில் மூலமாக கற்றுக் கொடுத்து வந்தேன். அவனாகவே அதை புரிந்து கொண்டு (றீளயிƒ வீழிற்ஆஜீமி) கற்று கொண்டான்.

எந்த ஒரு மொழியையும் அவனுக்கு கற்றுக் கொடுப்பதற்கு நான் முதலில், அம்மொழியின் எழுத்துக்களை கற்றுக் கொடுப்பேன். பிறகு எப்படி உச்சரிக்க வேண்டும் என்றும் வாக்கியங்களை

வாசிக்கவும் சொல்லி கொடுப்பேன். கடைசியில் தான் டைப்ரைட்டிங் செய்வதற்கு கற்றுக் கொடுப்பேன். எனக்கு உலக மொழிகளில் 13 மொழிகளில் படிப்பதற்கும், எழுதுவதற்கும், பேசுவதற்கும் மற்றும் டைப்ரைட்டிங் செய்வதற்கும் தெரியும் என்பதால் அத்தனையும் சொல்லி கொடுத்து விட்டேன். ஆனாலும் மேலும் மேலும் வேற மொழியை கற்கணும் என்ற ஆர்வத்தால் மறுபடியும் என்னை நச்சரிக்க தொடங்கிவிட்டான். கடைசியாக நான் இவனுக்காக என்னுடைய நேரத்தை ஒதுக்கி நான் ஒவ்வொரு புதிய மொழிகளையும் கற்று கொண்டு, சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன்.

பல மொழிகளை டைப்பிங் செய்யும் பொழுது எனக்கே குழப்பம் வரும். உதாரணத்திற்கு மலையாளத்தில் டைப்பிங் செய்யும் பொழுது தமிழின் கீ போர்டு டைப்பிங் உரிய பட்டன் மாறி விடும். ஆனால் எந்த வித குழப்பம் இல்லாமல் டைப்பிங் செய்கிறான். இவனுக்காக நான் 200 மொழிகளை கற்றுக் கொண்டேன் ஆனால் எனக்கு அந்தந்த மொழிகளில் 50 சதவீதம் தான் என்னால் ஞாபகம் வைக்க முடிகிறது. ஆனால் இவன் எல்லாவற்றையும் தெளிவாக மூளையில் பதிந்து வைத்திருக்கிறான் என்றால் நிச்சயம் இது கடவுள் அவனுக்கு கொடுத்திருக்கும் பரிசாகும்.

ஒரு மொழியை பேசுவது என்பது எளிது. அந்த மொழியை பேசுவர்களிடம் நாமும் பேசி கொண்டு இருந்தால் அம்மொழியை பேசி விடலாம். அந்த மொழியை படிப்பது, எழுதுவது, டைப்பிங் செய்வது என்பது மிக மிக கடினம். ஆனால் 200 மொழிகளை கற்பது என்பது சாதாரண வியமல்ல.

சாதாரணமாக ஒரு மொழியை டைப்ரைட்டிங் செய்வது என்பது எளிதல்ல. எந்த மொழியையும் நாம் டைப்ரைட்டிங் செய்வதற்கு முன்னால் உயிர் எழுத்துகள், மெய் எழுத்துக்கள் மற்றும் கூட்டெழுத்துக்கள் அதனுடைய குறிகளில் அனைத்தையும் கற்று இருக்க வேண்டும்.

அடுத்ததாக கம்ப்யூட்டர் கீ போர்டில் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு மொழியின் கீ போர்டு எழுத்து மாறுபடும். உதாரணத்திற்கு இங்கிலீஷ் கீ போர்டில் ற் என்று எழுத்து உள்ளது. அந்த பட்டனை நாம் தமிழ் கீபோர்டில் பிரஸ் செய்தால் ர என்று வரும். இதே எழுத்து பட்டனை நாம் அரபிக் கீ போர்டில் பிரஸ் செய்தால் அரபிக் எழுத்தான "அயின்" என்று வரும். இதே எழுத்து பட்டனை நாம் ஹிந்தி கீ போர்டில் பிரஸ் செய்தால் ஹிந்தி எழுத்தான ஹ என்று வரும். இப்படி ஒவ்வொரு மொழிக்கும், அதனுடைய எழுத்து மாறுபடும். இதில் குழப்பம் இல்லாமல் மிக தெளிவாக அதற்குரிய கீயை அழுத்த வேண்டும் இதுவும் சாதாரண வியம் அல்ல.

அதிலும் அந்தந்த மொழிகளை கம்ப்யூட்டரில் யுனிக்கோட் முறையில் வேகமாக தட்டச்சு செய்வது மிக மிக ஆச்சரியமாகும். இது மட்டுமில்லாமல் பழங்கால கல்வெட்டு மொழிகளையும் கற்று, அதையும் தட்டச்சு செய்வது இன்னும் ஆச்சரியத்தை அதிகப்படுத்துகிறது.

எகிப்தியர்களின் பிரமிடை பற்றி நாம் அனைவரும் அறிந்ததே. அந்த பிரமிடில் பொறிக்கப்பட்டிருக்கும் சித்திர எழுத்துக்களை கற்றுக்கொண்டு டைப்பிங் செய்கிறான். அதே போல கி.மு 3 ஆம் நூற்றாண்டை சேர்ந்த அசோக மன்னரின் சாரநாத் கல்தூணை நாம் வரலாற்றில் படித்திருப்போம். அந்த கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள பிராமி

எழுத்துக்களை கற்றுக்கொண்டு டைப்பிங் செய்கிறான். அதே போல கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் தமிழின் முந்தைய எழுத்து வடிவமான கிரந்த எழுத்துக்களை கற்றுக் கொண்டு டைப்பிங் செய்கிறான். கிறிஸ்து இயேசுவின் தாய்மொழியாக கருதப்படுகிற அரமேயம் மொழி 3000 ஆண்டு பழைமையைக் கொண்டது. இதையும் கற்றுக் கொண்டு டைப்பிங் செய்கிறான்.

இதோடு முடியவில்லை. தாமாக சிந்தித்து ஒரு புதிய மொழியின் எழுத்துக்களை அனைவரும் எளிதாக கற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைத்து உள்ளான். அதை தந்தையாகிய நான் கம்ப்யூட்டரில் அந்த புதிய மொழியின் எழுத்துக்களை டைப்பிங் செய்ய ஏதுவாக, ஃபாண்ட்டாக வடிவமைத்துள்ளேன். அந்த புதிய எழுத்திற்கு "அத்தா ஸ்கிரிப்ட் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழியை பொறுத்தவரை மொத்தம் 247 எழுத்தாக இருந்தாலும், வட மொழியையும் சேர்த்து 299 எழுத்துக்கள் உள்ளன. ஆக ஒருவர் தமிழில் டைப்பிங் செய்யணும் என்றால், 299 எழுத்துக்கள் நன்றாக மூளையில் பதிந்திருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் நாம் மிக வேகமாக பிழையில்லாமல் தமிழில் டைப்பிங் செய்ய இயலும். தமிழை தவிர்த்து, பிற இந்திய மொழிகளில், உயிர், மெய், மற்றும் கூட்டெழுத்துக்கள் சேர்த்து, ஏறத்தாழ 500 க்கு மேல் வருகிறது. இன்னும் சில மொழிகளான சீன மொழி போன்றவற்றில் 50000 எழுத்துக்கள் உள்ளன. இந்த வகையில் நாம் ஆராய்ந்தால், 200 மொழிகளின் எழுத்துக்களை நாம் கூட்டுவோம் என்றால் ஒரு லட்சம் எழுத்துக்கள் மூளையில் மிக தெளிவாக பதிந்திருந்தால் மட்டும் இத்தனை மொழிகளில் டைப்பிங் செய்ய முடியும்.

இறைவன் விரும்பினால், என் பையனின் திறமையை உலகம் அறியச் செய்ய வேண்டும். கின்னஸ் ரிக்கார்டிலும் பையன் திறமை பதியப்பட வேண்டும். அதற்குரிய பொருளாதார சிக்கலால் மேற்கொண்டு எந்த விதத்திலும் முயற்சிக்க முடியவில்லை.



திரு. மொழிப்பிரியன் அவர்கள் ஹீலர் பாஸ்கருக்கு எழுதிய கடிதம்.

சகோதரர் பாஸ்கர் அவர்களுக்கு வணக்கம். புகழ் அனைத்தும் இறைவனுக்கே!

மொழி என்பது ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்வதற்கே!. தமிழ் மக்களுக்கு, தமிழ் நாட்டை விட்டு, வேலை வியமாகவோ அல்லது வியாபார வியமாகவோ, மற்ற வேறு வியங்களுக்காக அயல்மாநிலம் அல்லது அயல்நாடு போகும் போது கண்டிப்பாக தாய்மொழி தவிர்த்து பிற மொழிகள் பேச தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அவருடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் நிறைய பேர்கள் பிற மொழிக்கு பயந்தே அயல்மாநிலம் மற்றும் அயல் நாட்டிற்கு வேலைக்கு போவதில்லை.

அதை மீறி அவர்கள் அயல் மாநிலத்திற்கோ அல்லது அயல் நாட்டிற்கோ வேலை வாய்ப்பிற்காக செல்லும் போது அங்கே கடைசி தரமாகத் தான் மதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக வளைகுடா நாடுகளில் மிக அதிகமானோர் மொழியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வளைகுடா நாடுகளுக்கு வருகிறவர்களுக்கு ஹிந்தி, ஆங்கிலம், மலையாளம், அரபிக் கண்டிப்பாக தெரிந்து இருக்க வேண்டும். ஏனென்றால் பல நாடுகளை சேர்ந்தவர்கள் ஒரு

கம்பெனியில் வேலை செய்வார்கள். அவர்களிடம் நாம் தொடர்பு கொள்வதற்கு மொழி கட்டாயத் தேவை. இன்று அரபு நாடுகளுக்கு வேலைக்கு செல்லுபவர்களில் 70 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கிராமத்தில் இருந்து செல்பவர்கள்தான். அவர்களில் பலர், பள்ளி இறுதி வகுப்புவரை கூடப்படிக்காதவர்கள், சிலர் ITI மற்றும் Diploma படித்தவர்கள். அவர்கள் கிராமங்களில் படிக்கும் போது தமிழ்தவிர மற்ற மொழிகளை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு.

அப்படிப்பட்டவர்கள் அரபு நாடுகளுக்கு வேலைக்கு செல்லும் போது அந்த நாட்டவர்களுடன் சரிவர தொடர்பு கொள்ளமுடியாமல் ஒருவித தாழ்வு மனப்பான்மையுடன் இருப்பது மிகவும் வேதனைக்குரியது. அங்கு சென்று பார்க்கும் போது தான் மற்ற மொழிகளை கற்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு தெரிகிறது. திறமையிருந்தும் கூட அவர்களால் அதை வெளிக்காட்ட முடியாமல் கீழ்மட்ட அளவிலேயே பெரும்பகுதி நாட்களை கழிக்க வேண்டியதாயுள்ளது.

நம்மவர்களுக்கு மொழித் திறமை இல்லாததால் எந்த வேலைக்கு போனார்களோ, அதே வேலையில், அதே சம்பளத்தில் கடைசி வரை இருந்து விட்டு தாயகம் திரும்பி வருவார்கள். எந்த முன்னேற்றமும் இல்லை. இந்தியாவிலேயே மொழிகளால் பாதிக்கப் படுபவர்கள் நம்மவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

நமது ஊரிலேயே தமிழ் மீடியத்தில் படிப்பவர்கள், வேற்று மொழியாக ஆங்கிலத்தை மட்டுமே கற்றுக் கொள்கின்றனர். ஆனால் பேசிப் பழகாததால், தேவைப்படும் நேரத்தில் அயல் நாட்டிலோ, அயல் மாநிலத்திலோ, அவர்களால் அதை பயன்படுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

அண்டை மாநிலமான கேரளாவை எடுத்துக் கொண்டால், அவர்கள் சாதாரண ஆட்களாக வளைகுடா நாடுகளிலோ அல்லது ஐரோப்பிய நாடுகளில் காலடி வைப்பார்கள். குறைந்தபட்சம் ஐந்து வருடம் அவர் களுடைய முன்னேற்றம் நம்மை வியப்பில் ஆழ்த்தும். அவர்கள் சாதாரண பள்ளிபடிப்பை தான் முடித்து இருப்பார்கள். இருந்தாலும் மொழித் திறமையால் அவர்கள் பல உயர்ந்த நிலைமைகளில் சொந்த கம்பெனி வைத்து உள்ளனர். நம்மவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் உள்ளனர்.

இதற்குரிய காரணங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம் என்றால் அவர்கள் படிக்கிற கல்வியில் ஹிந்தி ஒரு பாடமாக இருக்கிறது. பிறகு ஒரு கேரள முஸ்லிம் மாணவன் என்றால் கண்டிப்பாக அரபி தெரிந்திருக்கும். ஆக இவர்களுக்கு சிறு வயதிலேயே ஹிந்தி மற்றும் அரபியை பற்றி படிக்கின்றனர். ஆனால் பேச தெரியாது. வளைகுடாநாடுகளில் வந்தவுடன் அவர்களால் அடிப்படை தெரிந்ததால் எளிதாக உரையாட முடிகிறது.

இந்தி, ஆங்கிலத்தை விட மிக எளிதான மொழிதான். பள்ளியில் படிக்கும்போதே அதை ஒரு மொழியாக கற்றிருந்தால் அது அவர்களுக்கு மிக பயனுள்ளதாக இருந்திருக்கும். கிராமத்தில் இருப்பவர்களுக்கும், நகரத்தில் உள்ள வசதியற்றவருக்கும் அரசு பள்ளிகளில் கிடைக்கும் இலவச கல்விதான் அவர்களின் வாழ்க்கையை உயர்த்துவது. அங்கு இது போன்ற வாய்ப்புகளை தடை செய்வது ஒரு சமுதாய அழிவிற்கு அடிக்கல் நாட்டுவது

போன்றதாகும். எனவே தான் அரசு பள்ளிகளில் இந்தி மொழியை கற்றுக் கொள்ளவேண்டியது மிக அவசியமாகிறது.

தமிழகத்தில் படிக்கும் அனைவருக்கும் இங்கேயே வேலை கிடைத்துவிடப் போவதில்லை. வேலை கிடைக்காத எல்லோருக்கும் வெளிநாட்டு வேலையும் கிடைத்துவிடப்போவதில்லை. இங்கு படிக்கும் சில தொழில்கல்வி படிப்புகளுக்கு வெளி மாநிலங்களில் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. அங்கு வேலைக்கு செல்லும் பலர் அவர்களோடு சரிவர கலந்துரையாட முடியாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களின் வேதனையை அனுபவித்தால் தான் தெரியும். தமிழகத்தில் இருந்து இந்திய அணிக்கு தேர்ந்தெடுக்கப்படும் வீரர்கள் கூட மற்ற வீரர்களுடன் சரிவரப்பழக முடியாமல், மந்தையில் இருந்து பிரிந்த ஆடுபோல இருக்கவேண்டியுள்ளது. இதை சில வீரர்களுடைய பேட்டியில் இருந்தே நீங்கள் அறிந்துகொள்ளலாம். மத்திய அரசுப்பணி நிமித்தமாக வெளி மாநிலங்களுக்கு செல்லும் நம் மக்களின் நிலையும் இதுதான். மற்ற மாநிலங்களில் உள்ளவர்களுக்கு நம்மைப்போன்ற ஆங்கில அறிவு இல்லையென்றாலும், ஹிந்தி தெரிந்திருப்பதால், திறமையிருந்தும் நம்மவர்களால் அவர்களுடன் போட்டி போட முடிவதில்லை.

இன்று பெரும்பாலான தனியார் பள்ளிகளில் இந்தி கற்றுக் கொடுக்கப் படுகின்றன. அரசு பள்ளிகளில் அதுபோல ஏன் வசதி செய்து தரக்கூடாது? எனவே இந்தியை ஒரு திணிப்பாக கருதாமல், அதை ஒரு தேவையான தொடர்பு மொழியாக கருத வேண்டும்.

தாய்மொழியை தவிர வேறு எந்த மொழிகளும் தெரியாமல் நான் பட்ட கஷ்டங்கள் தான் என்னை இந்த நிலைமைக்கு வரத் தூண்டியுள்ளது. அன்று நான் முடிவு எடுத்தேன். இதே போல மற்ற தமிழ் மக்கள் எவரும் கஷ்டப்படக் கூடாது என்று எண்ணினேன். அதற்காக எப்படியாவது நான் கற்றுக் கொண்டு இவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்று முயற்சித்தேன். இந்தியாவின் பல அயல் மாநிலங்கள் மற்றும் 26 க்கும் மேற்பட்ட வெளிநாடுகளில் பயணம் செய்து, மொழியை கற்றுக் கொண்டதோடு மட்டுமில்லாமல் அங்கே உள்ள கல்வி முறைகளையும் தெரிந்து கொண்டேன்.

அடுத்தாக இந்த நிலைமை என் பிள்ளைகளுக்கு வரக்கூடாது என்பதற்காக நான் அவர்களுக்கு கற்றுக் கொடுக்க விரும்பினேன். அதில் பல பிரச்சனைகள் இருந்தது. குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பது என்பது எளிதான செயல் அல்ல. அதுவும் அவர்கள் அருகில் இல்லாமல், அவர்களுக்கு விளையாட்டாக எந்த முறையில் கற்றுக் கொடுக்கலாம் என்று பல மாதங்கள் ஆராய்ந்து தகவல்களை சேகரித்து அதன் படி நான் என் மனைவியின் மூலமாக அவனுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்று எண்ணி அவரிடம் என்னுடைய நுணுக்கங்களை சொல்லிக் கொடுத்தேன். எனக்கே ஆச்சரியம் கடந்த 3 வருடத்தில் 200க்கும் மேற்பட்ட மொழிகள் கற்றுக் கொண்டான். இது தான் எனக்கு கிடைத்த வெற்றி. அவனை ஒரு சாதனையாளனாக ஆக்கி விட்டேன் என்ற திருப்தியும். கி.மு. வருடங்களில் பழங்காலத்தினர் பயன்படுத்திய தமிழ் எழுத்துக்களின் ஆரம்ப எழுத்துக்களான பிராமி எழுத்துக்களையும் எகிப்தியர்களின் சித்ர எழுத்துகளையும் கற்றுக் கொண்டான். (இக்காலத்தில் கல்வெட்டில் மட்டும் பார்க்க முடியும்) குழந்தைகளின் கற்று கொள்ளும் திறமை ஆச்சரியப்பட வைக்கிறது.

அடுத்ததாக எனக்கும் என் குழந்தைகளுக்கும் தெரிந்தால் மட்டும் போதாது. தமிழ் குழந்தைகள், மற்றும் அனைவரும் பயன் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் படி ஒரு மொழிப்பயிற்சி நிலையம் வைத்து கற்றுக் கொடுக்கலாம் என்று முயற்சி செய்த போது பணப் பிரச்சனையால் அந்த முயற்சி தோல்வி அடைந்தது.

இந்த நிலைமையில் தான் சகோதரர் ஹீலர் பாஸ்கர் அவர்கள் ஆதரவு தருவதாக சொன்னார். மிக சந்தோமாக ஏற்றுக் கொண்டேன். இறைவன் விரும்பினால், சகோதரர் பாஸ்கர் அவர்கள் மூலமாக ஒரு மொழி பயிற்சி மையம் தொடங்கலாம் என்று இருக்கிறேன்.

எனது வாழ்க்கையின் லட்சியம் ; ஒன்று முதல் 12 வயது உள்ள தமிழ் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்களின் மூலமாக கற்க வைத்து வருங்கால உலகத்தின் சாதனையாளர்கள், ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவது.

தமிழ் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பன்மொழியின் அவசியத்தை உணர வைத்து, அவர்களுக்கு பன் மொழிகளை கற்றுக் கொடுப்பது.

தமிழ் பள்ளிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு பன் மொழியின் அவசியத்தை உணர வைத்து, அவர்களுக்கு பன் மொழிகளை கற்றுக் கொடுப்பது.

வேலை வாய்ப்பிற்கோ, மேற்படிப்பிற்கோ, அல்லது வியாபாரம் செய்வதற்கோ செல்லும் இளைஞர்களுக்கு பன்மொழிகளை கற்றுக் கொடுப்பது.

அடுத்ததாக எப்படி இதை செயல்படுத்தலாம் என்று பல நாட்கள் யோசித்து நான் சில முறைகளை வரையறுத்துள்ளேன்.

அதாவது கற்றுக் கொள்ள வருபவர்களை முதலில் நான்கு தரப்பினராகப் பிரிக்கிறேன்.

முதல் தரப்பினர்
குழந்தைகள் (1 வயதிலிருந்து 12 வயது வரை)

இரண்டாம் தரப்பினர்
டீன்ஏஜ் பருவத்தினர் (13 வயதிலிருந்து 19 வயது வரை)

மூன்றாம் தரப்பினர்
இளைஞர் மற்றும் நடுத்தர வயதினர் (20 வயது முதல் 35 வயது வரை)
நான்காம் தரத்தில் 35 வயதை தாண்டியவர்கள்

இதில் முதல் தரப்பினரை நாம் விளையாட்டாகவும் அல்லது வற்புறுத்தியும் கற்றுக்கொடுக்கலாம். எந்த மொழியிலும் உயிர் எழுத்துக்கள், வார்த்தைகள், பிரத்யேக வாரத்தைகள், உபயோகமான வார்த்தைகள் கற்று கொடுத்து வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் பழக்கமுடியும். மாறாக இவர்களை சரளமாக பேச வைக்கவும், இலக்கணம் கற்க வைக்கவும் முடியாது. அவர்கள் பேச வேண்டும் என்றால் அந்த மொழி பேசுபவர்களிடம் இருந்தால் மட்டுமே அவர்களால் கற்றுக் கொள்ள இயலும்.. இத் தரப்பினருக்கு ஆசிரியர்களை விட பெற்றோர்களால் தாம் கற்றுக் கொடுக்க இயலும்.

இரண்டாம் தரப்பினரை வற்புறுத்தி கற்று கொடுக்க முடியாது. அவர்களுக்கு யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் மிக

மிக ஆர்வம் இருந்தால் மட்டுமே உயிர் எழுத்துக்கள் முதல் இலக்கணம் மற்றும் சரளமாக பேசுவது வரை அவர்கள் ஆசிரியர்களின் துணை கொண்டு கற்றுக் கொள்ளலாம். ஆனால் பெற்றோர்களால் கற்றுக் கொடுக்க இயலாது மேலும் வற்புறுத்தவும் முடியாது.

மூன்றாம் தரப்பினரை ஆர்வம் இருந்தால் மொழியை புரிந்து கொள்வதற்கும், பேசுவதற்கும் போதுமான இலக்கணம் பற்றி மட்டும் கற்றுக் கொடுக்க முடியும். ஆனால் வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் கற்றுக் கொடுக்க முடியாது. ஆசிரியர் மூலமாகவோ அல்லது தாங்களாகவோ கற்றுக் கொள்ளலாம். இருந்தாலும் அவ்வப்பொழுது ஆசிரியரின் வழிகாட்டல் அவசியம் வேண்டி வரும்.

நான்காம் தரப்பினரை மிக மிக ஆர்வம் இருந்தால் மட்டும் மொழியை புரிந்து கொள்வதற்கும், ஓரளவு பேசுவதற்கும் கற்றுக் கொடுக்க முடியும். ஆனால் வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் கற்றுக் கொடுக்க முடியாது. ஆசிரியர் மூலமாக தான் கற்று கொள்ள முடியும்.

கற்றுக் கொள்வதற்கு ஆர்வமுடையவர் முதலில் தாம் எந்த தரப்பினர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் மொழிகளை கற்றுக் கொள்வதற்கு எத்தனையோ புத்தகங்கள், சிடிக்கள் உள்ளன. என்னை பொறுத்த வரை அனைத்தும் ஓரளவிற்கு (25 சதவீதம்) தான் கற்க முடியும். அதனால் எந்தவித பயனும் இல்லை. கற்க விரும்புபவரை இறந்த காலம், நிகழ்காலம் என்று போரடிக்க வைத்து விடும். உண்மையிலே அதன் மூலம் பயன் இருந்தால் இன்று இந்தியாவில் பல மொழி பேச கூடியவர்கள் உருவாகி இருப்பார்களே!

ஸ்போக்கன் ஹிந்தி, ஸ்போக்கன் இங்கிலீஷ், ஸ்போக்கன் அரபிக் என்று எந்த புத்தகம் மற்றும் எந்த ஒரு சிடி மூலமாக நீங்கள் ஒரு பொழுதும் பேசுவதற்கு கற்றுக் கொள்ள முடியாது. பல பேர்களை பார்த்து இருக்கிறேன். இந்த பப்ளிகேன் வெளியிடும் புத்தகம் நன்றாக இருக்கும். இல்லை இல்லை. அந்த பப்ளிகேன் வெளியிடும் புத்தகம் நன்றாக இருக்கும் என்று வாங்கி, வாங்கி பயனுள்ள நேரத்தை வீணடித்து இருப்பார்கள். கடைசியில் அந்த புத்தகம் ஒரு மூலையில் கிடக்கும். இந்த அனுபவம் எனக்கும் நிறைய இருத்திருக்கிறது.

நான் கூட ஒரு புத்தகம் அல்லது சிடி வெளியிட்டு நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள் என்றால் அது நமது நாட்டில் பிஸினஸ்க்காக செய்கின்றவர்கள் போல என்று ஆகிவிடும். அதில் எந்த வித பயனும் ஏற்படாது. நான் உங்களை ஏமாற்றுவதாக ஆகிவிடும்.



நான் 50 மாணவர்களுக்கு கற்று கொடுத்தால் அந்த மாணவர்களும் கற்று கொண்டே ஆக வேண்டும், என ஆர்வம் கொண்டவன். கற்றுக் கொள்ள வருபவர்களை சிடி கொடுத்தும், புத்தகத்தை கொடுத்தும் ஏமாற்ற விரும்பவில்லை. எனக்கு பிஸினஸ் செய்வதற்கு பல துறைகள் இருக்கிறது. மேலும் என்னுடைய திறமையை பார்த்து எனக்கு வெளிநாட்டில் பல கம்பெனிகளில் வாய்ப்பு கொடுத்திருக்கின்றனர். இருந்தாலும் நான் கல்விச் சேவை புரிய ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக நான் 50 பேருக்கு கற்றுக் கொடுக்கிறேன். அந்த 50 பேர் தான் கற்றுக் கொண்டு, 500 பேர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். அந்த 500 பேர் 5000 பேர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். அந்த 5000 பேர் 5 லட்சம் பேர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். அந்த 5 லட்சம் பேர்கள் 5 கோடி பேர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். இது தான் நான் காணும் கனவு.



மூன்றாம் மற்றும் நான்காம் தரப்பினருக்கு யாருமே இதுவரை செய்திராத புதிய கல்வி முறையில் சொல்லி கொடுக்க இருக்கிறேன். அதற்காக நீங்கள் மனப்பாடம் செய்ய தேவையில்லை. இலக்கணம் கற்க தேவை இல்லை. ஜாலியாக, ஆட்டோமெட்டிக்காக உங்கள் மூளையில் பதியும் ஒரு முறை இருக்கிறது.

அடுத்ததாக,எந்த மொழியையும் கற்றுக் கொள்ள நினைப்பவர்களுக்கு கீழ்க்காணும் ஐந்து நிபந்தனைகள் உள்ளது.



1. ஆர்வம், 2. நம்பிக்கை, 3. புரிந்து கொள்ளுதல், 4.பொறுமை, 5. நேரம்.

மேற்கண்ட ஐந்து நிபந்தனைக்குட்பட்டவர்களுக்கே கற்றுக் கொடுக்க முடியும். கற்றுக் கொள்ள விரும்புவர்களுக்கு ஆர்வம் மிக மிக முக்கியம். இரண்டாவது நாம் இந்த ஆசிரியர் மூலமாக கற்றுக் கொள்ள இயலும் என்ற நம்பிக்கை. மூன்றாவதாக ஆசிரியர் விளக்குவதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். நான்காவதாக பாடத்தின் மீது வெறுப்பு தோன்ற கூடாது. மிக மிக பொறுமை அவசியம். ஐந்தாவதாக கற்றுக் கொள்பவர்கள் தினசரி குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி கற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட 5 நிபந்தனைகளுக்கு உட்படாதவர்களுக்கு எந்த வித்த்திலும் கற்றுக் கொடுக்க முடியாது.

அடுத்த முக்கியவியம், அவர்களுடைய தாய்மொழியில் தான் இதை கற்றுக் கொள்ள முடியும். அவர்களுடைய தாய் மொழியில் தான் நான் கற்றுக் கொடுப்பேன். இது என்னுடைய முக்கிய நிபந்தனை ஆகும். பாடங்கள் தமிழிலும், சில பேர்களுக்காக ஆங்கிலத்திலும் விளங்குவதற்காக கொடுக்கப்படும்.

100 நாட்களில் எந்த மொழியையும் கற்று கொள்ளுதல் எப்படி? கற்றுக் கொடுப்பது எப்படி? இது என்னுடைய கற்றுக் கொடுக்கும் திட்டம்.

முதல் தரப்பினர்கள் கற்றுக் கொள்ளும் விதம் ஒவ்வொரு மொழியையும் கற்றுக் கொள்பவருடைய புரியும் திறனை அடிப்படையாக வைத்து நாம் ஒரு முடிவு செய்தால் எந்த ஒரு மொழியையும் 100 நாட்களில் கற்றுக் கொள்ளலாம்.கற்றுக் கொடுக்கலாம்.

முன்னரே சொன்னபடி முதல் தரப்பில் உள்ள குழந்தைகளுக்கு பெற்றோர்கள் தான் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக நான் பெற்றோருக்கு எந்த விதத்தில் கற்றுக் கொடுக்கலாம் என்று சொல்லி கொடுப்பேன்.

வாரத்தில் ஒரு நாள் பெற்றோர்களாகிய நீங்கள் கலந்து கொண்டு,

அந்த ஒரு வாரத்திற்குரிய பாடத்தை வாங்கி கொண்டு போய் கற்பிக்கலாம். 7 நாள்களுக்குரிய பாடங்கள் கொடுக்கப்பட்டு இருக்கும். அதை முறையை பயன்படுத்தி நீங்கள் உங்களது குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கலாம்.

இரண்டாவது வாரம் அது போல பாடங்கள் என்று, 12 வாரங்கள் சொல்லி கொடுக்கப்படும். நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறதே தவிர, அந்த குழந்தைகள் கற்றுக் கொண்டது என்பது அர்த்தம் ஆகாது. அது உங்கள் கையில் உள்ளது. இந்த முறையை ஞாபகம் வைத்து கொண்டு எப்பொழுது வேண்டும் என்றாலும் சொல்லிக் கொடுக்கலாம்.

முன்னர் கூறியபடி, உங்கள் குழந்தைகளை சரளமாக பேச வைக்க முடியாது. இலக்கணத்தை படிக்க வைக்க முடியாது. ஆனால் உங்கள் குழந்தைகளுக்கு வாசிக்கவும், எழுதவும், சொல்லகராதி (Vocabulary) சொற்றொடர் (Phrases) கற்கவும் முடியும். இந்த பருவத்திலிருந்து அடுத்த பருவத்திற்கு போகும் போது ஆட்டொமெட்டிக்காக இலக்கணம் மற்றும் புரிந்து கொள்ளுதல், பேசுதல் தெரிந்து விடும். இதில் நாம் விதையை தான் விதைக்கிறோம். அவர்கள் அறுவடை செய்வார்கள்.

இரண்டாம் தரப்பினர்கள் கற்றுக் கொள்ளும் விதம்

இரண்டாம் தரப்பினருக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் என்று 30 நாட்கள் கட்டாயம் பாடத்தை கவனித்து இருக்க வேண்டும். இவர்கள் 100 நாட்களின் மூலம் தான் கற்ற மொழியை புரிந்து இருப்பார்கள். எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் பயிற்சி எடுத்து இருப்பார்கள். ஆசிரியர் துணை இல்லாமல் அவர்களாகவே பயிற்சி எடுத்தால் அடுத்த 50 நாட்களில் வேகமாக எழுதவும், வேகமாக வாசிக்கவும் முடியும். மேலும் பேசுவதற்கு பயிற்சி எடுத்தால் அடுத்த 100 நாட்களில் சரளமாக பேசலாம். இதற்கு அம்மொழி பேசுபவர் கூட்டாளியாக (Partner) வேண்டும்.

மூன்றாம் தரப்பினர்கள் கற்றுக் கொள்ளும் விதம்

மூன்றாம் தரப்பினருக்கு ஒவ்வொரு வாரங்கள் என 15 நாட்கள் கட்டாயம் பாடத்தை கவனித்து இருக்க வேண்டும். இவர்கள் 100 நாட்களில் தான் கற்ற மொழியை புரிந்து இருப்பார்கள். இலக்கணம் தெரிந்து இருப்பார்கள். பேசுவதற்கு பயிற்சி எடுத்தால் அடுத்த 100 நாட்களில் சரளமாக பேசலாம். இதற்கு அம்மொழி பேசுபவர் (Partner) கூட்டாளியாக வேண்டும்.

நான்காம் தரப்பினர்கள் கற்றுக் கொள்ளும் விதம்

நான்காம்தரப்பினருக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் என்று 30 நாட்கள் கட்டாயம் பாடத்தை கவனித்து இருக்க வேண்டும். இவர்கள் 100 நாட்களில் தான் கற்ற மொழியை புரிந்து இருப்பார்கள். பேசுவதற்கு பயிற்சி எடுத்தால் அடுத்த 100 நாட்களில் ஓரளவிற்கு பேசலாம். இதற்கு அம்மொழி பேசுபவர் (Partner) கூட்டாளியாக வேண்டும்.

இறைவனின் அருளால் "ராயல் உலக மொழிகள் பயிற்சி மையம் (Royal Institute of Global Languages) என்ற ஒரு மொழிப் பயிற்சி நிலையத்தை தமிழ் மக்களின் ஆதரவு இருந்தால் தொடங்கப்போகிறேன்.

புதியதாக ஒரு மொழிப் பயிற்சி மையம் தொடங்குவதால் மக்கள் எதிர்பார்ப்பு

எப்படி இருக்கிறது? மக்கள் எந்த மொழியை அதிகமாக கற்க விருப்பப்படுகிறார்கள் என்று சர்வே எடுக்க ஆசைப்படுகிறேன். சர்வே எடுத்து விட்டு, அட்டவணை தயாரிக்க வேண்டும். யார் யாருக்கு என்ன மொழி கற்க வேண்டும் என்று திட்டம் வகுக்க வேண்டும். மொழி கற்க வருபவர்கள் கட்டாயம் தாய்மொழி தமிழ் தெரிந்திருக்க வேண்டும்.

என்னுடைய அனுபவத்தின் படி, உலகத்தை மாற்ற வேண்டும் என்றால் கீழ்க்கண்ட மொழிகள் கண்டிப்பாக தெரிந்து இருக்க வேண்டும்.

1. ஆங்கிலம், 2. அரபிக், 3. ஹிந்தி,
4. மலையாளம், 5. பிரெஞ்சு, 6. ஸ்பானிஷ்,
7. மலாய், 8. சைனிஷ்

ஒருவர் எடுத்த உடனே தமிழிலிருந்து சைனீஸ் விரும்புகிறார் என்றால், அது மிகவும் கஷ்டம். மொழிகளை கற்றுக் கொள்வதற்கு ஒரு எளிய முறை இருக்கிறது. அதன் படி தான் என்னால் இவ்வளவு மொழிகளை கற்க முடிந்தது.

எப்படி என்றால் நான் பள்ளிப்படிப்பு முடித்தவுடன், முதலில் ஹிந்தி கற்றுக் கொள்ள ஆசைப்பட்டேன். அதற்காக பல கற்பிக்கும் மையங்களை நாடினேன். பல புத்தங்கள் மற்றும் சிடிக்கள் வாங்கினேன். சுத்தமாக ஒன்றும் புரியவில்லை.

அதன் பிறகு தான் பல முறை யோசித்து, ஒரு முடிவு செய்தேன். அதாவது முதலில் தமிழோடு உறவான மொழியை முதலில் கற்போம் அதிலிருந்து முயற்சிப்போம் என்று முதலாவதாக மலையாளத்தை முழுவதுமாக தரவாகக் கற்றுக் கொண்டேன். அதன் மூலமாக ஹிந்தி எளிதாக கற்றுக் கொண்டு வெற்றி கண்டேன். ஏனென்றால் தமிழும், சமஸ்கிருதமும் சேர்ந்தது தான் மலையாளம். ஹிந்தி கற்றுக் கொண்டால் உருது எளிது. உருதுவை கற்றுக் கொண்டால் பார்சி எளிது. பார்சியை கற்றுக் கொண்டால் அரபிக் எளிது.

இப்படி ஒவ்வொரு மொழிக்கும் தொடர்பு உள்ளது. அதை நாம் விளங்கி கொள்ள வேண்டும்.

உலகில் உள்ள எந்த மொழிகள் ஆகிலும் கற்றுக் கொடுக்க நான் தயாராக உள்ளேன். ஒவ்வொரு மொழிக்கும் குறிப்பிட்ட கால அளவுகள் உள்ளது. அதுபடி நாம் பயிற்சி எடுத்தால் யார் வேண்டுமானாலும் கற்கலாம். யார் யார் எந்த மொழிகளை கற்க விரும்புகிறார்களோ அவர்கள் கீழ்க்காணும் மெயில் ஐடிக்கு இது குறித்த சந்தேகங்களை அனுப்பலாம்.

mozhippriyan@gmail.com மெயில் அனுப்பும் போது தயவுசெய்து கீழ்க்கண்டவைகளை விபரங்களை அனுப்பவும்.
1. பெயர்
2. தந்தை பெயர்
3. பாலினம்
4. வயது
5. கல்விப்படிப்பு
6. தொழில்
7. தாய்மொழி
8. பள்ளியில் பயிற்றுவிக்கப்பட்ட மொழி
9.எழுத, வாசிக்க தெரிந்த மொழிகள்
10. சரளமாக பேசுவதற்கு தெரிந்த மொழிகள்
11.ஏன் பிற மொழிகளை கற்க விரும்புகிறீர்கள்?
12.முகவரி
13.இமெயில் ஐடி
14.மொபைல் நம்பர்
15.கற்றுக் கொள்ள ஆரம்பித்தால் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் இதற்காக ஒதுக்குவீர்கள்.

ஒரு வகுப்பிற்கு 20 பேர் அதிகபட்சம் என்றும், குறைந்த பட்சம் 10 பேர்கள் என்றும் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள எந்த பகுதிக்கும் வந்து கற்றுக் கொடுக்க விரும்புகிறேன். ஆனால் குறைந்த பட்சம் 10 பேர் ஆர்வமாக கற்றுக் கொள்ள முன் வரவேண்டும். அதே போல் எந்த பள்ளிக்கூடத்திற்கும் வந்து கற்றுக் கொடுக்க விரும்புகிறேன். ஆனால் அந்த பள்ளிக்கூடம் தமிழ் வழி பள்ளியாக இருக்க வேண்டும். ஆங்கில வழி பள்ளியில் எனக்கு உடன்பாடு இல்லை. செலவுகள் அவர்கள் செய்து கொள்ள வேண்டும்.

நான் சேவை மனப்பான்மையாக தான் இந்த கற்றுக் கொடுக்கும் புனிதத் தொழிலை ஆரம்பிக்க நினைக்கிறேன். உங்களுடைய ஆதரவு இருந்தால்.

இப்படிக்கு
மொழிப்பிரியன்.
கடிதம் இத்துடன் நிறைவுபெறுகிறது.

எனவே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இந்த 200 மொழிகளை கற்றுக்கொள்ளும் வித்தையினை அறிந்துகொண்டு பயன்பெறுவோமாக !

மேலும் விபரங்களுக்கு
தொலைபேசி எண்கள் :
+91 96003 62627, 96003 62628.
Email : multiolanguage@gmail.com
Web : www. multiplelanguage.com.

**அன்பர்கள் அனாடமிக் தெரபி ஃபவுண்டேஷனுடன் என்றென்றும் இணைந்திருக்க...**

- தினமும் அல்லது தங்களது ஓய்வு நேரங்களில் நமது www.anatomictherapy.org இணையதளதைக் கவனித்து வரவும். அதில் அனாடமிக் செவிவழி தொடுசிகிச்சை நிகழ்ச்சிகள், புதிதாய் சேர்க்கப்பட்ட தகவல்கள், அறிவிப்புகள் என்று நாள்தோறும் அன்பர்களின் பயன்பாட்டிற்கென வெளியிடப்படுகிறது. எனவே தொடர்ந்து நமது www.anatomictherapy.org இணையதளத்துடன் இணைந்திருங்கள்.
- நமது அமைதியும் ஆரோக்கியமும் மாத இதழில் ஒவ்வொரு மாதமும் மருத்துவம், அறிவியல் ஆன்மீகம், இயற்கை உணவு என்று பல பயனுள்ள கட்டுரைகளையும் தாங்கி வெளிவருகிறது. இது விளம்பரங்கள் இடம் பெறாத முற்றிலும் சேவை நோக்குடன் வெளியிடப்படும் மாத இதழாகும். எனவே இதில் சந்தாதாரராகி அமைதியும் ஆரோக்கியமும் மாத இதழுடன் இணைந்து பயனடையுங்கள்.
- ஐந்து நாட்கள் சிறப்பு செயல்முறை அனாடமிக் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் அன்பர்கள் வருடம் ஒரு முறையாவது இந்த வகுப்புகளில் மீண்டும் கலந்து கொள்ளுங்கள். இது உங்கள் உடலையும் மனதையும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருக்க உதவும். இந்த இயற்கை முகாமில் தொடர்ந்து கலந்து கொள்ளுதல் உங்கள் உடல் கழிவுகளை நீக்க வழிவகுக்கிறது. எனவே இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பயனடையுங்கள்.

பாகம் 13



# குழந்தைகள் கண்களை மூடி படிப்பது உண்மையா?

குழந்தைகள் கண்களை மூடிக்கொண்டு படிக்கிறார்கள் எனவும் கண்களைக் கட்டிக்கொண்டு தனக்கு முன்னால் உள்ள பொருள் எது என்று சரியாக கூறுகிறார்கள் என்றும் சில ஏமாற்றுப் பேர்வழிகள் குழந்தைகளையும், பெற்றோர்களையும் ஏமாற்றி வருகிறார்கள். எனவே இதுபோன்ற பயிற்சி அளிக்கும் இடங்களுக்கு உங்கள் குழந்தைகளை அனுப்பவேண்டாம் என்பது பற்றி இக்கட்டுரையில் மிகவும் தெளிவாக கூறி இருக்கிறேன். மிட்ப்ரைய்ன் ஆக்டிவேசன் பயிற்சி நம்பக் கூடியது அல்ல என்பதை இதன் மூலம் புரிந்து கொள்வீர்கள்.

சமீப காலமாக உலகின் பல்வேறு இடங்களில் மிட் ப்ரெய்ன் ஆக்டிவேசன் (Mid Brain Activation) என்ற பெயரில் குழந்தைகளுக்கு கண்களை மூடி படிப்பதற்கு பயிற்சிகளைக் கொடுத்து வருகின்றனர். இந்த பயிற்சியினை தயவு செய்து யாரும் நம்ப வேண்டாம். இது ஒரு ஏமாற்று வேலை என்பதைப் பற்றி தான் இந்தக் கட்டுரையில் தெளிவாகப் புரிந்து கொள்ள இருக்கிறோம்.

இப்பொழுது பல இடங்களில் குழந்தைகளின் கண்களைக் கட்டிவிட்டுப் புத்தகங்களை படிப்பதற்கும், கண்களுக்கு முன்னால் உள்ள பொருட்களை அடையாளம் காண்பதற்கும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் லீஃப் ரீடிங் (Leaf Reading) என்ற பெயரில் புத்தகத்தினைத் திறந்து படிக்காமலேயே பக்கங்களை வேகமாகப் புரட்டிப் பார்த்தே படித்து விடமுடியும் என்று பயிற்சி கொடுக்கின்றனர். இதுதவிர புத்தகத்தினைப் புரட்டிப் பார்க்காமல் உள்ளங்கையை புத்தகத்தின் மேல் வைத்து ஐந்து முதல் ஏழு பக்கங்கள் வரை உள்ள விசயங்களை படிக்க முடியும் என்றும் பயிற்சிகளை அளித்து வருகின்றனர்.

மேலும் 300 பக்க புத்தகத்தினை 3 நிமிடத்தில் படித்து விட முடியும் என்று டிவி, செய்தித்தாள்கள் என பலவற்றிலும் விளம்பரங்களைக் கொடுத்து பல நிறுவனங்கள் குழந்தைகளையும், பெற்றோர்களையும் ஏமாற்றி வருகின்றன.

இந்த பயிற்சி 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே கற்றுக் கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். இந்த

பயிற்சிக்காக 15,000 முதல் 1,00,000 ரூபாய் வரை கட்டணமாகப் பெறப்படுகிறது. இரண்டு நாட்களில் இப்பயிற்சியினைக் கற்றுக் கொடுக்க முடியும் என்று கூறுகின்றனர். மேலும் இதே போன்ற பயிற்சி வகுப்புகளை நீங்களும் உங்கள் ஊரில் நடத்தலாம் என்று பெற்றோர்களிடம் 10 இலட்சம் முதல் 50 இலட்சம் ரூபாய்கள் வரை டெபாசிட் தொகை பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த பயிற்சி உண்மையானதா? என்றால் முற்றிலும் பொய். இதைப் பற்றி இந்தக் கட்டுரையில் நாம் விரிவாகவும், தெளிவாகவும் பார்ப்போம்.

கண்களை மூடிக் கொண்டு உலகில் உள்ள அனைத்து விசயங்களையும் பார்க்க முடியும் என்று நமது முன்னோர்களான சித்தர்கள், ஞானிகள் போன்றோர் கூறியிருக்கின்றனர். எனக்கு கண்களை மூடினால் ஒன்றும் தெரிவதில்லை. கண்களை மூடிக் கொண்டு பல விசயங்களைப் பார்க்கும் மனிதர்களை நான் நேரில் பார்த்ததும் இல்லை. ஆனால் கண்களை மூடிக் கொண்டு அண்ட பிரம்மாண்டத்தையும், இந்த உலகத்தினையும் பார்க்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

இரண்டே நாளில் 25000 ரூபாய் கட்டணம் வாங்கிக் கொண்டு குழந்தைகளுக்கு கண்களை மூடிக்கொண்டு பார்க்கவும், படிக்கவும் பயிற்சியளிக்க முடியும் என்பதை நிச்சயமாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. இது ஒரு ஏமாற்று வேலையாகத் தெரிகிறது.

முதலில் கண்களை மூடி படிக்கும் குழந்தைகள் எப்படிப் படிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

இதற்கு மிட் ப்ரெய்ன் ஆக்டிவேசன் என்று பெயர் கூறுகிறார்கள். அதாவது குழந்தைகள் கண்கள் மூலமாகப் பார்க்காமல் நடு மூளை வழியாகப் பார்க்கிறார்கள். எனவே கண்களைக் கட்டிக் கொள்கிறோம் என்று கூறுகிறார்கள். இதற்கென பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட கண்களைக் கட்டிக்கொள்ளும் துணி என்று கருப்பு நிறத்தில் ஒன்றை தருகிறார்கள். அதைக் ஒன்றை கட்டிக் கொண்டால் மூக்கின் அருகே சிறு துவாரத்தின் மூலமாக பொருட்களை பார்க்க முடியும். இதைப் பரிசோதிப்பதற்காக நீங்கள் வேண்டுமானால் இந்த துணியைக் கண்ணில் கட்டிக் கொண்டு பாருங்கள். மூக்கின் அருகில் உள்ள துவாரத்தின் வழியாக கண்களால் கண்டிப்பாக பார்க்க முடியும்.

எனவே கண்ணைக் கட்டிக்கொண்டு குழந்தைகள் பார்க்கிறார்கள் என்பது மூக்கின் அருகே உள்ள துவாரத்தின் வழியாகத் பார்ப்பதைத்தான். ஆனால் நடு மூளை வழியாகப் பார்ப்பதாக அந்தக் குழந்தை நம்புகிறது. அதாவது அவ்வாறு நம்ப வைத்து குழந்தைகளையும், நம்மையும் ஏமாற்றுகிறார்கள்.

உங்கள் ஊரில் உள்ள குழந்தைகளில் எவரேனும் இதுபோன்ற கண்ணைக் கட்டிக்கொண்டு படிப்பவர்களாக இருந்தால் அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து பரிசோதனை செய்து பாருங்கள். அக்குழந்தைகளின் மூக்கிலிருந்து 45டிகிரி கோணத்தில் ஒரு புத்தகத்தினை கொண்டு சென்று காண்பித்தால் மட்டுமே அக்குழந்தைகளால் அதைப்பார்த்து படித்து சொல்ல முடியும். கண்களுக்கு நேராக ஒரு புத்தகத்தினைக் காட்டினால் அதைப் படிக்கத் தெரிவதில்லை. கண்களுக்கு மேல் அரைஅடி அல்லது ஒரு அடி உயரத்தில் புத்தகங்களை உயர்த்திக் காண்பித்தாலும் அவற்றைப்

படிப்பதில்லை. மேலும் நாம் சில பொருட்களை கையில் வைத்துக்கொண்டு அவர்களது கண்களுக்கு முன்னால் சென்று காட்டினாலும் அவர்களால் அடையாளம் காண முடியவில்லை. அப்பொருட்களை தனது கையில் வாங்கிக்கொண்டு மூக்கு துவாரத்தின் வழியாக பார்த்து அதாவது 45டிகிரி கோணத்திற்கு கொண்டு சென்று பார்த்த பின்னர் தான் கூறுகிறது. இவ்வாறு பார்த்து கூறுவதையே கண்களை மூடி அப்பொருளைப் பற்றி கூறுவதாக சொல்கிறார்கள்.

ஒரு பொருளை எடுத்து கையில் உரசினால் அது எந்தப் பொருள் என்று கூறுவதும் இதே போலத்தான். ஒரு பொருளை எடுத்து கையில் உரசும் பொழுது மூக்கின் அருகே உள்ள துவாரத்தின் வழியாகப் பார்க்கிறார்கள். மேலும் ஒரு பொருளின் வாசனையை முகர்ந்து பார்த்தே அப்பொருள் என்ன என்று கண்டுபிடித்து கூறுகிறோம் என்று சொல்வதும் இதே போன்றது தான். மூக்கின் அருகே உள்ள துவாரத்தின் வழியாக அது என்ன பொருள் என்று பார்த்துக் கொள்கிறார்கள்.

காதின் அருகே ஒரு பொருளைக் கொண்டு சென்றால் அது என்ன பொருள் என்று பார்க்காமல் கூறுகிறோம் என்று கூறுகிறார்கள். காதின் அருகே ஒரு பொருளைக் கொண்டு சென்றால் பக்கவாட்டில் அப்பொருளை சிறு துவாரத்தின் வழியே கண்களால் பார்த்துவிட்டுத்தான் கூறுகிறார்கள்.

ஆரம்பத்தில் இந்தச் செய்திகளைக் கேள்விப்படும் பொழுதும், நேரில் பார்க்கும் பொழுதும் நான் மிகவும் ஆச்சர்யப்பட்டிருக்கிறேன். பத்திரிகை, இணையதளம், யூடியூப் மற்றும் நேரில் நான் நடத்தும் பல நிகழ்ச்சிகளிலும் இதுபற்றிக் கூறி பொதுமக்களிடம் தங்கள் குழந்தைகளையும் இதுபோன்ற பயிற்சிகளுக்கு அனுப்பி வைக்குமாறு கூறியிருக்கிறேன். ஆனால் தற்போது இது ஒரு ஏமாற்றுவேலை என்று தெரிந்த பிறகு அதை மாற்றவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

சில பயிற்சி வகுப்புகளில் முகத்தினை முழுவதுமாக மூடுவதற்கு முகமூடி கொடுக்கிறார்கள். இந்த முகமூடியை அணிந்துகொண்டு அதை கழுத்துப்பகுதியில் இறுக்கமான கயிறால் கட்டிக் கொண்டால் மேற்சொன்னவாறு கண்களை மூடிப்பார்க்கலாம் என்று கூறுகிறார்கள். பார்ப்பதற்கு இந்த கருப்பு நிறமுகமூடியைக் கட்டிக் கொண்டு பார்த்தால் ஒன்றும் தெரியாதது போல் இருக்கும். அந்த முகமூடியை அணிந்து கொண்டு பார்க்கும் பொழுது சாதாரணமாக நாம் வெறும் கண்களால் பார்ப்பதைப் போன்று நன்றாகவே பார்க்க முடிகிறது. மேலும் அவர்கள் கொடுக்கும் துணி மற்றும் முகமூடியை மட்டும் தான் கட்டிக்கொண்டு பார்க்கச் சொல்கிறார்கள். அந்த துணிகளில் உள்ள சிறுசிறு துவாரங்கள் அதன் வழியே பொருட்களை நன்றாக பார்க்க முடியும். இது ஒரு மேஜிக் கேம் (னிழிஆஷ்உ றாழிதுள).

பல மேடை நிகழ்ச்சிகளையும் இதுபோன்ற பயிற்சி நிறுவனங்கள் செய்து காண்பித்து பொதுமக்களையும், குழந்தைகளையும் அவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக நம்பவைத்து ஏமாற்றுகின்றனர். பொதுமக்கள் முன்னிலையில் செயல்விளக்கம் (டெமோ) காட்டுகிறோம் என்ற பெயரில் சில குழந்தைகளின் காதுகளில் செல்போன் ப்ளூடுத் ஸ்பீக்கரை முன்னேற்பாடாக சொருகி வைத்து விடுகிறார்கள். அக்குழந்தைக்கு முன்புறமாக உள்ள கேமிராவில் இதெல்லாம்

தெரியாதவாறு படம் பிடிக்கிறார்கள். மறைவான இடத்திலிருந்து ஒருவர் செல்போன் மூலமாக குழந்தை முன் காட்டப்படும் பொருள் பற்றிக் கூறுகிறார். காதில் உள்ள ப்ளூடுத் வழியே அதைக் கேட்டு குழந்தை அப்படியே சொல்லி விடுகிறது. பார்ப்பவர்கள் இதை உண்மை என்று நம்பி விடுகிறார்கள். இது ஒரு மாயாஜாலம், கண்கட்டி வித்தை என்று இதை கூறலாம்.

இவ்வாறு கண்களைக் கட்டிக்கொண்டு படிக்கும் குழந்தைகளை உண்மையிலேயே அவர்கள் கண்களை மூடிக்கொண்டுதான் படிக்கிறார்களா என்று சோதனை செய்து பார்ப்பதற்கான சில வழிமுறைகளைக் கூறுகிறேன். அவர்கள் இதில் தேர்ச்சி பெற்றுவிட்டால் நான் நம்புகிறேன். அவர்கள் உண்மையில் கண்களைக் கட்டிக்கொண்டுதான் படிக்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

சோதனை 1

ஆரம்பத்தில் அவர்கள் விருப்பம் போல் கண்களைக் கட்டிக்கொண்டு குழந்தைகளை படிக்கச் சொல்லுங்கள். திடீரென அறையில் உள்ள விளக்கினை அணைத்துவிட்டு முற்றிலும் இருட்டாக உள்ள ஒரு அறையில் அதேபோல தொடர்ந்து அவர்களைப் படிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம். அவ்வாறு அவர்கள் படிக்கிறார்கள் எனில் நம்புங்கள். இல்லையென்றால் இது ஒரு ஏமாற்று வேலை.

சோதனை 2

உங்கள் கைகளால் குழந்தைகளின் கண்களை மூடிக் கட்டும் துணியினை மூக்கின் அருகே ஓட்டை இல்லாதவாறு நன்றாக அடைத்துவிட்டு பின்னர் அவர்களைப் படிக்கச் சொல்லுங்கள் கண்டிப்பாக அவர்களால் படிக்க முடியாது.

சோதனை 3

கண்களை முழுவதுமாக அடைத்து பின்னர் ஒரு துணியால் அதன் மேல் ரிப்பன் போல் தலையை சுற்றிக் கட்டிக் கொள்ள வேண்டும். அதாவது கண் ஆப்ரேன் செய்து கொள்பவர்களுக்கு ஒரு பிளாஸ்டர் வைத்து அடைத்து அதன்மேல் திரைபோல ஒரு துணியை தொங்கவிட்டு தலை சுற்றிக் கட்டியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அதுபோன்று செய்து கண்களைக் கட்டிக்கொள்ள வேண்டும். இந்தப் பொருட்கள் சாதாரணமாக மருந்து கடைகளில் கிடைக்கும். கண்களைக் சுற்றிலும் வட்டமாக பிளாஸ்ட்ரால் சிறிதளவும் துளையில்லாதவாறு  செய்துவிட்டு குழந்தையைப் படிக்கச் சொன்னீர்கள் எனில் அவர்களால் படிக்க முடியாது.

சோதனை - 4

கண்கள் மூலமாக பார்த்து அவர்கள் படிப்பதில்லை நடுமூளையின் மூலமாகவே படிப்பதாகவே அவர்கள் கூறுகின்றார்கள். அப்படியெனில் இந்த உலகில் கண்பார்வையற்ற பலரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் இந்த பயிற்சியை அளித்து அவர்களை படிக்க, பார்க்க வைக்க கூடாது? இவ்வாறு அவர்கள் செய்துவிட்டால் உலகில் மிகப் புரட்சியாக  அது அமையுமல்லவா?

நானும் ஆரம்பத்தில் இவர்கள் சொல்வது அனைத்தும் உண்மை என்று நம்பி மிகவும் சந்தோசப்பட்டு கொண்டு இருந்தேன். அப்பொழுதுதான் திரு. ஜெகதீஸ் என்ற அன்பர் எனக்கு இதுபற்றி விளக்கமாக கூறினார். அதன் பிறகு தான் எனக்கு உண்மை புரிந்தது. இது தொடர்பான மேலும் விரிவான செய்திகளை கீழ்க்காணும் யூடியூப் லிங்கில் கண்டு அறிந்து

கொள்ளலாம்.1.https://www.youtube.com/watch?v=V6dDfGqnZQM (Midbrain activation scam dr narendra nayak) 2.https://www.youtube.com/watch?v=IinioHjK204 (Midbrain expose muthukad)

மேற்சொன்ன இரண்டு வீடியோக் களையும் யுடியூப் லிங்கில் பார்க்கும் பொழுது உங்களுக்கு அனைத்தும் புரிந்துவிடும். மிட் ப்ரெய்ன் ஆக்டிவேசன் என்ற பெயரில் நமது குழந்தைகளையும், நம்மையும் ஏமாற்றிக்கொண்டு ஆயிரக்கணக்கிலும், இலட்சக்கணக்கிலும் நம்மிடமே கட்டணம் வசூலித்துக் கொண்டு நமது குழந்தைகளுக்கு ஏமாற்று வேலையை கற்றுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் தான் இப்பயிற்சியை கற்றுக் கொடுப்போம் என்று ஏன் கூறுகிறார்கள் தெரியுமா?

12 வயதிற்குள் உள்ள ஒரு குழந்தை எதைச் சொன்னாலும் நம்பும். எனவே அந்தப் பயிற்சி வகுப்புகளில் பல்வேறு விதமான மூளை சலவை செய்யப்பட்டு ஏமாற்று வேலைகளை கற்றுக் கொள்கிறது. இதனால் ஏமாற்றுவது தவறே இல்லை என்பதாக அது நினைத்து நம்பிக் கொள்கிறது. பல குழந்தைகளும் தாங்கள் பார்ப்பது வெறும் கண்களால் தான், நடு மூளையினால் அல்ல என்ற விசயம் கூட தெரியாமல் ஏமாற்றும் வேலையைச் செய்கிறது.

சில குழந்தைகள் தாங்கள் ஏமாற்றுகிறோம் என்று தெரிந்தும் இப்படித்தான் வாழவேண்டும் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறது. பல குழந்தைகளும் மற்ற குழந்தைகள் செய்வதைப் பார்த்து தாங்களும் பொய் சொல்ல ஆரம்பிக்கின்றனர்.

நான் நேரடியாக சில குழந்தைகளை சோதித்துப் பார்த்தேன். ஆரம்பத்தில் ஆச்சர்யப்பட்டேன். அதை காட்சிகளாக பதிவு செய்து வீடியோவும் எடுத்து வைத்திருந்தேன். அவை ஏமாற்று வேலை என்று அறிந்த பின்னர் தற்போது அதே வீடியோவை இப்பொழுது பார்க்கும் பொழுதுதான் உண்மை என்னவென்று தெளிவாக தெரிகிறது.

ஆம்! அவர்கள் கண்கள் மூலமாக மட்டுமே பார்த்துப் படிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். எனவே நமது குழந்தைகளை இதுபோன்ற ஏமாற்று வேலையிலிருந்து காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

பல பெற்றோர்கள் தங்கள் குழந்தை கண்களை மூடி படிப்பதைப் பார்த்து தனது நண்பர்கள்,உறவினர்கள் அனைவருக்கும் இதை பெருமையாக காண்பித்து சந்தோசப்பட்டு கொண்டிருக்கின்றனர். திடீரென அவர்களுக்கு இது ஏமாற்றுவேலை, மேஜிக் என்று தெரியும் பொழுது தன் குழந்தையை அவமானப்படுத்திவிடக் கூடாது என்று நினைத்து இதை மறைக்கிறார்கள்.

பெற்றோர்களே ! உண்மையை உண்மையாக மட்டுமே என்றும் பேசுவோம். இதனால் நாமும் நமது குழந்தைகளும் உண்மையை உணர்ந்தவர்களாகவே வாழ்வோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பல பெற்றோர்களுக்கு இந்த ஏமாற்று விசயம் பற்றித் தெரியாது. சில பெற்றோர்களும், தெரிந்தவர்களும் வெளியில் இதுபற்றித் தெரிந்தால் அவமானம் என்று எண்ணி யாரிடமும் சொல்லாமல் இருக்கிறார்கள். தங்களது குழந்தையின் எதிர்காலம் பாதிக்கும் என்று நினைத்து இது ஒரு ஏமாற்று வேலை என்று வெளியே சொல்லாமல் இருக்கிறார்கள்.

தற்பொழுது பல்வேறு ஆசிரமங்களில் பல குருநாதர்கள் இப்பயிற்சியை ஆரம்பித்து சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்த விசயம் தெரியுமா? அல்லது தெரியாதா என்பது பற்றி எனக்குக் தெரியவில்லை.

எனவே உடனடியாக அவர்களுக்கு இந்த தகவலைப் பரிமாறுங்கள். இவ்வாறு கண்களை மூடிக்கொண்டு படிப்பதற்காக உலகில் பல்வேறு இடங்களில் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்து வருகிறார்கள். இதன் தலைமையகம் மலேசியாவில் உள்ளது. சிங்கப்பூர், இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளில் அதன் கிளைகளை வேகமாக துவங்கி வருகின்றனர். இதன்மூலம் உலகின் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு தெருவிலும் இப்பயிற்சி வகுப்பின் கிளைகளை ஐந்து வருடத்திற்குள் ஆரம்பித்து விட வேண்டும் என்பது தான் அவர்களது இலக்கு. குழந்தைகளையும், பொதுமக்களையும் ஏமாற்றி பல ஆயிரம் கோடி ரூபாய்கள் சுருட்டுவது தான் அவர்களது திட்டம். எனவே முன்னெச்சரிக்கையாக நம்மை இதிலிருந்து காப்பாற்றிக் கொள்வதை விரைந்து செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

சிலமாதங்களுக்கு முன்பு எனக்கு பழங்கால ஓலைச்சுவடிகள் கிடைத்தன. அதில் 1700 பழங்கால வித்தைகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஓலைச்சுவடிகளை திருக்கோவிலூரை சேர்ந்த திரு. சிலம்பரசன் என்பவர் எனக்கு அளித்தார். அந்த ஓலைச்சுவடிகளை தற்போது நான் படித்து வருகிறேன்.

அந்த ஓலைச் சுவடியில் பல்வேறு இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன. கண்கட்டிவித்தை, மாயாஜாலம் எனப்படும் பல வித்தைகள் அதில் குறிப்பிடப் பட்டுள்ளன. நமது அமைதியும் ஆரோக்கியமும் என்ற மாத இதழின் வழியாக ஒவ்வொரு மாதமும் அதிலிருந்து ஐந்து கண்கட்டி வித்தைகளை கொடுக்கப் போகிறோம்.

எனவே அந்த வித்தைகளை யெல்லாம் அறிந்துகொண்டு விழிப்புணர்வுடன் இருங்கள். அதைப்பற்றி மற்றவர்களுக்கும் புரிய வையுங்கள்.

மிட்ப்ரெய்ன் ஆக்டிவேசன் என்ற பெயரில் யாரேனும் உங்களிடம் அப்பயிற்சி பற்றி கூறும் பொழுது நான் ஏற்கனவே கூறிய நான்கு வழிகளிலும் சோதித்துப் பாருங்கள். நான்கு வழிகளிலும் சோதனையில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே உங்கள் குழந்தைகளை அப்பயிற்சிக்கு அனுப்புங்கள். இல்லையென்றால் அந்த பயிற்சி நிறுவனத்தை உடனே இழுத்து மூடுங்கள்.

நாம் எப்பொழுதும் பாதுகாப்பான விசயங்களை மட்டுமே ஏற்போம் !
நல்ல விசயங்களை மட்டுமே நம்புவோம் !!
உண்மையை உலகெங்கும் பரப்புவோம் !!!

செழிக்கட்டும் விவசாயம்!
சீர்ப்படட்டும் நிர்வாகம் !!
உலக மக்கள் அனைவரின் முகத்திலும்
நிலவட்டும் புன்சிரிப்பு !! வளர்க ஆன்மீகம் !
வாழ்க வாழ்வாங்கு !!
வாழ்க வையகம் !
வாழ்க வளமுடன் !!
-சந்தோம்-

பாகம் 14



# சிறந்த கல்வி முறை

(பின்லாந்து கல்வி முறை)

உலகிலேயே மிகச்சிறந்த கல்விமுறை பின்லாந்து கல்விமுறை. கல்வி என்றால் என்ன? கல்வியை நாம் எப்படி ஒழுங்குபடுத்துவது போன்ற பல விசயங்களை பின்லாந்து கல்விமுறை எனும் இந்தக் கட்டுரையை படிக்கும் பொழுது தெளிவாகப் புரிந்து கொள்வீர்கள்.

உலகில் தலைசிறந்த கல்வியில் பின்லாந்து முதல் இடத்தில் உள்ளது. அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்வி முறையில் பின்லாந்தில் ஏழு வயதில் தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறது...

ஒன்றரை வயதில் ப்ளே ஸ்கூல் இரண்டரை வயதில் ப்ரீ கே.ஜி. மூன்று வயதில் எல்.கே.ஜி நான்கு வயதில் யு.கே.ஜி என்ற சித்ரவதை அங்கே இல்லை.

கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பள்ளியில் உட்கார்ந்து கொள்ளும் எந்த அவசரமும் அவர்களுக்கு இல்லை.

எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும் செடி துளிர்ப்பதும் இசை ஒலிப்பதும் பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்வித்தான்.

இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை.

ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள் தான் பள்ளிக்கூடம் செல்கிறது மீதி நாட்கள் விடுமுறை.

ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவு தான். அந்த நேரத்திலும் கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு மற்றும் பிற கலைகளுக்கும் உண்டு. ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஓய்வரை

இருக்கும் படிக்கப் பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால் மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்.

முக்கியமாக 13 வயது வரை ரேங்க்கிங் என்ற தரம் பிரிக்கும் கலாச்சாரம் கிடையாது. பிராக்ரசு ரிப்போர்ட் தந்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது.

தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால் தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை.

சக மாணவர்களைப் போட்டி யாளர்களாகக் கருதும் மனப்பாங்கு இல்லை. இவர்களுக்கு வீட்டுப்பாடம் தரப்படுவது இல்லை. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப்பாடம் செய்து வரலாம்.

ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல்நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து ஆலோசனைகள் வழங்குவார்.

ஒரு பள்ளியில் அதிகப்பட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம். அதற்கு மேல் அதிக எண்ணிக்கை கூடாது. முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக்கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம்.

கோடீசுவரராக இருந்தாலும் நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும்... அனைவரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில் தான் படிக்க வேண்டும். என் பொண்ணு இண்டர்நேனல் ஸ்கூல்ல படிக்கிறா என சீன் போட முடியாது.

அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி என்ற உத்தரவாதம் உள்ளது. அதனால் தான் பின்லாந்தில் 99சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிடுகின்றனர்.

அதில் 94 சதவிகிதம் பேர் உயர்கல்விக்குச் செல்கின்றனர். டியூசன் என்ற அருவருப்பான கலாச்சாரம் அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை.

தேர்வுகள் அடிப்படை முறைகளாக இல்லாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள் தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர்.

இது எப்படி? என்பது கல்வியாளர்களுக்கே புரியாத புதிர். அந்த புதிருக்கான விடையை ஐ.நா. சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது.

உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது.

மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள் அறிவை ஆர்வத்துடன் சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை.

பின்லாந்து கல்வி முறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த

நாட்டை நோக்கிக் குவிகின்றனர்.

உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர்.

நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது. ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ்மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக்கொள்வது இல்லை.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் பின்லாந்து கல்வி முறைதான் உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது. ஏனெனில் அமைப்பின் ஆய்வில் எல்லா உலக நாடுகளும் பங்கேற்காத நிலையில் இப்படி ஒருமுடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்களைவிட சிறந்த கல்விமுறையும் இருக்க வாய்ப்பு உள்ளது என்கிறார்கள்.

இல்லாத நாற்காலியைத் தேடி எடுத்து ஏறி அமர்ந்து தனக்குத்தானே முடிசூட்டிக்கொள்ளும் தற்பெருமை யாளர்கள் நிறைந்த உலகத்தில் இது பண்புமிக்க பார்வை.

மதிக்கத்தக்க மனநிலை பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, நம் ஊர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் போல மிகுந்த சமூகக் கௌரவம் உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில் திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.

மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு ஆசிரியர் ஆவது தான் தன் வாழ்நாள் லட்சியம். அதே நேரம் அங்கு ஆசிரியர் ஆவது அத்தனை சுலபம் அல்ல.

மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஐந்து ஆண்டுகள் உண்டு. உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும்.

பிறகு ஆறு மாத காலம் ராணுவப் பயிற்சி. ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பள்ளிகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி.

ஏதாவது ஒரு பாடத்தில் புராஜெக்ட் ஆக குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது, நாட்டின் சட்டத் திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ் பெறுவது தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்றுகள் என ஆசிரியர் பயிற்சிக்கு சுமார் ஏழு வருடங்களைச் செலவிட வேண்டும்.

இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள் தான் அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்க இருக்கிறது.

இப்போது நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது. பெற்றோர்கள், கல்வியாளர்கள், கல்வி நிறுவனங்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் ஒருங்கி ணைந்து செயல்பட வேண்டிய நேரம் இது.

குழந்தைகள் வளர்ப்பில் நாம் தான் கற்றுக்கொள்ள வேண்டியது அதிகம் இருக்கிறது. முதலில் பிள்ளைகளுக்கு நல்ல சிந்தனைகளை ஏற்படுத்துங்கள்.

1. ஒரு குழந்தையைவிட நாம் உயர்ந்தவர் என்று நினைக்காதீர்கள்.

2. பிள்ளைகள் ஏதாவது செய்தால்

எப்போதும் குறை கூறுதல், அவர்கள் பாராட்டும்படி செய்தாலும் கண்டு கொள்ளாதிருத்தல் போன்ற செயல்களை பலர் செய்கிறார்கள் இதனால் பிள்ளைகளின் மன வளர்ச்சி குன்றும். எந்தக் குழந்தையும் பின்னால் எப்படி ஆகுமென எவருமே கூற முடியாது. மூடன் அறிவாளி ஆகலாம். பைத்தியம், தெளிந்த சித்தமுடைய வனாகலாம். ஆகவே பிள்ளைகளை ஒருகாலமும் அலட்சியம் செய்யக் கூடாது.

3. தாமஸ் ஆல்வா எடிசன் மரமண்டை என்று பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டவர். பின்னாளில் ஆயிரம் கண்டுபிடிப்புக்களுக்கு அவரே அதிபதி.

4. லூயி பாஸ்டியர் சராசரி மாணவனாக பாடசாலையில் இருந்தவர் பின்னாளில் நோபல் பரிசு வாங்கினார்.

5. ஆல்பிரட் ஜன்ஸ்டைனை அவர் ஆசிரியர், இவனை போன்ற மூளை அழுகிய மாணவனை நான் பார்த்ததே இல்லை என்றார் அவர் ஆசிரியர் ஆனால் அவரே 20ம் நூற்றாண்டின் அதி சிறந்த விஞ்ஞானியானார்.

6. குழந்தைகளுடன் ஒரு நாளில் சிறிது நேரமாவது பேசுங்கள். நல்லதைப் பேசுங்கள் கனிவுடன் பேசுங்கள். அவர்கள் குறைகளைப் பற்றி அதிக நேரம் பேசாதீர்கள். நிறைகளை பற்றிப் பேசுங்கள்.

7. பிள்ளைகளுடன் யாரையும் ஒப்பிட்டு பேசாதீர்கள், அவன் அவனே, நீங்கள் நீங்களே, முன்னுதாரணமாக இருங்கள் உங்களைப் பார்த்து அவர்கள் கற்றுக் கொள்வார்கள்.

8. வாழ்வில் வெற்றிப் பெற்றவரைப் பற்றி பேசுங்கள். ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்களைப் பற்றி பேசுங்கள்.

9. எப்படி இருக்கக் கூடாது என்று ஒப்பிட்டு பேசுவதைவிட எப்படி இருக்க வேண்டுமென ஒரு முன்னுதாரண மனிதரைப் பற்றிப் பேசுங்கள்.

10. பிள்ளைகளுக்கு வீட்டுக் குள் விலங்கிடாதீர்கள். வீடு ஒரு சிறைச்சாலைக் கூடமல்ல மனிதர்களை, தோற்றுவிக்கும் கோயில்.

11. நல்ல மேற்கோள்களை கொடுங்கள். சுதந்திரம் கொடுத்து கட்டாயப்படுத்தி வழிக்குக் கொண்டு வாருங்கள்.

12. மலர் தூவியுள்ள பாதையைப் பற்றி பிள்ளைகளுக்கு சொன்னால் அவர்கள் முள் நிறைந்த பாதையை புரிந்து கொள்வார்கள்.

13. உழைப்பைப் பற்றி சொல்லிக் கொடுங்கள் அவர்கள் உழைப்பில்லாத கேடுகளை புரிந்து கொள்வார்கள்.

14. வெற்றி பெற்றவர்களை சொல்லும்போது தோல்வியின் காரணங்களை அவன் அறிந்து கொள்வான்.

15. சுறுசுறுப்பை சொல்லிக் கொடுத்தால் அவன் சோம்பலை அடையாளம் காண்பான், விதியை வென்றவர்களை சொல்லும்போது அவன் வேதனையில் நொந்து அழிந்தவர்களை கண்டு கொள்வான். இதுபோதும்.

முதலில் நாம் மாறவேண்டும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு மாற்றம் ஒன்றே மாறாதது. நல்ல மாற்றம் தான் வளர்ச்சியை தரும். பின்லாந்தின் கல்விமுறையிலிருந்து நாம் கற்றுக் கொண்டு மாறுவோம். குழந்தைகளின் எதிர்காலத்தைப் சிறப்பாக மாற்றுவோம்.



# நேர்த்தியான கலை
(Fine Arts)

பானு வீட்டுக்கல்வி முறையில் இந்த கலையை நாம் 18வது பாடத்திட்டமாக (Syllabus) உருவாக்கியுள்ளோம். தமிழில் நேர்த்தியான கலைகள் என்றும், ஆங்கிலத்தில் (Fine Arts) என்றும் அழைப்பதை இங்கு அறிமுகம் செய்து கட்டுரை வடிவில் கொடுப்பதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

நண்பர்களே !

பானுவீட்டுக்கல்வி முறையில் பல விசயங்களைப் புரிந்துகொண்டு அதை செயல்படுத்திக் கொண்டு வரும் அனைத்து நண்பர்களுக்கும் வாழ்த்துக்கள்.

சமீபத்தில் திரு. ராஜேஷ் எனும் 30 வயது இளைஞரை ஒரு பள்ளியில் நான் சந்தித்தேன். அவர் குழந்தைகளுக்கு நேர்த்தியான கலைகளை (Fine Arts) கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த இளைஞர் அண்மையில் வெளிவந்த “கயல்” படத்தின் கதாநாயகனைப் போல பல்வேறு இடங்களுக்கு சுதந்திரமாக சுற்றித்திரியும் ஒரு நபர். இவர் என்னென்ன விசயங்களை பள்ளியில் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கிறார் என்பதைப்பற்றி முதலில் கூறுகிறேன். பின்னர் நாம் எப்படி நமது பள்ளி, கல்லூரிகளில் இதுபோன்ற வகுப்புகளை நடத்த இவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றி பின்னர் அறிவோம். ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமான கலை என்பதை இக்கட்டுரையில் நீங்கள் உணர்வீர்கள்.

பள்ளி மாணவர்களுக்கு இந்த இளைஞர் கற்றுக்கொடுக்கும் கலைகளை நான் இங்கே ஒன்று, இரண்டு என்று பட்டியலாக வெளியிட்டுள்ளேன். முன்னதாக இதைப் படியுங்கள்.

1. ஓவியம் வரைதல் (பல்வேறு விதமான தாள்களில் பல்வேறு விதமான



பொருட்களைப் பயன்படுத்தி).
2. சுவற்றில் பல்வேறு விதமான பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு



விதமான வடிவங்களில் ஓவியம் வரைதல்.
3. கைப்பைகளை பல்வேறு விதமான பொருட்களைக் கொண்டு பல்வேறு வடிவங்களில் தயாரித்தல்.

4. நமது இடத்தை சுற்றியுள்ள சாதாரணப் பொருட்களை வைத்து எளிய முறையில் சாயம் தயாரிக்கும் முறை. (உதாரணம் மஞ்சள் பொடியை வைத்து மஞ்சள் நிறமும், பீட்ரூட்டை வைத்து சிவப்பு நிறமும், செடிகளை வைத்து பச்சை நிறமும் என எளிய முறைகளில் சாயம் தயாரித்தல்).

5. களிமண்ணைக் கொண்டு பல்வேறு விதமான சிலைகள், விளையாட்டுப் பொருட்கள், ஆபரணங்கள், ஓவியங்கள் ஆகியன செய்தல்.

6. சுவற்றில் களிமண்ணை வைத்து எம்போசிஸிங் (Embossing) 3டி வடிவமைப்பைப்போன்று ஓவியங்கள்



வரைதல்.
7. காகிதங்களை கத்திரியால் தேவைக்கேற்ப வெட்டிக்கொண்டு அதன் மூலம் பல்வேறு விதமான வடிவங்களை உருவாக்குதல்.

8.மணலைக் கொண்டு பல்வேறு விதமான



கலைகளைச் செய்தல்.
9. மரங்களைக்கொண்டு பல்வேறு விதமான கலைப்பொருட்கள் செய்தல்.

10. கரிக்கட்டையைச் செதுக்கி சிற்பங்கள் செய்தல் மற்றும் கரிக்கட்டை மூலமாக ஓவியங்கள் வரைதல்.

11. பனைமரத்தின் காய்களைக் கொண்டு பல்வேறு விதமான விளையாட்டுப் பொருட்களையும், அழகுப் பொருட்களையும் செய்தல்.

12. தேவையற்ற இரும்புத்துண்டுகளைக் கொண்டு சிலைசெய்தல், கலை நயம் உள்ள



பொருட்களை வடித்தல்.
13. தேங்காய் தொட்டியைக் கொண்டு, விளக்கு, கப், கம்மல், விலங்கு பொம்மைகள், பறவை பொம்மைகள், மரங்கள், படகு பொம்மை என பல



கலைப்பொருட்களைச் செய்தல்.
14. முட்டையின் ஓட்டைப் பயன்படுத்தி பல்வேறு வகையான சிற்பங்கள் அழகுப்பொருட்கள் செய்தல். மேலும் முட்டையின் ஓட்டில் ஓவியம் வரைதல்.

15. உடைந்த கண்ணாடி பாட்டில்களையும், உடையாத கண்ணாடி பாட்டில்களையும் பயன்படுத்தி பல்வேறு விதமான கலைப்பொருட்களைச் செய்தல்.

16. தேவையற்ற காகிதங்களைக் கூழாக மாற்றி அதனுடன் பசை சேர்த்து சிலைகள், அலங்காரப்பொருட்கள் மற்றும் உபயோகமான பொருட்கள் செய்தல்.

17. மரக்கட்டையைக் குடைந்து, செதுக்கி



உருவங்கள், கலைப்பொருட்கள் செய்தல்.
18. பிரிண்டர் எனும் அச்சுக்கருவி இல்லாமல் நமது முன்னோர்கள் எப்படி பிரதி எடுத்திருப்பார்களோ அதைப் போன்று பிரதி எடுக்கும் கலை.

19. எந்த நவீன கருவியையும் பயன்படுத்தாமல் பெரிய அளவில் போஸ்டர் தயாரித்தல்.

20.எந்த நவீன கருவியையும் பயன்படுத்தாமல் ஒரு போஸ்டரை பலவிதமாக பல பிரதிகள் எடுத்தல்.

21. சுட்ட களிமண்ணை கொண்டு பல்வேறு சிலைகள், அலங்காரப்பொருட்கள் செய்தல்.



இதற்கு நியூரல் (Mural) என்று பெயர்.
22.பழங்குடி இன மக்களின் உருவத்தை வைத்து ஓவியம் வரைதல் இதற்கு வார்லி பெயிண்டிங் (Warli Painting) என்று பெயர்.

23. இந்தியன் “இங்க்” (Indian Ink) மற்றும் பிரஷ் வைத்து பல்வேறு விதமான ஓவியம், கலைப் பொருட்கள் செய்தல்.

24.ஊட்டிபோன்ற மலைப்பிரதேசங்களில் கிடைக்கும் பைன் கோன் எனும் ஒரு பொருளைக்கொண்டு அலங்காரப் பொருட்கள், கலைப்பொருட்கள் தயாரித்தல்.

25. ஃபேஸ் பெயிண்டிங் (Face Painting)



என்னும் முகத்தில் வரையும் கலை.
26. பானையை வைத்து பல்வேறு விதமான பொருட்கள் செய்தல் மற்றும் பானையில் வரையும் கலை.

27. கற்றாழைப் பூவினைக்கொண்டு பல்வேறு விதமான பொருட்களை உருவாக்குதல்.

28. விதவிதமான போட்டோ ஃப்ரேம்களை (Photo Frame) பல்வேறு விதமான



பொருட்களை கொண்டு உருவாக்குதல்.
29. மூங்கிலைப் பயன்படுத்தி பல்வேறு விதமான கலைப் பொருட்கள் செய்தல்.

30. உடைந்த டைல்ஸ் துண்டுகளைக் கொண்டு பல்வேறு விதமான கலைப்பொருட்கள் செய்தல்.

31. ஜிங்க்-ஐ பயன்படுத்தி நாணயத்தின் உருவத்தைப் பதித்தல், இதற்கு எட்ச்சிங் (Etching) என்று பெயர்.

இதுபோன்று நூற்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளை அந்த இளைஞர் பள்ளிக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டு வருகிறார். இவரது பங்களிப்பினை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பயிற்சியளிக்கும் நபர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கிறேன். நமது வீட்டின் அருகில் உள்ள தேவையற்ற, பயனற்ற பொருட்களை கலைப்பொருட்களாக மாற்றி அவற்றை வியாபாரம் செய்து பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளலாம். மேலும் இதுபோன்ற கலைப்பொருட்களைச் செய்ய கற்றுக் கொள்வதன் மூலம் மூளை எதையும் புதிதாக யோசிக்கும். நேரத்தை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள முடியும்.

கார்ட்டுன் பார்ப்பது, கேம் விளையாடுவது, சமூக வலைதளங்களில் நேரத்தை செலவிடுதல் போன்ற விசயங்களில் இருந்து நமது மாணவர்களை வெளியே கொண்டு வருவதற்கு இக்கலைகள் பெரிதும் உதவி செய்யும். இக்கலைகளை அவர்கள் கற்றுக் கொள்ள செய்வதன் மூலம் மிகவும் ஆர்வமாக அதை செயல்படுத்துவார்கள். இதன் மூலம் விளையாட்டிற்கு விளையாட்டும் ஆச்சு. பொருளுக்குப் பொருளும் ஆச்சு. கலைக்கு கலையும் ஆச்சு. செலவும் இல்லாமல் ஆச்சு. அத்துடன் நேரம் நல்லபொழுதாக கழியும்.

நான் பார்த்த இந்த இளைஞர் திரு. ராஜேஷ் என்பவருக்கு சொந்த ஊர் ஆந்திராமாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூர். இவரது பெற்றோர் வேலை நிமித்தமாக கொல்கத்தாவிற்கு சென்று

தங்கியிருக்கின்றனர். இவர் தற்போது தமிழகத்தில் வசித்து வருகிறார். பி.எப்.ஏ (Bachelor of Fine Arts) கல்வித் தகுதியுடன் எம்.எஃப். ஏ (Master of Fine Arts) என்ற கல்வியையும் கற்று முடித்திருக்கிறார். இந்த கல்வியை மேற்கு வங்காளத்தில் உள்ள சாந்தி நிகேதன் எனும் பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றிருக்கிறார். கடந்த இரண்டு ஆண்டுகளாக தர்மபுரி அருகே உள்ள புவிதம் பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு இந்த நேர்த்தியான கலைகளை (Fine Arts) சிறப்பாக கற்றுக்



கொடுத்து வருகிறார்.

இந்தியா முழுவதும் நடந்த 17 ஓவியக்கண்காட்சிகளில் கலந்து கொண்டு பல்வேறு பரிசுகளை வென்றிருக்கிறார். ஆந்திரா மாநிலத்தில் எம். எட்.பி.எட் பயிலும் மாணவர்களுக்கு இந்த கலையை அவர் கற்றுக் கொடுத்து வருகிறார். பெங்காலி, ஹிந்தி, ஒரியா,போஜ்புரி, தமிழ், ஆங்கிலம் போன்ற பல மொழிகளை இவர் அறிந்து வைத்திருக்கிறார்.

“கயல்” திரைப்படத்தில் வரும் கதாநாயகனைப் போல இவர் ஏகாந்தமாக சுற்றித்திரியும் ஒரு நபர். அதனுடன் பல்வேறு நேர்த்தியான கலைகளை மற்றவர்களுக்கு கற்று கொடுக்க எப்பொழுதும் தயாராகயிருக்கிறார். எனவே இவரை ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்த கலையைக் கற்றுக் கொடுக்கப் பயன்படுத்திக்கொண்டு மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஆக்கப்பூர்வமான வழிகளைச் செய்வோமாக!

இந்த இளைஞர் நடத்தும் பயிற்சியில் யாரெல்லாம் கலந்து கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம்.
1. மாணவர்கள், 2. பெற்றோர்கள், 3. ஆசிரியர்கள், 4 சுயதொழில் செய்ய விரும்புவோர், 5 பயிற்சி வகுப்பு நடத்துவோர்.6. யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்.

இக்கட்டுரையின் நிறைவுப் பகுதியில் இவரைத் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண் தருகிறோம். அதன் மூலம் அவரைத் தொடர்பு கொண்டு வகுப்புகளை ஏற்பாடு செய்யலாம்.

இந்த வகுப்புகளை ஏற்பாடு செய்யும் போது மூன்று முதல் ஏழு நாட்கள் இந்த பயிற்சிக்குத் தேவைப்படும் என்பதை புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப ஏற்பாடு செய்யவேண்டும். ஏழு நாட்களும் முழுவதுமாக இந்த பயிற்சிக்கு ஒதுக்கினால் அனைத்துக் கலைகளையும் அவர் கற்றுக் கொடுத்துவிடுவார். அதற்கு குறைவான நாட்களை ஒதுக்கும்பொழுது இந்த கலைகளை பகுதி பகுதியாக பிரித்து அதற்கேற்ப கற்றுக் கொள்ளலாம். வகுப்பு நடத்துவதற்குத் தேவைப்படும் பொருட்களைத் தயார் செய்து கொள்ள அவருக்கு ஒரு நாள் தேவைப்படும். ஒரே சமயத்தில் அதிகபட்சம் 30 நபர்களுக்கு மட்டுமே இக்கலையை அவரால் கற்றுக் கொடுக்க இயலும். ஒருவேளை 60 நபர்கள் பயிற்சியில் பங்கேற்க வருவதாக இருந்தால் இவருடைய நண்பரையும் உதவிக்கு அழைத்து வந்துவிடுவார். ஆனால் இவரால் ஒரு சமயத்தில் 30 நபர்களுக்கு மட்டுமே பயிற்சி கொடுக்க முடியும் என்பதைப் புரிந்து

கொள்ளுங்கள்.

சுமாராக 30 நபர்கள் பங்கேற்கும் ஒரு ஏழு நாட்கள் கொண்ட பயிற்சிக்கு மொத்தமாக 2000 ரூபாய்க்கு பொருட்கள்



வாங்கினால் போதும் என்று குறிப்பிடுகிறார்.

எனவே மேற்சொன்ன விசயங்களை பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். திரு. ராஜேஷ் என்ற இந்த இளைஞர் பயிற்சி வகுப்பினை நடத்திக் கொடுக்க எப்பொழுதும் ஆர்வமாக உள்ளார். எனவே நாம் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு இந்த பயிற்சியின் மூலம் பயன்பெற நாம் உதவி செய்யவேண்டும். அதற்கு எந்த இடங்களில் யாரெல்லாம் ஏற்பாடு செய்யமுடியுமோ அவர்கள் உடனடியாக இதை செயல்படுத்தலாம். இந்தக் கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் நீங்கள் படித்த பள்ளி, கல்லூரிகளில் இந்த பயிற்சியை நடத்த ஏற்பாடு செய்யலாம்.

இந்தப் பயிற்சியை பானுவீட்டுக் கல்விமுறையின் மூலம் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். அதன்படி ஜீன் 2017 முதல் கோவை மற்றும் சென்னையில் நேர்த்திக் கலைகள் பயிற்சி (Fine Arts) வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியில் ஒரு குழுவிற்கு 30 முதல் 60 நபர்கள் வரை மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் ஜீன் 24, 25 மற்றும் ஜீலை 15, 16 மற்றும் ஆகஸ்ட் 19,20 ஆகிய தேதிகளில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

கோவையில் ஜீலை 1,2 மற்றும் ஆகஸ்ட் 5,6 தேதிகளில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

எட்டு நாட்கள் ஒதுக்கிப் பயிற்சி பெறும்பொழுது அவரிடம் உள்ள அனைத்துக் கலைகளையும் கற்று அறிந்து கொள்ள முடியும். எனவே மாதம் ஒருமுறை இரண்டு நாட்கள் வகுப்பிற்கு வரும்பொழுது நான்கு வகுப்புகளில் அனைத்து கலைகளையும் கற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு நாளும் வேறுவேறு கலைகளின் பயிற்சிகள் தொடர்ந்து நடைபெறும். மொத்தமாக அனைத்து பயிற்சிகளும் கற்றுக் கொடுத்த பின்னர் அடுத்த பயிற்சி வகுப்பு துவங்கும்.

எனவே இதுபோன்ற கலைகள் தெரிந்த நபர்களை எங்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். அவர்களை நாம் உலகிற்கு அறிமுகம் செய்து வைப்போம். பயிற்சிகளில் கலந்து கொள்ள அனைவரும் வாருங்கள் ! நீங்களும் உங்கள் ஊர்களில் பயிற்சியை ஏற்பாடு செய்யுங்கள்.

வருங்கால சமுதாயத்தை கலைநயம் உள்ள
யோசிக்கத் தெரிந்த சமுதாயமாக
மாற்றுவோமாக !
தொடர்புக்கு :
91 9629550091, 9629550377
வாழ்க வளமுடன் ! வாழ்க வையகம் !!



# சிங்கப்பூரில்
# பானு வீட்டுவழிக்கல்வி முறை

சிங்கப்பூரில் வாழ்ந்து வரும் ஒரு தம்பதியினர் தங்கள் குழந்தைகளுக்கு பானுவீட்டுவழிக்கல்வி முறையை அளித்து வருகின்றனர். நான் கடந்த ஜீன் 2017ல் சிங்கப்பூரில் அந்த குடும்பத்தினரைச் சந்தித்தேன். அந்த தம்பதியின் பெயர் திரு. கே் மற்றும் திருமதி. ரெஜினா என்பதாகும்.

திரு. கே் தனது குழந்தைகளான பத்துவயது மகள் ஆஷிக்காவிற்கும் ஒன்பது வயது மகன் அர்த்திற்கும் தனது மனைவி திருமதி. ரெஜினாவின் உதவியுடன் அவர்களை பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டிலேயே பானுவீட்டுக்கல்வியை கற்றுக் கொடுத்து வருகிறார்.

சிங்கப்பூரில் நமது பானுவீட்டுக்கல்வி முறையைப் பின்பற்றி வரும் அந்த தம்பதியினரை நான் கடந்த மாதம் சந்தித்து உரையாடிவிட்டு வந்தேன். இச்சந்திப்பில் அவர்களிடம் நான் கேட்ட ஐந்து கேள்விகளையும் அவர்களின் பதிவையும் இங்கே கட்டுரை வடிவில் உங்களுக்குத் தருகிறேன்.

கேள்வி 1: உங்கள் குழந்தைகளுக்கு வீட்டுவழிக்கல்வியை அளிக்க ஆரம்பித்தற்கு என்ன காரணம்? இதில் ஏன் உங்களுக்கு ஆர்வம் வந்தது?

பதில் : பல ஆண்டுகளாக என் மனதில் கல்விமுறை ஒழுங்காக இல்லை. அதில் ஏதோ தவறு நடக்கிறது என்பதை நான் யோசித்து வந்தேன். அந்த சமயத்தில் நீங்கள் (ஹீலர் பாஸ்கர்) யூடியூப்பில் வெளியிட்டிருந்த பானுவீட்டுவழிக்கல்வி முறை பற்றிய வீடியோக்களை முழுவதுமாய் பார்த்தேன். என்னுடன் என் மனைவியும் அந்த யூடியூப்பில் வீடியோக்களைப் பார்த்தார். கல்வி இன்றைய சூழலில் எவ்வாறு உள்ளது என்பதை நாங்கள் புரிந்து



கொண்டோம். கல்வியைப் பற்றிய உங்களின் பார்வை பயனுள்ளதாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் இருப்பதை அந்த வீடியோவின் மூலம் இருவரும் அறிந்து கொண்டதால் எங்களுக்கு அது மிகவும் பிடித்துப் போனது. இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சிங்கப்பூரில் கல்வியின் தரம் மிகவும் குறைவாக உள்ளதை உணரமுடிகிறது.

பானுவீட்டுக்கல்விமுறையில் எங்களுக்கு முழுமையான உடன்பாடு ஏற்பட்டு விட்டதால் எங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவதை உடனடியாக நிறுத்திவிட்டு வீட்டிலேயே கல்வியை கற்றுக் கொடுத்து வருகிறோம்.

**கேள்வி 2 : உங்களால் எப்படி இந்தக் கல்வியைக் கொடுக்க முடிகிறது?**

பதில் : முதலில் நான் முழுநேரமாக ஒருநிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டு இருந்தேன். ஆனால் தற்போது என் குழந்தைகளுக்கு கல்வியைக் கற்பிக்கவேண்டும் என்பதற்காக என் வேலையை பகுதி நேரமாக மாற்றிக் கொண்டேன். இதனால் வருமானம் சற்று குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தபோதும் எங்கள் குழந்தைகளின் கல்விக்காக அந்த வருமானத்தை விட்டுக் கொடுப்பதை நான் பெருமையாக நினைக்கிறேன். மேலும் எனக்கு என் மனைவியும் இதில் உறுதுணையாக இருப்பதனால் சுலபமாக இருக்கிறது.

**கேள்வி 3 : உங்கள் குழந்தைகளுக்கு என்னவெல்லாம் கற்றுக் கொடுத்து இருக்கிறீர்கள்?**

பதில் : எங்கள் குழந்தைகளுக்கு சமையல்கலையை நன்கு கற்றுக் கொடுத்திருக்கிறோம். சிலம்பாட்டம் கற்றுக் கொடுத்து வருகிறேன். நாங்கள் இஸ்லாமிய மதத்தினைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும் அவர்களுக்கு தினசரிகாலண்டரில் உள்ள நல்ல நேரம் ராகுகாலம், எமகண்டம், மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், கரிநாள் ஆகிய அனைத்தும் பற்றிய விசயங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறோம். ஆனால் இவ்வாறு நாள்காட்டியைப் பார்ப்பது எப்படி என்பது பலருக்கும் தெரியாது என்பதே உண்மை.

எங்கள் குழந்தைகள், குழந்தைப் பருவத்துக்கே உரிய குணாதிசயங்களுடன் வளர்கின்றனர். ஆனால் இன்று பள்ளிகளுக்குச் சென்று படிக்கும் குழந்தைகளிடம் இந்த விசயத்தைக் காண முடிவதில்லை. உணர்வுகள், உணர்ச்சிகள் போன்ற விசயங்கள் பள்ளிகளில் கற்றுக் கொடுப்பதில்லை. அவை எவையும் இன்றி அவர்கள் மனித இயந்திரங்களாக, ரோபாட்கள் போல வளர்கிறார்கள். ஆனால் எங்கள் குழந்தைகளுக்கு உணர்வுகள், உணர்ச்சிகள் போன்ற விசயங்களை அறிந்து கொண்டு மனித இயல்புடன் வளர்கிறார்கள். குழந்தைகள் குழந்தைகளாக வளர வேண்டும் எனில் பள்ளிகளுக்கு அனுப்பக் கூடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். ஒரு குழந்தையின் முகத்தைப் பார்த்தாலே அக்குழந்தை உணர்வுப் பூர்வமாக உள்ளதா? இயந்திரத்தனமாக உள்ளதா என்று கண்டறிந்து விடலாம். நீங்கள் இதை சோதித்துக் அறிந்து கொள்ளலாம். எங்கள் குழந்தைகள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் குழந்தைகள். மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டு இதை நீங்கள் பார்த்துக் கொள்ளலாம்.

விருந்தோம்பல் பற்றி எங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறோம் வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை அன்பாக உபசரித்து,




பணிவாக மரியாதையுடன் அவர்களிடம் நடந்து கொள்வார்கள். ஆனால் இன்று பள்ளிகளுக்குச் செல்லும் எந்தக் குழந்தையும் விருந்தாளிகளை வரவேற்பதோ அவர்களை நேராகப் பார்ப்பதோ பழகுவதோ இல்லை. எப்பொழுதும் அறைக்குள் புகுந்துகொண்டு கம்ப்யூட்டர், செல்போன், ஐபேட் போன்றவற்றைப் பயனப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எந்த உறவினர்களுடனும் சுமூகமாகப் பழகுவது இல்லை. வீட்டிற்கு வரும் விருந்தாளிகளைக் கண்டு கொள்வதும் இல்லை.

சிங்கப்பூர் முழுவதும் எங்கள் குழந்தைகள் தனியாக பயணித்து வீடு திரும்புவதற்கு பயிற்சி அளித்திருக்கிறோம். எனவே எந்தப் பகுதிக்கும் அவர்களால் தனியாக நடந்தோ, சைக்கிளில் பயணம் செய்தோ, கார். பஸ், ரயில்களில் பயணம் செய்தோ எங்கும் சென்று திரும்பி வந்து விடுவார்கள். அவர்களை நம்பி எங்கும் அனுப்பலாம்.

திருக்குறள் கற்றுக் கொடுத்து வருகிறேன். பியானோ வாசிக்க கற்று வருகிறார்கள். வீட்டு வேலைகள் அனைத்தும் அவர்களே செய்து கொள்ள கற்றுக் தந்திருக்கிறோம். வீடு பெருக்குவது, கழிவறை, குளியலறையை சுத்தம் செய்வது, துணி துவைப்பது பாத்திரம் கழுவுதல் போன்ற பணிகளைச் செய்வார்கள். வீட்டைத் தூய்மையாக வைத்திருப்பார்கள். பியானோ வாசிக்க கற்று வருகிறார்கள். வீட்டு வேலைகள் அனைத்தும் அவர்களே செய்து கொள்ள கற்றுக் தந்திருக்கிறோம். வீடு பெருக்குவது, கழிவறை, குளியலறையை சுத்தம் செய்வது, துணி துவைப்பது பாத்திரம் கழுவுதல் போன்ற பணிகளைச் செய்வார்கள். வீட்டைத் தூய்மையாக வைத்திருப்பார்கள்.

தாத்தா, பாட்டிகளை அவ்வப்போது வாக்கிங் அழைத்து செல்வார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்வார்கள். எங்கள் குழந்தைகளுக்கு டெலிபதி கற்றுக் கொடுத்திருக்கிறோம். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் செல்லும் பொழுது நாங்கள் யாருமே செல்போன் எடுத்துச் செல்வதில்லை. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தனியாக உள்ள மற்றவருக்கு மனதில் எண்ணங்கள் வழியாக அவருக்கு செய்தி அனுப்பி அவரை அந்த இடத்திற்குவரச் செய்து விடுவோம். அவர்களும் நாம் நினைத்த இடத்திற்கு சரியாக வந்துவிடுவார்கள். நானோ, என் மனைவியோ, குழந்தைகளோ யாராக இருந்தாலும் ஒருவர் மற்றவருக்கு இந்த டெலிவரி மூலமாக தகவல் அனுப்பி அவர்களை குறிப்பிட்ட இடத்திற்கு வரசெய்வதற்கு இந்த முறையை பின்பற்றுகிறோம். இது மிகவும் அருமையாக வேலை செய்கிறது. நீங்களும் இதை சோதித்துப் பாருங்கள்.

நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு அறிவைக் (Knowledge) கொடுக்கிறோம். வெறும் தகவல்களைக் (Information) கொடுப்பதில்லை. ஆனால் பள்ளிகளில் கல்வி என்ற பெயரில் தகவல்களை மட்டுமே கொடுக்கிறார்கள். அறிவைக் கற்பிப்பதற்கும் தகவல்களைக் கற்பிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. மேலும் சுதந்திரம் என்றால் என்ன என்று கற்றுக் கொடுத்து இருக்கிறோம். ஆனால் பள்ளிகளில் எந்த கல்வியும் இதைக் கற்றுக்தருவதில்லை.

வலது மூளையை சிறப்பாகச் செயல்படுவதற்கான (Right Brain Activation) என்ற பயிற்சியை கொடுத்திருக்கிறோம். நல்ல விசயங்களை மட்டுமே பேசுவதற்கும், நல்ல விசயங்களை மட்டுமே சிந்திப்பதற்கும், உணர்வதற்கும் நேர்மறை எண்ணங்களை (Positive Thinking) கற்றுக் கொடுத்து இருக்கிறோம். இது தவிர சும்மா இருக்க கற்றுக் கொடுத்திருக்கிறோம். எந்த குழந்தை சும்மா இருக்கக் கற்றுக் கொள்கிறதோ அந்த குழந்தை நல்ல குழந்தையாக வளரும். ஆனால் இப்போதிருக்கும் எந்த குழந்தையும், பெரியவர்களும் சும்மா இப்போதிருக்கும் எந்த குழந்தையும், பெரியவர்களும் சும்மா இருப்பதே இல்லை. அதனால் அவர்களுக்கு இந்த உலகில் எப்படி வாழ்வது என்றும் தெரியவில்லை. ஒருவர் எவ்வளவு நேரம் சும்மா இருக்க ஒதுக்குகிறாரோ அவரால் நன்கு வாழ்க்கையை புரிந்து கொண்டு வாழமுடியும். தூங்குவதற்கு முன்பாக எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் குறைந்தது அரைமணிநேரம் சும்மா இருந்துவிட்டுத்தான் தூங்கச் செல்வோம். அப்போது நிம்மதியான தூக்கம் வருகிறது.




ஒவ்வொரு பாடங்களைக் கற்று முடிந்ததும் குறைந்தபட்சம் ஐந்து நிமிடங்கள் சும்மா இருக்கிறோம். குழந்தைகள் இவற்றை வழக்கமாகப் பின்பற்றி வருகிறோம். அப்போது கற்றுக் கொண்ட விசயங்கள் மனதில், நினைவுத்திறனில் நன்கு மனதில் பதிந்து விடுகிறது. இதுவரை கூறியதில் இருந்து நாங்கள் குழந்தைகளை எப்படி வளர்க்கிறோம் என்பதை புரிந்து கொண்டிருப்பீர்கள். நாங்கள் குழந்தைகளை குழந்தைகளாக வளர்க்கிறோம். நீங்கள் எப்படி வளர்க்கிறீர்கள் என்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

**கேள்வி 4 : பள்ளிக்கு செல்லாமல் குழந்தைகளுக்கு வீட்டிலேயே கல்வி கற்றுக் கொடுப்பதற்கு சிங்கப்பூர் அரசாங்கம் உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறதா?**

பதில் : ஆரம்பத்தில் எங்கள் உறவினர்களும், நண்பர்களும் என் குடும்பத்தாரும் பள்ளிக்கு குழந்தைகளை அனுப்பாமல் இருப்பது குறித்து தவறாக எண்ணிக்கொண்டு என்னைத் திட்டினார்கள். இவ்வாறு செய்யக்கூடாது என்று எனக்கு அறிவுறுத்தினார்கள். ஆனால் அதன் பின்னர் இப்போது குழந்தைகள் வளரும் விதம், பண்பு, அவர்களின் திறமை, அறிவுக் கூர்மையை பார்த்து வியந்து பெருமை கொள்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள். எங்களுக்கு உதவி செய்கிறார்கள்.

சிங்கப்பூரை பொறுத்தவரை பள்ளிகளுக்கு சென்று கல்வி கற்க வேண்டும் என்பது தான் சட்டம். ஆனால் நாங்கள் எங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவில்லை. இதனால் சிங்கப்பூர் கல்வித்துறை அதிகாரிகள் இதுகுறித்து விசாரிக்க நேரடியாக என் வீட்டிற்கு வந்தார்கள். குழந்தைகளை ஏன் பள்ளிக்கூடம் அனுப்பவில்லை என்று எங்களிடம் கேட்டார்கள். கல்வி பற்றிய எங்களது கருத்துக்களை தெளிவாக நான் எடுத்துக் கூறினேன். உடனே அந்த அதிகாரிகள் தனியே என்னை அழைத்துச் சென்று பல கேள்விகளை என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் கூறிய பதில்களையும் அவர்கள் பதிவு செய்து கொண்டார்கள். உதாரணமாக குழந்தைகளை பள்ளிக்கு ஏன் அனுப்பவில்லை? அவர்களுக்கு எப்படி கல்வி கற்றுக் கொடுக்கிறீர்கள்? அது எப்படி சாத்தியம்? என்பது போன்ற பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள். அக்கேள்விகளுக்கெல்லாம் நான் உண்மையான தெளிவான பதில்களைக் கூறினேன். பின்னர் எங்கள் குழந்தைகளை தனியே அழைத்துச் சென்று அவர்களின் அறிவுத்திறனை சோதித்துஅறிய பல கேள்விகளைக் கேட்டார்கள். எங்கள் குழந்தைகள் மிக தைரியமாக கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தன்னம்பிக்கையுடன் சரியான பதிலை உடனுக்குடன் கூறினார்கள். இதையெல்லாம் கவனித்துப் பதிவு செய்து கொண்ட அந்த கல்வித்துறையினர் மகிழ்ச்சி அடைந்தனர். இத்துடன் எங்கள் குழந்தைகளுக்கு வீட்டிலேயே கல்வி கற்க அனுமதிக்கிறோம் என்று சான்றிதழ் ஒன்றை முத்திரையிட்டு அளித்துச் சென்றனர்.

இதன் மூலம் சிங்ப்பூரில் முதன் முதலாக பள்ளிகளுக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தே கல்வி கற்பதற்கு நாங்கள் எங்கள் குழந்தைகளின் மூலமாக புதிய அங்கீகாரத்தை அரசிடம் பெற்றிருக்கிறோம். வீட்டிலேயே கல்வி கற்பதற்கான முன்மாதிரியாக பானுவீட்டுக்கல்வி முறையை சிங்கப்பூர் மக்களுக்கு நாங்கள் தெரியப்படுத்தி இருக்கிறோம் என்பதில் பெருமை கொள்கிறோம்.

பனிரெண்டு வயதை அடைந்த குழந்தைகளுக்கு நேனல் எக்ஸாம் என்ற ஒன்றை சிங்கப்பூர் அரசாங்கம் நடத்துகிறது. பள்ளிக்கு செல்லாமலேயே கல்வி கற்று இந்த தேர்வில் தேர்ச்சி அடைந்து விட்டவர்களுக்கு ஒரு சான்றிதழை அளிக்கிறார்கள். இந்த சான்றிதழைப்பெற்றுக் கொண்டு மேல்படிப்பைத் தொடரலாம் அல்லது வேலைக்குச் செல்லலாம். எனவே சிங்கப்பூரிலும் பள்ளிக்குச் செல்லாமலேயே வீட்டிலிருந்து கல்வி கற்றுக் கொண்டு சான்றிதழ் பெற முடியும் என்பதை இதன் மூலம் நாம் தெரிவித்துக் கொள்கிறோம்.



**கேள்வி 5 : உங்களுக்கு என்ன மாதிரியான உதவி தேவைப்படுகிறது?**

பதில் : எங்களைப் போன்றே குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து கல்வி கற்றுக்கொடுக்க விரும்பும் ஒத்த கருத்துள்ள நண்பர்கள் தேவைப்படுகிறார்கள். நான் மட்டும் தனியாக இந்த முறையில் குழந்தைகள் கல்வி கற்பிக்க சிரமமாக உள்ளது. இப்போதுள்ள கல்வி முறை ஒழுங்காக இல்லை என்பதைப் புரிந்து

கொண்டே வீட்டுக்கல்விமுறையை தங்கள் குழந்தைகளுக்கு அளிக்க விரும்பும் நண்பர்கள் சிங்கப்பூரில் இருப்பார்கள் எனில் அவர்களுடன் ஒருகுழுவாக அமைத்துக் கொண்டு இணைந்து செயல்பட தயாராக இருக்கிறோம். அனைவரும் ஒரு முறை, மாதம் ஒருமுறை என அடிக்கடி தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறோம். எனவே சிங்கப்பூரில் வாழும் நண்பர்கள், எங்களைப் போன்ற ஒத்த கருத்து உடையவர்கள் என்னை தொலைபேசிலோ அல்லது நேரிலோ வந்து என்னைப் சந்தித்தால் மிகவும் உதவியாக இருக்கும். நல்ல விசயங்களை நாம் தான் ஆரம்பித்து வைக்கவேண்டும். எப்பொழுதுமே ஏற்கனவே இருக்கின்ற வழிமுறைகளை ஆட்டு மந்தை போல பின்பற்றி கொண்டு இதுதான் சிறந்தது என்று கூறுவதைவிட நல்ல விசயங்களை நாம் முன்னின்று செய்வது பெருமைக்குரியது.

எனவே நல்ல விசயங்கள் செய்வதற்கு மனதில் தைரியம் உள்ள நல்ல உள்ளங்கள் ஒன்று கூடவேண்டும் என நான் அன்புடன் அழைக்கிறேன்.

எனது முகவரி
Mr. Sheik. Sensoria
No.1, Jalan 4/4 Sembawang x02-12, Singapore.
Ph : +6590072535.
இந்த முகவரி / தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொள்ளலாம்.

நண்பர்களே !

அன்பு உள்ளம் கொண்ட இந்த நண்பரை ஆதரியுங்கள். சிங்கப்பூரில் வீட்டுவழிக்கல்விமுறையை சிறப்பாக அமைத்துக் கொண்டு நமது குழந்தைகளை குழந்தைகளாக வளர்ப்போம்.

பானுவீட்டுக்கல்வி தொடர்பான மேலம் பல விசயங்களை நீங்கள் அறிந்து கொள்ள கீழ்காணும் இணையதளம், மின்னஞ்சல் முகவரியிலும் அல்லது தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

Web : www.selfeducationathome.com
Email : selfeducationathom@gmail.com
Phone : + 918220667120, 8220667135

பானுவீட்டுக்கல்வி முறைக்கு தேவைப்படும் அனனத்தும் உதவிகளையும் எங்கள் குழு செய்ய காத்திருக்கிறது.

செழிக்கட்டும் விவசாயம்!
சீர்படட்டும் நிர்வாகம்!
உலக மக்கள் அனைவரின்
முகங்களிலும் நிலவட்டும் புன்சிரிப்பு
வளர்க ஆன்மீகம்!
வாழ்க வாழ்வாங்கு!
வாழ்க வையகம்!
வாழ்க வளமுடன்!



# ஆசிரியர் கடிதம்

அன்பு நண்பர்களே !

இந்த புத்தகம் கல்வியை ஒழுங்குப்படுத்துவதற்கான விசயங்களைப் பதிவு செய்வதில் ஒரு ஆரம்பம் மட்டுமே. ஒவ்வொரு வருடமும் புதிதான பல விசயங்களுடன் இந்தப் புத்தகம் மாறிக் கொண்டே இருக்கும். இந்த ஆண்டு இடம் பெற்றிருக்கும் சில விசயங்களை நீக்கி விட்டு அடுத்த ஆண்டு புதிதாக நாம் சில விசயங்களைச் சேர்த்துக் கொள்வோம். கற்றது கைமண் அளவு என்பதற்கு ஏற்ப நமக்கு ஏற்கனவே உள்ள அறிவானது குறைவாக இருப்பினும் ஒவ்வொரு நாளும் புதிதுபுதிதாக கற்றுக்கொண்டு நமது அறிவை விரிவாக்கிக் கொள்கிறோம். எனவே இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விசயங்களுடன் முழுமை பெற்று விடவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் இந்த சமயத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அறிவாக இதைப் பெற்றுள்ளோம் எனினும் இதைத் தொடர்ந்து மேலும் நமது அறிவை வளர்த்துக் கொள்ளவும், அவ்வப்போது வெளியாகும் சிறந்து அறிவுப்பூர்வமான விசயங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் ஒவ்வொரு முறையும் புதிதாக நிறைய தகவல்களை இணைத்துக் கொண்டு வருவதனால் நீங்கள் அறிவது தற்போதைய வெளியீடா என்பதை உறுதி கொள்ளவும். கல்வி சம்பந்தமாக சமீபத்தில் நாம் வெளியிட்ட புத்தகம் அல்லது வீடியோவினைப் பெற்றுக் கொண்டு அது தற்போது வெளியானது தானா என்பதை சோதித்து அறிந்து கொள்வது அவசியம். ஏனெனில் நாம் முன்பே குறிப்பிட்டது போன்று ஒவ்வொரு முறையும் புதிதாக நிறைய விசயங்களை நாம் சேர்த்துக் கொண்டு வெளியிடுவதால் சமீபத்தில் வெளியிடப் பட்ட புதிய புத்தகம் / வீடியோவினைப் பார்த்து நீங்கள் பயன்படுத்திக் கொள்வது மிக முக்கியமான ஒன்று.

மேலும் விபரங்களுக்கு www.selfeducationathome.com என்ற இணையதளத்தை அடிக்கடி பார்வையிடுங்கள். கல்விமுறை பற்றிய உங்கள் கேள்விகளை selfeducationathome@gmail.com .என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

கல்வி பற்றிய தகவல்கள், நிகழ்ச்சிகள் குறித்து அறிந்து கொள்ள. 8220667120, 8220667135 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளுங்கள். இதே எண்களில் வாட்ஸ் அப் இணைப்பிலும் இணைந்து கொண்டு தகவல்களைப் பெறலாம்.

கல்வி சம்பந்தமான உங்களது கருத்துக்கள், திட்டமிடல், புரிதல்கள் ஆகியவற்றை மேலே குறிப்பிட்டுள்ள வாட்ஸ் அப் எண்களில் பதிவிட்டு தொடர்ந்து அனுப்பி வையுங்கள். கல்வியை ஒழுங்குபடுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வேறு காரியங்களை செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

**எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் !**
**கல்வியை சீரமைப்போம் ! வாழ்க வையகம் !**

ஹீலர் பாஸ்கர் அவர்களின்

# பானு வீட்டுக்கல்வி முறை

(கலந்தாய்வு கூட்டம்)

## சிறந்த கல்வி என்பது நன்றாக படிக்கும் மாணவனுக்கும், படிக்காத மாணவனுக்கும் ஒரே மரியாதை தருவது தான் !!!

தொடர்புக்கு : +91 82206 67120
www.anatomictherapy.org
Web : www.selfeducationathome.org
Email : selfeducationathome@gmail.com

**பானு வீட்டுக் கல்விமுறை என்றால் என்ன?**

இப்போது உள்ள கல்விமுறை சரியாக இல்லை, எனவே அதை ஒழுங்குபடுத்த ஹீலர் பாஸ்கரால் உருவாக்கப்பட்ட ஒரு தளமே பானு வீட்டுக்கல்வி முறை.

**Syllabus I :** “பானு வீட்டுவழிக்கல்வி” தலைப்பில் வீடியோ அல்லது கட்டுரை பார்க்கவேண்டும். இதில் இப்போதுள்ள கல்வி எப்படி ஒழுங்காக இல்லை? ஏன் சரிசெய்ய வேண்டும் என்பது விளக்கமாக புரியும்.

**Syllabus II :** “கார்ட்டூன் கல்வி முறை” தலைப்பில் வீடியோ அல்லது கட்டுரை, பார்க்கவேண்டும். இதில் கார்ட்டூன் பார்க்கும் குழந்தைகளை படிக்க வைக்க யோசனை கொடுக்கப்பட்டுள்ளது.

**Syllabus III :** “வாவ் கல்வி முறை” தலைப்பில் வீடியோ அல்லது கட்டுரை, பார்க்கவேண்டும். இதில் ஜெர்மன் நாட்டின் கல்வி திட்டங்கள் விளக்கமாக இருக்கும்.

**Syllabus IV :** கரு உருவாதற்கு முன் பெற்றோர்கள் செய்ய வேண்டிய விசயங்கள்.

I. ஹீலர் பாஸ்கர் நடத்தும் 5 நாள் வகுப்பில் கலந்துகொண்டு உணவு, காற்று, நீர், தூக்கம், உழைப்பு மற்றும் மனதை ஒழுங்குபடுத்தும் முறைகளை கற்றுக் கொள்வது சிறப்பு. 5 நாள் வகுப்பில் கலந்து கொள்வது எப்படி?

a. கோவை, சென்னை, மலேசியா மற்றும் பலநாடு, ஊரில் நடக்கும் நேரடி வகுப்பில் கலந்துகொள்ளலாம். போன் : +91 88706 66966
b. வீடியோ மூலம் வீட்டிலேயே பார்க்கலாம்.போன் : +91 9944 221007
c. Youtube-ல் பார்க்கலாம்.
d. Website www.anatomictherapy.org இலவச பதிவிறக்கம் செய்யலாம்.
e. onestoneninemango@gmail.com என்ற மெயிலுக்கு request செய்தால் ஹீலர் பாஸ்கரின் அனைத்து வீடியோ, ஆடியோ மற்றும் புத்தகம் 9 மொழிகளில் கூகுள் டிரைவில் இணைத்து இலவசமாக அனுப்பப்படும்.

II. விபாசனா எனப்படும் 10 நாள் மௌன வகுப்பு செல்வது சிறப்பு www.dhamma.org. போன் : +91 98434 51153.

III. யோக விபாசனா என்ற 3 நாள் மௌன வகுப்பு செல்வது சிறப்பு போன் : +91 88706 66966.

**Syllabus V :** கர்ப்ப காலத்தில் செய்யவேண்டியவை.

a. சுகப்பிரசவம் பாகம் 1 என்ற தலைப்பில் ஹீலர் பாஸ்கர் பேசிய வீடியோவை முழுவதுமாக பார்க்க வேண்டும்.
b. பெண்களே உங்களுக்காக என்ற புத்தகத்தை படிக்கவேண்டும்.

c. இறைவழியில் இனிய சுகப்பிரசவம் என்ற புத்தகத்தை படிக்கவேண்டும்.
d. “மசக்கை” பாகம் 1 மற்றும் பாகம் 2 என்ற தலைப்பில் கட்டுரையை படிக்கவேண்டும். (வீடியோ கிடையாது).
e. கர்ப்ப காலத்தில் செய்யவேண்டிய உடற்பயிற்சிகள் விரைவில் வீடியோவாக வர இருக்கிறது. அதை தினமும் செய்ய வேண்டும்.

**Syllabus VI :** (a). பிறந்த வினாடி முதல் ஒரு வயது வரை குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்பதை “குழந்தை வளர்ப்பு முதல் வருடம்” என்ற தலைப்பில் கட்டுரையை படியுங்கள்.

(b). “குழந்தை வளர்ப்பு முதல் வருடம்” 54 கேள்வி பதில் என்ற தலைப்பில் ஹீலர் பாஸ்கரின் வீடியோ பாருங்கள்.

**Syllabus VII :** தாய்மொழிக்கல்வியே சிறந்தது. ஆங்கிலவழிக்கல்வி நல்லது இல்லை. ஆங்கிலம் என்பது பாஷை மட்டுமே. ஆங்கிலம் அறிவு கிடையாது என்பதை புரிய வைக்கும். “தாய்மொழிக்கல்வி” தலைப்பில் கட்டுரை படியுங்கள் மேலும் “கல்வியை அழிக்கும் ஆங்கில மாயை” என்ற வினோத் அவர்களின் ஆவணப்படத்தை பாருங்கள். (Youtube-ல் இல்லை). திரு.வினோத், போன் : +91 99942 62666

**Syllabus VIII :** ஒருவயது முதல் 5 வயது வரை கல்விமுறை பள்ளி, ஆசிரியர்,பாடம், வகுப்பு அறை கல்விதிட்டம் எப்படி இருக்கவேண்டும். என்பதை “சாகம்பரி கல்விமுறை” தலைப்பில் வீடியோ, கட்டுரை, கூஷுலிற்மிற்ணுஎ-ல் பார்த்து படித்து புரிந்து கொள்ளுங்கள். போன் : +91 99655 07077

**Syllabus IX :** 5 வயது முதல் 12 வயது வரை கல்விமுறை, பள்ளி, ஆசிரியர், பாடம், வகுப்பு, அறை, கலவித்திட்டம் எப்படி இருக்கவேண்டும் என்பதை “புவிதம் பள்ளி” தலைப்பில் வீடியோ, கட்டுரை Youtube-ல் பாருங்கள். திருமதி. மீனாட்சியம்மாள், போன் : +91 95857 59184.

**Syllabus X :** குழந்தைகள் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம். எப்படி என்பதை கீழ்க்கண்ட நபர்களிடம் கேட்டு தெளிவு பெருங்கள்.
1. திருமதி. பிரதீபா - போன் : +91 90082 89793
2. திரு. எரோனிமஸ் - போன் : +91 94431 91787
3. திரு. பார்த்தசாரதி - web : www.valaitamil.com / partha@valaitamil.com

**Syllabus XI :** 2 வருடத்தில் 200 மொழிகள் கற்கும் கலை என்ற கட்டுரையை படியுங்கள். திரு. மொழிப்பிரியன் என்பவர் 200 மொழிகளை தானும் கற்று தன் 10 வயது மகனுக்கும் கற்றுக் கொடுத்துள்ளார். கட்டுரையை படித்துவிட்டு (+91 9789960549) தொடர்பு கொண்டு உங்கள் குழந்தைகளுக்குப் பல மொழிகளை கற்றுக் கொடுங்கள். திரு. மொழிபிரியன், & : +91 97899 60549

**Syllabus XII :** மிட் பிரைன் ஏக்டிவேசன் என்ற தலைப்பில் கட்டுரை, வீடியோ, Youtube -பாருங்கள். கண்களை மூடிக்கொண்டு குழந்தைகள் படிக்கிறது என பல மோசடி நிறுவனங்கள் பெற்றோரையும், குழந்தைகளைப் ஏமாற்றி வருகிறது. படித்து, புரிந்து தெளிவு பெறுங்கள்.

**Syllabus XIII :** பின்லாந்து கல்விமுறை தலைப்பில் கட்டுரை படியுங்கள். உலகில் மிகச்சிறந்த கல்வி பின்லாந்து கல்வி.

**Syllabus XIV :** கார்ட்டுனால் ஏற்படும் விபரிதங்களும் அதிலிருந்து குழந்தைகளை காப்பாற்றும் முறையை “கார்ட்டூன் ஒரு சாபம்” என்ற தலைப்பில் கார்ட்டூனால் பாதித்த ஷமீர். உசேன் என்ற கோவை மாணவனின் சுயசரிதை வீடியோவை பெற்று அல்லது Youtube-ல் பாருங்கள். திரு. ஷமீர் உசேன், ✆ : +91 74020 69907

**Syllabus XV :** கம்ப்யூட்டர் சாப்ட்வேரை தமிழில் கற்றுக்கொள்ளவும். கல்லூரிப் படிப்பிற்கு பிறகு புதுமையான வியாபாரம் செய்ய யோசனை பெறவும். திரு.தட்சிணாமூர்த்தி, சேலம். போன் : +91 85085 02000 தொடர்பு கொள்ளுங்கள்.

**Syllabus XVI :** பானுவீட்டுக்கல்வி கொள்கையை பின்பற்றும் பள்ளிகள்.

1. திருமதி. மகேஸ்வரி, மகரிஷி பள்ளி, கோவை. ✆ : +91 9894 449728
2. திருமதி. அபிராமி, களஞ்சியம் பள்ளி, காரைக்குடி. ✆ : +91 88256 08023
3. திருமதி. அமுதா, ஈரோடு. ✆ : +91 98844 58101

**Syllabus XVII :** திரு. செந்தமிழன் என்பவர் மாற்றுக்கல்வியை விட மரபுக்கல்வியே சிறந்தது என்கிறார் இவரின் கல்வி, மருத்துவ, கட்டுமான முறைகள் நன்றாக உள்ளது. +91 74012 34981 தொலைபேசி மூலம் நளினியை தொடர்புகொண்டு செந்தமிழனின் அனைத்து வீடியோவின் Youtube Link-ல் பெற்று முழுவதுமாக பாருங்கள். அனைத்து வீடியோ பார்த்த பிறகு நேரில் சந்தியுங்கள்.

**Syllabus XVIII :** பாரம்பரிய விளையாட்டுகள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள். திருமதி. ரேகா - (போன் : +91 9884845145)

**Syllabus XIX :** ஜவ்வாது மலை கிருஷ்ணகிரி அருகில் உள்ள குக்கூ பள்ளி ஒருமுறையாவது சென்று வாருங்கள். திரு. சிவராஜ் - (போன் : +91 9965689020), திரு. பீட்டர் - (போன் : +91 9944850887).

**கேள்விபதில்**

கேள்வி : வீட்டுக்கல்வி முறை என்ற பெயர் வைத்து இருக்கிறீர்களே அப்போது பள்ளிக்கு செல்லாமல் வீட்டிலேயே படிக்கவேண்டுமா?

பதில் : பெயர் மட்டுமே அப்படி உள்ளது. ஆனால் வீட்டிலும் படிக்கலாம். பள்ளிக்கும் செல்லலாம்.

கேள்வி : எங்கள் குழந்தைகளை அட்மிசன் செய்து கற்றுக் தர முடியுமா?

பதில் : இங்கு பள்ளிக்கூடம் இல்லை. இதுஒரு தளம், கல்வியை ஒழுங்குப்படுத்த கற்று மட்டுமே தரப்படும் அட்மிசன் கிடையாது.

**குறிப்பு :**

1. முதலில் 19 Syllabus - ம் பொறுமையாக பார்த்து, படித்து கேட்டு புரிந்து கொள்ளவேண்டும்.
2. சாகம்பரி மற்றும் புவிதம் பள்ளிக்கு ஒருமுறை நேரில் சென்று வருவது சிறப்பு.
3. இதில் கொடுக்கப்பட்ட நபர்களின் எண்களை தொடர்பு கொள்வதற்கு முன் கண்டிப்பாக அவர்கள் சம்பந்தப்பட்ட வீடியோ, கட்டுரை, Youtube பார்த்து படித்து இருக்கவேண்டும்.
4. குழந்தைகளை உடனே பள்ளியில் இருந்து நிறுத்தவேண்டாம். முதலில் குறைந்தது 1 வருடம் ஆராய்ச்சி செய்யுங்கள். தெளிவாக புரிந்த பின் முடிவெடுக்கலாம்.
5. கடைசி கலந்தாய்வின் முடிவே சரியானது. எனவே அடிக்கடி புதிய “A4 SHEET” என கேட்டு வாங்கி பாருங்கள். (+91 82206 67120).
6. தனியாக போராடுகிறேன் எனவே உழைப்பு மற்றும் பொருளதார உதவி தேவைப்படுகிறது. எனவே நல்ல உள்ளங்கள் இணைந்து செயல்படலாம்.
7. கட்டுரை, புத்தகம், வீடியோ வாங்க அம்மி தற்சார்பு சந்தை போன் :+91 9500655548 எண்ணில் தொடர்பு கொள்ளவும். “www.aammii.com”

செழிக்கட்டும் விவசாயம் ! சீர்படட்டும் நிர்வாகம் !!

## அனாடமிக் தெரபி ஃபவுண்டேஷன்

அனாடமிக் தெரபி அறக்கட்டளை என்பது மதசார்பற்ற, இலாப நோக்கமற்ற மக்கள் சேவைக்காக செயல்பட்டு வரும் ஓர் அமைப்பாகும். இது மனித குலத்தின் அனைத்து நலன்களையும் கருத்தில் கொண்டு செயலாற்றி வருகிறது.

ஓர் மனிதன் தன்னை தானே உணரும் போதுதான் இந்த பிறவியின் பயனை புரிந்து கொள்ள முடிகிறது. எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னை தானே உணரும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள், தியான வகுப்புகள், பயனுள்ள பயிற்சி வகுப்புகள் ஏற்படுத்தி மக்கள் பயன் பெற செய்வதே நமது அறக்கட்டளையின் நோக்கமாகும்.

திரு. ஹீலர் பாஸ்கர் ஐயா அவர்களால் 2012-ம் ஆண்டு நிறுவப்பட்ட நமது அனாடமிக் தெரபி ஃபவுண்டேஷன் தன்னார்வலர்கள் தொண்டர்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. உலகளாவிய அளவில் இலாப நோக்கமற்று செயல்படுகிறது. இந்த அறக்கட்டளை தென்னிந்தியாவில் கோவை மாநகரில் இயற்கை எழில் மிகுந்த கோவைப்புதூரிலுள்ள நிஷ்டை சர்வதேச வாழ்வியல் பயிற்சி மையத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.




## ஹீலர் பாஸ்கர்

**"அவரவர் நிலையில் அவரவர் சரியே"**
நீங்கள் சரி என்பதால் நான் தவறாக முடியாது!
நாம் பார்க்கும் கோணம் வித்தியாசமானதாக இருக்கலாம்.
– ஹீலர் பாஸ்கர்

நம காலதத்தில வாழ்ந்து வரும் ஓர் எளிமையான மனிதர் ஹீலர் பாஸ்கர். தான் கற்ற அறிவியல் உண்மைகளை பாமர மக்களுக்கும் புரியும்படி சொல்வதில் வல்லுநர் எந்த துறையாக இருந்தாலும் அதனை ஆராய்ந்து அனுபவ ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், புதிய சிந்தனைகளை கண்டறிந்து அதிலுள்ள நன்மைகளை உலக மக்களுக்கு எளிமையான வடிவில் இலவசமாக கொடுத்து வருகிறார்.

உலக மக்களது உடல், மன, ஆன்மீக, நலத்துக்காக ஓயாது உழைத்து வருகிறார். சிறுவயதில் நோய்களால் பாதிக்கப்பட்டு பல மருத்துவம் செய்து பலன் இன்றி, பிறகு தன் அனுபவத்தாலும் பல ஆராய்ச்சியாலும் உடல் தன்னை தானே குணப்படுத்தும் அற்புத வித்தையை கண்டறிந்து உலக மக்களும் பலன் அடையும் வகையில் ஒளிவு மறைவு இன்றி தான் கற்ற வித்தை முழுவதும், இலவசமாக கற்று கொடுத்து வருகிறார். பிரதி பலன் பாராமல் கடமையை செய்வதுதான் கர்மயோகம் என்பதை தனது வாழ்வில் கடைபிடித்து வருகிறார்.

☛ **இணைந்து செயல்படுவோம்...**

தன்னார்வளர்கள் சேவை செய்ய விருப்பம் உள்ளவர்கள்
**anatomictherapyfoundation@gmail.com** என்ற மெயிலிற்கு இமெயில் செய்யவும்.

ஹீலர் பாஸ்கர் அவர்களின்

## அனாடமிக் செவிவழிதொடு சிகிச்சை

(உங்களுக்கு நீங்களே மருத்துவர்)

உலகத்தில் இதுவரை எந்த நோயாக இருந்தாலும் மருந்து, மாத்திரை, தியானம், யோகா, மூச்சு பயிற்சி, அக்குபஞ்சர், ரெயிக்கி, மூலிகை, முத்ரா, நியூரோதெரபி, தொடு வர்மம் மற்றும் பல வழிகளில் சிகிச்சை செய்து வருகிறார்கள். ஆனால் இந்த அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை என்பது மேலே சொல்லப்பட்ட எந்த முறையும் இல்லை.

சர்க்கரை மற்றும் அனைத்து நோயாளிகளும் சிகிச்சை முடிந்த அடுத்த வினாடி முதல் எல்லா இனிப்புகள், பழங்கள், எண்ணெய் பலகாரங்கள், மனதுக்கு பிடித்த எல்லா உணவுகளையும் வாழ்க்கை முழுவதும் தாராளமாக சாப்பிடலாம். உப்பு, புளி, காரம் குறைக்கத் தேவையில்லை. பத்தியமும் இல்லை. ஒரே ஒரு முறை சிகிச்சை எடுத்துக்கொண்டால் போதும். இரண்டாவது முறை சிகிச்சை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த சிகிச்சைக்கு நோயாளிகள் மொத்தம் ஆறு மணி நேரம் செலவு செய்தால் போதும்.

நமது உடலில் ஒரு சுரப்பி சுரக்கும் திரவத்தை வைத்து உலகத்தில் உள்ள அனைத்து நோய்களையும் குணப்படுத்த முடியும். அந்த சுரப்பியின் பெயர் என்ன? எங்கே உள்ளது? அது சுரக்கும் திரவத்தின் பெயர் என்ன? நோயாளிகளே தமக்குத்தாமே வாழ்நாள் முழுவதும் எப்படி சுலபமாக சுரக்க வைப்பது என்பதை கற்றுக் கொடுக்கிறார் ஹீலர் பாஸ்கர்.

மருத்துவத்துறையில் உள்ளவர்கள் மற்றும் மற்றவர்களும் நேரில் வந்து இலவசமாக இந்த சிகிச்சையை கற்றுக்கொள்ளலாம். நேரில் வரமுடியாத நோயாளிகள் மற்றும் மருத்துவத்துறையை சேர்ந்தவர்கள் *DVD* மற்றும் புத்தகம் மூலம் கற்றுக் கொள்ளலாம். (அம்மி தற்சார்பு சந்தை ✆ +91 9500655548

இந்த சிகிச்சை எந்த மதமும் சம்பந்தப்பட்டது அல்ல. எனவே எல்லா மதத்தினரையும் அன்புடன் அழைக்கிறோம். பயிற்சி வகுப்புகள் நடைபெறும் தேதி மற்றும் இடங்களை தெரிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்.



ஹீலர் பாஸ்கர் அவர்களின்

## அனாடமிக் ஐந்து நாள் பயிற்சி முகாம்

(மனிதன் மனிதனாக வாழும் கலை)

ஐந்து நாட்கள் அனாடமிக் சிறப்பு செயல்முறை பயிற்சி முகாம் இயற்கை எழில் சூழ்ந்த, அமைதி நிறைந்த இனிய சூழலில் அமையப்பெற்ற நமது நிஷ்டை ஆசிரமத்தில் மாதந்தோறும் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பில் உடற்பயிற்சி, யோகா, தியானம், அனாடமிக் செவிவழித்தொடு சிகிச்சை வகுப்பு, மனம் மற்றும் அக ஒளி தியான வகுப்பு, வர்மப்புள்ளிகள், முத்திரை தியானம் குறித்த வகுப்பு, கணவன் மனைவி இடையே சுமூக உறவை மேம்படுத்தும் வகுப்பு, பக்தியோகம், கிரியா யோகம், கர்ம யோகம், ஞான யோகம் மற்றும் உலக அரசியல் போன்றவை குறித்த வகுப்புகள், கேள்வி பதில் வகுப்பு என ஏராளமானவை இப்பயிற்சி வகுப்பில் உண்டு. இது தவிர தினசரி எனிமா எடுத்தல், கண், மூக்கு கழுவுதல், நல்லெண்ணெய் வாய் கொப்பளித்தல், வாழை இலை குளியல் என்று பல உண்டு. பெண்களுக்கும், ஆண்களுக்கும் தனித்தனி அறைகளும் அடிப்படை வசதிகளும் உண்டு. பல நாடுகளிலும் நடைபெற்று வருகிறது.

### மாதம் ஒருமுறை பயிற்சி நடைபெறும்




**அனாடமிக் தெரபி பவுண்டேஷன்,** கோயமுத்தூர். இந்தியா.
முன்பதிவு : (+91) 88706 66966, ஆன்லைன் : www.anatomictherapy.org





ஹீலர் பாஸ்கர் அவர்களின்
அனாடமிக் தெரபி
ஐந்து நாள் பயிற்சி முகாம்
For Booking : Aammii Tharcharbu Santhai, Coimbatore.
✦ Contact : +91 95006 55548 ✦ www.aammii.com
Rs.299/- Only



Rs.700/- Only

ஹீலர் பாஸ்கர் மற்றும் போதி பிரவேஷ்
இணைந்து நடத்தும்

## தந்த்ரா வழியில் தாம்பத்யம்

(கணவன், மனைவி இல்லற உறவு முறை)



**இதுவரை யாரும் தெளிவாக சொல்லாத விஷயம் !**
**சொல்ல கேட்க / தயங்கும் விஷயம் !**

**இரண்டு நாட்கள் சிறப்பு பயிற்சி முகாம்**

*தன்னை நம்பிக் கரம் பிடித்த மனைவியை, போகப் பொருளாகப் பயன்படுத்தாமல் உணர்வுகளும் உணர்ச்சிகளும் கொண்ட உயிரினமாக மதித்து நடத்தி, தாம்பத்ய இன்பங்கள் அனைத்தையும் தவறாமல் வழங்கி, மனையியின் மனநலம் காத்து, இல்லற வாழ்வை இன்புற வாழ்த்திட விரும்பும்.*

**ஆண்களுக்கான ஓர் அற்புதப் புதையல்**

மாதம் ஒருமுறை பயிற்சி நடைபெறும்

*18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் அனுமதி*

**அனாடமிக் தெரபி பவுண்டேஷன்,** கோயமுத்தூர். இந்தியா.
முன்பதிவு : (+91) 88706 66966, ஆன்லைன் : www.anatomictherapy.org

புத்தகம் & டிவிடி
வாங்க விரும்புவோர்

திரு. போதி பிரவேஷ் அவர்களின்
தந்த்ர வழியில் தாம்பத்யம்

For Booking : **Aammii Tharcharbu Santhai**, Coimbatore.
✦ Contact : **+91 95006 55548** ✦ **www.aammii.com**

DVD
Rs.300/-
Only



Rs.495/-
Only

குருஷியா ஆர்கானிக் ஷாப் மற்றும்
கோவை மதிவாணன் தற்சார்பு குழுவினர்கள்
இணைந்து நடத்தும்

மாதம் ஒருமுறை பயிற்சி நடைபெறும்

அனுமதி. இலவசம் (2 வேளை மூலிகை தேநீர் வழங்கப்படும்)




தற்சார்பு டிவிடி ரூ.199/- மட்டும்

காலை பயன்படுத்தும் பற்பொடியில் துவங்கி இரவு பயன்படுத்தும் கொசுவிரட்டி வரை
42 விதமான வீட்டு உபயோகப் பொருட்களை எந்த விதமான இரசாயனங்களின்றி
இயற்கை முறையில் நாமே தயாரிப்பது பற்றிய ஓர் விழிப்புணர்வு முகாம்...

இயற்கை முறையில் வீட்டு உபயோகப்பொருட்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| செரலாக் (ராகி) | சாதப் பொடி (கீரைகள்) | பாத்திரம் கழுவும் பொடி | தலைக்குளியல் பொடி | மின்சார தைலம் |
| இயற்கை தயிர், மோர் | மஞ்சள் பொடி | துணி துவைக்கும் பொடி | Banana Smoothy | இயற்கை சோப்பு |
| சத்து மாவு | மிளகாய் பொடி, | எம்.பி.எல் (MPL), | French Smiley Chips | ராகி கேக் |
| தேனீர் பொடி | மல்லி பொடி, | இயற்கை ஷாம்பு, | Currentless Grinders | தரை சுத்தி |
| சுக்கு மல்லி காபி பொடி | ரசப் பொடி, | நேப்கின் (One time, | சாம்பார் பொடி | சாக்லேட் |
| கொத்தவரங்காய் சாறு | இயற்கை எரிவாயு அடுப்பு | நேப்கின் (Reusable) | பிரியாணி பொடி | குளியல் பொடி |
| பொடலங்காய் சாறு | முகம் கழுவும் பொடி | மூலிகை பற்பொடி | கண்மை, குங்குமம் | பிஸ்கேட், ஐஸ்கிரீம் |
| உடனடி தோசை மாவு | முடி வளர்ச்சி எண்ணெய், | இயற்கை சென்ட் | ஹேர் டை | Natural Foam Bed |

உறவினர்கள், நண்பர்கள் என அனைவரும் இந்த இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடைய வேண்டுகிறோம்.
அழிவுத் திட்டங்களில் இருந்து நாட்டையும் நோய்களில் இருந்து மக்களையும் காக்க இது ஒன்றே வழி.
புதைந்தவற்றை மீட்டெடுப்போம்... மீட்டவற்றை ஆவணமாக்குவோம்...

*பயிற்சி பற்றிய முழு விவரங்களுக்கு அலுவலக எண்ணை தொடர்பு கொள்ளுங்கள்...

அனாடமிக் தெரபி பவுண்டேஷன், கோயமுத்தூர். இந்தியா.
முன்பதிவு : (+91) 88706 66966, ஆன்லைன் : www.anatomictherapy.org

ஹீலர் பாஸ்கரின் கல்வி சிந்தனைகள்

## பானு வீட்டுக்கல்வி முறையின் தொகுப்பு (18 பாகங்கள்)

- பானு வீட்டு கல்விமுறை — பகுதி 1
- புவிதம் — பகுதி 2
- ஹீலர் பாஸ்கரின் கல்வி சிந்தனைகள் — பகுதி 3
- மருட்டி சுகப்பிரசவம் — பகுதி 4
- சாகம்பரி பள்ளி (1 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு) — பகுதி 5
- தாய்மொழிக் கல்வியே சிறந்தது — பகுதி 6
- 2 வருடத்தில் 200 மொழிகள் கற்கும் கலை — பகுதி 7
- கதை வழிக்கல்வி — பகுதி 8 & 9
- திரு. தென்றல் அவர்களின் கல்வி சிந்தனைகள் — பகுதி 10
- ஆக்கவிய ஆசிரியம் — பகுதி 11
- கல்வியை பற்றி அறிஞர்களின் சிந்தனைகள் — பகுதி 12
- கார்ட்டூன் கல்விமுறை — பகுதி 13
- வாவ் கல்விமுறை — பகுதி 14
- கார்ட்டூன் சாபக்கேடு — பகுதி 15
- பானு வீட்டு கல்விமுறை கலந்தாய்வு கூட்டம் — பகுதி 16
- கார்ட்டூன் ஓர் சாபம் — பகுதி 17
- பானு வீட்டு கல்விமுறை கலந்தாய்வு கூட்டம் — பகுதி 18

ஒவ்வொரு பகுதிகளையும் தனியாக பெற்றுக் கொள்ளலாம். **விலை ரூ. 120/-***


புத்தகம்



# பானு வீட்டு கல்விமுறை

கல்வியின் மாற்றத்திற்காக

**டிவிடி மற்றும் புத்தகம் வாங்க விரும்புவோர்**

For Booking : **Aammii Tharcharbu Santhai,** Coimbatore.

✦ Contact : **+91 95006 55548** ✦ **www.aammii.com**

Rs.299/- Only

டிவிடி பேக்



Rs.600/- Only



அம்மி
தற்சார்பு சந்தை



## விவசாயிகளின் நேரடி விற்பனை

வாங்க - விற்க - கற்க - காண

★ ★ ★

சுயசார்பு வாழ்விற்கான அடித்தளமாக அம்மி துவங்கப்பட்டுள்ளது. ஹீலர் பாஸ்கர் அவர்களின் வழிகாட்டுதலின் படி அவரால் துவக்கி வைக்கப்பட்ட ஒரு அமைப்பு அம்மி தற்சார்பு சந்தை, தமிழகத்தில் கோவையில் உக்கடம் பகுதியில் இதன் முதன்மை கிளை செயல்படுகிறது. தற்சார்பு வாழ்வியலுக்கு ஏற்ற பொருட்கள் தயாரிப்பு, விற்பனை கண்காட்சி மற்றும் பயிற்சிகளை அம்மி தற்சார்பு சந்தை வழங்கி வருகிறது. நவீன வாழ்க்கை முறை பன்னாட்டு நிறுவன பொருட்களின் நுகர்வு கலாச்சாரத்தில் இருந்து விடுபட்டு நமக்கு தேவையான பொருட்களை நாமே உற்பத்தி செய்து பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை பற்றி பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த அம்மி தற்சார்பு சந்தை செயல்பட்டு வருகிறது. இயற்கை பொருட்கள், சிறுதானிய உணவுகள், திண்பண்டங்கள், கைவினைப்பொருட்கள், வீட்டுப் உபயோகப் பொருட்கள், அம்மி தற்சார்பு சந்தையில் கிடைக்கும். ஹீலர் பாஸ்கர் அவர்களின் புத்தகங்கள் மற்றும் டிவிடி, இதர பயனுள்ள புத்தகங்கள் மற்றும் டிவிடிகள் ஆகியன அம்மி தற்சார்பு சந்தையில் கிடைக்கும்.



**நமது அம்மி சந்தையில் ஒவ்வொரு வாரமும்
ஞாயிற்றுக்கிழமை அன்று இலவச கருத்தரங்கு நடைபெறும்.**

**நமது பாரம்பரிய மற்றும் மரபியல் சார்ந்த பொருட்களை
மீட்டெடுத்து ஆவணமாக்கும் ஓர் முயற்சி**

# நீங்களும் உங்கள் பொருட்களை இங்கு சந்தைப்படுத்தலாம்

## அம்மி தற்சார்பு சந்தை

நெ.15, நரசிம்மன் கோவில் எதிரில், உக்கடம் தெற்கு , கோவை - 641 001.
**+91 95006 55548 / www.aammii.com**

கோயமுத்தூர் - பெங்களூர் - சென்னை

## ஹீலர் பாஸ்கர் அவர்களால் நடத்தப்படும்
# நிகழ்ச்சிகளின் தலைப்புகளும் விபரங்களும்

| தலைப்புகள் | | |
|---|---|---|
| **1. செவிவழி தொடு சிகிச்சை சுயசிகிச்சை கலை** காலநேரம் : 1 – 10 மணிநேரம் | **11. இயற்கை வைத்தியம்** காலநேரம் : 3 மணிநேரம் | **20. சக்ரா தியானம்** காலநேரம் : 1/2 மணிநேரம் |
| **2. சுவை மருத்துவம்** காலநேரம் : 1 மணிநேரம் | **12. விபாசனா தியானம்** காலநேரம் : 3 மணிநேரம் | **21. குரு தர்ஷன் தியானம்** காலநேரம் : 1/2 மணிநேரம் |
| **3. மனதின் மணம்** காலநேரம் : 1 – 2 மணிநேரம் | **13. வாசி யோகம்** காலநேரம் : 1/2 மணிநேரம் | **22. யோக நித்ரா** காலநேரம் : 1/2 மணிநேரம் |
| **4. முக்தி** காலநேரம் : 1 – 2 மணிநேரம் | **14. பத்து மூட்டு உடற்பயிற்சி** காலநேரம் : 1/2 மணிநேரம் | **23. அக ஒளி தியானம்** காலநேரம் : 1/2 மணிநேரம் |
| **5. காதல் கலை** காலநேரம் : 1 – 2 மணிநேரம் | **15. சூரிய நமஸ்காரம்** காலநேரம் : 1/2 மணிநேரம் | **24. ஜோதி திராட்டகம்** காலநேரம் : 1/2 மணிநேரம் |
| **6. எண்ணம் போல் வாழ்க்கை** காலநேரம் : 1 மணிநேரம் | **16. 5 வகை ஆசனங்கள்** காலநேரம் : 1/2 மணிநேரம் | **25. உலக அரசியல்** காலநேரம் : 1 – 10 மணிநேரம் |
| **7. கேள்விகளாக வாழுங்கள்** காலநேரம் : 1/2 மணிநேரம் | **17. சவாசனம்** காலநேரம் : 20 நிமிடம் | **26. பங்குச் சந்தை** காலநேரம் : 1 மணிநேரம் |
| **9. முத்ரா தெரபி** காலநேரம் : 1/2 மணிநேரம் | **18. மூச்சுப்பயிற்சி** காலநேரம் : 1/2 மணிநேரம் | **27. நியூரோ தெரபி பயிற்சி** காலநேரம் : 3 மணிநேரம் |
| **10. 21 வர்ம புள்ளிகள்** காலநேரம் : 1/2 மணிநேரம் | **19. கவச தியானம்** காலநேரம் : 1/2 மணிநேரம் | |

**உடல் ஆரோக்கியத்தை பற்றிப் பேசும்போது – ஹீலர் பாஸ்கர்**
**உலக அமைதியை பற்றிப் பேசும்போது – பீஸோ மாஸ்டர்**
**மனம், உறவுகள் பற்றிப் பேசும்போது – மாஸ்டர் பாஸ்கர்**
**Email : peaceomaster@gmail.com / www.anatomictherapy.org**

## உங்கள் ஊரில் ஹீலர் பாஸ்கர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுங்கள் !

உங்கள் ஊரிலுள்ள பள்ளி, கல்லூரி, அசோசியேசன்ஸ், பொது நிகழ்ச்சி, அப்பார்ட்மெண்ட், மற்றும் நிறுவனங்களில் ஹீலர் பாஸ்கரின் நிகழ்ச்சிகளை நடத்த தொடர்பு கொள்ளவும்.



**கோவை. ரா.ஸ்ரீனிவாசன் +91 80566 44944**
**shreedasramvas@gmail.com**

## இலவச பதிவிறக்கம் (FREE DOWNLOAD)



அனாடமிக் தெரபி பயிற்சி நடைபெறும் இடத்திற்கோ அல்லது கோவையில் உள்ள அலுவலகத்திற்கோ நீங்கள் Hard Disk மற்றும் Pen Drive கொண்டுவந்தால் அனாடமிக் தெரபி DVD மற்றும் புத்தகங்களை பதிவு செய்து தருகிறோம். www.anatomictherapy.org என்ற இணையதளத்தில் DVD மற்றும் புத்தகங்களை இலவசமாக (டவுன்லோடு) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதனை உங்கள் உறவினர், நண்பர்கள் மற்ற யாவருக்கும் தெரியபடுத்தி அவர்களும் பயனடைய உதவுங்கள்.

## முக்கிய குறிப்புகள்

- "யான் பெற்ற இன்பம் பெருக வையகம்" என நாம் எப்படி உலகப்பொது மக்களுக்கு பிரச்சாரம் செய்கிறேனோ அதே போல் நீங்களும் உங்கள் ஊரில் நம் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுங்கள். புத்தகம், DVD, CD ஐ காப்பி செய்து இலவசமாக மற்றவர்களுக்கு கொடுங்கள். எனது புத்தகம் DVD, CD எதற்கும் காப்பி ரைட் கிடையாது. பென்டிரைவ் மற்றும் ஹார்டு டிஸ்கில் இலவசமாக காப்பி செய்து கொடுக்கலாம்.

- உலக மக்களுக்கு நல்ல விசயத்தை, அமைதியை, ஆரோக்கியத்தை கொடுக்க 40 ஊழியர்களுக்கு சம்பளம், அலுவலக வாடகை, இணையதள கட்டணம், போக்குவரத்து செலவு, போன் பில் என 2017 ஆக்ஸ்ட் மாதம் கணக்குப்படி மாதம் 9 லட்சம் இந்திய ரூபாய் தேவைப்படுகிறது. எனவே மனமுள்ளவர்கள் பொருளாதார உதவி (நிதி, பொருள், உழைப்பு) அளிக்கலாம்.

- வாரத்தில் ஒரு முறையாவது இணையதளத்தில் பார்த்து எங்கெல்லாம் நமது நிகழ்ச்சி நடக்கிறது என்று தெரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

- நமது புத்தகம், ஆடியோ, மற்றும் வீடியோவை அரபிக், சைனீஸ், போன்ற அனைத்து உலக மொழிகளிலும் மொழி மாற்றம் செய்ய வேண்டியது உள்ளது, எனவே ஒவ்வொரு மொழிக்கும யாரேனும் பொறுப்பேற்றால் நன்றாக இருக்கும்.

- நமது நிகழ்ச்சியை 1 மணி நேரம் முதல் 5 நாள்கள் வரை நடத்த முடியும் எனவே உங்கள் ஊரில் உங்களுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்க முடியுமோ அதற்கு ஏற்ப சுருக்கமாகவும், விரிவாகவும் பேச முடியும்.

- உங்கள் ஊரிலுள்ள பள்ளி, கல்லூரி, அசோசியேசன்ஸ், பொது நிகழ்ச்சி, அப்பார்ட்மென்ட் மற்றும் நிறுவனங்களில் திரு. ஹீலர் பாஸ்கர் ஐயாவின் நிகழ்ச்சிகளை நடத்த எவ்வித கட்டணம் இல்லை.

- நாம் பிறந்தோம், சாப்பிட்டோம், வளர்ந்தோம், சம்பாதித்தோம், கல்யாணம் செய்தோம், பிள்ளைகளைப் பெற்றோம், வேலைக்கு சென்றோம், சுய நலமாக வாழ்ந்தோம், இருந்தோம் என சாதாரணமாக வாழாமல் அனைவரும் ஒருநாளில் ஒரு மணி நேரமாவது சமுதாய சேவை செய்தால்...

**அமைதியான உலகம், ஆரோக்கியமான மனிதர்கள், அன்பு, கருணை, உலக அமைதி எல்லாம் நம் கையில், எண்ணம்போல் வாழ்க்கை, வாழ்க வையகம்**

## நீங்களும் உங்களது
## பங்களிப்பை அளிக்கலாம்



**கணக்குப் பார்க்காமல்**
**செயலாற்றுவதே**
**கர்மயோகம்**

– ஹீலர்பாஸ்கர்

**நன்கொடைகளுக்கு 80G வரிவிலக்கு பெற்றுக் கொள்ளலாம்.**

*மாதந்தோறும் பயிற்சி வகுப்பிற்கு இலவசமாக பொருட்கள் அளித்துவரும் அன்பர்களுக்கு நன்றி !*




**நன்கொடை அளித்தமைக்கு நன்றி ...**

**நன்கொடைக்கு : அனாடமிக் தெரபி பவுண்டேஷன்**

| | | | | |
|---|---|---|---|---|
| A/c No | : | 034201003967 | 50200000125579 | 33618417146 |
| Bank | : | **ICICI Bank** | **HDFC Bank** | **STATE BANK OF INDIA** |
| Branch | : | R.S. Puram Branch, Coimbatore. | R.S. Puram Branch, Coimbatore. | Kovaipudur Branch, Coimbatore. |
| IFSC Code | : | ICIC0000342 | HDFC0000269 | SBIN0015472 |

**பின்குறிப்பு : நன்கொடை அளித்த அன்பர்கள் தங்கள் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை எங்கள் அலுவலகத்திற்கு தவறாமல் தெரிவிக்கவும்.**

**டி.டி., செக் மற்றும் மணி ஆர்டர் அனுப்ப வேண்டிய முகவரி**

## அனாடமிக் தெரபி பவுண்டேஷன்

கோவைப்புதூர், கோயம்புத்தூர் . 641 042.
தமிழ்நாடு, இந்தியா. போன் : +91 9944221007, 98424 52508



# லெமோரியா

**சமையல் மற்றும் மருத்துவ கலை**

இயற்கை உணவு வகைகளையும். நமது பாரம்பரிய சமையலையும்
அனைவரும் அறிந்து கொண்டு நமது ஆரோக்கியத்தை வலுப்படுத்தலாம்.

**ஜூஸ் வகைகள், தானிய வகைகள், கீர்வகைகள், பயிறுவகைகள் அவுல் வகைகள்,சாலடவகைகள், சூப்வகைகள், கஞ்சி வகைகள் பொரியல் வகைகள் மற்றும் துவையல்வகைகள் ஆகிய 117 உணவு வகைகள் அடங்கிய புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது.**

Book
Rs.280/-
Only






புத்தகம் வாங்க விரும்புவோர்

**அம்மி தற்சார்பு சந்தை**
**+91 95006 55548**

## ஆசிரியர் குறிப்பு...

திருமதி. மல்லிகா அவர்கள் இயற்கை உணவு மற்றும் சிறுதானிய சமையல் அறுசுவை உணவு தயாரிப்பில் நீண்ட காலம் அனுபவம் உள்ளவர். திருச்சி அருகே சிறுகமணி என்ற ஊரைச் சேர்ந்தவர். பெருமணியில் சங்கமம் இயற்கை வாழ்வியல் மையத்தில் உணவு தயாரிப்பில் 10 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். கடந்த ஏழு ஆண்டுகளாக ஹீலர் பாஸ்கர் அவர்கள் நடத்தி வரும் பயிற்சி முகாம்களில் தனது சமையல் கலை பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார். இந்த நூலில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ள சமையல் குறிப்புகள் லெமோரியா சமையல் என்ற பெயரில் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகிறார்.

**அனாடமிக் தெரபி பவுண்டேஷன்,** கோயமுத்தூர். இந்தியா.
**முன்பதிவு : (+91) 88706 66966, ஆன்லைன் : www.anatomictherapy.org**




snapdeal amazon.com Flipkart

ஹீலர் பாஸ்கரின் ஆடியோ, வீடியோ, புத்தகங்ளை QR Code ஸ்கேன் செய்து இணையதளத்தில் மூலம் பெறலாம்.

**டிவிடி & புத்தகங்களை நேரடியாக மற்றும் கூரியர் மூலம் பெற**
(மணி ஆர்டர் அல்லது காசோலைகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்).

## அம்மி தற்சார்பு சந்தை

நெ.69, என்.எஸ்.கே.. வீதி. செல்வபுரம்,
கோயம்புத்தூர் – 26, தமிழ்நாடு, இந்தியா.
Web : www.aammii.com
E-mail : aammiisanthai@gmail.com
**Mobile : +91 9500655548**

**டிவிடி மற்றும் புத்தகம் கூரியரில் பெறுவதற்கு கீழ்க்கண்ட வங்கி கணக்கில் பணம் செலுத்தவும்**

## அம்மி தற்சார்பு சந்தை

கணக்கு எண் : **615205042363**
வங்கி : **ICICI BANK**
கிளை : ராம் நகர், கோயம்புத்தூர்.
IFSC Code : ICIC0006152

- ஹீலர் பாஸ்கரின் ஒருநாள் மற்றும் ஐந்து நாள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் அம்மி தற்சார்பு சந்தையில் டிவிடி & புத்தகம் விற்பனைக் கண்காட்சி நடைபெறும்.
- 300க்கும் மேற்பட்ட பல பயனுள்ள புத்தகங்கள் & டிவிடிக்கள் கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ் இணையதளம் அல்லது விற்பனைக் கண்காட்சி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
- நமது புத்தகங்கள் மற்றும் டிவிடிக்கள் தங்களுடைய ஊரில் நீங்கள் விற்பனை செய்ய உங்களுக்கு ஓர் வேலை வாய்ப்பு தருகிறோம்.

# அமைதியும் ஆரோக்கியமும்

புதுயுகத்தின் வழிகாட்டி

உலக மனிதர்கள் அனைவரும் ஆரோக்கியமாக, அன்பாக, தெளிவாக, புத்திசாலித்தனமாக, அமைதியாக, நிம்மதியாக, வளமாக, மகிழ்ச்சியாக, குடும்ப அமைதியாக, தொழில் சிறப்பாக மற்றும் வசதியாக வாழ வேண்டும் என்பதற்காக ஹீலர் பாஸ்கர் அவர்கள் அமைதியும் ஆரோக்கியமும் என்ற மாத இதழை வெளியிட்டுள்ளார். எனவே அனைவரும் சந்தாதாரராக இணைந்து, இதழை பெற்று பயன் பெறுங்கள்.

இதில் ஹீலர் பாஸ்கர் அவர்களின் புதிய புதிய சிந்தனைகளும், நிகழ்வுகளும் இடம்பெறும். மேலும் இயற்கை உணவு, தொழில் நுட்பம், ஜோதிடம், புதிய கலைகள் மற்றும் பல பயன்தரும் தகவல்களும் இடம்பெறும்.

## எங்களுடைய சந்தா திட்டங்கள்

**இமெயில் :** 3 வருட சந்தா ரூ. **300/-** மற்றும் 5 வருட சந்தா ரூ. **500/-** மட்டுமே

சந்தாரர்களுக்கு எங்களுடைய தமிழ், ஆங்கிலம் இதழை

இமெயில் மூலம் PDF Copy - யாக மாதம் மாதம் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ளலாம்.

## சந்தா செலுத்தும் முறை

| டிவிடி & புத்தகங்களை நேரடியாக மற்றும் கூரியர் மூலம் பெற (மணி ஆர்டர் அல்லது காசோலைகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்). | டிவிடி மற்றும் புத்தகம் கூரியரில் பெறுவதற்கு கீழ்க்கண்ட வங்கி கணக்கில் பணம் செலுத்தவும் |
|---|---|
| **அமைதியும் ஆரோக்கியமும்**<br>நெ.69, என்.எஸ்.கே. வீதி, செல்வபுரம்,<br>கோயம்புத்தூர் - 26, தமிழ்நாடு, இந்தியா.<br>Web : amaidhiyumaarokiyamum@gmail.com<br>E-mail : www.amaithiyumarokiammum.com<br>**Mobile : (+91) 88838 05456** | **அமைதியும் ஆரோக்கியமும்**<br>கணக்கு எண் : 034205008485<br>வங்கி : ICICI BANK<br>கிளை : R.S. புரம், கோயம்புத்தூர்.<br>IFSC Code : ICIC0000342 |

### ☛ அனாடமிக் தெரபி பவுண்டேஷன் (வாட்ஸ் அப்)

மூலம் எந்த ஒரு வாட்ஸ் அப் குரூப்-ல் தற்பொழுது தொடங்கவில்லை...
மேலும் **Broadcast** மூலமாக மட்டுமே தகவல்களை அனுப்பி வைக்கிறோம்.
எங்களது வாட்ஸ் அப் **Broadcast** –ல் உறுப்பினராக **+91 88700 29779**
இந்த எண்ணிற்கு உங்கள் விவரங்களை குறுஞ்செய்தியாக அனுப்புங்கள்.



**உடல் கழிவு நீக்கும் கருவிகள்**

கண் குவளை, மூக்கு குவளை மற்றும் இனிமா அடங்கியது.

**விலை ரூ. 180/-**

## 108. தொடர்புக்கு

# அனாடமிக் தெரபி பவுண்டேஷன்

கோயம்புத்தூர். தமிழ்நாடு, இந்தியா

| மொழி | தொலைபேசி-1 | தொலைபேசி-2 |
|---|---|---|
| தமிழ் | +91 99442 21007 | 98424 52508 |
| ஆங்கிலம் | +91 96292 03971 | 96292 03871 |
| இந்தி | +91 96889 10346 | 96889 10454 |
| மலையாளம் | +91 80120 27916 | 80120 27917 |
| தெலுங்கு | +91 96295 50091 | 96295 50377 |
| கன்னடம் | +91 95008 07519 | 95008 07497 |
| மலாய் | +91 98421 85432 | 78718 71870 |
| உருது | +91 96294 97118 | 96295 19338 |

| நாடு | தொலைபேசி-1 | தொடர்பாளர் |
|---|---|---|
| மலேசியா | +6 0126646107 | திருமதி. முத்தம்மாள் |
| சிங்கப்பூர் | +6581189802 | திருமதி. ஆத்விகா |

**anatomictreatment@gmail.com / healerbaskar@gmail.com**

### பிற சேவைகள்

| தொடர்பு கொள்ள | எண்கள் | இ-மெயில் |
|---|---|---|
| ஐந்து நாள் பயிற்சி முகாம் | +91 88706 66966 | anatomictherapy5dayscamp@gmail.com |
| அமைதியும் ஆரோக்கியமும் | +91 88838 05456 | amaidhiyumaarokiyamum@gmail.com |
| நிகழ்ச்சி ஏற்பாடு செய்தல் | +91 80566 44944 | anatomictherapyfoundation@gmail.com |
| கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ் | +91 96290 32767 | giriiyyapublications@gmail.com |
| நியூரோதெரபி | +91 88833 32707 | kannanhealthcentre@gmail.com |
| அக்குபஞ்சர் | +91 98652 87123 | healersukumar@gmail.com |
| பானு வீட்டுக்கல்வி முறை | +91 82206 67120 | selfeducationathome@gmail.com |
| யோக விபாசனா | +91 88706 66966 | anatomictherapy5dayscamp@gmail.com |
| தந்த்ரா வழியில் தாம்பத்யம் | +91 88706 66966 | anatomictherapy5dayscamp@gmail.com |
| பெண்கள் நலன் | +91 85080 05336 | healerbaskar@gmail.com |
| நேர்த்தியான கலை | +91 92695 50377 | anatomictherapy5dayscamp@gmail.com |

**www.anatomictherapy.org / www.masterbaskar.org**

# நன்றி

இந்த செவிவழி தொடு சிகிச்சையினால் கடந்த 5 வருடங்களாக பல லட்சம் நோயாளிகள் பயன் பெற்றுள்ளார்கள். இதை மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று நினைத்து அதற்கு அவர்களாலான செயலை செய்தவர்கள் பலர்.

பல நாடுகளில், பல ஊர்களில் பல ஐயாக்கள் மற்றும் பல அம்மாக்கள், பல நல்ல உள்ளம் கொண்டவர்கள் "யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்று மற்றவர்களுக்கு கிடைக்க உதவி செய்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என் ஆத்ம நன்றிகள் பல. அவர்களின் பெயரை பட்டியலிட இடம் போதாது.

ஆனால் இந்த செவிவழி தொடு தொடு சிகிச்சையை அதிக மக்களுக்கு சேர்த்த பெருமை பாண்டிச்சேரியில் வசிக்கும் முன்னாள் துணை மேயர் திரு. ஜான்குமார் ஐயாவையே சேரும். அவரின் இந்த சேவை உள்ளத்திற்கு எனது சிறப்பு நன்றிகள். மேலும் ஐயாவின் மூலம் பாண்டிச்சேரி மக்களுக்கு கிடைத்ததை போல விரைவில் உலக மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்வார் என்ற நம்பிக்கை உள்ளது. எனவே நன்றி, நன்றி, நன்றி, திரு. ஜான்குமார் ஐயா அவர்களுக்கு.

டி.வி.டி. மற்றும் புத்தகங்களை விநியோகம் செய்யும் அனைவருக்கும், நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தவர்களுக்கும், செய்பவர்களுக்கும், பல வழிகளில் பலரை விழிப்படைய செய்பவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி செய்பவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

சுபம்

இந்த புத்தகத்தை முழுவதுமாக படித்தவர்கள் அனைவரும் ஆரோக்கியமாக, அன்பாக, ஆனந்தமாக, மகிழ்ச்சியாக, வளமாக, அமைதியாக, நிம்மதியாக மற்றும் சந்தோஷமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.



**"எண்ணம் போல் வாழ்க்கை"**



ஹீலர் பாஸ்கரின்

# பானு
# வீட்டுக் கல்விமுறை

## கல்வியின் மாற்றத்திற்காக



பானு வீட்டுக்கல்விக் கல்வி என்றால் என்ன?

கரு உருவாதற்கு முன் செய்ய வேண்டியவை ?

கர்பகாலத்தில் செய்ய வேண்டியவை?

தொப்புள் கொடி வெட்டாமல் சுகப்பிரசவம் செய்வது எப்படி?

முதல் ஒரு வயது குழந்தையை எப்படி வளர்த்துவது?

எந்த மொழியில் கல்வி கற்பது சிறப்பு ?

1 முதல் 5 வயது வரை கல்வி திட்டம் ?

5 முதல் 12 வயது வரை கல்வி திட்டம் ?

2 வருடத்தில் 200 மொழி கற்கும் வித்தை?

வால்ஃ கல்வி முறை கல்வி என்றால் என்ன?

பின்லாந்து கல்வி முறை கல்வி என்றால் என்ன?

கண்களை மூடி படிப்பது உண்மையா?

12 வயதுக்கு மேல் எதை படிக்க வேண்டும் ?

| தலைப்பு | ஆசிரியர் | இரண்டாம் பதிப்பு | பக்கம் | விலை |
|---|---|---|---|---|
| பானு வீட்டுக் கல்வி முறை | ஹீலர் பாஸ்கர் | 2019 | 208 | Rs. 299/- |


Ownership and Copyright
**ANATOMIC THERAPY FOUNDATION**
No.X-172, North Housing Unit, Selvapuram
Coimbatore - 641 026, Tamilnadu, India
**Email : anatomictreatment@gmail.com**
**Web : www.anatomictherapy.org**

Published by
**GIRI IYYA PUBLICATIONS**
No.69, NSK Street, Selvapuram
Coimbatore - 641 026, Tamilnadu, India
**Email : giriiyyapublications@gmail.com**
**Web : www.giriiyyapublications.com**



✦ For Books & DVD : +91 96290 32767 ✦ India : +91 99442 21007
✦ Malaysia : +60 126646107

For Online Purchase J **www.giriiyyapublications.com**

ATF162